# வீரசிங்கன்

## அமுத விழாச் சிறப்புமலர்




உயர்தர மாணவர் மன்றம்

யா/மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம்

2006

# வீரசிங்கன்

## அமுதவிழாச்சிறப்புமலர்

இணை இதழாசிரியர்கள்:

**திரு. க. க. ஈஸ்வரன்**

**செல்வன். ம. சுபதீஸ்**

## உயர்தர மாணவர் மன்றம்

**யா/மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம்**

**2006**

# வித்தியாலய கீதம்

## எடுப்பு

வாழ்க வீரசிங்கம் மகா வித்தியாலயம் வாழ்கவே
வாழ்க எங்கள் மீசாலை மாநகரில் ஒளிபரப்பி
(வாழ்க.....)

## தொடுப்பு

விந்தைபுரி வேம்படி விநாயகன் அருளினால்
சிந்தைதெளி பண்பொழுக்கம் கீர்த்தி திறன் நீட்டியே
(வாழ்க....)

## முடிப்பு

ஆத்ம ஞான போதமும் அற்புத விஞ்ஞானமும்
மேன்மை சேர் தொழிற்றுறை மெருகூட்டும் ஆங்கிலம்
நான் மறைகள் ஓதுகின்ற கீத இயல் ஆடலும்
பாண்மையோடு பயிலுகின்ற பைந்தமிழ்க் கல்லூரியே
(வாழ்க....)

# சமர்ப்பணம்



**வித்தியாலய நிறுவுனர்**

அமரர். வேதாரணியர் வீரசிங்கம் அவர்கள்

பார்போற்ற அழியாக் கல்வி பெருக்கிட
நீர்இட்ட கட்டளை சிரமேற் கொண்டோம்
சீர்பெற்று எண்பதாண்டு கண்டது காண்
ஒளிர்கின்ற நின்தாள்களில் இம்மலராய் அர்ச்சித்தோம்

**- வீரசிங்கம் குடும்பம்**

# அமுதவிழாக்கீதம்

இராகம்:- அம்சத்வனி தாளம்:- ஆதி

### பல்லவி

என்றென்றும் வாழியவே அமுதவிழா
காணும் எங்கள் மீசாலை வீரசிங்கம்
(என்றென்றும் வாழியவே .......)

### அநுபல்லவி

பண்பாடு உயிர் என்று பாரோர்கள் போற்றி செய்யும்
மண்வாழும் மாதாவே மகா வித்தியாலயமே
(என்றென்றும் வாழியவே......)

### சரணம்

வீரசிங்கப் பெருமகனார் வித்திட்ட ஆலயமே
பாராள ஆயிரத்துத் தொளாயிரத் திருபத்தாறில்
சீரான கல்வியும் சிறந்திடச் சமயமும்
பேரோடு நிலை நிற்க பெருங்கொடை நல்கினார்
(என்றென்றும் வாழியவே....)

வேம்படி விநாயகன் விளங்கிட அதிபராய்ப்
பணி செய்தார் சின்னத்தம்பி பதஞ்சலி சிவலிங்கம்,
காசிநாதன் நாகராசா புஸ்பதிலகவதி இராமலிங்கம்
அ.பொ.செ யுடன் சிவானந்தம் வளர்த்து நிற்க
(என்றென்றும் வாழியவே.....)

மாறிவரும் கல்வியை மாற்றமுறும் மாணவரை
ஏற்றமுறச் செயும் எழில் கொள் கலைகளுடன்
எண்ணும் எழுத்துடன் தகவல்நுட்பங்களும்
நண்ணிடத் தந்திடும் ஆசிரியர் குழாம் உழைக்க
(என்றென்றும் வாழியவே.....)

திருமதி தெ. கிருஷ்ணசாமி
(இசையாசிரியை)

திருக்கணித பஞ்சாங்க ஆசிரியரும், சிவாசார்யருமாகிய

"வேதாகம சோதிட பூஷணம்" "கலாபூஷணம்",

**சிவஸ்ரீ சி. சிதம்பரநாதக்குருக்கள் அவர்களால் வழங்கப்பட்ட**

## ஆசியுரை

தென்மராட்சி மீசாலை வடக்கில் கம்பீரமாகக் காட்சியளித்துக் கொண்டிருக்கிறது ''வீரசிங்கம் மகா வித்தியாலயம்''. மீசாலையிலும் அதனை அண்மித்த பகுதிகளிலுமுள்ள எத்தனையோ மாணவர்களைக் கல்வி கற்பித்து, நெறிப்படுத்தி, பெரியவர்களாக்கி, உயர்பதவிகளை வகிக்கக்கூடிய தகுதி யுடையவர்களாக ஆக்கியுள்ளது மேற்படிவித்தியாலயம். ஆன்மாக்கள் லயப்படுவதற்கு ஆலயம் எவ்வளவு பிரதானமாகவுள்ளதோ அதேபோல் மாணவர்கள் கல்விகற்று முன்னேற்றமடைவதற்கு வித்தியாலயம் பிரதானமானது.

இவ்வித்தியாலயம் முதன்முதலாக அமரர் வே. வீரசிங்கம் அவர்களால் சைவகலாசாலையாக ஆரம்பிக்கப்பட்டது. ஸ்தாபகரின் பெயரையே வித்தி யாலயம் கொண்டுள்ளது சிறப்புக்குரியது. 1926-ல் வீரசிங்கம் சைவ வித்தியாலயம் என்ற பெயரில் இயங்கிவந்தது. தொடர்ந்து அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர்கள் ஆகியோரின் பெருமுயற்சியால் வளர்ச்சியடைந்து 1968-ம் ஆண்டில் வீரசிங்கம் மகாவித்தியாலயமாகப்பரிணமித்துள்ளது. இத்தனைக்கும் அங்கு கல்வியைப் போதிக்கின்ற அதிபர், ஆசிரியர்கள் பாராட்டப்பட வேண்டியவர்களாவர். இவ் வித்தியாலயம் மீசாலைவாழ்மக்களுக்கு ஒருகொடையாக அமைந்துள்ள தெனலாம். இன்று ஆயிரத்துக்குமேற்பட்ட மாணவர்களைக்கொண்ட இவ் வித்தியாலயம் 2005-ம் ஆண்டு 5-ம் தர புலமைப்பரிசில் பெற்றதில் மாவட்டத்தில் 2-ம் இடத்தைப்பெற்றுள்ளது. 2005-ம் ஆண்டு உயர்தரப்பரீட்சையில் 3A சித்திபெறப்பட்டுள்ளது. இத்துடன் விளையாட்டுக்களிலும் வித்தியாலயம் முன்னணி வகிக்கின்றது.

இத்தனை சிறப்போடு வளர்ந்துவருகின்ற வித்தியாலயம் ஆரம்பித்து எண்பதாம் ஆண்டுப்பூர்த்தியை ஞாபகப்படுத்தும்வகையில் சஞ்சிகை ஒன்று வெளிவர இருப்பதையறிந்து மகிழ்ச்சியடைகின்றேன். இப்படியான சஞ்சிகை மாணவர்களின் ஆக்கமுயற்சியை, ஆளுமையை வெளிப்படுத்துவதற்கு ஒரு தூண்டுகோலாகவமையும். எண்பதாம் ஆண்டில் வெளிவரும் இவ் ''அமுதவிழா மலர்'' நறுமணம் கமழ்ந்து என்றும் வாடாமலராக எல்லோர்கைகளிலும் திகழ்வதோடு நூற்றாண்டு விழா மலர் இன்னும் சிறப்பாகவெளிவர இறைவன் திருவருள்பாலிக்கவேண்டுமென்று பிரார்த்தித்து, விழாசிறக்க நல்லாசிகூறி அமைகின்றேன்.

நன்றி

சி. சிதம்பரநாதக்குருக்கள்.

'துர்க்காதுரந்தரி' 'கலாநிதி'

# செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் வாழ்த்துரை

கல்விநிலையங்களைக் கடவுள்நிலையங்களாக மதிக்க வேண்டியகடமை எம்போன்றவர்க்குண்டு. "அன்னயாவிலும் புண்ணியம் கோடி: ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்" என்பது ஆன்றோர் வாக்கு. இந்தப் புண்ணியத்தை எமக்குச் சொந்தமாக்கிக் கொள்ளுமிடம் கல்விநிலையங்களாகும். மீசாலைப்பதியில் செயற்றிறன்மிக்க ஒரு மகாவித்தியாலயமாக விளங்குவது வீரசிங்கம் மகாவித்தியாலயமாகும். ஐம்பதுக்குமேற்பட்ட ஆசிரியர்களும், ஆயிரத்துக்குமேற்பட்ட மாணவர் களும் கல்விக்கடமையையாற்றும் ஒருசிறந்தஇடம் இதுவாகும். எண்பது ஆண்டுகள் நற்பணியாற்றி இன்று அமுதவிழாவை எடுப்பதற்கு ஆயத்தமாகின்றனர் இக்கல்லூரிச்சமூகத்தினர். எண்பது ஆண்டின் நிறைவை முன்னிட்டுக்கொண்டாடப்படும் விழா முத்துவிழா என்று சிறப்பாகப்பேசப்படும். இவ்விழாவின் நினைவாக "வீரசிங்கன்" என்ற நாமத்தைக்கொண்ட சிறப்புமலர் வெளியிடப்படுவது மகிழ்ச்சிக்குரிய தாகும். மதிப்பார்ந்த அதிபர் திரு. கு. சிவானந்தம் அவர்களைத் தலைமையாகக்கொண்டு கல்விக்கடமையாற்றும் சிறப்பும் இக்கல்லூரிக்கு உண்டு. எனவே முத்துவிழாவைப்போல் அதனை அடுத்துவரும் நூற்றாண்டுவிழாவும் நல்லபடி பிரகாசிக்கவேண்டுமென்று திருவருளைப் பிரார்த்தித்து அமைகின்றேன்.

வணக்கம்

தலைவர்,
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பளை, ஸ்ரீ லங்கா.

தங்கம்மா அப்பாக்குட்டி,
(சமாதான நீதிபதி)

# வலயக்கல்விப்பணிப்பாளரின்
## ஆசிச்செய்தி

மாற்றமுறும் சமுதாயத்தை ஏற்றமுறும் நிலைக்கிட்டுச் செல்கின்றவகையிலே பாடசாலைகளின் பங்கும்பணியும் அளப்பரிய அளவிலே அமைந்துவிடுவதை அவதானிக்கமுடியும். இளையதலைமுறையினரை ஆற்றலும் ஆளுமையும் மிக்கவராக ஆக்குகின்றவகையிலே, சமுதாயம் என்ற சங்கிலியில் அவர்களைப் பிரகாசிக்கின்ற மணிகளாக ஒளிரச்செய்கின்ற வகையிலே பாடசாலைகள் ஆற்றுகின்ற பங்கும்பணியும் மகத்தானவையாக மதிக்கப்படுகின்றன. உண்மையிலே பாடசாலை, முழுச்சமுதாயத் திலிருந்தும் தோற்றம்பெற்று, அதனகத்தே அதனுடனே செயலாற்றி இணைந்திருந் தாலும் தனக்கெனத்தனியான ஒழுங்கமைப்புடைய உறுதிவாய்ந்ததொரு தொகுதி யாகின்றது. அந்தவகையிலே அமைகின்ற பாடசாலைகளின் வரிசையிலே யா/மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயத்தின் பணியானது அளப்பரியதாக அமைந்துவிடுகின்றது. அதாவதி, தென்மராட்சிக்கல்விவலயத்திலே சிறந்த பாடசாலைகளிலொன்றாக யா/ மீசாலை வீரசிங்கம் ம.வி. நிமிர்ந்துநிற்கும் நிலைகண்டு யான்பேருவகை எய்துகின்றேன். அத்துடன், இவ்வித்தியாலயம் அமுதவிழாவினையும் கொண்டாடுவதையிட்டு மேலும் அகமகிழ்வெய்துகின்றேன். உயர்தர மாணவர்மன்றத்தினாலே வெளியீடு செய்யப் படுகின்ற ''வீரசிங்கன்'' அமுதவிழாச் சிறப்புமலருக்கு ஆசிச்செய்தி வழங்குவதையிட்டும் கூடவே யான்புளகாங்கிதமடைகின்றேன்.

சின்னஞ்சிறு தொகையளவான இருபத்தாறு மாணவச்சிறார்களுடன் அன்று ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலையானது பென்னம்பெரிய தொகையளவான 1100 மாணவர்களுடன் 52 ஆசிரியர்களையும் கொண்டதாக இன்று இலங்குகின்றது. இவ்வித்தியாலயத்திலே கல்விபயிலும் மாணவர்கள் பாடப்புலச்செயற்பாடுகளிலும் ஏற்றம்பெற்று இலங்குகின்றனர். பாடசாலை மட்டத்திலே மட்டுமன்றி மாவட்ட, மாகாண, தேசிய மட்டங்களிலும் இவர்கள் படைத்த சாதனைகளும் தட்டிக்கொண்ட பரிசில்களும் பாராட்டுதல்களும் பலப்பலவாகின்றன. எண்பது ஆண்டு காலத்துள் இவ்வித்தியாலயம் எய்திய பாரியதும் சீரியதுமான வளர்ச்சிக்கு, அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள் ஆகிய அனைத்துத் தரப்பினரும் பங்காளிகளாக விளங்கிவந்தமை பாராட்டத்தக்கதாகும்.

வளர்ச்சியென்பது இடையீடின்றித் தொடர்ந்துஇடம்பெறும் ஒருசெயலாகும். எனவே, வளர்கின்ற இவ்வித்தியாலயமானது மேன்மேலும் வளர்ந்து, சரித்திரம் படைக்கும் சாதனையாளர்களை எமது பிரதேசத்திற்கு வழங்கிப் பேருயர் பெருமைகள் பல சேர்த்திடவேண்டுமென எல்லாம்வல்ல இறைவனை இறைஞ்சுவதோடு, உயர்தர மாணவர் மன்றத்தினால் வெளியீடுசெய்யப்படும் அமுதவிழாச்சிறப்புமலரானது எதிர்காலத்திலே நூற்றாண்டுவிழாமலராகவும் மலர வேண்டுமென நல்லாசிகள் பல நல்கி வாயாரவாழ்த்தி உளமாரப்போற்றுகிறேன்.

நன்றி

**திருமதி அ. வேதநாயகம்**

வலயக்கல்விப்பணிமனை,
தென்மராட்சி
**சாவகச்சேரி.**

# கோட்டக்கல்வி அலுவலரின்

## *வாழ்த்துச் செய்தி*

அகவை எண்பதை நிறைவுசெய்யும் வீரசிங்கம் மகா வித்தியாலய அன்னையின் அமுதவிழா ஆண்டில் வெளிவரும் வீரசிங்கன் மலருக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

தென்மராட்சிப் பிரதேசத்தின் மத்தியில் அமைந்துள்ள இப் பாடசாலை எமது பிரதேசத்தின் முன்னோடிப்பாடசாலை களில் ஒன்றாகத் திகழ்கின்றமை குறிப்பிடத்தக்கது.

ஒரு பாடசாலை எண்பது ஆண்டுகளைக் கடந்துள்ள தென்பது சாதாரணவிடயமல்ல. அக்காலப்பகுதியில் பல ஆளுமைமிக்கவர்களை உருவாக்கியுள்ளது. அந்த வரலாற்றுச் சாதனைகளில் தடம்பதித்த அதிபர்களையும் ஆசிரியர்களையும் நன்றியுடன் நினைவுகூர்வது நம் கடமையாகும்.

அமுதவிழா ஆண்டில் கல்லூரியை வழிநடத்தும் அதிபர் திரு. கு. சிவானந்தம் அவர்களையும் கல்வி மற்றும் இணைபாட விதானச் செயற்பாடுகளில் தோள்கொடுத்து உழைத்துவரும் ஆசிரியர்கள், பெற்றோர், பழைய மாணவர்கள், நலன்விரும்பி களையும் பாராட்டுகின்றேன்.

வீரசிங்கம் மகாவித்தியாலய அமுதவிழா சிறப்புறவும் ஆண்டுதோறும் வெளிவரும் வீரசிங்கன்மலர் அழகுற வெளிவரவும் வாழ்த்துகின்றேன்.

நன்றி

**கோட்டக்கல்வி அலுவலகம்,**
***சாவகச்சேரி.***

**திரு. நா. சத்தியநாதன்**

# வித்தியாலய முதல்வரின்

# வாழ்த்துரை

கல்லூரியின் வரலாற்றுப் பொக்கிஷமாக விளங்குவது சஞ்சிகை. உயர்தர மாணவமன்றத்தினால் ஆண்டுதோறும் கையெழுத்துச்சஞ்சிகை யாக வெளிவந்து, சென்றஆண்டு ''வீரசிங்கன்'' என்ற பெயருடன் அச்சுப் பிரதியாக வெளிவந்தமையை உயர்தரமாணவமன்ற சஞ்சிகைவரலாற்றில் ஒருதிருப்புமுனை எனக்கொள்ளலாம்.

அதனைத்தொடர்ந்து, எமது வித்தியாலயம் அமுதவிழாக்காணும் இவ்வேளையில் இப்பாடசாலையின் தோற்றத்திற்கு அடித்தளம் அமைத்த ஸ்தாபகரான பெருமதிப்புக்குரிய அமரர் வே. வீரசிங்கனார் அவர்களை பக்தியுடன் நினைவுகூர்வதுடன் இந்நன்னாளில் ''வீரசிங்கன்'' அமுதவிழா சிறப்புமலராக வெளிவருவதையிட்டு பேருவகையடைகின்றேன்.

இம்மலரானது மாணவர்களினதும் ஆசிரியர்களினதும் பல்வேறு துறைசார்ந்த அறிவாற்றல்களை வெளிப்படுத்தும் சாதனமாகமட்டுமன்றி, வித்தியாலயத்தின் உயிரோட்டத்தினைக்கட்டியம்கூறுவதாகவும் அமைந்துள்ளது

இம்மலர் நிறைவான மலராக வெளிவரவேண்டும் என்பதில் அயராது உழைத்த அமுதவிழா மலர்க்குழுவினர்க்கும் உயர்தரமாணவ மன்றத்தினர்க்கும் எனது பாராட்டுக்கள். தொடர்ந்தும் ஆண்டுதோறும் வீரசிங்கன் புதியபுதிய விடயங்களைத் தன்னகத்தே கொண்டவனாக புதுப்பொலிவுடன்வெளிவர எல்லாம்வல்ல வேம்படி விநாயகனை வேண்டி எனது ஆசிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

நன்றி

திரு. கு. சிவானந்தம்

## அலுவலகத்தில் வித்தியாலய முதல்வர்



திரு. குமாரசாமி சிவானந்தம்

B.A (Cey), Dip in Ed, SLPS -1

# பிரதி அதிபரின்
# வாழ்த்துச்செய்தி

கல்வியானது ஒருவகையில் அறிவுத்தேடலின் முயற்சியாகவே அமைகின்றது. அந்த அறிவுத்தேடலின் முயற்சியின் பயனாக மனிதன் பலதரப்பட்ட அனுபவங்களையும் ஆற்றல்களையும் பெறுகின்றான். விஞ்ஞான அறிவியலாக்கச்சக்தித்தேடல்களாக மனிதசெயற்பாடுகள் மலர்ந்துகொண்டிருக்கும் இக்காலகட்டத்தில் எந்தவொரு கூட்டிணைப்பு தொழிற்பாடும் வரவேற்புக்குரியது. கல்வியின் முழுநோக்கம் மாணவர்களைப் பெருமைக்குரியவர்களாக, சமூகத்தோடிணைந்து செயற்படக்கூடியவர்களாக உருவாக்குவதேயாகும். மாணவர்கள் பலவிடயங்களைத்தேடிப்பெற்று ஒழுங்குபடுத்தி அமைப்பாக்கம்செய்து நூல்வெளியீட்டுக்கான அனுபவத்தைச்சஞ்சிகை ஆக்கத்தின்மூலம் பெற்றுக்கொள்கின்றனர். இத்தகையசெயற்பாடு சுய கற்றலுக்கு வழிவகுக்கின்றது எனக்கூறலாம்.

கல்வி என்பது, ஒருவரால் மற்றவருக்கு வழங்கக்கூடியதொன்றல்ல. மாறாக, அது சுயமாகப்பெற்றுக்கொள்ளவேண்டிய ஒன்றாகும். மாணவரிடையே மறைந்திருக்கும் ஆற்றல்களை வெளிக்காட்டி மேலும்அவர்களை ஊக்குவித்து முயற்சியுடையவர்களாகவும், விடாமுயற்சியினால் தம்மைத்தாமே வளர்த்துக் கொள்ளும் இயல்புடையவர்களாகவும் திகழவைக்கும் செயற்பாடுகளில் சஞ்சிகையாக்கமும் ஒன்றாகும். எமது பாடசாலையில் வகுப்புரீதியாகச் சஞ்சிகைகள் கையெழுத்துப்பிரதியாக வெளிவந்துகொண்டிருக்கின்றன. அண்மையில் ஆரம்பப்பிரிவு மாணவர்களால் தமிழ்க்கையெழுத்துச்சஞ்சிகைகளும் ஓர்ஆங்கில கையெழுத்துச்சஞ்சிகையும் கல்வியற்கல்லூரி மாணவ ஆசிரியர்களின் வழிகாட்டலோடு வெளியிடப்பட்டன.

இந்தவகையில், உயர்தரமாணவமன்றமும் ஆண்டுதோறும் 'வீரசிங்கன்' என்றபெயரில் சஞ்சிகையினை வெளியிட்டுவருகின்றது. ஆரம்பத்தில் 'ஆதித்தன்' என்றபெயரில் கையெழுத்துச்சஞ்சிகையாக மூன்றுமலர்கள் வெளிவந்து நான்காவதுமலர் தட்டச்சுப்பிரதியாக்கம் செய்தபொழுதும் இடப்பெயர்வின் காரணமாக வெளியீடுசெய்யப்படவில்லை. பின்னர், ஆதித்தன் பருவஇதழ் பாடசாலை நிறுவுநர் வீரசிங்கனாரின் பெயரைத்தாங்கி 'வீரசிங்கன்' என்ற பெயரோடு 2000-ம் ஆண்டு அச்சுப்பிரதியாக வெளியிடப்பட்டது. இந்த ஆண்டு 'வீரசிங்கன்' எமது பாடசாலையை நிறுவி, எண்பதாவது ஆண்டினை நிறைவுசெய்வதன் காரணமாக உயர்தரமாணவமன்ற அனுசரணையுடன் அமுதவிழாசிறப்புமலராக வெளிவருவதையிட்டு மட்டற்றமகிழ்ச்சியடைகின்றேன். இம்மலரில் மாணவர்களின் ஆக்கங்களோடு ஆசிரியர்களின் ஆக்கங்களும் வெளிவருவது போற்றுதற்குரியது. அமுதவிழா மலரானது தொடர்ந்து ஆண்டுதோறும் பருவமலராக வெளிவந்து நூற்றாண்டுவிழா மலராகவும் வெளிவரவேண்டுமென ஆசியும் வாழ்த்தும் கூறுகின்றேன்.

நன்றி

**திரு. நா. சிவகுரு**

# கனிஷ்ட அதிபரின்
## ஆசியுரை

எமது வித்தியாலயத்தின் உயர்தரமாணவமன்றம் மாணவர்களை ஒன்றிணைத்துப் பலகல்விச்செயற்பாடுகளை மேற்கொண்டுவருகின்றது. அதன் செயற்பாடுகளில் முக்கிய மானவை என்றவகையில் மாணவர்களின் சுயஆற்றலை வெளிப்படுத்தும்வகையில் மன்றச்செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்லல் குறிப்பிடத்தக்கது. அத்துடன், ஆசிரியர்தின நிகழ்வுக்குரிய தேவைப்பாட்டை அறிந்து அந்நிகழ்வைச் சிறப்புற நிகழ்த்தியும் வருகின்றது. அந்தவகையில், உயர்தர மாணவமன்றத்தில் அங்கத்துவம்பெற்றுள்ள மாணவர்களையும் அதன் பொறுப்பாசிரியர்களையும் நான் மிகவும் பாராட்டுகின்றேன்.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக மன்றத்தின் உயர்தர வெளிப்பாடான சஞ்சிகை வெளியீடானது பாடசாலை வரலாற்றில் தனித்துவம்பெற்றுவிளங்குவதொன்றாகும். ஆரம்பத்தில் 'ஆதித்தன்' என்ற பெயரில் கையெழுத்துச்சஞ்சிகையாக வெளிவந்துகொண்டிருந்தது. இன்று அமுதவிழாமலராகப் பிரமாண்டமான அமைப்பில் வெளிவருவதையிட்டு நாம் மனம் மகிழ்வடைகின்றோம்.

சஞ்சிகையின் உள்ளடக்கம் மிகவும் பயனுள்ள விடயங்களைத்தாங்கியுள்ளமை பாராட்டுக்குரியன. இனிவரும் காலங்களில் ஆண்டுதோறும் இத்தகைய அரியமுயற்சியைக் கைவிடாது சஞ்சிகை வெளியீட்டுப்பணியை மேற்கொள்ள வேண்டும் எனகேட்டு வேம்படி விநாயகன் பாதங்களைத்தொட்டு வாழ்த்துகிறேன்.

நன்றி

திருமதி பு. நாகேந்திரராஜா

# பகுதித்தலைவர்களின்

## வாழ்த்துச் செய்தி

''தோன்றிற் புகழொடு தோன்றுக'' எனும் வள்ளுவன் வாக்கிற்கிணங்க வாழ்ந்தவர் எமது வித்தியாலய ஸ்தாகபர் அமரர் வீரசிங்கனார் அவர்கள். இப்பெரியாரின் சிந்தனையில்வித்திட்ட எமது கல்விநிறுவனம் ஆரம்பத்தில் ஒரு கொட்டிலில் தொடங்கி இன்று அமுதவிழாக் காணும்நிலையில் பெரு விருட்சமாக வளர்த்து நிற்பதைக்கண்டு எவருமே மகிழாதிருக்கமுடியாது. இவ்வித்தியாலயத்திலேயே மாணவராகச் சிறுவயதிலே கல்விபயின்று இங்கேயே ஆசிரியராகப் பணியுரிந்து மகிழ்வதில் இன்றைய அதிபர் திரு. கு. சிவானந்தம் உட்படப் பலர் இடம்பெறுவது மகிழ்ச்சிக்குரியவிடயமாகும்.

1926-ம் ஆண்டில் இவ்விடத்தில் அமையப்பெற்ற இவ்வித்தியாலயமானது பொதுவாக அடிப்படை வசதிகள்கூடப் பெற்றிராதநிலையில் இயங்கிவந்தது. ஆனால், காலப்போக்கில் இவ்வூர்ப் பெரியோர்களின் பெருமுயற்சியினால் படிப்படியாக வளர்ந்துவந்துள்ளமை குறிப்பிடத்தக்கவிடயமாகும். 1960-ம் ஆண்டு இப்பாடசாலையை அரசு பொறுப்பேற்றபோது தரம் 1-11 வரை வகுப்புக்கள் நடைபெற்றன. 1967-ல் மகாவித்தியாலயமாகப் பொறுப்பேற்கப்பட்டது. (1Cபாடசாலை) அதன்பின் பௌதீகவளங்களால் சிறந்துவிளங்கிய இவ்வித்தியாலயம் 2004 போர்க்காலச் சூழ்நிலையில் இடம்பெயர்ந்து வடமராட்சியில் இயங்கிவந்தது. 2002 இல் மீண்டும் சொந்தஇடத்தில் செயற்பட ஆரம்பித்தது. அவ்வேளையில் சுமார் 1200 மாணவர்கள் கல்விகற்றனர். இன்று 1-13 வரையான வகுப்புக்கள் நடைபெறுகின்றன. பரீட்சை முடிவுகள் மகிழ்ச்சியைக்கொடுக்க விளையாட்டுத்துறை முதலிய இணைபாடவிதான செயற்பாடுகள்யாவும் சிறந்துவிளங்க அகவை எண்பது கண்டு மிளிர்கின்றது.

இந்தவேளையில் சகல சீர்சிறப்புகளுடனும் வெளிவரும் அமுதவிழா மலர் ''வீரசிங்கன்'' எல்லா நலனும் பெற்றுத்திகழவேண்டும் என எல்லாம் வல்ல வேம்படிவிநாயகன் பாதங்களைத் தொழுது வாழ்த்துவதோடு இந்நூலுருப் பெறக் காலாய்இருந்த உயர்தரமாணவமன்றமும் அதனோடு இணைந்த அனைத்து ஆசிரிய மாணவ உள்ளங்களையும் வாழ்த்துகின்றோம். இனிவரும் காலங்களிலும் ''வீரசிங்கன்'' வீரமுடன் வெளிவரவேண்டும் எனப் பிரார்த்திக்கின்றோம்.

''அரிய என்று ஆகாது ஒன்றில்லை''

நன்றி

திரு. வா. சந்திரதேவன்,

திருமதி ச. சின்னத்தம்பி

(பழைய மாணவி)

# முன்னாள் ஆசிரியரின் ஆசியுரை

கற்றல் என்பது வகுப்பறைச்செயற்பாட்டுடன் மட்டுப்படுத்தப்பட்ட தொன்றன்று. அறிவைப்பெறுவது என்பது கற்றலின் ஓரங்கம் மட்டுமே. அறிவு விருத்தி, பண்பு மற்றும் ஆளுமைவிருத்திக்கூறுகளை வளர்த்தெடுப்பது கல்வியின் பிரதானநோக்கமாகும்.

இத்தகைய நோக்கங்களை எய்துவதற்கு வகுப்பறைக் கற்றல் - கற்பித்தற் செயற்பாடுகளுடன் இணைபாடவிதானசெயற்பாடுகளும் பெரிதும் உதவுவன. பாடசாலைச் சஞ்சிகைவெளியீடென்பது இணைபாடவிதானச்செயற்பாடுகளுள் முக்கியமான ஒன்றாகும். பாடசாலைக்குள்ளேயும் வெளியேயும் மாணவர்கள் சுயமான தேடல்முயற்சியில் ஈடுபடுவதற்கும் சிந்திப்பதற்கும் இச்செயற்பாடு பெரிதும் உதவுகிறது.

இயல்பாகவே பிள்ளைகளிடம் ஆற்றல்கள் நிறைந்துகிடக்கின்றன. அவை ஆசிரியர்களாற் சரியானமுறையில் இனங்காணப்பட்டு, தட்டியெழுப்பப்பட்டு நெறிப் படுத்தப்படும்போது அப்பிள்ளைகள் உயர்நிலையை எய்துவர். புகழ்பெற்ற இலக்கிய வாதிகள், கல்விமான்கள், அறிஞர்கள் முதலியோர் தம்மிளமைக்காலத்தை நினைவு கூரும்போது தம்மைநெறிப்படுத்திய ஆசான்களை விதந்துகூறுவதை நாம் பல சந்தர்ப்பங்களிலும் கண்டுகொள்ளமுடிகிறது.

சஞ்சிகையாக்கச் செயற்பாட்டின்மூலம் மாணவர்களிடம் பல்வேறு திறன் களை வளர்த்தெடுக்கமுடியும். இம்முயற்சியின்போது அவர்கள் ஒன்றிணைந்து செயற்படுவதன்மூலம் கூட்டுப்பொறுப்புணர்வு ஏற்படுகிறது, தலைமைதாங்கும் பண்பு வளர்த்தெடுக்கப்படுகிறது, கவிதை, சிறுகதை, நாடகம் முதலிய ஆக்கங்களைச் சுயமாக ஆக்கும்முயற்சியில் மாணவர்கள் ஈடுபடும்போது சுய சிந்தனை, கற்பனைவளம் என்பன அவர்களிடம் வளர்கின்றன. கட்டுரை மற்றும் தகவல்தொகுப்பு முயற்சிகளின்போது அவர்களது தேடல்முயற்சி, வகைப்படுத்தல், தொகுத்தல், விமர்சித்தல் முதலிய திறன்கள்வளர்கின்றன. தேடல்முயற்சியின்போது மாணவர்கள் பாடசாலைக்கு வெளியே செயற்படும் சந்தர்ப்பங்களும் ஏற்படுகின்றன. அச்சந்தர்ப்பங்களின்போது அவர்களிடம் சமூக மயமாக்கமும், வாழ்க்கை பற்றிய புரிந்துணர்வும் ஏற்படுகின்றன. இவையாவும் அவர்களது எதிர்கால வாழ்க்கைக் குரிய படிப்பினைகளாகவும் அனுபவங்களாகவும் அமைகின்றன.

இத்தகைய பயன்களை இலக்குகளாகக்கொண்டு ஆக்கப்பட்ட இம்மலராக்கம் இவ்வித்தியாலயத்தின் வரலாற்றின் ஒருமைற்கல்லாக அமைகிறது. இம்முயற்சியில் ஈடுபட்ட மாணவர்களும் அவர்களை நெறிப்படுத்திய ஆசிரியர்களும் அதிபரும் பாராட்டுக்குரியவர்களே.

இத்தகு முயற்சி ஒவ்வோர் ஆண்டும் இடம்பெறவேண்டும். இவ் வித்தியாலயத்தின் கல்விமேம்பாட்டுக்கு அது பெரிதும்உதவவேண்டும் என்று பிரார்த்தனைசெய்வதுடன் எனது மனமார்ந்த ஆசிகளையும் வழங்குகின்றேன்.

நன்றி

திரு. க. முருகதாசன்

# மன்றப் பொறுப்பாசிரியரின்

## வாழ்த்துரை

கற்றற் செயன்முறையின் உன்னதமானநிலை மாணவர்களது ஆளுமைவிருத்தியாகும். ஆளுமை என்பதனுள் அறிவு, உளவியக்கம், மனவெழுச்சி என்பன அடங்கும். இத்தகைய ஆளுமைவிருத்தியை ஏற்படுத்துவதில் சஞ்சிகையாக்க முயற்சி கணிசமானபங்களிப்பினை வழங்குகிறது. ஆரோக்கியமான எதிர்காலத்தைச் சிருஷ்டிப்பதற்குரிய இளையதலைமுறையை உருவாக்குதற்குச் சஞ்சிகை ஆக்கமுயற்சி பெரிதும் உதவும்.

அந்தவகையில், எமதுவித்தியாலயத்தின் உயர்தரமாணவர் மன்றத்தினர் ஆண்டுதோறும் ''வீரசிங்கன்'' என்ற சஞ்சிகையினை வெளியிட்டுவருகின்றனர். இச்சஞ்சிகை தொண்ணூறுகளில் ''ஆதித்தன்'' என்ற கையெழுத்துப்பிரதியாக வெளிவந்து இரண்டாயிரமாம் ஆண்டளவில் அச்சுப்பிரதியாக வெளிவந்தமை மகிழ்ச்சிக்குரியதாகும். பின்னர் இரண்டாயிரத்து ஐந்தாம் ஆண்டில் ''வீரசிங்கன்'' என்ற பாடசாலை ஸ்தாபகரின் பெயரைத்தாங்கி வெளிவந்தமை போற்றுதற்குரியது.

இவ்வாண்டு எமதுவித்தியாலயம் எண்பதாவது ஆண்டில் காலடி எடுத்துவைத்திருக்கும் இவ்வேளையில் ''வீரசிங்கன்'' அமுதவிழா சிறப்பு மலராக உயர்தரமாணவமன்றத்தினரால் வெளியிடப்படுவதையிட்டு புளகாங்கிதம் அடைகின்றேன். இவ்வமுதவிழாமலர் சிறப்புற ஆசிகூறுவதோடு இம்மலர் நூற்றாண்டுவிழாமலராகவும் வெளிவர வேண்டுமென வேம்படிவிநாயகனைவேண்டி உயர்தரமாணவ மன்றத்தினருக்கு வாழ்த்துக்களையும்தெரிவித்துக்கொள்கின்றேன்.

நன்றி

**திருமதி றோ. பரஞ்சோதி**

# புதிய மன்றப்பொறுப்பாசிரியரின்
# ஆசியுரை

பாடசாலைகளில் கல்வியைக்கற்கும் மாணவர்கள் வெறும் ஏட்டுக் கல்வியோடுமட்டும் நின்றுவிடாமல் ஏனைய கல்விச்செயற்பாடுகளையும் வளர்த்துக்கொள்ளும்பொழுதுதான், கல்வியில் பூரணத்துவத்தை அடைகின்றார் கள். இத்தகைய செயற்பாடுகளை வளர்ப்பதில், பெரும்துணையாய் இருப்பன அப்பாடசாலையின் மாணவமன்றங்களே. எனவேதான் மாணவனின் நல்லொழுக்கப்பண்புகள், ஆளுமை, சிந்தனைஆற்றல், ஆக்கத்திறன், தலைமைத்துவப்பண்பு, தன்னம்பிக்கை போன்றன யாவற்றையும் பாடசாலை மாணவமன்றங்களின்மூலமே ஏற்படுத்தமுடியும் என்பதற்காக மாணவமன்றங்கள் அமைக்கப்பட்டியங்குகின்றன.

இந்தவகையில், யா/மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலய மாணவ மன்றமானது மாணவர்களாலே தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர்களைக்கொண்டு தாமே ஒழுங்குசெய்து மாணவர் அறிவு, ஆற்றல், சிந்தனைத்திறன்களை மன்றத்தில் வெளிப்படுத்தி தம்மைக்கல்விச்செயற்பாடுகளில் வளர்த்துக் கொள்கின்றனர். இம்முயற்சியின் விளைவாக ஆண்டுதோறும் ''வீரசிங்கன்'' என்ற பெயரில் சஞ்சிகை ஒன்றினையும் வெளியிட்டுவருகின்றது. இச்சஞ்சிகை யானது மிகவும் சிறியதாக எளிமையானமுறையிலே வெளிவந்தபோதிலும் மாணவர்களின் சிறந்த ஆக்கங்களை தன்னகத்தேதாங்கி மாணவர்களின் அறிவாற்றல்களை வளர்க்கின்றதெனில் மிகையாகாது.

யா/மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம் 2006-இல் அமுதவிழாவைக் கொண்டாடவிருக்கும் இவ்வேளையில் ''வீரசிங்கன்'' சஞ்சிகையானது அமுதவிழா மலராகப் புதுப்பொலிவுடன் சிறந்த ஆக்கங்களைத் தன்னகத்தே தாங்கி வெளிவரவுள்ளதையிட்டு மிக்கமகிழ்ச்சியடைவதோடு ''அமுத விழா மலர் மலர்ந்து மணம்வீச'' மனங்கனிந்த ஆசிகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன். அத்துடன் ஆக்கங்களைத் தந்துதவிய மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் ஆசியுரைகளை வழங்கிய பெருந்தகைகளுக்கும் நன்றிகள் உரித்தாகுக.

நன்றி.

திருமதி சா. பரமலிங்கம்

# உயர்தர மாணவமன்றத் தலைவரின்

## உள்ளத்திலிருந்து

யா/மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம் 80 ஆண்டுகளை 2006-ல் நிறைவுசெய்யும்வேளையில் 'விரசிங்கன்' எனும் பெயரில் அமுதவிழா மலரினை வெளியிடுவதன்மூலம் அந்நாளை நினைவுகூர்வதையிட்டு பெருமகிழ்வு அடைவதோடு உயர்தரமாணவர்மன்றத்தலைவர் என்றவகையில் இச் சஞ்சிகைக்கு வாழ்த்துக்களை வழங்குவதிலும் பெருமகிழ்வடைகிறேன்.

இப்பாடசாலையானது, ஆரம்பிக்கப்பட்டு 80 ஆண்டு காலத்தினுள் பல்வேறுபட்ட அசௌகரியங்களுக்கு மத்தியிலும் சகலதுறைகளிலும் வளர்ந்து வருவது பாராட்டுதற்குரியதொன்றாகும். பாடசாலை உயர்விற்காக அயராது உழைத்துவரும் அதிபர், சக ஆசிரியர்களின் முயற்சியுடன் தமிழ்விழாக்கள், சமயவிழாக்கள், நூல்அறிமுகவிழாக்கள், கல்விக்கருத்தரங்குகள், பெரியார் நினைவுப்பேருரைகள் போன்ற பல்வேறுநிகழ்வுகளிலும் எமதுபாடசாலை பங்களிப்பினை நல்கிவருகின்றமை பாடசாலை உயர்வின் அறிகுறியாகும்.

தொடர்ந்துவரும் ஆண்டுகளிலும் எங்கள்பாடசாலையானது சகல சிறப்பம்சங்களுடனும் யாழ்மண்ணில் ஒளிரவேண்டும். பாடசாலை வளர்ச்சிக்கு அயராதுழைக்கும் அதிபர் அவர்களின் தகுந்த தலைமைத்துவ வழிகாட்டலில் கல்விசார், கல்விசாரா உத்தியோகத்தர்கள், ஆசிரியர்கள் அனைவரதும் கூட்டு முயற்சியுடன் இப்பாடசாலை மேலும்வளம்பெறவும் மாணவர் கல்விஉயரவும் நான்உளமார வாழ்த்துகிறேன்.

எமது பாடசாலை 80 ஆண்டுகளை நிறைவுசெய்து அமுத விழாவினைக் கொண்டாடும்வகையில் வெளிவரும் இம்மலருக்கு பல்வேறு ஆக்கங்களை அளித்து இம்மலரினை சிறப்பாக வெளியிட உதவிய அனைவருக்கும் எனது பாராட்டுகளும் நன்றியும் உரித்தாகுக. இம்மலர்வெளியீட்டிற்கு பல்வேறு விதத்திலும் முன்னின்று இயங்கிய மலராக்க குழுவினருக்கும் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் எனது உளமார்ந்த நன்றிகளும் பாராட்டுதல்களும் உரித்தாகுக.

நன்றி

**செல்வன் பொ. தனேசன்**

# புதிய உயர்தர மாணவமன்றத்தலைவியின் எண்ணத்திலிருந்து.......

யா/மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம் 2006இல் தனது 80ஆவது நிறைவினைக் கொண்டாடிக்கொண்டிருக்கும் இவ்வேளையில், அமுதவிழா மலராகிய ''வீரசிங்கன்'' மூலம் உங்களைச் சந்திப்பதையிட்டுப்பெரும் மகிழ்வடைவதோடு உயர்தரமாணவமன்றதலைவி என்றவகையில் இச்சஞ்சிகைக்கு எனது வாழ்த்துக்களை வழங்குவதிலும் பெரும் அகமீகிழ்வடைகின்றேன்.

இப்பாடசாலை ஆரம்பமாகி 80 ஆண்டுகாலத்தில் பல்வேறு தடைக் கற்களுக்குமத்தியிலும் சாதனைகள் பலபுரிந்து வீறுநடைபோட்டுக் கொண்டிருக்கும் இக்காலப்பகுதியில் மேலும்பல சிறப்பம்சங்கள்பெற்று எமது மண்ணில் ''கலங்கரை விளக்குப்போல்'' திகழவேண்டுமென்பதே எனது பேரவா. அதற்காக எமது அதிபர், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள், மாணவர்கள் போன்ற அனைவரும் அயராது முயற்சித்துக் கொண்டிருக் கின்றனர் என்பதை மறுப்பதற்கில்லை. இதற்குப்பக்கபலமாக எமது உயர்தர மாணவமன்றமும் இப்பாடசாலையின் வளர்ச்சிக்கும், செயற்பாடுகளுக்கும் தன்னாலான ஆக்கமும், ஊக்கமும் வழங்கிக்கொண்டிருக்கின்றது. மேலும், அனைவரது ஒத்துழைப்புடனும், ஆசியுடனும் எமது பாடசாலை கல்வி உலகுக்கு ஒளியூட்ட வாழ்த்துகின்றேன்.

அமுதவிழா மலருக்கு ஆக்கங்களையும் ஊக்கங்களையும் அளித்த அனைவருக்கும் எனது பாராட்டுதல்களும் நன்றிகளும் பல. இம்மலர் வெளியீட்டிற்கு பல்வேறுவிதத்திலும் முன்னின்று இயங்கிய மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் எனது உளமார்ந்த நன்றிகள். மேலும், இம்மலர் சிறப்புற அமைவதற்கு ஏதுவாக இருந்த அனைவரையும் நான் பாராட்டுவதோடு எமது மன்றத்தின் செயலாளர், பொருளாளர் மற்றும் உறுப்பினர்கள் சார்பில் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

நன்றி

**செல்வி மோ. சசீதா**

# உயர்தர மாணவமன்றத்தின் இதழாசிரியர்களின் ஒருசிலவரிகள்

"அரிய என்று ஆகாது இல்லை" என்னும் மகுட வாசகத்தைத் தாங்கி மிளிர்கின்ற யா/மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம் சிறந்ததொரு கல்வி ஸ்தாபனமாக வளர்ந்துவருவது கண்கூடு. சமூகத்தில் பலநிறுவனங்கள் செயற்பட்டுத் தத்தம்வெளியீடுகளைச் சிறந்தமுறையில் வெளியிட்டுத் தம் நிறுவனத்தின் பெயரை நிலைநிறுத்திக்கொள்கின்றன. அவ்வாறே, கல்வி நிறுவனங்களாகிய பாடசாலைகளும் கல்விப்பெறுபேறுகளில் உயர்ந்து விளங்குவதோடு கற்றவர்தம் அனுபவங்களை மற்றவர்க்காய்ப் பதிவுசெய்து வைத்திருத்தலும்வேண்டும். அத்தகைய பதிவுகளில் சிறந்ததொரு படைப்பே இப்போது தங்கள் கைகளில் தவழ்ந்துகொண்டிருக்கும் "வீரசிங்கன்" அமுதவிழா சிறப்புமலர். இது காலத்தைவென்று கலங்கரைவிளக்காக அமையவேண்டும் என எல்லாம்வல்ல வேம்படிவிநாயகன் பாதங்களைப்பணிகின்றோம்.

எமது வித்தியாலயத்தின் எண்பது அகவைநிறைவைச் சிறப்பாகக் கொண்டாடவேண்டும் என்று ஆசிரியர், மாணவர் மத்தியிலேற்பட்ட விருப்பத்தை முதல்வரிடம் தெரிவித்தபோது, மிக மனமகிழ்வோடும் வாழ்த்துக்களோடும் வரவேற்று ஊக்கமளித்தார். அவ்வூக்கத்தினைச் செயற்றிறனாக்கும் முயற்சியில் கடந்தவருடம், வீரசிங்கன்மலர் அமுதவிழாமலருக்கு அனுசரணைமலராக கல்லச்சுப்பதிப்பில் வெளிவந்தது. அது முதல்வரின் சிந்தைக்கு மேலும்புடமிட்டது. அதன் விளைவை இப்போது அமுதவிழாச்சிறப்புமலராக அறுவடை செய்திருக் கின்றோம். முதல்வர் திரு. கு. சிவான்ந்தம் அவர்களுக்கு எமது மனமார்ந்த நன்றிகள்.

இம்மலர் காலத்தின்தேவை என்பதை அறிந்த இவ்வித்தியாலய ஆசிரியரும் மாணவரும் தத்தம் உள்ளக்கிடக்கைகளை எழுத்துக்களில் வடித்து மலருக்காய் வழங்கியமைக்கு நாம் மிகவும்களிகூர்ந்து நன்றிதெரிவிக்கின்றோம். மாணவர் ஆக்கங்களை ஒப்புநோக்கிச் செம்மைகண்டு திருத்திச்சேகரித்து வழங்கியும் தாமும் ஆக்கங்கள்தந்தும் உதவிய ஆசிரிய உள்ளங்களை மனமாரப் போற்றுகின்றோம்.

மேலும் மலர்க்குழு என ஒருகுழுவை நியமித்துச்செயற்படுத்தியபோதும் அம்மலர்க்குழுவில் அங்கம்வகிக்காத ஆசிரியர்களது பணி மிகவும்பயனுள்ளதாக இருந்தது. எல்லா ஆசிரியர்களும் 'சஞ்சிகை வேலை நடக்கிறதா?' என அடிக்கடி வினவும் வினாவே இச்சஞ்சிகை விரைவில் உருவாக உரமாகியது என்றால் அதுமிகையாகாது.

நூலுக்கான அச்சடித்த பிரதிகளை உண்மைப்பிரதிகளோடு ஒப்புநோக்குதல் என்பது சிரமான பெரும்பணியாகும். இப்பணியைச் சிறந்த முறையில் செய்துதவிய முதல்வர் உள்ளிட்ட ஆசிரியர்களுக்கும் ஆசிரியைகளுக்கும் நன்றிகள் தெரிவிக்கின்றோம்.

நூலுக்கான ஆக்கங்களை அவ்வப்போது கணினி அச்சுப்பதிவுசெய்து உதவிய யாழ். கல்வியியற்கல்லூரி உள்ளகப்பயிற்சி ஆசிரியைகள் செல்விகள் வே. சுமதா, க. ராஜினி, பா. சத்தியா மற்றும் சி. அனுசியா அவர்களுக்கும் அனைத்துப் பதிப்புக்களையும் தொகுத்தும்வகுத்தும் உதவிய யா/மீசாலை விக்னேஸ்வரா மகாவித்தியாலய ஆசிரியநண்பர் திரு. சு. துசித்குமார் அவர்களுக்கும் மற்றும் அனைத்து ஆசிரியநண்பர்களுக்கும் நன்றிகூறுகின்றோம்.

பொதுவாக அனைத்து நிறுவனங்களும் இத்தகையபணியில் எதிர்நோக்கும் சவால் நிதிப்பிரச்சினையாகும். இதுபற்றி எமது வித்தியாலய சமூகத்தினரிடம் ஆலோசித்தபோது, ஆசிரியர்கள் தாம் உதவுவதாக வாக்குறுதியளித்தபோது மலைபோல் பொன்கிடைத்த மகிழ்ச்சியில்திழைத்தோம். ஆசிரியர்கள் ஒவ்வொருவரும் அன்பளிப்பாகவும் முற்பணமாகவும் நிதிகொடுக்க முன்வந்தமை கல்விக்கு ஆசிரியர்கள் எத்தகைய அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றார்கள் என்பதை எடுக்காட்டுகின்றது. அதுமட்டுமன்றி, மாணவர்கள் பலவழிகளில் நிதிசேகரிக்க முன்வந்தபோதும் நாட்டுச்சூழல் இடம்கொடுக்கவில்லை. அதனால் இல்ல விளையாட்டுப் போட்டிக்காக மாணவர்களிடமிருந்து சேகரித்த பணத்தில் செலவுபோக எஞ்சிய கணிசமானதொகையை நூலாக்கப் பணிக்குக்கொடுத்த பெருமனப்பாங்கை இந்தஇடத்தில் நன்றியுடன் கூறிக்கொள்ளவிரும்புகின்றோம். மேலும், விளம்பரங்கள்மூலம் நிதிசேகரிக்க முனைந்தபோதும் அதற்கும் நாட்டுச் சூழ்நிலை இடந்தரவில்லை. இத்தகைய இடர்பாடுகள் மத்தியில் வீரசிங்கன் தங்கள் கைகளை அலங்கரிப்பதையிட்டுப் பெருமகிழ்வெய்துகின்றோம்.

இம்மலருக்கான ஆசிச்செய்திகள், வாழ்த்துச்செய்திகள் என்பவற்றைப் பெறுவதற்காக கல்வியமைச்சுவரை எமது முயற்சியைத் தொடர்ந்தோம். ஆனால், காலச்சூழ்நிலை தடையாக அமைந்தது. எனினும், எமது ஊர்ப்பெரியோர்களின் வாழ்த்துச்செய்திகளும் தென்மராட்சிக்கல்விவலயத்தினரது வாழ்த்துச்செய்திகளும் பாராட்டுச்செய்திகளும், எமது வித்தியாலத்தினரின் ஆசிகளும் எல்லாவற்றுக்கும் மேலாக இவ்வித்தியாலய ஸ்தாபகர் திரு. வே. வீரசிங்கனாரின் ஆசிகளும் எமது வித்தியாலயத்தின் நடுநாயகமான வேம்படிவிநாயகனின் அருளாசிகளும் நூலை அலங்கரிப்பதையிட்டு மனமகிழ்வடைகின்றோம்.

இந்நூலாக்கப்பணியில் எமது வித்தியாலயத்தின் கல்விசாரா ஊழியர்களின் பணி குறிப்பிடத்தக்கது. நூலுக்கு நிதியுதவி செய்ததோடு தமது ஆக்கங்களையும் தந்துதவியமை குறிப்பிடத்தக்கது. அதுமட்டுமன்றித் தமது தன்னலமற்ற பணிகளால்

நூலாக்கப்பணிக்கும் பெரிதும் உதவியுள்ளனர். அத்தோடு, எமது வித்தியாலய சிற்றுண்டியக உரிமையாளர் திரு. எஸ். பாஸ்கரன் அவர்களது பாடசாலை மீதான பற்றுதலையும் அவர் இந்நூலாக்கத்திற்கு உதவிய பண்பையும் நன்றியுடன் வரவேற்கின்றோம்.

அத்தோடு இந்நூலில் இடம்பெற்ற புகைப்படங்களைச் சிறந்த முறையில் புகைப்படம் பிடித்துதவிய கங்கா புகைப்படக் கலையகத்தினருக்கும் எமது நன்றிகள் உரித்தாகட்டும். இவையனைத்துக்கும் மேலாக, இந்நூல் வடிவமைப்பில் திருக்கணித பதிப்பகத்தினர் எடுத்துக்கொண்ட ஆர்வத்தை நாம் நன்றியுடன் வரவேற்கின்றோம். தமது நிலையத்தினரின் நூல்வெளியீடுபோன்று மிகுந்த அக்கறையுடன் செயற்பட்டமை எமக்கு மகிழ்வூட்டுகின்றது. அத்துடன் ஆக்க பூர்வமான ஆலோசனைகள் வழங்கி நூலின் உள்ளடக்கத்தினை ஒழுங்கு படுத்தியதோடு ஒப்புநோக்கிப் பிழையின்றிய நூலாக்கத்திற்கு உதவிய பெருமனதை நாம் மனதாரப்பாராட்டுகின்றோம், நன்றி கூறுகின்றோம்.

1926-ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இவ்வித்தியாலயம் இன்று எண்பது கண்டு வளர்ந்துநிற்கும்வேளையிலே 2006-ம் ஆண்டு அமுதவிழாமலராக வெளிவருவதைக்கண்டு எல்லோரும் மனமகிழ்ச்சி எய்தியிருக்கும் இவ்வேளையில், அம்மலரில் இடம்பெற்றிருக்கும் கட்டுரைகள், கவிதைகள், சிறுகதைகள், பொதறிவுத்துணுக்குகள் மற்றும் அம்சங்கள் தங்கள்சிந்தனைக்கு விருந்திட்டிருக்கும் என்பதில் சந்தேகமில்லை. அத்தோடு, இத்தகைய மலர்கள் எதிர்காலத்திலே வெளிவருவதற்குத் தாங்கள் எத்தகையபங்களிப்பைச் செய்யலாம் எனத்திட்டமிட்டிருப்பீர்கள் என்பதிலும் ஐயமில்லை. கற்றதன் பயன் பரீட்சை சித்தியே என எண்ணுபவர்க்கெலாம் இம்மலர் ஒரு உந்துசக்தியாக அமையும் என எண்ணுகின்றோம். எமதுமன்றத்தின் உயரிய நோக்கங்களிலொன்று இளம் படைப்பாளர்களை இனங்காண்பதாகும். அந்நோக்கத்தின் நிறைவே இம்மலர் என்பதையும் கூறிக்கொள்வதில் மகிழ்வடைகின்றோம். எதிர்காலத்திலும் இத்தகைய மலர்கள் வெளியிடப்படவேண்டும். இவ்வித்தியாலயத்தின் நூற்றாண்டு விழா மிகப்பிரமாண்டமாகக் கொண்டாடப்படுவதோடு பல காத்திரமான ஆக்கங் களைத் தாங்கி 'வீரசிங்கன்' வெளிவரவேண்டும் என்ற வேணவாவையும் தெரிவித்து, இந்நூலாகத்திற்பங்கெடுத்த அனைத்து உள்ளங்களுக்கும் இதய சுத்தியுடன் நன்றிகூறுகின்றோம்.

நன்றி

**திரு. க. க. ஈஸ்வரன்** (ஆசிரியர்)
**செல்வன். ம. சுபதீஸ்** (மாணவன்)

**குறிப்பு:-**

இம்மலரில் இடம்பெற்றுள்ள ஆக்கங்கள் அனைத்திற்கும் அவ்வவ் ஆக்கங்களை ஆக்கியோரே பொறுப்புடையவர் ஆவர்.

# பொருளடக்கம்


| | |
|---|---|
| வித்தியாலய கீதம் | II |
| அமுதவிழா கீதம் | III |
| ஆசியுரைகள் | IV - XIV |
| மன்றத்தலைவர்கள் உரைகள் | XV - XVI |
| இதழாசிரியர் கருத்துக்கள் | XVII - XIX |
| வீரசிங்கத்து வேம்படி விநாயகன் | XXI - XXII |
| ஆசிரியர் பகுதி | 1 - 63 |
| மாணவர் பகுதி | 65 - 149 |
| பின்னிணைப்பு | 151 - 160 |

# வேண்டுவோர்க்கு வெற்றிதரும்
# வேம்படி விநாயகன் ஆலயம்



திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொல்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானை
காதலால் கூப்புவர் தம்கை.

## வித்தியாலயத்தில் அமைந்துள்ள வீரசிங்கனார்



# வரலாற்றுப் பார்வையில் வீரசிங்கம் ம. வி.

கிறிஸ்தவ மிசனெரிகள் தமது மதத்தினை பரப்பும் நோக்குடன் கிராமங்களில் ஆங்கிலப் பாடசாலைகளை நிறுவுவதை அவதானித்த வீரசிங்கம் எனும் பெரியார் இத்தகைய ஆங்கிலப் பாடசாலை ஒன்று மீசாலையில் நிறுவப் பட்டால் சைவசமயத்தில் மிகுந்த பற்றுக் கொண்ட மீசாலையூர் மக்கள் மதம் மாறமாட்டார்கள், அதேவேளை ஆங்கில அறிவைப் பெற்றுக் கொள்வார்கள் என எண்ணி மீசாலை புத்தூர் சந்திக்கு அண்மையிலுள்ள தனது காணியை அமெரிக்கமிசனரிக்கு கையளித்து ஆங்கிலப் பாடசாலை ஒன்றை அதில் நிறுவ உதவி செய்தார்.

ஆனால் காலப்போக்கில் அமெரிக்க மிசனெரிமாரின் மதமாற்ற நடவடிக்கைகளில் அதிருப்தி அடைந்த இவர் சைவசமயத்தின் மீது கொண்டிருந்த பற்று உறுதி காரணமாக சைவசமயத்தினை வளர்க்கும் நோக்கில் தனது ஆதனத்தில் ஓர் சைவத்தமிழ் பாடசாலையை ஆரம்பித்து அதற்குத்தானே தலைமை ஆசிரியராகக் கடமையாற்றியதுடன் மூன்று ஆசிரியர்களையும் நியமித்து தனது சொந்தப் பணத்தில் சம்பளமும் வழங்கினார்.

இப்பாடசாலையில் மாணவர் தொகை படிப்படியாக அதிகரித்தமையால் இடநெருக்கடி ஏற்படவே கண்டி வீதியில் தற்போது பாடசாலை அமைந்துள்ள இடத்தில் விசாலமான கொட்டில்களை அமைத்து பாடசாலையை தொடர்ந்து நடத்தினார். இவர் தனக்கென இருந்த ஏராளமான நிலபுலங்களை எல்லாம் இப் பாடசாலைக்கு வழங்கினார். இவற்றில் இருந்து கிடைக்கும் வருமானத்தையும் பாடசாலையின் முன்னேற்றத்திற்காக பயன்படுத்தினார். அத்துடன் இப் பாடசாலையை தொடர்ந்து நிர்வகிப்பதற்காக ஓர் பரிபாலன சபையையும் அமைத்திருந்தார்.

இவர் 1919 ஆம் ஆண்டளவில் இயற்கையெய்தியமையால் பாடசாலை நிர்வாக அலுவல்கள் அனைத்தும் இவ் வமைப்பினாலேயே கவனிக்கப்பட்டு வந்தது. எனினும் இதனை நிர்வகிப்பதில் ஏற்பட்ட கஸ்டங்கள் காரணமாக இப் பாடசாலையை அப்போது கல்விப் பணியை பரவலாக யாழ். பிரதேசத்தில் மேற்கொண்டு வந்த சைவ வித்தியாவிருத்திச் சங்கத்திடம் ஒப்படைத்தனர்.

இவ் வகையில் இச்சங்கமானது 1926-ம் ஆண்டு இவர் நடத்தி வந்த இக் கட்டிடத்தில் பாடசாலையைத் தொடங்குவதற்கான கூட்டம் ஒன்று நடத்தப்பட்டது. இக்கூட்டத்திற்கு வந்திருந்த சைவ வித்தியாவிருத்திச் சங்கத்தினரும் ஊர்ப் பெரியவர்களும், வீரசிங்கம் பெரியாரால் அமைக்கப்பட்டிருந்த அறக்காவல் சபையினரும், சுற்றாடலில் உள்ளவர்களும் சேர்ந்து எடுத்த தீர்மானத்தின்படி இப்பாடசாலைக்கு “வீரசிங்கம் சைவ வித்தியாசாலை” எனப்பெயரிடப்பட்டு 1926-ம் ஆண்டு ஆவணி மாதம் 29-ம் திகதி ஆரம்பிக்கப்பட்டது.

இப்பாடசாலையின் முதலாவது அதிபராக திரு. மு. சின்னத்தம்பி அவர்கள் நியமிக்கப்பட்டார். இவருடன் திரு. நா. சதாசிவம், திரு. வீ. ஏகாம்பரநாதன், திருமதி நாகம்மா, திரு. காசித்தம்பி, திரு. ஐ. முருகேசு ஆகியோர் ஆரம்பகால ஆசிரியர்களாக கடமையேற்றனர். இப் பாடசாலை ஆரம்பிக்கப்படும்போது 100'x20' அளவு கொண்ட கல்லாலான ஓர் கட்டடமும் 40'x20' அளவு கொண்ட தற்காலிக கொட்டகையும் காணப்பட்டது.

ஆரம்பத்தில் 5-ம் வகுப்பு வரையுமே வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்ட போதிலும் பின்னர் படிப்படியாக வகுப்புக்கள் அதிகரிக்கப்பட்டு 1932-ம் ஆண்டளவில் 300 வரையான மாணவர்களையும் SSLC வகுப்புக்களும் நடத்தப்பட்டன. அத்துடன் ஆங்கிலப்பாடமும் கற்பிக்கப்பட்டது. இப்பாடசாலையின் ஆங்கில ஆசிரியர் என்ற பெருமை திரு. எஸ். சங்கரப்பிள்ளையையே சாரும். படிப்படியாக வளர்ந்து வந்த இப்பாடசாலை 1935 இல் 'சீனியர் செக்கண்டரி' பாடசாலையாக தரமுயர்த்தப்பட்டது.

அதிபர் மு. சின்னத்தம்பி அவர்களது காலத்தில் கல்வி கற்பதன் அவசியம் பற்றி நன்கு உணராதவர்களையும் மீசாலை தெற்கில் அமைந்த மிசன் பாடசாலைக்கு பிள்ளைகளை கவர்ந்து இழுக்கும் காலமுமாயிருந்தது. அத்துடன் 5-ம் வகுப்பு வரையுமே கட்டாயக் கல்வி என்பதால் அதுவரை படித்தால் போதும் என்ற நிலையுடனும் எல்லாவற்றைவிட வறுமையுடனும் போராடிக் கொண்டிருந்த காலமுமாகும். இத்தகைய ஒரு காலகட்டத்திலேயே பல்வேறு சவால்களையும் எதிர்நோக்கி இப்பாடசாலையை முன்னேற்ற வேண்டிய ஒரு நிலை அதிபர் மு. சின்னத்தம்பி அவர்களுக்கு ஏற்பட்டது.

இந்நிலையிலும் அவர் சளைத்து விடாது காலைப் பாடசாலை ஆரம்பிப்பதற்கு முன்னர் முதல்நாள் பாடசாலைக்கு வருகை தராத மாணவர்களது பெற்றோரைச் சந்தித்து காரணமறிந்து பாடசாலைக்கு வருகை தருவதற்கு தூண்டுதல் செய்தார். அத்துடன் பிற்பகல் பாடசாலை முடிவுற்ற வேளைகளில் பாடசாலைக்கு வருகை தராது படிப்பினை முடித்துக் கொண்ட மாணவர்களது பெற்றோரைச் சந்தித்து ஊக்கப்படுத்துவதுடன் வறிய மாணவர்களுக்கு கல்வி கற்பதற்கான தூற்றல் உபகரணங்களையும் வழங்கி அவர்கள் கல்வி கற்பதற்கு வழிகாட்டியாய்த் திகழ்ந்தார்.

இவர் தனது 40 வருட காலத்தில் தனது சேவையை அர்ப்பணிப்புடனும் திறமையாகவும் செயற்படுத்தியதுடன் மூன்று தலைமுறைக்கு கல்வி புகட்டினார் என்ற பெருமையையும் பெற்றிருந்தார்.

1950-ம் ஆண்டிற்குப் பிற்பட்ட காலத்தில் இவ்வித்தியாலயம் பெரு வளர்ச்சியைக் கண்டிருந்தது. இங்கு 1952-ம் ஆண்டில் நெசவுக் கல்வியும் பன்னவேலைக் கல்வியும் ஆரம்பிக்கப்பட்டு மாணவர்களுக்கு தொழிற்கல்வி புகட்டப்பட்டது. அத்தடன் க.பொ.த(சா.த) பரீட்சைக்கும் அப்பாடங்களை எடுக்கக் கூடியதாக இருந்தது. அத்துடன் 1955-ம் ஆண்டில் விவசாய பாடமும் 1962-ல் சங்கீத பாடமும் ஆரம்பிக்கப்பட்டு செயற்பட்டதுடன் 1960-ம் ஆண்டு காலப் பகுதியில் விளையாட்டுத் துறையின் வளர்ச்சிக்காக மாணவர்கள் சேரன், சோழன், பாண்டியன் ஆகிய இல்லங்களாகப் பிரிக்கப்பட்டு விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டதுடன் மாகாண மட்ட மாவட்டமட்டப் போட்டிகளிலும் பங்குபற்றி வெற்றியும் பெற்றுள்ளார்கள். இப்படியாக எல்லாத் துறைகளின் வளர்ச்சியிலும் அக்கறையாக இருந்து செயற்பட்ட சின்னத்தம்பி அவர்கள் 1965-ம் ஆண்டு மார்கழி மாதம் ஓய்வுபெற்றுச் செல்ல திரு. மு. பதஞ்சலி அவர்கள் புதிய அதிபராகக் கடமையேற்றார்.

இவர் 1965 தொடக்கம் 1968-ம் ஆண்டு வரையில் அதிபராக இருந்து பெரும் சேவையாற்றி ஓய்வு பெற்றுள்ளார். இதே ஆண்டில் சைவ வித்தியாசாலையாக இருந்த இவ்வித்தியாலயம் வீரசிங்கம் மகா வித்தியாலயமாக தரமுயர்த்தப்பட்டமை இதன் வளர்ச்சிப் போக்கில் முக்கியமானதொரு மாற்றமாகும்.

திரு. மு. பதஞ்சலி அவர்கள் 1968-ம் ஆண்டு நடுப்பகுதியில் ஓய்வு பெற்றுச் செல்ல அவரது பொறுப்பினை பண்டிதர் ச. சிவலிங்கம் அவர்கள் பொறுப்பேற்று அதன் வளர்ச்சிக்காக பெரும் பாடுபட்டார். இவரது அயராத முயற்சியும் நிர்வாகத்திறனும் எடுத்த முயற்சியை திறம்படமுடிக்கும் ஆற்றலும் யாவரையும் இனங்கண்டு அதற்கேற்ற வகையில் நடந்து கொள்ளும் திறனும் பாடசாலையை உச்சநிலைக்கு கொண்டு சென்றன எனலாம்.

இவரது முயற்சியின் விளைவாக 1971-ம் ஆண்டில் முதன் முதலாக க.பொ.த.(உ.த.) கலைப் பிரிவை ஆரம்பித்து 1973-ல் நடைபெற்ற முதலாவது பரீட்சையில் ஏழு மாணவர்கள் தோற்றி அதில் நால்வர் பூரணசித்தி பெற்றதுடன் இருவரை பல்கலைக்கழகம் அனுப்பிய பெருமை இவ்வதிபரையும் ஆசிரியர்களையும் சாரும். அத்துடன் 1974-ம் ஆண்டு வர்த்தகப் பிரிவினையும் ஆரம்பித்து நல்ல பெறுபேற்றினையும் பெற்றுத் தந்தார். அக்காலத்தில் மாணவர்கள் குடிநீருக்காக அயல் வீடுகளை நாடிச்சென்ற கஷ்டத்தைக் கண்ட இவர் ஊர் பெரியார்களில் ஒருவரான திரு. எம். ரி. சுப்பிரமணியம் அவர்களை நாடி அவர் வழங்கிய பணத்தில் ஒரு கிணற்றினையும் நீர்த்தாங்கியினையும் அமைத்தார்.

இதேபோன்று இங்கு கல்வி கற்கும் மாணவர்களுக்கு விஞ்ஞானக் கல்வியின் அவசியத்தினை உணர்ந்த அதிபர் அவர்கள் இப்பிரதேசத்தில் வீடு வீடாகச் சென்று நிதி திரட்டி ஓர் விஞ்ஞான ஆய்வுகூடத்தினையும் அதற்கான உபகரணங்களையும் பெற்றுக் கொடுத்தார். இதன் மூலம் மாணவர்கள் விஞ்ஞானக்கல்வியை சிறப்பாகக் கற்க வாய்ப்பளித்ததுடன் நகரப் பாடசாலைகளுக்கு மாணவர்கள் மாறிச்செல்ல வேண்டிய கட்டாயத்தினையும் நீக்கி உதவினார். வீரசிங்கம் ம. வி. வரலாற்றில் பொற்காலம் எனப் புகழப்பட்ட இக்காலத்திலேயே அனேகமான கட்டிட வசதிகள் ஏற்படுத்தப்பட்டன. குறிப்பாக பாலறாவாயர் மண்டபம், ஆரூரர் மண்டபம், பொன்விழா மண்டபம், அரன் அரங்கு, முன்புற மதில் போன்றவையும் இக்காலத்தில் கட்டப்பட்டன. இப்படியாக அரும் சேவையாற்றிய பண்டிதர் செ. சிவலிங்கம் அவர்கள் 1976-ம் ஆண்டு செப்ரம்பர் மாதம் 6-ம் திகதி ஓய்வு பெற அவருடன் பிரதி அதிபராக இருந்து பாடசாலையின் வளர்ச்சிக்குப் பெரிதும் உதவிய திரு. காசிநாதன் அவர்கள் பாடசாலையைப் பொறுப்பேற்று நற்சேவையாற்றி 24.01.1978 அன்று ஓய்வு பெற்றார்.

திரு. த. காசிநாதன் அவர்கள் ஓய்வு பெற்றுச் செல்ல அவரது அதிபர் பொறுப்பினை திரு. அ. நாகராசா அவர்கள் ஏற்று 02.03.1981 வரை நற்பணியாற்றி பாடசாலையின் வளர்ச்சியை மேலும் துரிதப்படுத்தினார்.

திருவாளர் அ. நாகராசா அவர்கள் வட்டாரக்கல்வி அதிகாரியாக பதவி உயர்வு பெற்றுச் செல்ல அதிபர் பொறுப்பினை திருமதி புஸ்பா கணேசலிங்கம் அவர்கள் 03.03.1981-ல் பொறுப்பேற்று 19.11.1982 வரை பெரும் சேவையாற்றினார். இவரது சேவைக்காலம் மிகவும் குறுகியதாக இருந்தபோதிலும் அவ்வளவு காலத்தினையும் பாடசாலை வளர்ச்சிக்காக அரும்பாடுபட்டார். விஞ்ஞானப் பட்டதாரியான இவர் தனது காலத்தில் இவ்வித்தியாலயத்தில் க.பொ.த. (உ.த) பிரிவில் விஞ்ஞானத்துறையை ஆரம்பிப்பதற்கான எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொண்டார்.

அத்துடன் மாணவர் ஒழுக்கம், கல்வி, முன்னேற்றம், விஞ்ஞானக் கல்வியில் முன்னேற்றம், பாடசாலை பௌதீக வள அதிகரிப்பு என எல்லாத் துறைகளிலும் பாடசாலை முன்னேறு வதற்கு அரும்பாடுபட்டார். இப்படியாக செயற்பட்டு வரும் காலத்தில் இவருக்கு விஞ்ஞானக் கல்வி அதிகாரியாக பதவி உயர்வு கிடைத்து கல்வித்திணைக்களம் சென்றார். அப்படியாகச் சென்றபோதிலும் இன்று வரை பாடசாலை வளர்ச்சியில் மிகவும் அக்கறையாக இருந்து செயற் பட்டு வருகின்றமை பெருமைதரும் விடயமாகும்.

திருமதி புஸ்பா கணேசலிங்கம் அவர்கள் பதவி உயர்வு பெற்றுச் செல்ல இவ்வித்தியாலய அதிபர் பொறுப்பினை திரு. தா. இராமலிங்கம் அவர்கள் ஏற்று பத்து ஆண்டுகளுக்கு மேல் அரும்பணியாற்றி 14.08.1993-ல் ஓய்வு பெற்றார். இவர் பௌதீக வள அபிவிருத்தியைவிட கல்வி அபிவிருத்தி யிலேயே அதிக அக்கறை காட்டியமை யால் மற்றைய ஆண்டுகளுடன் ஒப்பிடும் போது அதிகளவு பெறுபேறு கிடைத் தமை குறிப்பிடத்தக்கதாகும். இவரது காலத்தில் முதன்முறையாக முகாமைத் துவத்துறைக்கு ஒரு மாணவன் 280 புள்ளிகள் பெற்று பல்கலைக்கழகம் சென்றமை குறிப்பிடத்தக்கது. இவரது காலத்தில் 1983-ம் ஆண்டு மாடிக்கட்டடம் ஒன்றும் (50'x25') கட்டப்பட்டது. அத் துடன் பாடசாலை ஸ்தாபகர் திரு. வே. வீரசிங்கம் அவர்களது நினைவுத்தூபி ஒன்றினையும் பாடசாலையில் அமைத் தார். அத்துடன் பௌதீக வளங்கள் பலவற்றையும் பெருக்கியதுடன் இக் காலத்தில் ஏற்பட்ட கடுமையான போர்ச் சூழலிலும் பாடசாலையைத் தளம்ப விடாது கட்டுக்கோப்புடன் நடத்தி பாராட்டுப் பெற்றமையையும் இங்கு குறிப்பிடலாம்.

திருவாளர் த. இராமலிங்கம் அவர்கள் 14.08.1993-ல் ஓய்வு பெற்றுச் செல்ல 15.08.1993-ல் திரு. அ. பொ. செல்லையா அவர்கள் அதிபர் பதவியை ஏற்றுக்கொண்டார். இவரது காலத்திலே 1996-ல் இரண்டாவது முறையாக வீரசிங்கன் ஆண்டு மலரை வெளியீடு செய்து மேன்மைப்படுத்தினார். அத்துடன் இவ் வித்தியாலய ஸ்தாபகர் வே. வீரசிங்கம் அவர்களது திருவுருவப் படத்தினை தேடி எடுத்து திரைநீக்கம் செய்து வைத்ததுடன் வருடாவருடம் ஸ்தாபகர் தினம் கொண்டாட அடி எடுத்துக் கொடுத்தார். அத்துடன் பாடசா லையை அழகான எழில் மிக்க தோற்றம் பெற வைத்ததுடன் சுற்றுப்புறமெங்கும் மரங்கள் நாட்டப்பட்டு சோலைவன மாக்கினார். அத்துடன் என்றுமில்லா அளவிற்கு பரீட்சைப் பெறுபேற்றினையும் பெற்றுக் கொடுத்தார். க.பொ.த.(உ.த.) நான்கு பாடங்களிலும் விசேட சித்தி பெற வைத்து பாடசாலையை பெருமைப் படுத்தினார் இவரது காலத்தில் போர் உக்கிரமாக நடந்த போதிலும் இடம் பெயர்ந்த பிள்ளைகளையும் மனிதாபி மான அடிப்படையில் உள்வாங்கி மாணவர் தொகையும் ஆயிரத்திற்கு மேல் உயர்வடைந்து காணப்பட்டது. இவர் 1997-ம் ஆண்டு தை மாதம் 18-ம் திகதி யுடன் ஓய்வு பெற்று சென்றபோதிலும் அவர் உயிருடன் இருந்த இறுதிக்காலம் வரை பாடசாலையில் அதிக பற்றுமிக்க வராகவும் தன்னிடம் இருந்த பெறுமதி மிக்க நூல்களை பாடசாலைக்கு வழங்கி நூலகத்தினையும் வளப்படுத்தியதுடன் ஒட்டு மொத்தத்தில் பாடசாலை வளர்ச்சி யில் மிகவும் அக்கறையாக இருந்து செயற்பட்டு வந்துள்ளார். இவரது ஓய்வி னைத் தொடர்ந்து 1997-ம் ஆண்டு பெப்ர வரி மாதம் 20-ம் திகதி இவ்வித்தியாலய பழைய மாணவனாகிய திரு. கு. சிவானந்தம் அவர்கள் அதிபர் பொறுப்பை ஏற்றுக் கொண்டார்.

இவர் பதவியேற்ற பின்னர் எல்லாத் துறைகளிலும் பாரிய முன்னேற்றத்தினைக் கண்டுவந்துள்ளது. 1998-ம் ஆண்டு இப்பாடசாலை ஜனாதிபதி அவர்களால் நவோதயா பாடசாலையாக தெரிவுசெய்யப்பட்டு எல்லோரது பாராட்டினையும் பெற்றுள்ளது. அது மட்டுமன்றி 2004-ம் ஆண்டு இப்பாடசாலை வெளிச்ச வீட்டு பாடசாலையாக (Light House) தெரிவுசெய்யப்பட்டு இப்பிரதேச மாணவர்களுக்கு ஆங்கில மொழி வளர்ச்சிக்கு உதவிக் கொண்டிருக்கின்றது.

2000, 2001-ம் ஆண்டு காலத்தில் ஏற்பட்ட பாரிய இராணுவ நடவடிக்கைகள், இடப்பெயர்வுகள் போன்றவற்றினாலும் இப்பாடசாலை இராணுவ ஆட்லறி தளமாகப் பயன்படுத்தப்பட்டு பெரும் சேதங்கள் ஏற்பட்டபோதிலும் எல்லோரது முயற்சியினாலும் மிக வேகமாக மீண்டும் கட்டியெழுப்பப்பட்டதுடன், தரம் 5 புலமைப்பரிசில், க.பொ.த (சா.த), (உ.த) பரீட்சைகளில் உயர்வான பெறுபேறுகள் கிடைத்துள்ளன.

இக்காலப்பகுதியில் நவீன மயப்படுத்தப்பட்ட நூலகம், நவீன கணனி அறை, நவீன கற்றல், கற்பித்தல் சாதனங்கள் அதன் பயன்பாட்டிற்காக ஓடியோ, வீடியோ அறைகள் அதற்கான உபகரணங்கள் கணனிகள், தொலைக் காட்சிப் பெட்டிகள், ஒலிப்பேழைகள், விளையாட்டு உபகரணங்கள், O.H.P., போட்டோ பிரதி இயந்திரம் போன்றவை கிடைக்கப்பெற்றன. அத்துடன் பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள், பெற்றோர், ஆசிரியரின் உதவியுடன் ஆறு பரப்பு விளையாட்டு மைதானம் கொள்வனவு செய்யப்பட்டது. இதன் மூலம் இவ் வித்தியாலயம் எதிர்நோக்கிய இடப்பிரச்சினை ஓரளவு தீர்க்கப்பட்டது. அத்துடன் ஒலிபரப்பு சாதனங்கள், மின் பிறப்பாக்கிகள், இரும்பு அலுமாரிகள், லொக்கர்கள் போன்றவை அதிகளவில் சேர்க்கப்பட்டதுடன் சிறுவர் பாதுகாப்பு அமைப்பினரால் சிறுவர் விளையாட்டு முற்றமும் உபகரணங்களும் பெறப்பட்டன. சாவகச்சேரி இந்துக்கல்லூரியின் நோர்வே ப. மா. சங்கக் கிளையினால் பாடசாலை முழுவதற்குமான மின் இணைப்புக்கள் போன்றவையும் செய்யப்பட்டு புதுப்பொலிவுடன் விளங்குகின்றது.

2005-ம் ஆண்டு நடைபெற்ற புலமைப் பரிசில் பரீட்சையில் இவ் வித்தியாலய மாணவன் செல்வன் தேனுசன் யாழ். மாவட்டத்தில் 2-ம் இடத்தினையும் தேசிய மட்டத்தில் 5-ம இடத்தினையும் பெற்று பாடசாலைக்கு பெருமை தேடித்தந்ததுடன் இதே ஆண்டு வடக்கு கிழக்கு மாகாண மட்டத்தில் நடைபெற்ற தமிழ்த்தினப் போட்டியில் செல்வன் இ. தனுசன் என்பவர் 1-ம் இடத்தைப் பெற்று தங்கப் பதக்கத்தினையும் தேசியமட்டத்தில் 3-ம் இடத்தினையும் பெற்று வெண்கலப் பதக்கத்தினையும் பெற்று பெருமை தேடித் தந்துள்ளார்.

இப்படியாக கல்வியிலும் கல்வியுடன் இணைந்த இணைபாடவிதான செயற்பாடுகளிலும் பல சாதனைகளையும் படைத்து தற்போது ஆயிரத்திற்கு மேற்பட்ட மாணவர்களையும் அறுபதிற்கு மேற்பட்ட ஆசிரியர்களையும் தன்னகத்தே குடும்பமாகக்கொண்டு தென்மராட்சிப் பிரதேசத்தில் முன்னணிப் பாடசாலைகளில் ஒன்றாக விளங்கும் அமுத விழாக் காணும் இவ்வித்தியாலயம் வேம்படி விநாயகர் அருளால் மேலும் பல சாதனைகள் படைத்து உயர்ந்திட வாழ்த்துக்கள் கூறி பாடசாலை அன்னையின் வளர்ச்சியில் தோள் கொடுத்த எல்லா உள்ளங்களையும் பாராட்டி நினைவு கூர்ந்து வாழ்த்துகின்றேன். அன்னையின் பணி தொடர்ந்து உயர்ந்து ஒலிக்கட்டும்.

***கு. சிவானந்தம்***
பழைய மாணவன்

# “இந்துக் கோவில்களில் நடனக் கலைக்கு மூலகாரணமான தூண்கள் சிற்பமும் ஓவியமுமே”

மனிதனின் பண்பாடு வரலாறு களிலே நுண் கலைகள் அதி முக்கிய இடத்தினைப் பெறுகின்றன. அந்த வகை யில் கட்டிடக்கலை, சிற்பம், ஓவியம், இசை, நடனம், போன்ற நுண்கலைகள் வெவ்வேறு நாடுகளில் வெவ்வேறு அள விலே வளர்ந்து மனிதனது வாழ்க்கை யினை வளம்படுத்தி வந்துள்ளமையைக் காணலாம். அத்துடன் இந்திய நுண்கலை யானது ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்து உருவாக்கப்பட்டுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. கலைகள் யாவற்றுக்கும் மூலகாரணமாக அமைந் தது வாய்ப்பாட்டிசைக் கலையாகும். இதன் பின்னே தான் வாத்திய இசை, நடனக்கலை, சிற்பக்கலை, ஓவியக்கலை எனப் படிப்படியாக ஒன்றில் ஒன்று தங்கி வளர்ச்சியடைந்து வந்தமையும் நோக்கு தற்குரியது. ஆயினும் இக்கலைகளுள் நடனமும் சிற்பமும் முப்பரிமாண இயல் பினைக் கொண்டவை. அத்துடன் ஆதி தொட்டு புராதன காலத்திலிருந்தே வளர்ச் சியடைந்த கலை நடனக்கலையேயாகும்.

அந்த வகையில் நாம் இந்துக் கோவில்களை நோக்கினால் கோவில் களே கலையின் இருப்பிடம் என்றும் கூறலாம். கோவில்கள் வேதாகம முறைப் படி அமைக்கப்பட்ட பின் கலைகளின் நிலைக்களமாக அவை திகழத் தொடங் கின. எனவே கோவில்கள் சமய உணர்வி னையும் அறிவினையும் புகட்டும் நிலை யங்களாக மட்டுமன்றிக் கவின் கலை மையங்களாகவும் மிளிரலாயின. கோவில மைப்பு, அதில் இடம்பெறும் சிற்பங்கள், ஓவியங்கள், கிரியைகள் முதலியவற்றிலே கவின் கலைகள் குறிப்பாக இசையும் நடனமும் முக்கியமான ஓரிடத்தினைப் பெற்றுள்ளன.

எனவே முக்கியமாக கலை வளர்ச்சிக்கு நாம் எடுத்துக் காட்டாகக் கோவில்களை நோக்கும்போது கோவில் கள் இல்லாவிடில் இக் கலை பரந்து வளர்ச்சியடைந்திராது என்று கூடச் சொல் லலாம். ஆதிகாலந் தொட்டே கோவிலுக்கு முக்கியத்துவம் கொடுத்து கோவில்களின் வாயிலாகத்தான் கலை யினைப் பரப்பினார்கள். அதாவது இறை வனது திருவிளையாடல்கள், அற்புதங்கள், அவதாரங்கள் போன்றன கோயில் களில் பஜனைகள் மூலம், தேவார திருப் பதிகங்கள் மூலம் பண்ணிசை வாயி லாகவும், அவற்றிற்கு ஒரு உரு கொடுத்து நடனக் கலையாக்கியும் பின் அவை என்றும் அழியாமல் பாதுகாக்கும் பொருட்டு சிற்பங்கள் செதுக்கியும் ஓவி யங்கள் வரைந்தும் பாதுகாத்து வைத்தது மட்டுமல்லாமல் இதன் மூலம் மக்க ளுக்கும் பரப்பும் ஓர் அரிய வாய்ப்பும் கிடைத்தது.

மேலும் தஞ்சைப் பெருவுடையார் கோவில், சிதம்பரம், கங்கை கொண்ட சோழேச்சரம் போன்ற வரலாற்றுப் புகழ் மிக்கத் தலங்களில் நாம் கலையம் சங்களை அவதானிக்கலாம். இங்குதான் சிற்பமும் ஓவியமும் வரலாறு படைக்க வழி கோலியது எனலாம். அதை விட ஒரிசாவிலுள்ள ராமகும்பா, உதயகிரிக் குகைகளும் அமராவதிச் சிற்பங்கள், போன்றவற்றிலும் சீயமங்கலம் குகை யிலுள்ள நடராஜர் சிலை, மாமல்லபுரம் ரதங்களிலுள்ள நடராஜ உருவங்கள், காஞ்சியிலுள்ள கைலாசநாதர் ஆலயத் திலுள்ள நடராஜ சிற்பங்கள், திருப்பரங் குன்றத்திலே சக்தியின் நடனச் சிற்பம், உதயப்பூரில் உதயேஸ்வரர் ஆலயத்தில் அம்மனின் நடனச் சிற்பம் என்பன எல்லாம்

கோவில்களின் துணை கொண்டு சிற்ப ஓவியங்களின் மூலம் நடனக் கலையின் பரிணாம வளர்ச்சியினையே எடுத்துக் காட்டுகின்றன.

அது மட்டுமன்றி மத்திய இந்தியாவின் பார்கூத் ஸ்தூபியில் நடன இசைக் காட்சிச் சிற்பங்களினைக் காணலாம். இவை ஏறத்தாழ கி.மு. 2-ம் நூற்றாண்டளவில் நோக்குதற்குரியது. இவற்றிலே மனைவி கணவனை நடனம் மூலம் மகிழ்வித்தல், வாத்திய இசைக்கேற்ப தேவ மகளிரும் கணிகையரும் நடனமாடுதல், நாகராஜனுக்கு மேலே நின்று நாககன்னி நடனமாடுதல், திருமகளின் நடனம் என்பன பார்கூத் ஸ்தூபியின் சிற்பங்களில் முக்கிய இடத்தினைப் பெற்றுள்ளமை என்பது இங்கு குறிப்பிடத் தக்கது. எனவே இவையெல்லாம் சிற்பங்கள் மூலம் தோன்றி நடனக் கலைக்கு ஆதாரமாக விளங்கி வளர்ச்சியடைந்து இன்றும் கூட மங்காமல் மறையாமல் புகழ்பெற்று விளங்குவதனை ஆராய்ச்சி நூல்களின் உதவி கொண்டு அறியலாம்.

மேலும் கி. பி. 9-ம் நூற்றாண்டளவில் தோன்றிய கோவில்களிலும் வேறு இடங்களிலும் அமைக்கப்பட்டிருந்த சிற்பங்களிலும் நடனம் ஒரு முக்கிய இடம் பெற்றிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. இங்கு சிவபிரானுடைய நிருத்த வடிவங்கள் பல உள்ளன. நாட்டிய சாஸ்திரம் 108 கரணங்களைப்பற்றி விபரிக்கின்றது. இதை நாம் ஈழத்திலுள்ள கோவில்களில் கூட நோக்கலாம். உதாரணமாக நல்லூர்க் கந்தசுவாமி கோவில் இதற்கு ஒரு எடுத்துக் காட்டாகும். காஞ்சியிலே இராஜசிம்மன் கட்டிய கைலாசநாதர் கோவிலிலே நாட்டியசாஸ்திரம் கூறுகின்ற தலசம்ஸ்போட, லலாடதிலக, லலித, குஞ்சித முதலிய கரணங்களைக் காட்டும் சிற்பங்களை நாம் முக்கியமாகக் குறிப்பிட வேண்டும். மாமல்லபுரத்தில் உள்ள திருக்கோவிலில் சிவபிரான் தண்டு முனிவருக்கு நடனத்தின் காலசைவுகளைக் காட்டிக் கொடுப்பதைச் சித்தரிக்கும் சிற்பமும் அவர் பரதருக்கு நாட்டியத்தினைக் கற்பிக்கும் காட்சியினைக் காட்டும் சிற்பமும் நன்கு குறிப்பிடத்தக்கது.

பரதர் எழுதியதாகக் கூறப்படும் நாட்டிய சாஸ்திரம் கிறிஸ்து தசாப்தத்திற்கு சற்றுப் பிந்திய நூற்றாண்டுக் காலத்திலே முழுமை அடைந்திருக்கலாம் என இக்கால ஆராய்ச்சியாளர்கள் கருதுவர். இப் பரதரின் நாட்டிய சாஸ்திரம் கூறும் நாட்டிய மரபுகள் மிகப் பழமை வாய்ந்தவை. இவற்றின் தாக்கம் இந்தியா அடங்கலும் ஏற்பட்டது. தமிழகத்தில் இதன் செல்வாக்குச் சிலப்பதிகார காலத்திற்கு முன்பே ஏற்பட்டிருந்தாலும் சிலப்பதிகாரத்திலே தான் இதன் செல்வாக்கு நன்கு பிரதிபலிக்கத் தொடங்குதலை நாம் அவதானிக்க முடிகின்றது. தொடர்ந்து பல்லவர், பாண்டியர் போன்ற தமிழ் மன்னர் காலங்களில் நாட்டிய சாஸ்திர மரபுகள் நன்கு நிலவியதற்குச் சைவ வைஷ்ணவக் கோவில்களும் அக்காலச் சிற்பங்களும் ஓவியங்களும் தக்க சான்றுகளாக விளங்குவதனை நோக்குதற்குரியது.

அத்துடன் இசையும் நடனமும் சோழருக்கு மிக முற்பட்ட காலம் தொட்டே ஒன்றிணைந்த கலைகளாக வளர்ந்து வந்தன. இவற்றின் கோட்பாடுகளையும் தத்துவங்களையும் விளக்கும் நூல் சிற்பம், ஓவியம், நாட்டியம், வாத் திய இசை, வாய்ப்பாட்டிசை ஆகிய நுண் கலைகள் ஒன்றில் ஒன்று தங்கியிருப்பதையும் வாய்ப்பாட்டுக் கலையின் அடிப்படையான முக்கியத்தினையும் 'வஜ்ர' என்ற அரசனுக்கும் மார்க்கண்டேய முனிவருக்குமிடையே நடைபெற்ற சம்பாஷனை மூலம் எடுத்துக் கூறுவதனையும் நாம் அறிந்து கொள்வோம்.

பிந்திய காலத்திலே இதிகாசங்கள், புராணங்கள் எழுதப்பட்ட காலத்திலேயே நடனம், சிற்பம் நன்கு வளர்ந்து தேர்ச்சியடைந்துவிட்டன. இராமன், அர்ஜுனன், கிருஷ்ணன் போன்றோர் நடனக் கலையிலே நல்ல தேர்ச்சி பெற்றிருந்தனர். இக் காலப்பகுதியிலேயே நாடகம், நடனம், இசை முதலியவற்றின் கோட்பாடுகள், விதிகள் முதன் முறையாக விரிவாக எடுத்துக் கூறப்பட்டன.

இடைக்காலக் கேரள ஓவியங்களிலும் சிற்ப ஓவிய மகிமையினை நாம் காணலாம். ஏத்தமனூர் சிவன் கோவிலிலே கி.பி. 16-ம் நூற்றாண்டளவில் சிவ நடன ஓவியம் தீட்டப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. திருச்சூரிலுள்ள வடக்கு நாதர் சிவன் கோவிலிலே கி.பி. 17-ம், 18-ம் நூற்றாண்டுகளைச் சேர்ந்த சிவ நடன ஓவியங்கள் உள்ளன. இந் நடன ஓவியங்கள் வேறு சில கோவில்களிலுமுள்ளன.

எனவே நடன ஓவியங்களும் இந்திய ஓவியங்களிலே தனிச் சிறப்பான இடம் ஒன்றினை வகிக்கின்றன. அவ்வக்கால இலக்கியம், சிற்பம், இசை, நடனம் முதலியவற்றில் ஏற்பட்ட போக்குகள் ஓவியங்களிலும் காணப்படுகின்றன. துரதிஷ்ட வசமாகப் பல இன்று நிலைத்தில. எனினும் எஞ்சியுள்ளவற்றின் கலை எழிலும் நேர்த்தியும் அவை புலப்படுத்தும் சமய தத்துவ உண்மைகளும் குறிப்பிடப்பாலன. இவற்றின் தாக்கம் இந்திய எல்லைகளைத் தாண்டி இலங்கை, இந்தோனேசியா, தாய்லாந்து, கம்போடியா, வியட்னாம் முதலிய நாடுகளிலும் ஏற்பட்டுள்ளது. இந் நடன ஓவியங்கள் அவ்வக் கால நடனநிலை, குறிப்பாகச் சாஸ்திரீய நடன அம்சங்களை நன்கு எடுத்துக் காட்டுகின்றன. குறிப்பாக அவ்வக் கால நடனமாதின் சிகை அலங்காரம், உறுப்புக்களின் அலங்காரம், ஆடைகள், ஆடல் நிலைகள், நடனத் தோற்றங்கள் முதலியனவற்றை நேரடியாகவே எம் மனக்கண் முன்னே இன்றும் எடுத்துக் காட்டிக் கொண்டிருக்கின்றன. இவை நடன வரலாற்று ஆசிரியருக்கும் நடனக் கலைஞருக்கும் இவற்றில் ஈடுபாடுள்ளவர்களுக்கும் இன்றியமையாத கருவூலங்களாகவும் மிளிர்கின்றன.

ஆகவே தமிழ் நாட்டிலும் ஈழ நாட்டிலும் தான் நடனக்கலை முக்கியமாக தொன்று தொட்டு வேரூன்றி நிற்கின்றன என்பதனை நாம் சிற்பங்கள் ஓவியங்களின் துணை கொண்டு நோக்கலாம். இந் நாடுகளில் தான் கலையினை ஒரு தெய்வீகமான கலை என்று கலைஞர்கள் போற்றிப் பாதுகாக்கின்றனர். நடனக்கலை அழியாமல் இருக்கவே அவற்றை சிற்பங்களில் செதுக்கியும் சித்திரங்களில் வடிவமைத்தும் இன்றும் போற்றிப் பாதுகாத்து வருகின்றனர். கலை வளர்ந்து காலூன்றிய தேசம் இந்திய தேசம் ஒன்றுதான். அதன்பின் தான் ஏனைய நாடுகளிற்கும் பரவியது. கலைக்கென்று எழுந்த கலைக் கோவில்களையும் நாம் இந்திய தேசத்தில் தான் காணலாம்.

எனவே நாம் ஒட்டுமொத்தமாக யாவற்றையும் தொகுத்து நோக்குமிடத்து இந்துக் கோவில்களை ஆதாரமாகக் கொண்டே நடனக் கலையினை வளர்த்தெடுக்க நம் முன்னோர்கள் சிற்பங்கள் செதுக்கியும் ஓவியங்கள் வரைந்தும் கலையினை மக்கள் வாழ்வில் ஒரு இன்றியமையாத இடத்தினைப் பெறும் வண்ணம் பரப்பியிருக்கிறார்கள். இதனால் தான் கலைகள் இப்போது வான ளாவ விரிந்து பரந்து ஒளிவிட்டுக் கொண்டிருக்கின்றன என்பது கண்கூடு.

**திருமதி சுபாதினி தயாபரன்**
நாட்டியக் கலைமாணி
(ஆசிரியை)



**அதிபர்**

திரு. கு. சிவானந்தம்



**பிரதி அதிபர்**

திரு. ந. சிவகுரு



**கனிஷ்ட அதிபர்**

திருமதி. பு. நாகேந்திரராசா

அமுதவிழா மலர் சிறக்க வாழ்த்துகிறோம்

இசுறு

**இசுறு**

சிறுவர் கணக்கு

**காப்புறுதியுடன் கூடிய சிறுவர் சேமிப்புக் கணக்கு**

**உங்கள் பிள்ளையின் சுபீட்சமான எதிர்காலத்திற்கு...**

**மேலதிக விபரங்களை.....**

அண்மையில் இருக்கும் வங்கிக் கிளையில் பெற்றுக்கொள்ளலாம்

**கொமர்ஷல் வங்கி**

உங்கள் நலமே எங்கள் நோக்கம்


---

அமுதவிழா மலர் சிறக்க வாழ்த்துகிறோம்

சகலவிதமான சூட்டிங், சேட்டிங் வகைகள், பட்டுப் புடைவைகள் நங்கையருக்கான சல்வார் வகைகள், குழந்தைகளுக்கான றெடிமேட் ஆடை வகைகளுக்கு இன்றே விஜயம் செய்யுங்கள்.

# வாணி ரெக்ஸ்

# VANI TEX



11, நவீன சந்தை உட்புறம்,
**சாவகச்சேரி.**
11, New Market,
**Chavakachcheri.**

81, பெரியகடை வீதி,
**யாழ்ப்பாணம்.**
81, Grand Bazaar,
**Jaffna.**

அமுதவிழா மலர் சிறக்க மனமுவந்து வாழ்த்துகிறோம்...

## இதோ மக்கள் வங்கியின் அனுகூலங்கள்!

உங்கள் குடும்பத்தின் புதிய உறவின் வருகைக்கு முதலாவது அன்பளிப்பாக வழங்குங்கள் மக்கள் வங்கியின்

இசுறு உதான அன்பளிப்பு சீட்டு

இச்சீட்டினை குழந்தையின் "இசுறு உதான" கணக்கில் வைப்பிலிடுவதன் மூலம் குழந்தையுடன் சேர்ந்து சேமிப்புத் தொகையும் அதிகரித்த வட்டியுடன் வளர்ந்து செல்லும்.

குழந்தை பாடசாலை செல்லத் தொடங்கியதும் இத்தொகை பாரிய அனுகூலங்களைத் தரும். "சிசு உதான" கணக்கிற்கு மாற்றப்படும். சேமிப்புத் தொகை அதிகரிக்க, அதிகரிக்க பரிசுப் பொருட்களின் பெறுமதியும் அதிகரித்துச் செல்வதுடன் புலமைப் பரிசில்களும் தகுதிக்கேற்ப வழங்கப்படும்.

❖ **YES ACCOUNT** எனப்படும் இளவயதினர் கணக்கினை

இதுமட்டுமா?



அதிர்ஷ்டங்களை அள்ளித்தரும் மகளிருக்கான

❖ வனிதா வாசனா கணக்கு

அனைத்துத் தரப்பினருக்குமான

❖ ஜனஜய கணக்கு

முதுமைப் பருவத்தில் கூடுதல் வட்டியினையும் பல வரப்பிரசாதங்களையும் வழங்கும்.

❖ பரிணத கணக்கு

மேலதிக விபரங்களுக்கு அருகிலுள்ள மக்கள் வங்கிக் கிளையினை நாடுங்கள்!

மழலைப் பருவத்திலிருந்து முதுமைப் பருவம் வரை அனைவருக்கும் தோள் கொடுப்பான் மக்கள் வங்கி.



# மக்கள் வங்கி

**சாவகச்சேரி**

# ஆசிரியர் குழாம்



**இருப்பவர்கள் இடமிருந்து வலம்**

திரு. மா. பிரதீப்குமார், திரு. ம. சசிகரன், திரு. பொ. சிவசுதன், திரு. ச. விக்னேஸ்வரன், திரு. த. தவேந்திரன், திரு. நா. சிவகுரு (பிரதி அதிபர்), திரு. கு. சிவானந்தம் (அதிபர்),
திரு. வா. சுந்திரதேவன் (பகுதித் தலைவர்), திரு. சி. சிவகுமார், திரு. க. ஈஸ்வரன், திரு. சி. தர்மராசா, திரு. செ. ஜெகந்தன், திரு. ந. பாலசுப்பிரமணியம், திரு. ந. ஸ்ரீகாந்தா

**நிற்பவர்கள் முதலாம் வரிசை - (இடமிருந்து வலம்)**

திருமதி. சு. கோவர்த்தனன், திருமதி. ம. மகேசன், திருமதி. அ. கலாதேவன், திருமதி. சௌ. முரளி, திருமதி. இ. நாகேந்திரன், திருமதி. வி. கோகுலன், திருமதி. ம. குணரூபன்,
திருமதி. த. சிவநாதன், திருமதி. ம. தெய்வேந்திரன், திருமதி. சி. சிவபாதசுந்தரம், திருமதி. க. கார்த்திகேசு, திருமதி. யோ. ஞானேஸ்வரன், திருமதி. பு. தயாபரன், திருமதி. தெ. கிருஷ்ணசாமி,
திருமதி. கா. சுஜீகரன், திருமதி. பு. நாகேந்திரராசா (கனிஷ்ட அதிபர்)

**நிற்பவர்கள் இரண்டாம் வரிசை - (இடமிருந்து வலம்)**

திருமதி. ர. தயாபரன், திருமதி. சி. பேரின்பநாதன், திருமதி. பே. சிவசுப்பிரமணியம், திருமதி. வா. தவராசா, திருமதி. வி. சிவராசா, திருமதி. கு. சுபாஸ்கரன், திருமதி. சு. கணேஷ்,
திருமதி. அ. கருணாகரன், திருமதி. கு. சிவானந்தம், திருமதி. ரோ. பரம்சோதி, திருமதி. கி. அமிர்தகுலசிங்கம், திருமதி. க. சந்திரநாதன், திருமதி. அ. யோகராசா, திருமதி. இ. சுப்பிரமணியம்

**நிற்பவர்கள் மூன்றாம் வரிசை - (இடமிருந்து வலம்)**

செல்வி. க. மணிவதனி, திருமதி. தி. இராஜசிங்கம், திருமதி. அ. சர்வேந்திரன், திருமதி. இ. விஜயரத்தினம், திருமதி. சௌ. உதயகுமார், திருமதி. சு. தயாபரன், திருமதி. சா. பரமலிங்கம்,
திருமதி. ந. பிறேம்குமார், செல்வி. த. ஜெயந்தினி, திருமதி. ச. சின்னத்தம்பி (பகுதித் தலைவர்), செல்வி. இ. நளலட்சுமி

**சமூகமளிக்காதோர்**

திருமதி. சு. விமலதாஸ்

# ஆரம்பக் கல்வியில் ஒரு நோக்கு

ஆரம்பக் கல்வி எனும் பதம் குறிப்பது ஐந்த வயது பூர்த்தியடைந்த பிள்ளைகள் ஆண்டு ஒன்று தொடக்கம் ஐந்து வரை பாடசாலையில் பெற்றுக் கொள்கின்ற கல்வியாகும். குழந்தையின் முதற்பதிவு ஆரம்பக் கல்வியிலேயே ஊட்டப்படுகிறது. "இளமையிற் கல்வி சிலையில் எழுத்து" எனும் ஔவைப் பாட்டியின் கூற்றுக்கிணங்க இளமையில் கற்கின்ற விடயங்கள் மனதில் நன்கு பதிந்து விடுகின்றன. "எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்" என்பதற்கிணங்க ஆரம்பக் கல்வி அமைதல் வேண்டும். தாய் தந்தையர் தமது குழந்தைக்குச் செய்யும் தலையாய பணி ஆரம்பக் கல்வியை ஒழுங்குற அமைத்து ஊட்டும் பாடசாலையைத் தெரிவு செய்து கல்வி வழங்குவதாகும்.

இடைநிலைக் கல்வி, உயர் கல்வி என்பவற்றுக்கு அடி அத்திவார மாக எவ்வளவிற்கு ஆரம்பக்கல்வி அமைகி றதோ அதேபோல ஆரம்பக் கல் விக்கு அத்திவாரமாக பாடசாலைக்கு முந்திய முன்பள்ளி முக்கியம் பெற்று விளங்கு கிறது. குழந்தைகளின் சூழல் நிலைமை கள், உடல்வளர்ச்சி, உளவளர்ச்சி, மனப் பாங்கு வளர்ச்சி என்பன ஆரம்பக் கல்வியில் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டியவையாகும். இதன் பெறுமானம் இதனை வழங்குபவர் களால் உணரப்படுவதில்லை. நாட்டின் எதிர்காலக் கல்வி வளர்ச்சியை நிர்ண யிக்கும் பாரிய பொறுப்பு இன்று வளர்ந் துவரும் சிறார்களிலேயே தங்கியுள்ளது. எனவே ஆரம்பக் கல்வியானது சிறப்பாக வழங்கப்படுதல் வேண்டும் என்று போத னையில் கூறினாலும் இவற்றை நடை முறைப்படுத்தும் அளவில் பாரிய பிரச்சி னைகள் எதிர்நோக்க வேண்டியுள்ளது.

ஆரம்பக் கல்விக்குப் போதிய ஆசிரியர்கள் இல்லை. அதிலும் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் மிகவும் குறை வாகவே உள்ளனர். ஆரம்பக் கல்விக் காகத் தெரிவு செய்யப்படும் ஆசிரியர்கள் பயிற்சி நெறிகளை காலவோட்டத்தில் மாற்றிவிடுகின்றனர். ஆரம்பக் கல்வி ஆசிரியர்கள் என நியமனம் பெறுவோர் தங்கள் பயிற்சியை நிறைவு செய்ய முன்னர் பட்டப்படிப்பினை மேற்கொண்டு பட்டதாரிகளாக மாறிவிடுகின்றனர்.

ஆரம்பக் கல்வியை வழங்கும் ஆரம்பப் பாடசாலைகளில் பெரும்பாலா னவை கிராமங்களிலேயே உள்ளன. கிராமப்புறப் பாடசாலைகளுக்கு ஆசிரியர் களைப் பகிர்ந்தளிக்க முடியாத நிலை இன்றும் காணப்படுகிறது. ஆசிரியர்களுக் குத் தேவையான பௌதிகப் பண்பாட்டு அம்சங்கள் பொருத்தமற்றனவாக இருப்ப தினாலும் ஆசிரியர்களின் சேவையைப் பெற்றுக் கொள்ள முடியாத நிலை உள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இன்று ஆசிரியப் பணியில் பெண்களே அதிகம் ஈடுபடுத்தப்படுகின்றனர். பெண் ஆசிரியர் களை நம்பியிருத்தல் ஆரம்பக் கல்வியின் துர்ப்பாக்கிய நிலை என்றே கூறலாம். பெண்கள் ஆசிரிய நியமனம் பெற்றதும் அடுத்த கட்டம் திருமண பந்தம், தொடர்ந்து மகப்பேற்று லீவு இவ்வாறு அவர்கள் பணி முடங்கப்படுகிறது.

இலங்கையில் உள்ள சுமார் பத்தாயிரம் பாடசாலைகளில் நாலாயிரம் பாடசாலைகள் ஆரம்பப் பாடசாலைக ளாகும். இங்கு ஆரம்பக் கல்வியின் இறுதி ஆண்டாகிய ஐந்தாம் ஆண்டில் நடத்தப் படும் புலமைப் பரிசில் பரீட்சை பாட சாலைகள் மத்தியில் முக்கியத்துவம் பெறுவதால் அவ்வகுப்பில் கல்வி பயிலும் மாணவர்கள் மொழிக் கல்வியிலும் கணிதத்திலும் கூடிய கவனம் செலுத்

வேண்டியுள்ளது. அந்நிலையில் அவ் வகுப்பில் கல்வி பயிலும் மாணவர் களுக்குச் சமமான கல்வியை வழங்க நாடு பூராகவும் போதிய ஆசிரியர்கள் காணப்படுவதில்லை. அத்துடன் ஆண்டு ஒன்று தொடக்கம் பயிற்சி பெற்ற ஆசிரியர்களால் கல்வி வழங்கும்போது தான் ஆண்டு ஐந்தில் உச்சப் பயனை அடைய முடியும். ஆரம்பப் பாடசாலை களில் பிரதானமாக வாய்ப்பு வசதிகள் குறைந்த பிரதேசங்களில் உள்ள பாட சாலைகளில் கற்றல் கற்பித்தல் கருமத் தொடருக்கான அடிப்படை வளங்கள் குறைவாகவே காணப்படுகின்றன. ஆசிரிய வளம், இட வசதிகள், கற்றல் துணைச் சாதனங்கள், நூல் நிலைய வசதிகள் என்பவற்றுடன் பெற்றோரின் ஊட்டமும் கவனமும் மாணவர்களின் கல்விக்கு அவசியமானவையாகும். பெற்றோர்களின் பின்னூட்டலில் தான் மாணவர்களின் ஆர்வமும் முன் னேற்றமும் மேலும் உயர்த்தப்படு கின்றன. பிள்ளையினிடத்து யாதேனும் பாடத்தில் குறைபாடு காணப்படின் இதற் கான அடிப்படைக் காரணமாக மொழி யைக் குறிப்பிடலாம். எனவே மொழிக் கல்வியானது ஆரம்பக்கல்வியில் முக்கியத்துவம் பெறுதல் வேண்டும்.

மாணவர்கள் அடுத்த ஆண்டிற் கான பிரவேசத்திறன் இல்லாமல் குறைந்த தேர்ச்சி மட்டத்தில் வகுப்பேற்றப் படும்போது மேலும் சுமை கூடுகின்றது. எனவே இவ்வாறு தரமுயர்த்தப்படுவோ ருக்கு விசேடமான கற்பித்தல் தொட ரான பரிகாரக் கற்பித்தல் இடம்பெற வேண்டும். மாணவனின் உள்ளார்ந்த கற்றலுக்குத் தடையாக உள்ளவற்றைக் கண்டறிந்து ஊக்குவித்தலில் ஆசிரிய ருக்கு மட்டுமன்றி பெற்றோருக்கும் பெரும் பங்கு உண்டு.

1998-ம் ஆண்டில் கம்பஹா மாவட்டத்தில் ஆரம்பக்கல்வி சீரமைக்கும் திட்டம் செயற்படுத்தப்பட்டது.. இத் திட்டம் 1999-ம் ஆண்டு முதல் நாடு பூராவும் நடைமுறைப்படுத்தப்பட்டது. இத் திட்டம் ஆரம்பப் பாடசாலைக் கல்வியை மூன்று முக்கிய கட்டங்களாகப் பிரித் துள்ளது. அவை,

தரம் 1, 2
முதன்நிலை 1
தரம் 3, 4
முதன்நிலை 2
தரம் 5
முதன்நிலை 3

இவ் ஒவ்வொரு கட்டங்களிலும் மூன்று பிரதான கற்றல் முறைகள் அடங்குகின்றன. அவையாவன,

1. மேசை சார்ந்த வேலை
2. விளையாட்டு
3. செயல் சார்ந்த கற்றல்

முதன்நிலை 1 கற்றல் நிலை மேற்பார்வையுடனான விளையாட்டாக அமையும். அது செயல் சார்ந்த கற்ற லுக்கு வழிவகுக்கும். இங்கு மேசை சார்ந்த கற்றல் குறைவாகப் பயன் படுத்தப்படும்.

முதன்நிலை 2-ல் மூன்று கற்றல் செயற்பாடுகளுக்கும் சரிசமமான பங்கு அளிக்கப்படும்.

முதன்நிலை 3-ல் எழுத்தும் வாசிப்பும் சார்ந்த கற்றலுக்கு அதி முக்கியத்துவம் அளிக்கப்படும்.

ஒவ்வொரு கட்டக் கற்பித்தல் முறையும் மாணவனை மையமாகக் கொண்டே இருக்கும். இங்கு பிள்ளை களின் அறிவு, திறன், மனப்பாங்கு ஆற்றல்கள் விருத்திசெய்ய அதிக கவனம் செலுத்தப்படும்.

திருமதி க. கார்த்திகேசு
(ஆசிரியை)

# சீர்மியமும் மாணவருக்கான ஆற்றுப்படுத்தலும் (வழிகாட்டல்)

சீர்மியம் என்பது உளவளத் துணை எனச் சுருக்கமாக வரைவிலக் கணப்படுத்தலாம். மேலும் சீர்மியம் என்பது சிந்தனைத் தூண்டல்களாலும், சிந்தனைக் கிளறல்களாலும் ஒருவர் தனது உள்ளத்தை வளம்படுத்தல், உள அபிவிருத்தியை முன்னெடுத்தல் சீர்மியம் எனவும் அல்லது சீர்மியத்தின் செயற்பாடு எனவும் வரையறை இட்டுக் கொள்ளலாம்.

இச்சீர்மியம் உளநலம் பாதிக்கப் பட்டவர்களுக்கே தேவை எனக் கருதப் படுகின்றது. ஆனால் உளநலம் பாதிக் கப்பட்டவர்களுக்கும் இன்று உளநலம் உள்ள எல்லோருக்குமே அவசியமான தொன்றாகக் கருதப்படுகின்றது. தனி யாருக்குரிய தனித்துவங்கள் நிராகரிக் கப்படும்போது உள முரண்பாடுகளும், நெருக்குவாரங்களும் ஏற்படத் தொடங்கு கின்றன. இந்நிலையில் பெற்றோர் பெரியோர் கண்டிக்கும் பொழுதும் தண்டனை வழங்கும் பொழுதும் சிக்கல் களையும் குழப்பங்களையும் ஏற்படுத்து கின்றன. இன்று பல்வேறு காரணங் களால் சிக்கல்களும் அதனைத் தீர்ப்ப தற்கான சீர்மியமும் தேவைப்படுகின்றது. முக்கியமாக பின்வரும் காரணங்களைக் குறிப்பிடலாம்.

1) தனியாருக்கான தனித்துவங்கள் நிராகரிக்கப்படுதல்.
2) கல்வி சம்பந்தமாக மாணவர் தமக்கு உரிய கற்கை நெறி களைத் தெரிவு செய்யும் போது பெற்றோரும் மூத்தோரும் தமது விருப்புக்களைத் தெரிவுகளை பிள்ளைகள் மீது சுமத்தல்.
3) போர்க்காலச் சூழல்
4) நிறைவு பெறாத ஆளுமை உரு வாக்கம் ஏற்படுவதால்
5) பல்வேறு தேவைகளும் தொழில் நெருக்கடிகளும் ஏற்படுவதால்
6) ஒருவருக்கு வீட்டுச்சூழல்,சமூகச் சூழல் பொருந்தாதிருத்தல்
7) இயற்கை அனர்த்தங்கள்
8) பழைய காலத்தில் கூட்டுக்குடும் பமும் அதனூடாக கட்டுப்பாடு ஒழுங்கமைப்பு வழிகாட்டல்கள் என்பன தன்னியல்பாக ஏற்படும். ஆனால் தற்போது தனிக் குடும் பங்களே அதிகமாகக் காணப் படல்.
9) குடும்பத்தவர்கள் ஒன்றாக இல் லாதிருத்தல் உதாரணமாகப் பெற்றோர் பிள்ளைகள் ஒன்றாக இருக்காது கல்வி கற்றல், வெளி நாடு செல்லல் போன்ற ஏதாவது ஒரு காரணத்தால் பிள்ளைகளைப் பிரிந்திருத்தல் என்பவற்றைக் குறிப்பிடலாம்.

எனவே தான் உளநலம் பாதிக் கப்பட்டவருக்கன்றி எல்லா வயதின ருக்குமே சீர்மியம் தேவைப்படுகின்றது. மேலும் இன்றைய சூழலில் மாணவர் களுக்கு சீர்மியம் கல்விசார் ஆற்றுப் படுத்தல் மிகமிகத் தேவைப்படுகின்றது.

மாணவர்கள் தமது கல்விப் பருவத்தில் பல்வேறு பிரச்சினைகள் சிக்கல்களிற்கு மத்தியிலும் தமது கல்வி யினை வென்றெடுக்க வேண்டும். இன்று காலச்சூழல் சமுதாயநிலை மாணவர் கல்விக்கு இடரானதாகும். முக்கியமாக மாணவருக்கு கல்வியில் பொருத்த

மில்லாத சுமையான பாடத்திட்டம் என்பதனை விட பின்வரும் (புறக்) காரணிகள் மாணவர் கல்வியைப் பாதிக்கலாம்.

1) சமுதாயத்தில் நடைபெறும் விழாக்கள்.
2) ஒலிபெருக்கி தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்.
3) தேவைக்கு மேலான வசதிகள் வாய்ப்புக்கள்.
4) பெற்றோரின் மூத்தோரின் திணிப்பு.
5) பெற்றோரின் சீரான வழிப் படுத்தல் இன்மை.
6) பெற்றோரின் அக்கறை இன்மை
7) பிள்ளையின் இயல்பை குறை பாட்டை இனங்காணல்.
8) பிள்ளைக்கு மனநிலை வெளிப் படுத்தச் சந்தர்ப்பம் இன்மை.
9) போர்க்காலப் பாதிப்பு அதிர்வு கள்.
10) வறுமை உதவி இன்மை.
11) இயற்கை அனர்த்தங்கள்.

போன்ற இன்னோரன்ன காரணங்களால் பிள்ளை தனது கல்வியை ஏற்ற முறையில் முன்னெடுக்க முடியாமல் அமையும். இத்தகைய தடைக்காரணிகள் அமையும் போது பிள்ளை தனக்குத் தடையான காரணியைத் தனது நண்பர் சமவயதினர் அல்லது தான் விரும்பும் தனக்கு நம்பிக்கையான ஓர் ஆசிரியரிடம் அன்றி அதிபர் ஆகியோரிடம் வெளிப்படுத்த வேண்டும். ஒரு மாணவன் இவ்வாறு தனது நிலை வெளிப் படுத்தும்போது அவனுக்கு வேண்டிய ஒத்திசைவாக அமைந்து அவனை உதாசீனம் செய்யாது அதனைச் செவிமடுத்து அன்பாகவும் அவனின் உள்ளக் கிடக்கையை மேலும் வெளிப்படுத்தக் கூடியதாக சீரமியர் வாய்ப்பளித்தல் வேண்டும்.. அதற்கு ஏற்ப பொருத்தமான ஆலோசனைகள் வழிகாட்டல்கள் வழங்க வேண்டும். எல்லாவற்றுக்கும் மேலாக மாணவர் கல்வியில் உயர வேண்டுமாயின் மாணவர்களிடையே "குருபக்தி" காணப்படல் வேண்டும். மாணவரின் உயர்ந்த முன்னேற்றத்திற்கு "ஆசிரியரின் ஆசி" முக்கியமாக வேண்டப்படுகின்றது. மாணவனிடம் குருபக்தி காணப்படுமேயாயின் அதிபரினதும் 'ஆசிரியர்களினதும் ஆசீர்வாதம் அம்மாணவனுக்குக் கிட்டும். ஆசிரியர்களின் ஆசீர்வாதம் கல்வியில் ஓர் உந்து சக்தியை ஏற்படுத்திக் கல்வியில் ஆர்வத்தையும் முன்னேற்றத்தையும் கொடுக்கும். எனவே தான் ஒரு மாணவனின் கல்வி முன்னேற்றத்திற்கு "குரு" முக்கியமான வழிகாட்டியாக அமைவார். குருபக்தி மாணவனுக்குப் பணிவையும் கீழ்ப்படிவையும் ஏற்படுத்துகின்றது. பணிவு ஆசிரியரை மதிக்கவும் அவரின் கருத்துக்களைக் கேட்கவும் குருவைப் பின்பற்றவும் வைக்கின்றது.

சமுதாயத்தில் ஆசிரியர்கள் முன்னோடிகள் எல்லாவற்றிற்கும் வழிகாட்டிகளாவர். எனவே ஆசிரியர்களும் மாசின்றி முன் மாதிரியாக நடந்து கொள்ளல் வேண்டும்.

"மாதா பிதா குரு தெய்வம்"
"எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான்"
"குரு இன்றி வித்தை இல்லை" என்னும் முதுமொழிகளுக்கு இணங்க ஆசிரியன் மேலானவனாகவே போற்றப்பட வேண்டியவன். ஒரு குருவாலேயே சிறந்த நல்ல அறிவான உயிர்ப்புள்ள உயர்வான சமுதாயம் ஒன்றைப் படைக்க முடியும்.

குருபக்தி உள்ள மாணவன் ஒருவன் ஒரு போதும் அழிந்து போனதோ, தாழ்ந்ததோ கிடையாது. இதனை நாம் இதிகாசங்கள் மூலம் அறியலாம். மகா

பாரதத்தில் வில்வித்தை கற்றுக்கொடுத்த துரோணாச்சாரியாருக்கு வில் வித்தை கற்ற அரச பரம்பரை மாணவர்கள் குரு தட்சணை கொடுக்கும்போது "துரோ ணாச்சாரியார் கேட்டபடி "ஏகலைவன்" என்னும் மாணவன் வில்வித்தைக்கு அவ சியமான பெருவிரலையே தட்சணையாக கொடுக்கின்றான். ஒரு தடவை வில் வித்தை வகுப்பிற்கு வருகை தரப்பிந்திய வனாக அர்ச்சுனன் காணப்பட்டபோது ஆசிரியர் கற்பிக்கக் கீறிய சக்கரத்தை அவனுக்காக அழிக்காது விட்டுச் செல் கின்றார். அர்ச்சுனன் அவர்கள் சென்ற பாதை வழியே குருவை நினைத்தும் குரு பக்தியுடனும் செல்லும்போது வழி யில் அவ்வியூகச் சக்கரத்தை கண்டு பாடமாக்கியும் கீறியும் குருவுக்கு மதிப் புக் கொடுத்து கற்றுக் கொள்கின்றான். (ஓர் அம்பு எய்ய – ஆயிரம் பாணங்க ளாகத் துளையிடல்) இக்கதைகள் குரு பக்தியின் மகிமையை எடுத்துக் காட்டு கின்றன.

பழைய காலத்தில் திண்ணைப் பாடசாலைகள் நடைபெற்றபோது மாண வர்கள் அவ்வீட்டுக் குருவிற்கு குற்றேவல் களை செய்து முடித்து ஆசிரியருக்கு மதிப்புக் கொடுத்தாலே அவர்களுக்கு கட்டுப்பாடு உடையவர்கள் என குரு குலத்தவர்கள் கல்வி வழங்கியதாக அறியக் கிடக்கின்றது.

எல்லாவற்றிற்கும் மேலாக தற் போது பாடசாலைகளில் முன்னேற்றமான மாணவர்களை நோக்கும்போது அவர்கள் அதிகம் குருபக்தி உள்ளவர்களாக காணப்படுதலைக் குறிப்பிடலாம். ஆசிரி யரை மதித்தல், பின்பற்றல், அறிவுரை கேட்டல், ஆசிரியரை வணங்குதல், ஆசி பெறுதல் என்பன சில மாணவர்களி டையே காணப்படுகின்றது. அம் மாணவர் களே கல்வியில் சிறந்த பெறுபேறு பெறு பவர்களாக உயர்கல்வி கற்க செல்பவர் களாக அமைகின்றனர். குரு பக்தியுள்ள மாணவர்களிடம் எந்நேரமும் கீழ்படிவு, பணிவு, கட்டளைகளைச் சிரமேற்கொள் ளல், பாடங்களைச் செவி மடுத்தல், பயிற்சி எடுத்தல், பாடங்களை ஒழுங் காகக் கற்றல், பாடசாலைக்கு ஒழுங்காக வருகை தருதல், பெரியோர் பெற்றோரை மதித்தல், ஆசிரியரை வணங்குதல் ஆகிய செயற்பாடு உடையவராகக் காணப்படு வர். எனவே எல்லா மாணவர்களும் குரு பக்தி உள்ளவர்களாக மாறி கற்று உய் யும் பெறுமாறு இறைவனைப் பிரார்த்திக் கின்றேன்.

**திருமதி ஈ. சின்னத்தம்பி**
பகுதித் தலைவர்

---

தூண்டுகோல்கள்

* **யுத்த காலத்தில் தன் எண்ணற்ற எதிரிகளை முறியடிப்பதை விடத் தன்னைத்தான் உணர்ந்தவனே பெரியோன்.**

* **எல்லாவற்றிலும் நல்லதைக் காண்பது தான் சந்தோஷ வாழ்வின் முதற்படி.**

* **நெஞ்சில் உறுதியும் உழைப்பில் பலமும் செய்யும் கருமத்தில் துணிச்சலும் இருந்தால் நிச்சயம் வெற்றி கிடைக்கும்.**

* **படிக்கத் தெரியாதவனும் படிக்கத் தகாதவற்றைக் கற்பவனும் எழுத்து வாசனை அற்றவன்.**

# நூலகங்களும் வாசிப்புப் பழக்கமும்

நூலகம் என்பது ஒரு சமூக நிலையமாகும். சமூகத்தில் வாழும் மக்களை நவீன தொழில்நுட்ப மாற்றங்க ளுக்கமைய உயர்வான சமூக வாழ்விற்கு இட்டுச்செல்வதே நூலகத்தின் முக்கிய நோக்கமாகும். நூலகமானது சமூக அறிவைச் சேகரிக்கும் ஒரு களஞ்சிய மாகக் காணப்படுகிறது. நூலகங்கள்,

1. கல்விசார் நூலகங்கள்
2. பொதுசன நூலகங்கள்
3. விசேட நூலகங்கள் என மூன்றாக வகைப்படுத்தப் படுகின்றன.

ஏதாவது கல்வி நிறுவனத்துடன் இணைக்கப்பட்டுள்ள நூலகமானது கல்வி சார் நூலகங்கள் எனப்படுகின்றன. பாட சாலை நூலகங்கள், கல்லூரி நூலகங் கள், பல்கலைக்கழக நூலகங்கள் என்பன இத்னுள் அடங்கும்.

சமூக நூலகங்கள் சமூகத்தில் வாழும் அனைத்து மக்களினதும் தேவை களை நிறைவேற்றும் வகையில் அமைக் கப்பட்டவையாகும். சமூகத்தில் வாழும் பாமரமக்கள், கல்வி கற்றோர், சிறுவர்கள் ஆகிய அனைவரதும் தேவைகளை நிறை வேற்றும் வகையில் அமைக்கப்பட்டி ருத்தல் வேண்டும். இது மக்களுக்குச் சிறந்த பொழுதுபோக்குச் சாதனமாகவும் அமைதல் வேண்டும்.

விசேட நூலகங்களானவை குறிப் பிட்ட நிறுவனத்தின் தேவைகளை நிறை வேற்றும் நோக்கம் கொண்டதாக அமைந் திருக்கும். உதாரணமாக வங்கிகள், வைத்தியசாலைகள் போன்றவற்றில் உள்ள நூலகங்களைக் குறிப்பிடலாம்.

21-ம் நூற்றாண்டில் தகவல் தொழில்நுட்ப யுகத்திலே வாழ்ந்து கொண்டிருக்கும் மக்களில் ஒரு பகுதி யினர் புத்திஜீவிகளாகவும் அறிஞர் களாகவும் கல்விமான்களாகவும் ஆராய்ச் சியாளர்களாகவும் வாழ்ந்துகொண் டிருக்கும் அதே சமயத்தில் வாசிப்புப் பழக்கமற்ற ஒரு சமூகம் உருவாகிக் கொண்டிருப்பது வேதனைக்குரிய விடய மாகும். இதன் விளைவாக எழுத்தறிவற்ற பண்பற்ற ஒரு சமூகம் உருவாகிக் கொண்டுவருவதும் மறுக்கமுடியாத ஒன்றாகும். இந்நிலை மாறி பண்பான ஒரு சமூகம் உருவாக வேண்டுமாயின் "வாசிப்புப் பழக்கம்" ஏற்பட வேண்டும்.

கல்வி மட்டும் ஒரு மனிதனைப் பூரணப்படுத்தாது. கல்வி எனும் துறை மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. அதாவது கல்வியமைப்பு ஒரு மனிதனைத் தனித் தீவாகவே உருவாக்குகின்றது. இதனால் அவனிடத்தில் சமூக உணர்வென்பது இல்லாமல் போகின்றது. இதன் அடிப் படைக் காரணம் ஒரு கல்வியாளன் பூரண வாசிப்பை மேற்கொள்வதில்லை. பரந்து பட்ட வாசிப்புத்திறனே ஒரு மனித னிடத்தில் சமூக உணர்வை உருவாக்கும்.

எனவே சிறுபராயத்திலிருந்து மாணவர்களிடையே வாசிப்புப் பழக்கத் தினை உருவாக்குவதன் மூலம் சமூக உணர்வினை ஏற்படுத்தலாம். இவ்வாறு வாசிப்புப் பழக்கத்தினை மேம்படுத்த அதற்கேற்ற வகையில் நூலகங்களின் தேவைகளும் அமைதல் வேண்டும். சிறுவர் களுக்கென நூலகங்களில் ஒரு பகுதி உருவாக்கப்பட்டு அவர்களுக்குரிய வசதி உடையதாக ஒழுங்கமைக்கப்பட்டு ஒரு

பொழுதுபோக்குச் சாதனமாக நூலகங்கள் விளங்குவதன் மூலம் படிப்படியாக அவர்களின் வாசிப்புத் திறனை விருத்தி யடையச் செய்ய முடியும்.

மாணவர்களின் வாசிப்புத்திறனை விருத்தியடையச் செய்ய வேண்டுமாயின் முதலில் ஆசிரியர்கள் வாசிப்புப் பழக்கம் உடையவர்களாக இருக்க வேண்டும். ஆசிரியன் ஒரு விளக்குப் போன்றவன். இவ்விளக்கு மற்றவர்களுக்கு ஒளி கொடுக்க வேண்டுமாயின் அது எரிவதற்குத் தேவையான சக்தி தொடர்ந்து வழங்கப்படல் வேண்டும். எனவே ஆசிரியர்கள் தொடர்ந்து வாசிப்பவர்களாக இருக்க வேண்டும். மாணவர்களுக்குக் கணிப்பீடுகள், ஒப்படைகள் என்பவற்றை வழங்கும்போது அவற்றிற்குரிய உசாத் துணை நூல்களையும் குறிப்பிடுவது மாணவர்களுக்கு ஒரு ஊக்குவிப்பாக அமையும்.

நூலகங்கள் வெறுமனே நூல்களைச் சேமிக்கும் களஞ்சியமாக அமையாது கற்றல் கற்பித்தலுக்குத் தேவையான சாதனங்கள், தகவல் தொழில் நுட்ப சாதனங்கள் போன்றவற்றை வழங்கும் மூலமாகவும் செயற்படுவதால் "நூலகம்" என்ற பெயர் கொண்டு இவை அழைக்கப்படாது "நூலகமும் கற்றலுக்கான வளநிலையமும்" என அழைக்கப்படுகின்றது. பாடசாலைகளில் காணப்படும் இக்கற்றல் வள நிலையங்கள் பின்வரும் உள்ளீடுகளைக் கொண்டிருக்கும் போதே அவற்றினால் சிறந்த சேவையாற்ற முடியும்.

- நூல்கள், புதினத்தாள்கள், சஞ்சிகைகள்
- கட்புல செவிப்புல சாதனங்கள்
- தகவல் தொழில்நுட்ப சாதனங்கள்
- பருவ வெளியீடுகள், கையேடுகள், ஆய்வறிக்கைகள்
- சுவரொட்டிகள், படங்கள், உலகப்படங்கள், பூகோளம்
- பாடசாலை வரலாற்றுச் சுவடிகள்
- கற்பித்தல் துணைச்சாதனங்கள்
- பத்திரிகை நறுக்குத் துண்டக் கோவைகள்
- கையெழுத்துச் சஞ்சிகைகள், மாணவர்களின் செயற்றிட்டங்கள்
- அருங்காட்சிப் பொருள்கள்
- இறுவட்டுக்கள், வீடியோ ஓடியோ நாடாக்கள்

இவ்வாறான உள்ளீடுகளைக் கொண்டு விளங்கும் கற்றல் வள நிலையங்களானவை நூலகத்திற்கு வரும் வாசிப்போரைக் கவரும் வகையில் நேர்த்தியாக ஒழுங்கமைக்கப்பட்டு காட்சிக் கூடங்களாகக் காட்சியளிக்க வேண்டும். இவையற்ற ஒரு நூலகம் உயிர்த் துடிப்பற்ற ஒரு சடமாகவே காணப்படும்.

இவ்வாறு உருவாக்கப்படும் கற்றல் வள நிலையங்கள் பின்வரும் நோக்கங்களை நிறைவேற்றும் வகையில் அமைந்திருக்கும்.

- மாணவர்களிடையே பரந்துபட்ட அறிவை விருத்தி செய்யும்.
- மாணவர்களின் கற்றல் பெறுபேறுகளை உயர்த்தும்.
- சமூகத்தின் தேவைக்கேற்ப சமூக ஆளுமையுள்ள பிரஜைகளை உருவாக்கும்.
- மாணவர்களிடையே கூட்டுப் பொறுப்பையும் சேர்ந்து இயங்கும் தன்மையையும் உருவாக்கும்.
- நல்லொழுக்கம் நற்பண்புடைய மனிதர்களை உருவாக்குவதுடன் அவர்களிடையே ஆக்கத்திறன்

விருத்தியையும் விமர்சன மனப் பாங்கையும் உருவாக்கும்.

➢ ஆசிரியர்களின் கற்பித்தல் பழுவைக் குறைத்து வினைத் திறன் மிக்க கற்பித்தல் திறனை வளர்த்தெடுக்கும்.

➢ ஆசிரியர்கள் பல்வேறுபட்ட கற்பித்தல் முறைகளைக் கையாள உதவும்.

➢ நூல்களின் முக்கியத்துவத் தையும் அவற்றைப் பாதுகாக்க வேண்டும் என்ற மனப்பாங்கை யும் மாணவர்களிடையே உரு வாக்கும்.

இவ்வாறான தன்மைகள் கொண்ட வனவாக நவீன கற்றல் வள நிலையங்கள் அமையும் போது அவை நிச்சயமாக மாணவர்களின் வாசிப்புத்திறனை மேம் படுத்தும் என்பதை மறுக்க முடியாது. "தொட்டிற் பழக்கம் சுடுகாடு வரை" என்பதற்கமைய மாணவர்களிடையே சிறு வயதிலே வாசிப்புப் பழக்கத்தினை ஏற் படுத்தும்போது அவர்கள் இன்றைய சமூகத்தின் தேவைகளை நிறைவேற்றும் வகையில் சிறந்த மனித வளமாக உருவாக்கப்படுவார்கள் என்பது உறுதி.

**திருமதி சி. பேரின்பநாதன்**
நூலக ஆசிரியை

# ஆண்டு நிறைவுகள் குறிக்கும் விழாக்கள்

| | | | |
|---|---|---|---|
| ஓராண்டு | காகித விழா | இருபதாண்டு | பீங்கான் விழா |
| ஈராண்டு | பருத்தி விழா | இருபத்தைந்தாண்டு | வெள்ளி விழா |
| மூன்றாண்டு | தோல் விழா | முப்பதாண்டு | முத்து விழா |
| நான்காண்டு | பூ பழ விழா | நாற்பதாண்டு | மாணிக்க விழா |
| ஐந்தாண்டு | மர விழா | நாற்பத்தைந்தாண்டு | இரத்தின விழா |
| ஆறாண்டு | இரும்பு விழா | ஐம்பதாண்டு | பொன் விழா |
| ஏழாண்டு | செம்பு விழா | ஐம்பத்தைந்தாண்டு | மரகத விழா |
| எட்டாண்டு | வெண்கல விழா | அறுபதாண்டு | வைர விழா, |
| ஒன்பதாண்டு | மண்கலச விழா | | மணி விழா |
| பத்தாண்டு | தகர விழா | எழுபத்தைந்தாண்டு | பவள விழா |
| பதினோராண்டு | எஃகு விழா | எண்பதாண்டு | அமுத விழா |
| பன்னீராண்டு | லினன் விழா | நூறாண்டு | நூற்றாண்டு விழா |
| பதின்மூன்றாண்டு | பின்னல் விழா | | |
| பதினான்காண்டு | தந்த விழா | | |
| பதினைந்தாண்டு | படிக விழா | | |

**திருமதி கா. சுஜிகரன்**
(ஆசிரியை)

* **பிறர்மனதை மென்மையான கண்ணாடியாக நினைத்து வார்த்தைகளைக் கவனமாகத் தேர்ந்தெடுத்து உரையாடுங்கள். அதில் சிறு கீறல் விழுந்தாலும் ஆயுள் வரைக்கும் ஆற வழியில்லை.**

* **நல்ல வீட்டுக்குச் சமனான பாடசாலையும் இல்லை. நல்ல பண்புள்ள பெற்றோருக்குச் சமனான ஆசிரியரும் இல்லை.**

# பூச்சிகளா பூச்சாண்டிகளா?

இன்று இருபத்தோராம் நூற்றாண்டில் உலகு வாழ்ந்து கொண்டிருக்கிறது. விஞ்ஞானம் எந்தளவுக்கோ வளர்ந்து வானவெளிகளை ஆராய்கிறது. கிரகங்களை நோக்கிப் படை எடுக்கிறது. செயற்கை மனிதனை உருவாக்கி வியத்தகு கருமங்களைச் செய்து நிற்கின்றது. கடலின் அடியிலும், மலையின் உச்சியிலும், மரத்தின் வேரிலும் என எங்குமே ஆராய்ந்தது மட்டுமன்றி ஆரோக்கியமாக புதிய கண்டுபிடிப்புக்கள், புதிய மருத்துவங்கள் என யாவுமே நவீன மயமாக்கப் பட்டுக் கொண்டிருக்கின்றன.

எங்கு பார்த்தாலும் பச்சைப் பசேலெனத் தெரிந்த தரைகளில் எல்லாம் அடுக்குமாடிகளும் வர்ண விளக்குமாகக் கட்டிடங்கள் வளர்ந்து கொண்டிருக்கின்றன. ஆலயங்கள் பாடசாலைகள் சனசமூக நிலையங்கள் அயல்நாட்டு நிறுவனங்கள் அந்த இந்த அமைப்புக்கள் என எவ்வளவோ நிருவாக பீடங்களும் இவற்றினைச் செயற்படுத்தும் அதிகாரிகளும் ஊழியர்களும் நிறைந்து காணப்படுகின்றனர். இவற்றினைச் செயற்படுத்த போக்குவரவு செய்ய என பயன்படுத்தப் படும் வாகன வகைகளுமோ ஏராளம் ஏராளம்.

இந்த அளவுக்கு நவீனத்துவத்திலும் நாகரிகத்திலும் போட்டியிட்டுக் கொண்டுவரும் உலக நாடுகளில் மனிதர்களின் மனம் மட்டும் பண்பட்டுக் கொண்டதா? ஒவ்வொரு அமைப்புக்களிலும் ஒவ்வொரு தினசரி நிகழ்வுகளிலும் கேட்கப்படும் வினாவாக இந்நிலை அமைந்தது எமது துரதிஷ்டமே. எமது நாட்டுக் கல்வியைப் பொறுத்த வரையில் பாடசாலைக் கல்விக்கு முன்னதாகவே பாலர் முன்பள்ளிச்சாலைகள் நடத்தப்படுகின்றன. இதன்பின் யாவருக்கும் கல்வி தொடங்கிவிடுகின்றது. இதற்குப்பின் பாடசாலையில் பதினொரு வருடங்கள் இலவசக்கல்வி இலவசச் சீருடையுடன் சில காலங்களில் இலவச உணவுகூட வழங்கப்படுகின்றது. மற்றும் புலமைப் பரிசில் முறைகள் என கல்வி வசதிகள் பட்டப்படிப்பு வரை இலவசமாக அளிக்கப்படுகிறது. எந்த நிலையிலும் கல்வியானது பரீட்சையை மையமாக வைத்தே போதிக்கப்படுகின்ற கல்வியாக இருக்கின்றதேயன்றி வேறில்லை எனக்கூறக் கூடிய அமைப்பு முறையே இத்தனை காலமாக இருந்து வருகின்றது.

ஆலயங்கள் புனிதமானவை. மக்களுக்கு அமைதியையும் சாந்தத்தையும் பக்தியையும் பண்பாடு பழக்க வழக்கங்கள் மேலான அன்பைப் பேணுகின்ற சகல நடவடிக்கைளையும் பிரதிபலிப்பதான செயற்பாடுகளைக் கொண்டவை. ஆனால் இன்றோ ஆலயத்தை அசிங்கம் பண்ணுவதான பல காரியங்கள் நிகழுகின்றன. மேலும் பக்தியில்லா பூசைகள், போலித்தனமும் படாடோபமான கோவில் செயற்பாடுகள் கூட சில இடங்களில் நடைபெறுகின்றன. கோவில் சொத்துக்களை சூறையாடும் கொள்ளையடிக்கும் கும்பல்களுமே நாளாந்தம் பெருகிவருகின்றது. இங்கு எவ்வளவுக்கு எவ்வளவு புதிய வைத்திய முறைகள் வந்தாலென்ன புதிய மருந்துகள் வந்தாலென்ன நோய்களும் நோய்களின் வகைகளும் நோயாளர்களும் நாளுக்கு நாள் அதிகரித்தபடியே இருக்கின்றன. இன்றைய பத்திரிகைகளில் எதை எடுத்தாலும் கொலை, கொள்ளை, பாலியல் வன்முறை என்ற செய்திகளே பக்கத்

துக்குப் பக்கம் மலர்ந்திருக்கிறது. உலக நாடுகளின் செய்திகளிலுமோ குண்டு வெடிப்பு, மழையினால் வெள்ளம், பூகம் பம், சூறாவளி, ரயில் மோதலில் பலி, பஸ் மோதலில் பலி, இனந்தெரியாத வரால் சுட்டுக்கொலை என அபத்தமான செய்திகளையே தான் கேள்விப்பட வேண்டியிருக்கின்றது.

நம் நாட்டில் போக்குவரத்து செய்யும்போது பிரயாண வேளைகளிலே இளைஞர்கள் இடங்களைப் பிடித்து உட் கார வயதானவர்கள் நின்று பிரயாணம் செய்யும் காட்சிகளுக்குப் பஞ்சமில்லை. இன்னும் இன்றைய இளைய சமுதாயத் தினர் பெற்றோர் சொற்களுக்கு மதிப்புக் கொடுப்பதோ அன்றி பாடசாலையில் ஆசிரியர்களின் சொற்களுக்கு மற்றும் வழிநடத்தல்களுக்கு மதிப்புக் கொடுப்பதோ குறைந்து வருகின்றது.

அநேகமான சுயநல மனப்போக் குடையவர்களாக அடுத்தவர்களைப் பற்றிச் சிந்திக்காத வகையில் நடந்து கொண்டிருக்கின்றனர். குடும்ப ஒற்றுமை சகோதர பாசம் இவையும் முற் காலங் கள் போல் இல்லாது பூசல்கள் நிறைந் துள்ளதாகக் காணப்படுகின்றது. இத னால் தனி மனித அமைதி, சமூக அமைதி என்பன குன்றி வழக்காடு மன்றங்களில் பலர் காலத்தைக் கழிக்க வேண்டி யுள்ளது. மொத்தத்தில் பலருக்கு கடவுள் நம்பிக்கை குறைந்துவிட்டது. மறுபிறவி என்ற கொள்கையில் நம்பிக்கையும் இல்லாமல் போய்விட்டது. புராணங்கள் வெறும் புழுகுகள் என்ற எண்ணம் வலுத்து வருகின்றது. உண்மை அன்பு குன்றி ஆடு, மாடுகளைக் கொலை செய்வதற்கே பயப்படவேண்டியிருக்க, மனிதர்களையே கொலை செய்யும் வெறி பிடித்திருக்கின்றது. பழிபாவங்களைப் பற்றியே சிந்திக்கும் ஆற்றல்களைக் கடந்து இன்றைய பொழுது சந்தோசமாகப் போனால் போதும் என்ற மனப்பாங்கு உடையவர்களாகவும் பலர் அஞ்சா நெஞ்சராகவும் வாழ்கின்றனர். "கடவுள் ஏன் கல்லானார் மனம் கல்லாய்ப்போன மனிதர்களாலே" என்ற பாடல் போல் எதற்குமே அஞ்சாத நெஞ்சினராக இறுகிப் போய் விட்டார் களா? இல்லை, இவர்களைத் தம் உலக வாழ்வு நிச்சயம் என்று நம்பும் மாயப் பூச்சிகள் அரித்துக் கொண்டிருக் கின்றனவா?

**திருமதி தெ. கிருஷ்ணசாமி**
இசை ஆசிரியை

## தமிழறிவு விடைகள்

1. திராவிட மொழி
2. சீவக சிந்தாமணி
3. எழுத்து, சொல், பொருள்
4. யாப்பருங்கலம், யாப்பருங்கலக்காரிகை, யாப்பாவினம்
5. வீரசோழியம்
6. தொன்னூல் விளக்கம்
7. நிகண்டு
8. பேகன், ஓரி, பாரி, காரி, ஆய், நள்ளி, அதிகமான்
9. திருமுருகாற்றுப்படை
10. திருக்குறள்
11. திருவாசகம்
12. திருஞான சம்பந்தர்
13. நம்பியாண்டார் நம்பி, நாதமுனிகள்
14. ஓம் நமோ நாராயணா
15. கம்பராமாயணம், ஏர் எழுபது, திருக்கை வழக்கம், சரசுவதி அந்தாதி, சடகோபர் அந்தாதி

*(வினா 46-ம் பக்கம்)*

# எண்ணெய் விலை அதிகரிப்பும் இலங்கை எதிர்நோக்கும் சவால்களும்

இன்று உலகம் முழுவதிலும் உள்ள அபிவிருத்தியடைந்த, அடைந்து வரும் எண்ணெய் இறக்குமதி நாடுகள் பெற்றோலிய விலைகளில் ஏற்பட்ட எதிர் பார்க்கப்படாததும் முன் எப்பொழுதும் இல்லாததுமான அதிகரிப்புகளைக் கையாள்வதில் பெரும் சவால்களை எதிர் நோக்கிவருகின்றன. 2004 இல் கடுமை யாக அதிகரிக்கத் தொடங்கிய பன் னாட்டு எண்ணெய் விலைகள் 2005 இன் தொடக்கத்தில் வரலாற்றில் இல்லாத உயர்ந்த மட்டத்தை அடைந்து இன்று வரை தொடர்வதாகவே உள்ளது. இன்று பீப்பாய் ஒன்று ஐக்கிய அமெரிக்க டொலர் 75 ஆக உள்ளது. இவ்வாறு பெற்றோலிய விலைகளில் ஏற்பட்ட திடீர் அதிகரிப்புக்கு பல காரணிகள் பொறுப் பாய் அமைந்தன.

1. சீனா, இந்தியா, ஐக்கிய அமெரிக்கா, யப்பான் போன்ற நாடுகளிலிருந்தான உயர்ந்த கேள்வி.
2. எண்ணெய் உற்பத்தி நாடுகளான மத்திய கிழக்கு, நைஜீரியா, வெனிசுலா, போன்றவற்றில் நிலவிய பதற்றமான அரசியல் நிலை.
3. பாரிய எண்ணெய் உற்பத்தி யாளராக விளங்கும் யூகோசில் எண்ணெய் கம்பனியின் நிதி நெருக்கடி.

இலங்கையைப் பொறுத்த வரை யில் பெற்றோலிய உற்பத்திகளின் பயன்பாடு மேலும் மேலும் அதிகரிப்ப தாகவே உள்ளது. இதற்குப் பின்வரும் காரணங்கள் துணை செய்பவையாக உள்ளன.

1. போக்குவரத்துத் துறையின் பெற்றோலிய நுகர்வின் அளவு அதிகரித்துச் செல்கின்றமை.
2. பெற்றோலியத் தேவையை நிறை வேற்றக்கூடிய வேறு மாற்று மூலகங்கள் இல்லாதிருத்தல்.
3. ஏற்கனவே திட்டமிடப்பட்டுள்ள நிலக்கரி நீர்மின்வலு செயற் றிட்டங்கள் இன்னமும் நடை முறைப்படுத்தப்படாமையால் வெப்பமின்வலுவின் பயன்பாடு அதிகரித்தமை.

இத்தகைய காரணங்களினால் இன்று இலங்கை பொருளாதார ரீதியாகப் பெரும் நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளது. பொருத்தமானதும் சரியானதுமான வழி முறைகள் வகுக்கப்படாவிட்டால் எண் ணெய் விலைகளின் உயர்வானது கடுமையான உள்நாட்டு வெளிநாட்டுத் துறைகளின் உறுதியற்ற தன்மைக்குக் கடுமையான பேரண்டப் பொருளாதார தளம்பல்களுக்கு வழிவகுத்துவிடும்.

தொடர்ந்து வரும் எண்ணெய் விலை அதிகரிப்பானது,

1. இலங்கைப் பொருளாதாரத்தின் வர்த்தகச் சமனிலையின்மையை விரிவாக்குவதுடன் திரண்ட சென்மதி நிலுவை மோசமடை யவும் உதவும்.
2. மேலும் நாட்டின் வெளிநாட்டுச் சொத்துக்களைக் கரையச் செய் வதன் மூலம் செலாவணி வீதத் தில் அழுத்தத்தை ஏற்படுத்தும்.
3. உள்நாட்டுப் பணவீக்கத்திற்கு இது உறுதுணையாகும்.
4. மேலும் எண்ணெய் விலை அதிகரிப்பைச் சரி செய்ய அரசு

உதவு தொகைக் கொடுப்பனவு களை வழங்கும்போது வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறை அதிகரிக்கும்.

5. இதனால் அரச படுகடன் அளவு உயர்வடைவதுடன் வட்டி வீதங் களும் உயர்வடையும்.
6. தனியார் துறை முதலீடுகள் இதனால் பாதிக்கப்படும்.

மேலும் உதவுதொகை வழங்கும் போது பாரியளவு நிதி அரசிற்குத் தேவைப்படும். இந் நிதிகளைப் பெற அரசு வரிகளை அதிகரிக்க வேண்டும். அல்லது செலவினத்தில் ஏதாவது குறைப்புச் செய்யவேண்டும். அல்லது கடன்பட வேண்டும். இம்மூன்று நடவடிக்கைகளி லும் எந்தவொரு நடவடிக்கையும் இலங் கையைப் பொறுத்தவரை சாதகமாக அமையாது. ஏனெனில் வரி விதிப்புகள் பொதுவாக மறைமுக வரியாகவே அமை யும். இதனால் ஒப்பீட்டு ரீதியில் அதிகம் பாதிக்கப்படுபவர்கள் வறியவர்களே.

செலவினை அரசு குறைக்க முயலுமாயின் அதுவும் வறியவர்கள் தொடர்பாக அரசின் உதவும் ஆற்றலை குறைக்கக்கூடும் அல்லது நீண்ட கால முதலீடுகளை இது பாதிக்கும். உள் நாட்டுச் சந்தைக் கடன்பாடுகளை அரசு அதிகரிக்குமாயின் தனியார்துறை முத லீடுகள் பின்தள்ளப்படுவதற்கு இது காரணமாகும். அல்லது வங்கி மூலகங் களிலிருந்து பெறும் கடன்களாயின் அது பணவீக்கத்திற்குக் காரணமாகிவிடும்.

இத்தகைய நெருக்கடிகளிலி ருந்து இலங்கைப் பொருளாதாரம் விடு பட்டு மீட்சிபெற வேண்டுமாயின் எரி பொருட்களைச் சிக்கனமாகவும் கவனமா கவும் பாவிக்க வேண்டிய தேவையை உணர்ந்துகொள்ள வேண்டும். இந்த அடிப்படையில் தான் எண்ணெய் விலை உயர்வின் பாதகமான தாக்கத்தைக் குறைப்பதற்குப் பல்வேறு நடவடிக்கை கள் மேற்கொள்ளப்பட்டன. இன்னும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

1. 2002 ஜனவரியில் பன்னாட்டு விலைகளை உள்நாட்டில் பிரதி பலிக்கச் செய்யும் வகையில் விலையிடல் சூத்திரம் - அறி முகப்படுத்தப்பட்டது.
2. வீதி நெரிசலைத் தவிர்ப்பதற்கான நடைமுறைகள் விருத்தி செய்யப் படுகின்றன. இதன் ஒரு பகுதி யாக இன்று சுரங்கவழி ரயில் பாதைகள் அமைக்கத் திட்ட மிடப்பட்டுள்ளது.
3. வினைத்திறன்மிக்க போக்கு வரத்து முறையை விருத்தி செய்யும் நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.
4. தனிப்பட்ட ஊர்திகளின் பாவ னையைக் குறைக்கத் திட்ட மிடப்பட்டுள்ளது.
5. நிலக்கரி மற்றும் ஏனைய மாற்று வலு மூலகங்களை அபிவிருத்தி செய்தல்.

முடிவாக இலங்கை போன்ற அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளின் மீது எண்ணெய் விலை உயர்வின் காரணமாக ஏற்படும் பொருளாதாரத் தாக்கமானது வெளிநாட்டுத் தாக்கத்தை எதிர்த்து நிற்கும் தன்மையிலும் தாக்கத் தைத் தணிப்பதற்கும் மேற்கொள்ளப் படுகின்ற கொள்கைகளிலுமே பெரு மளவு தங்கி இருப்பதால் பொருத்தமா னதும் சரியானதுமான வழிமுறைகளை இனங்கண்டு செயற்படுத்தி பொருளா தாரத்தை மீட்டெடுத்தல் காலத்தின் தேவையாகவுள்ளது.

**திருமதி சு. கணேஷ்**
(ஆசிரியை)

# அரங்கும் சமூகமும்

"தேசம் ஒன்று தனக்கு முன்னிலையிலேயே வெளிப்படையாக நின்று சிந்திக்கும் இடம் தான்-அரங்கு" என்பது மார்டின் எஸ்லின் என்பவரது கூற்றாகும்.

அரங்கு என்பது ஒரு தொடர் பாடல் சாதனமாகும். இது மக்களிடம் ஒன்றிணைந்து உள்ளது. அரங்கையும் மக்களையும் ஒன்றிலிருந்து ஒன்று பிரிக்க முடியாது. "நாடகம் என்பது என்ன? அது சமூகத்திலிருந்து பிறந்தது; சமூகத்தில் வாழ்ந்து, சமூகத்திற்காக வாழ்கிறது" என்ற குழந்தை ம. சண்முகலிங்கம் அவர்களின் கூற்றிற்கிணங்க எவ்வாறு நாடகமும் சமூகமும் ஒன்றிலிருந்து ஒன்றைப் பிரிக்க முடியாதோ அவ்வாறே அரங்கும் சமூகமும் மிக நெருக்கமானவை. ஒரு நாடகம் நிகழ்த்தப்பட வேண்டுமாயின் அங்கே அரங்கு பிரதானமாகின்றது. இவ்வரங்கு தெருவெளி அரங்காகவோ இன்னும் பல வகையாகவும் இருக்கலாம். நாடகம் நிகழ்த்தப்படும் போது அவ்விடம் அரங்கு எனக் கொள்ளப்படும்.

அரங்கும் அனைத்து நாடகங்களும் சமூகம் தன்னைத்தான் பார்த்துக் கொள்ளும் பண்பும் அரங்கிலே காட்டப்படுகின்ற பழக்க வழக்கங்களும் வாழ்க்கைப் பாணியும் நிஜவாழ்விலும் செல்வாக்குச் செலுத்துகின்றன. நாடகத்தின் மோடி அரங்கில் பார்ப்போன் மீதும் செல்வாக்குச் செலுத்துகின்றன. இங்கு பார்ப்போன் ஒரு கூட்டுச் சமூகமாக காணப்படுகிறான். சமூகத்தில் காணப்படும் பல்வேறு கலை நிகழ்வுகளால் சம்பவங்களால் தூண்டப்பட்டு நாடகம் உருவாகிறது. ஆரம்பத்தில் மக்களிடையே நிலவிய சமய சடங்குகளின் அடியாகவே நாடகம் உருவாயிற்று. கோவிலை அடிப்படையாகக் கொண்டிருந்த சடங்கு நிலைப்பட்ட நாடகம் பின் வளர்ந்து அரங்கை நோக்கி வரத் தொடங்கின.

மனிதனது தேவைகள் பெருக அவனுக்கு அரங்கின் செயற்பாடு தேவையாக இருந்தது. அதனால் அவன் கூட்டமாக இணைந்து தனது சமூகத்தில் காணப்பட்ட மரபுகள், வழமைகள், மொழி, பண்பாடு, நம்பிக்கைகள், பாரம்பரியங்கள் மூட நம்பிக்கைகள் போன்றவற்றை அடிப்படை மூலங்களாகக் கொண்டு அரங்கில் நாடகத்தினை நடத்தினர். மக்களிடம் இருந்து பெற்றதை மக்கள் நலனுக்காக அரங்கிலே வழங்குதல் கலையின் இலக்காகின்றது.

சுதந்திரம் அதிகமுள்ள நாடுகளிலும் அரங்கு அரசியல் சமூக விடயங்களில் அதிகம் செல்வாக்குப் பெற்றுள்ளது. யுத்தம் நிறைந்த எம் தாயகத்திலும் அரங்கு பல்வேறுபட்ட வகையாலும் சமூகத்துடன் ஒன்றிணைந்துள்ளது. இன்று யுத்தம் எமது வாழ்வைத் தீர்மானித்துள்ளபோது இன்னலுற்ற மக்களின் மனங்களை இதமாக்குவதற்கு அரங்கம் நாடகங்களை யதார்த்த நிலையில் வழங்கி வருகின்றது. அது மக்களினது மனங்களை மிகவும் கவர்கின்றது எனலாம். மக்களது தேவை என்ன? அது அரங்கினால் வழங்கப்படுகின்றது.

அரங்கு என்பது வெறுமனே நாடகத்தைக் காட்டாது சிந்தனையைத் தூண்டுவதாக இருக்க வேண்டும். அது ஒரு சிறந்த நியம அரங்காக இருக்க வேண்டும். நியம முறையில் பயிற்றும் போது அது வினைத்திறன் உடையதாக தொழிற்படும். கற்பனை ஆற்றலை நடைமுறையில் அரங்கு சமூகத்திற்கு வழங்குவதாக இருக்க வேண்டியது அவசியமாகும்.

3

வரலாற்று நிலையில் நோக்கு மிடத்தும் அரங்கும் சமூகமும் மிக நெருக்கமானவையாக காணப்பட்டுள்ளன. அதற்கு முதற்காரணமாக இருந்தது நாடகம் ஆகும். சமூக மிருகம் என்ற வகையில் மனிதன் தனித்து வாழ மாட்டாதவன்; கூட்டு அனுபவத்தை நயப்பவன். பொதுவானவையாக அமையும் வழமைகள், ஐதிகங்கள், சட்டங்கள் என்பன ஒரு சமூகக் குழுவின் அடையாளங்களாக அமைகின்றன. புராதன குடும்பங்கள் முதல் இன்றைய மிகவும் வளர்ச்சி அடைந்த சமூகம் வரையிலும் இந்த அடையாளத்தைக் காணும் அனுபவத்தைபெற உதவும் மார்க்கங்களில் ஒன்றாக அரங்கம் விளங்குகின்றது.

இவ்வாறாக அரங்கமானது சமூக வாழ்வின் அனைத்துத் தோற்றப்பாடுகளிலும் படர்ந்து பரவி நிற்கிறது. கரணத்திலும் அரங்கிலும் ஒரு மனித சமுதாயம் நேரடியாகத் தனது சொந்த அடையாளத்தை அனுபவித்து மீள் உறுதி செய்து கொள்கின்றது. இதனால் இன்று அரங்கு மிகவும் அரசியல் பண்பு கொண்ட ஒரு கலையாகின்றது. அதாவது மிகவும் முக்கியமானதொரு சமூகக் கலையாகின்றது.

அரங்கு ஒரு தொடர்பு கொள்ளல் தொடர்பாடல் சாதனம் என்ற வகையிலும் அது சமூகத்துடன் பல வழிகளில் உறவு கொண்டு நிற்கிறது. "அரங்கு ஒரு திறமையுள்ள ஆயுதம்" என்கிறார் Augusto Boal. இவர் மனிதனது செயற்பாடுகள் யாவும் அரசியல் மயமானவை என்றும் அவற்றில் ஒன்றே அரங்கு என்றும் கூறுகிறார்.

ஒரு சமூகம் உயிரோட்டமாக அரங்கையே விரும்புகிறது. காரணம் அது தான் எழுச்சிப் பண்பு கொண்டதாகவும் மாற்றம் அடையும் பண்பு கொண்டதாகவும் காணப்படுவதாலாகும். ஆற்றுவோர் பார்வையாளர் தம் முன்னிலையில் நிற்கும் ஒரு நிகழ்வே அரங்கம். இதுவே அரங்கின் வாழும் இயல்பு. நடிகர், பார்வையாளர் உறவே அரங்கைச் சினிமாவிலிருந்து வேறுபடுத்துகிறது.

நுண்கலைகள் யாவும் அரங்கு உட்பட தொடர்ந்து வாழ்வதன் காரணம் மனிதன் புதியதைப் படைக்கும் தனது விருப்பத்தை என்றும் செயற்படுத்துவது. அவனது படைப்பாக்க உணர்வு உள்ள வரை அரங்கும் நிலைத்து வாழும், வளரும். ஒரு மக்கள் கூட்டத்தை ஒரு கும்பலாகக் காட்டுகிறது. கும்பலாகும் போது சமூக உணர்வு பிறக்கிறது. கூட்டு மனம் உருவாகிறது. தன்னை மனிதன் வித்தியாசமான முறையிலே உணரவும் சிந்திக்கவும் செயற்படவும் தூண்டுகிறது. இது தனி மனிதனை ஒரு சமூகமாக இணைக்கிறது.

எனவே அரங்கு ஒரு ஆற்றுகைக் கலை என்ற வகையில் அது சமூகத்துடன் ஒன்றிணைந்த ஒரு கலையாகக் காணப்படுகின்றது எனலாம்.

**செல்வி S. சத்தியபாமா**
உள்ளகப் பயிற்சி ஆசிரியை
யா/தேசிய கல்வியியற் கல்லூரி

**உசாத்துணை நூல்கள் :-**

குழந்தை ம. சண்முகலிங்கம்
- நாடகமும் சமூகமும்
பேராசிரியர் கா. சிவத்தம்பி -
- அரங்கு ஓர் அறிமுகம்
பேராசிரியர் சி. மௌனகுரு
- திரு. க. திலகநாதன்
பேராசிரியர் கா. சிவத்தம்பி
- கற்கை நெறியாக அரங்கு

# நூல்களுடன் சிநேகிதம்

இவ்வுலகில் அவதரித்த ஒவ்வொருவரும் மனிதனாக மதிக்கப்பட வேண்டுமாயின் அவன் கல்வி அறிவினைத் தேடிக்கொள்ளவேண்டும்.

" விலங்கொடு மக்க ளனையர் இலங்கு நூல்
கற்றாரோடு ஏனையவர்"

என்கிறார் வள்ளுவர். அதாவது கல்வி அறிவுடையோரே மனிதர் என்றும், கல்வியறிவற்ற ஏனையவர் விலங்குகள் என்றும் குறிப்பிடுகிறது இக்குறள். இதன் மூலம் கல்வியறிவு படைத்தோரையே இவ் உலகு மனிதனாக மதிக்கிறது. எனவே எல்லோரும் கல்வியறிவு பெற்றுக் கொள்வது அவசியமாகும். இக்கல்வியறிவினைப் பெற்றுக்கொள்வதற்குப் பல வழிகள் காணப்படுகின்ற போதிலும் அவற்றிலுள்ள நூல்களுடன் சிநேகிதம் பெற்றுக் கொள்வதே மிகச்சிறந்தது ஆகும்.

நூல்களுடன் சிநேகிதம் கொள்வதன் மூலம் நாம் அறிவை வளர்த்துக் கொள்ளமுடியும். அதாவது நூல்கள் மூலம் நாம் அறிவை பெற்றுக்கொள்ள வேண்டுமாயின் நல்ல நூல்களைத் தேடிக் கற்க வேண்டும். வாசிப்புப் பழக்கத்தை அதிகரிப்பதன் மூலமே இதனை நாம் வெற்றிகொள்ள முடியும். நூல்களே எமது தோழர்கள். அவர்களுடன் தோழமை கொள்வதன் மூலமே வாழ்வில் உயர்வடைய முடியும். "என்னை என்றும் எச்சந்தர்ப்பத்திலும் கைவிடாத நண்பர்கள் புத்தகங்களே" என்றான் ஆங்கிலக் கவிஞன் ஒருவன். இதனாலேயே நல்ல நூல்களை நண்பர்கள் ஆக்கிக் கொள்ளுங்கள் என்று அறிஞர்கள் வலியுறுத்துகின்றார்கள்.

நாம் வாசிக்கும் நூல்களும் பல தரப்பட்டவையாக உள்ளன. சமயம், தத்துவம், விஞ்ஞானம், விளையாட்டு, இசை, புனைகதை, விவசாயம் எனப் பல்வேறு வகைப்பட்ட நூல்களை நாம் சந்திக்கின்றோம். இவற்றினை நமது விருப்பத்திற்கேற்ப நாம் தெரிவுசெய்து படிக்கின்றபோது அவை எமது வாழ்க்கையில் வழிகாட்டியாக அமையும். நமது எதிர்கால முன்னேற்றத்திற்கு, வாழ்க்கைக்குப் பயன்தரும் நூல்களை அறிந்து அவற்றை நண்பர்களாக்கிக் கொள்ளுதல் வேண்டும். சோர்வு ஏற்படும் வேளைகளிலும் உற்ற நண்பர்களாக நூல்களைத் துணைக் கொண்டால் வேறு துணை நமக்குத் தேவைப்படாது.

இளமைப் பருவம் இனியது. இப்பருவத்திலேயே ஆர்வத்துடன் நூல்களைத் தேடி வாசிக்கும் பழக்கத்தினை நாம் விருத்தி செய்து கொள்ள வேண்டும். நல்ல நூல்களை உற்ற நண்பர்களாக தெரிவு செய்து நாம் வாசிக்கின்ற போது எமது மொழியாற்றல் விருத்தியடைவதுடன் பாடங்களில் சிறப்படையவும் முடியும். இதன் மூலம் சந்தோசமான ஒரு வாழ்க்கையும் நாம் அமைத்துக் கொள்ள முடியும்.

மேலும் நூல்களை வாசிக்கும் பழக்கமுடையவர்கள் ஓய்வு கிடைக்கும் போதெல்லாம் அவற்றையே நாடிச் செல்கின்றனர். இதனால் அவர்களுக்குத் தனிமை என்பது ஒருபோதும் ஏற்படுவதில்லை. வாழ்க்கையில் ஏற்படும் சோர்வுகளையும், தோல்விகளையும் நூல்களை வாசிப்பதனால் போக்குகின்றனர். எனவே நூல்களே உற்ற நண்பர்களாக என்றும் அவர்களுக்கு கைகொடுத்து உதவுகின்றது.

நூல்கள் நமக்கு அறிவு தரும் அரிய செல்வங்களாக உள்ளன. கல்விச் செல்வம் தவிர்ந்த ஏனைய செல்வங்கள் எல்லாவற்றையும் ஏனையோர் எம்மிட மிருந்து கவர்ந்து கொள்ள முடியும். ஆனால் இப்புத்தகங்கள் தரும் அறிவுச் செல்வத்தினை எவராலும் பறிக்க முடி யாது. இதனால் தான் புத்தகங்களைப் போன்ற சிறந்த கருவூலம் எதுவும் மனிதனுக்கு இருக்கமுடியாது என்றார் ஆங்கில அறிஞர். நூல்களால் பெறும் அறிவை, இன்பத்தை மற்றவர்கள் பறித்திட முடியாது. வாழ்நாள் முழுவதும் அவை அவனுக்குப் பயன் தரும்.

பொழுது போக்காகவும் சிலர் நூல்களை நண்பர்களாக்கிக் கொள்கின் றனர். அத்தகைய நூல்கள் குறிப்பிட்ட நேரத்திற்கு மட்டுமே படிப்போருக்கு மகிழ்ச்சியை அளிக்கின்றன. கற்பனைக் கதைகள், நாவல்கள் போன்றன இவ் வாறான நூல்களில் சிலவாகும். எனவே இவற்றினை மட்டும் நாம் படித்து விட்டு கற்பனை உலகில் வாழ்ந்திட முடியாது. எனவே நமது உள்ளத்திற்கும் நலம் தரும் நல்ல சிந்தனைகள் அடங்கிய வாழ்க்கைக்குத் துணை புரிகின்ற நூல் களைத் தேடிக்கற்க வேண்டும். நல்ல நூல்களையே எமது நண்பராக்கிக் கொள்ள வேண்டும்.

இவற்றை விடப் பல சமய நூல் கள் எமக்குச் சரித்திரக் கதைகளை எடுத்தியம்புகின்றன. கவிதைகள் பெரிய வரலாறுகள் என்பன நமக்கு நல்ல வழிகாட்ட வல்லன. அவை நமது சிந்தனை விருத்திக்கும் துணைபுரி வனவாகவுள்ளன. எவ்வளவுக்கு எவ் வளவு நல்ல நூல்களை வாசிக்கின் றோமோ அவ்வளவுக்கு அவ்வளவு அறிவு விருத்தியடையும். சொல் வளம் பெருகும். மொழியாற்றலில் முதன்மை பெற வாசிப்புப் பெருந்துணை புரியும். நல்ல நூல்களை வாசிக்கும் போது வாசிப்போர் மனதில் மேன்மேலும் நூல்களை வாசிக்க வேண்டும் என்ற ஆவல் பிறக்கும். அது நாளடைவில் தீராத பசியாக மாறி நூல்களைத் தேடும் ஆர்வம் அதிகரிக்கும். எனவே எப்பொழுதும் நூல்களுடன் சிநேகிதம் கொள்ள வேண்டும்.

நூல்களை நண்பர்களாக்கிக் கொள்வதன் மூலம் அறிவால் மட்டுமன்றி பண்பாலும் உயரமுடியும். உள்ளத்தால் உயரமுடியும். உலக மக்களோடு உறவு கொண்டு எமது பண்பாடுகளையும் வாழ்க்கை முறைகளையும் சிறப்பாக அமைத்துக் கொள்ள துணை புரிகின்றன. வாசிப்பு ஒருவனைப் பூரணமாக்குகின்றது என்பர் அறிஞர். நாம் நூல்களை வாசிக்கும் போது அவற்றில் வலியுறுத் தப்படும் கருத்துக்களை நமது உள்ளத் தில் பதித்துக் கொள்ள வேண்டும். அதன் மூலம் அந்நூல்கள் நம்மோடு உறவு கொண்டு விடும். புத்தகங்களைப் போன்ற நண்பர் கிடைப்பது அரிது. நமது நண்பர் கள் மனம் மாற்றமடைந்து நம்மை விட்டுப் பிரிந்து விடலாம். ஆனால் புத்தகங் களாகிய நண்பர்களோடு நாம் உறவு கொண்டால் அவை என்றும் எம்மை விட்டுப்பிரியாது. அத்துடன் அவை ஒரு போதும் நம்மை வெறுப்பதில்லை.

"கல்வி கரையில கற்பவர் நாட்சில
மெல்ல நினைக்கிற் பிணி பல........"

என்கின்றது நாலடியார். கல்வி கரையில்லாதது. அக் கரையில்லாக் கல்வியை நாம் வாழும் சொற்ப காலத்தில் சிறியளவேனும் கற்க வேண்டும். இதற்கு நாம் நல்ல நூல்களை நண்பர்களாக்கிக் கொள்வதே சிறந்த வழியாகும்.

நமக்கு அறிவு புகட்டும் ஆசானாக அவை அருகிருக்கும் போது அவற்றை நாம் பயன்படுத்தத் தவறக் கூடாது. சிறந்த நூல்களே நல்ல நண்பர்கள் என உணர்ந்து நூல்களை வாசிக்கும் பழக்கத்தினை அதிகரித்துக் கொள்ள வேண்டியது வளரும் மாணவ சமுதாயத்தின் தலையாய கடமை யாகும். "இளமையிற் கல்வி சிலையில் எழுத்து" என்பது பழமொழி. அதாவது இளமையிலேயே நாம் கற்க வேண்டிய எல்லாவற்றையும் கற்றுத் தெளிய வேண்டும். எனவே இவ் இளமைப் பருவத்திலேயே நூல்களுடன் நட்புக் கொள்வதுடன் எமது அறிவாற்றலையும் விருத்தி செய்வோம்.

எனவே நல்ல நல்ல நூல்களை எல்லாம் நண்பர்களாக்குவோம். அவர் களுடன் எந்நாளும் நட்புக் கொள்வோம். அறிவு தரும் நூல்களை எல்லாம் தேடிக் கற்போம். நூல்களுடன் சிநேகிதம் கொள் வதன் மூலம் கல்விப் பயணமதில் வெற்றி நடை போடுவோம். எதிர்கால வாழ்க்கை யினை வளம்மிக்கதாக அமைக்க வழியமைப்போம்.

**திருமதி இ. விஜயரட்ணம்**
(ஆசிரியை)

# அன்னை

*உடலுக்கு உயிர் வேண்டும்*
*உரிமைக்குச் சுதந்திரம் வேண்டும்*
*அறிவுக்குக் கல்வி வேண்டும்*
*அன்புக்கு அன்னை வேண்டும்.*

*அறிவுரைகள் பல கூறி - என்*
*அறியாமை எனும் இருளைப் போக்கி*
*அன்பின் இருப்பிடமாய்*
*பண்பின் பாசமலராய்*
*உதித்திட்ட என்அன்னையே.*

*தாலாட்டி சீராட்டி*
*உணவு ஊட்டி என்னை*
*ஊரறிய உலகறிய*
*உயர்த்திவிட்ட என் செல்வமே*

*தாயிற் சிறந்த கோயிலும் இல்லை*
*தந்தை சொல்மிக்க மந்திரம் இல்லை*
*என்பதை என்னால் மறுக்க முடியுமா?*
*என் இதயத்தால் வணங்குகின்றேன்*
*என்னைத்தாலாட்டி விடுவாயம்மா.*

*கடலும் ஒரு கணம் ஓயும்*
*காற்றும் ஒரு கணம் வீசமறந்து விடும் - ஏன்*
*நிலவு கூட நிழலிழந்து போகும்*
*சூரியனும் ஒளி தர மறுத்துவிடும் - ஆனால்*
*என் அன்னை என்னை மறந்துவிடுவாளோ?*

**திருமதி யோ. ஞானேஸ்வரன்** (ஆசிரியை)

# ஈழத்துச் சிறுவர் இலக்கிய வளர்ச்சி

இலக்கியம் என்பது ஓர் இலட்சியத்தினை, நோக்கை, இன்பத்தை, நயத்தை மையமாகக் கொண்டு உணர்த்துவது என நாம் எண்ணும்போது சிறுவர் இலக்கியம் என்பது இலக்கியத்தின் இன்னொரு பரிமாணத்தை எமக்குத் தெளிவுபடுத்துகின்றது. இலக்கியத்தை அதன் பொருண்மை, பயன்பாடு என்பவற்றைக் கருத்திற்கொண்டு வகைப்படுத்தி நோக்கும்போது தனிக்கவனத்தைப் பெறத்தக்க வகையில் சிறுவர் இலக்கியம் கவனம் பெறுகின்றது.

சிறுவர் எனப்படுவோர் மூன்று வயது முதல் 13 வயது வரையிலான பருவம் என இனங்காணப்படுவர். இவர்கள் பெற்றோர் கண்காணிப்பில் வாழ்ந்தாலும் தம் சகபாடித் தொடர்பில் அக்கறையுடையவர்கள். புலக்காட்சிகளினூடாக அறிவைப் பெறுதலே அவர்களின் பிரதான நடவடிக்கையாகும்.

சிறுவர் அனுபவங்கள், மனக்காட்சி ஆகியவற்றின் அடிப்படையில் நிலவு, விண்மீன், ஆறு, ஆடு, பறவை, அணில் முதலிய பாடுபொருளாகிய சிறுவர் இலக்கியங்களை அணி செய்கின்றன. சிறுவர்கள் வீட்டுச் சூழலிலும், பாடசாலைச் சூழலிலும் காணும் பொருட்களைப் பற்றியே சிறுவர் இலக்கியம் எடுத்துரைக்கின்றது. அத்தோடு வரலாற்றுக் கதைகள், பொது அறிவுக் கதைகள், சிறுவர் நாடகங்கள், குட்டிக் கதைகள், நீதிக் கதைகள், வேடிக்கைக் கதைகள், பொது அறிவுக் கதைகள், உருவகக் கதைகள் முதலியனவும் சிறுவர் இலக்கிய வரிசையில் அடங்குகின்றன.

சிறுவர் இலக்கிய வடிவங்கள் பல்வேறு வகையினவாகும்.

1. சிறுவர்களுக்குப் புரியும் படியான கருத்துக்களுடைய பாடல்கள், இவை கதைப் பாடல்களாக அமையும்.
2. குழந்தைகளுக்கு விளங்கும் முகமாக அவர்களே பாடுவதும், ஆடுவதும் இவை கற்றல் நிகழ்ச்சியில் விளையாடல்களின் போது இடம்பெறும்.

இலங்கையில் சிறுவர் இலக்கிய முயற்சிகளை அவதானிக்கும்போது அவை பல்வேறு கட்டங்களாக வகைப்படுத்தப்படுவதைக் காண்கின்றோம்.

1. இலங்கைத் தமிழ் மக்களிடையே காணப்படும் நாட்டுப்புறப் பாடல்கள் வெளிப்படுத்தும் சிறுவர் இலக்கியக் கூறுகள்.
2. ஐரோப்பிய கலாசார சகாப்தத்தில் எழுந்த சமயச் சார்பான சிறுவர் இலக்கியங்கள்
3. கல்வி மறுமலர்ச்சியோடு தொடர்பான இலக்கியங்கள் நவாலியூர் சோமசுந்தரப்புலவரின் பாடல்கள் இவற்றின் முன்னோடியாகும்.
4. விஞ்ஞான அறிவியல் கருத்துக்களைப் பரப்பும் சிறுவர் இலக்கிய வளர்ச்சி.
5. பொதுசன தகவலூடகங்களில் சிறுவர் இலக்கிய வளர்ச்சி.

என பல்வேறு வகைப்படுத்தலாம்.

தொன்று தொட்டு தமிழில் சிறுவர் இலக்கியச் சிந்தனை இருந்தது என்பதற்குச் சங்க காலத்துப் பாடல்களும், தொல்காப்பிய இலக்கண உரைகளும் எடுத்துக்காட்டுகளாக இருக்கின்றன. அகநானூறு தரும் முகில்நிலா என்னும் பாடல் பின்னாளில் நாட்டார் பாடலாக மக்களிடையே இருந்த "நிலா

நிலா ஓடி வா" என்ற பாடல் சிறுவரது மழலைப் பாடல் எனச் சிறுவர் இலக்கியத்தை நினைவூட்டி நிற்கின்றது.

சங்கமருவிய காலத்தில் ஔவையார், அதிவீரராம பாண்டியனார், உலகநாதன் போன்ற புலவர்கள் சிறுவர் சிந்தனைக்கான நீதிப்பாடல்கள் பாடி சிறுவர் இலக்கியத்துக்குப் பிள்ளையார் சுழி இட்டு ஏகினர். இதன் பின்னர் பாரதியார், கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை முதல் பாரதிதாசன் வரை புத்துலகப் பாவலர் பலர் சிறுவர் சுவைக்கத்தக்க தனிப்பாடல்களைப் பாடி இதம் சேர்த்தனர்.

ஐரோப்பியர் வருகையைத் தொடர்ந்து இலங்கையில் சமயச்சார்பான சிறுவர் இலக்கியங்கள் பெரு வளர்ச்சி பெற்றன. நாவலருடைய பாலபாடம் இவற்றுள் சிறப்பானது. நாவலர் தனது பாலபாட நூல்வரிசையில் சிறுவர்களுக்கான நீதிக்கதைகளையும், அறம் சார் கட்டுரைகளையும் சிறந்த முறையில் எளிமையான தமிழ் உரைநடையில் எழுதிச் சிறப்புச் செய்தார். எடுத்துக்காட்டாக இவரது பாலபாட நூலில் வரும் கிரிசாம்பாள் கதை போன்ற சுவையான சிறுவர் கதைகள் சிறுவர் இலக்கியத்துக்கு முதலடி எடுத்துக் கொடுத்தன.

கிறிஸ்தவ மதச் சார்பான இலக்கியங்களும் எழுச்சியடைந்தன. அந்த வகையில் 1859-ம் ஆண்டில் வணக்கத்துக்குரிய ஈ. பி. ஹேஸ்டிங்ஸ் என்பவர் யாழ்ப்பாணத்தில் பாலியர் நேசன் எனும் சிற்றிதழைச் சிறுவருக்காக முதன்முதலில் வெளியிட்டார். இதுவே சிறுவர் சிற்றிதழ் வரலாற்றில் முதற் படியாக விளங்குகிறது.

1886 இல் இலங்கையில் "பாலியர் கும்மி" என்ற நூலைத் தம்பி முத்துப் பிள்ளை என்பவர் எழுதி வெளியிட்டார். இதே காலப்பகுதியில் ஈழத்து மட்டக்களப்பில் பாலா என்பவரை ஆசிரியராகக் கொண்டு மாணவன் என்ற சிற்றிதழும் வெளிவந்தது. இவ்வாறு சிறுவர் சிற்றிதழ் முயற்சிகள் சிறுவருக்கான இலக்கியத்தில் 17-ம் 18-ம் நூற்றாண்டிலேயே அடியெடுத்துக் கொடுத்தவர் ஈழத்தவர் என்ற முதற் பெருமையைப் பெறுகின்றன.

இருபதாம் நூற்றாண்டின் ஆரம்ப கால கட்டத்தில் சுதேசியக் கல்வித் துறையில் ஏற்பட்ட வளர்ச்சி சிறுவர் இலக்கியப் பரப்பில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியது எனலாம். நவாலியூர் சோமசுந்தரப் புலவர், பஞ்சாட்சரசர்மா, ஆழ்வாப்பிள்ளை போன்றோர் சிறுவர் இலக்கியத்தினை மெருகூட்டியுள்ளனர். 1935 களில் கல்வித்துறை சார்ந்த உயரதிகாரி கே. எஸ். அருள்நந்தி "பிள்ளைப் பாட்டு" என்னும் தலைப்பில் பாடல் தொகுப்பொன்றை வெளியிட்டார். அக் காலத்தில் நவாலியூர் சோமசுந்தரப் புலவரின் கத்தரித் தோட்டத்து வெருளி, ஆடிப்பிறப்பு முதலியன செல்வாக் கடைந்தன. இவற்றைத் தொடர்ந்து பண்டிதர் வீரகத்தியின் "தங்கக் கடையல், அம்பியின் "அம்பிப்பாடல் முதலியனவும் சிறுவர் இலக்கிய வரிசையில் உள்ளடக்கப்பட்டன.

ஆயிரத்துத் தொள்ளாயிரத்து அறுபதுகளைத் தொடர்ந்து சிறுவர் இலக்கியச் சஞ்சிகைகளும் வளர்ச்சி பெற்றன. மருதூர்க் கொத்தன் சிறுவர்க்கான கையெழுத்துச் சஞ்சிகை ஒன்றை வெளியிட்டார். "மருதம்" என்னும் பெயருடன் அச்சஞ்சிகை வெளியிடப்பட்டுள்ளது. சிறுவர்களையும் ஆக்க இலக்கிய முயற்சிகளில் ஈடுபடவைக்க வேண்டும் என்னும் அவருடைய ஆர்வம் இதனால் அறியப்படுகின்றது. ஆயிரத்துத் தொள்ளாயிரத்து எழுபத்தைந்துகளில்

கண்மணி, மதனன் சிறுவர் இலக்கிய சஞ்சிகைகளும் வெளியிடப்பட்டன. இவற்றைத் தொடர்ந்து பிஞ்சு, அணில், காற்றாடி முதலிய சிறுவர் சஞ்சிகைகளும் வெளிவந்துள்ளன. தனித் தனியான சிறுவர் சஞ்சிகைகளைவிட தேசிய பத்திரிகைகளில் சிறுவர்களுக்கான தனியான அலகுகளில் வெளியிடப் பட்டுள்ளன. சிறுவர் பக்கம், சிறுவர் மலர் முதலியவற்றைக் குறிப்பிடலாம்.

ஆயிரத்துத் தொள்ளாயிரத்து அறுபத்திரண்டு காலகட்டத்தில் சிறுவர்களுக்கான பயங்கரக் கதைகளை எழுதும் பாணி விருத்தியடைந்தது. உடுவைத் தில்லை நடராஜாவின் மந்திரக் கண்ணாடி இதற்குச் சிறந்த எடுத்துக் காட்டாகும். 1964களில் வெற்றிவேல் வினாயக மூர்த்தியின் "பாலர் பாமாலை" அறிவியல் சார் இலக்கியக் கொள்கைக்குச் சான்றாகின்றது. 1965 களில் இலங்கை சாகித்திய மண்டலம் சிறுவர் இலக்கியம் சம்பந்தமாக நடத்திய கருத்தரங்கும் இச்சந்தர்ப்பத்தில் நினைவு கூரத்தக்கதாகும்.

1980 களைத் தொடர்ந்து சிறுவர் இலக்கிய பாடுபொருளில் சூழலுக்கேற்ற மாற்றங்கள் ஏற்பட்டிருப்பதை அவதானிக்க முடிகின்றது. நிறுவன ரீதியான அமைப்புக்களும், படைப்பாளிகளும் இம் முயற்சிகளில் ஈடுபாடு காட்டினர். 1982 இல் மார்க்க நிறுவனம் அறிவியல் சார்ந்த சிறுகதைகளை மொழி பெயர்த்து வெளியிட்டது. 1986 களில் ச. குணராசா "சூரியனின் கதை" எனும் சிறுவர் கதையை உருவகக் கதையாக வெளியிட்டார்.

1980 களைத் தொடர்ந்து இலங்கையில் இனத்துவ முரண்பாடுகள் பூதாகரமான சூழ்நிலைக்கு வளர்ச்சி அடைந்தன. இச்சூழலிலும் சிறுவர் இலக்கியப் பாடுபொருளில் மாற்றங்கள் ஏற்படுவதனைக் காணமுடிகின்றது. சிறுவர் இலக்கிய வளர்ச்சியில் சிறுவர் நாடகங்களும் முதன்மை பெற்றன. பேராசிரியர் சி. மௌனகுருவின் "தப்பி வந்த தாடி ஆடு" என்னும் சிறுவர் நாடகம் 1987 களில் அரங்கேற்றம் செய்யப்பட்டது. அதனைத் தொடர்ந்து "வெள்ளைப் புறாக்கள்" என்னும் நாடகத்தையும் பேராசிரியர் சி. மௌனகுரு சிறுவர் நாடகமாக அரங்கேற்றினார். சிறுவர் நாடக இலக்கிய வரலாற்றில் தாசீசியஸின் படைப்புகளும் குழந்தை ம. சண்முகலிங்கம் அவர்களது படைப்புகளும் முதன்மை பெறுகின்றன.

1990 களைத் தொடர்ந்து ஈழத்துச் சிறுவர் இலக்கிய வளர்ச்சியில் மிக விரிவுபட்ட வளர்ச்சியை அவதானிக்க முடிகின்றது. வ. இராசையா அவர்கள் 1995 இல் சந்தனக் கிண்ணம் என்னும் வெளியீட்டையும் 1998 இல் புதிய பூக்கள் என்னும் படையலையும் வெளியிட்டுள்ளார். புதிய பூக்கள் சிறுவர்களுக்கான மிகச்சிறந்த கவிதைப் படைப்பாகும்.

விஞ்ஞான அறிவியல் கருத்துக்கள் வளர்ச்சி பெற்றாலும் கல்வயல் வே. குமாரசாமியின் "பாப்பா பாடல்கள்" தொடர்ந்து பாலர், அம்மா, பாடசாலை, விளையாட்டு, படிப்பு, குரங்கு, கிளி, மைனா முதலியவற்றை வருணிக்கின்றன. 1992 களைத் தொடர்ந்து ச. அருளானந்தம், திமிலைத்துமிலன், திமிலை மகாலிங்கம், வரதா சண்முகநாதன், த. துரைசிங்கம், ராணி சீதரன், வாகரை வாணன், ரூபராணி ஜோசப் முதலியோரும் சிறுவர் இலக்கிய முன்னோடிகளாக விளங்குகின்றனர். ச. அருளானந்தம் அவர்களின் காட்டில்

கலவரம் கதைத்தொகுதி சிறுவர் மனதில் இளமைக் காலத்திலேயே சுற்றாடல், பாதுகாப்பு, தேசிய செல்வங்களை பாது காப்போம் என்னும் கருத்தைச் சுட்டிக் காட்டுவதாக அமைகின்றது. 1966 களில் வெளியிடப்பட்ட ரூபராணி ஜோசப் அவர் களின் ஏணியும் தோணியும் என்னும் உருவகக் கதை சிறுவர் இலக்கியங்களி டையே வித்தியாசமான படைப்பாகும்.

வரதா சண்முகநாதனுடைய சிறுவர் பாடல்கள் என்னும் தொகுதி புலம் பெயர் கலாசாரத்தின் தாக்கத்தினைப் பிரதிபலிக்கின்றது. மயில், குயில், கிளி, பூனை, மீன், நிலா, கடற்கரை, பூங்கா முதலிய விடயங்களை வெளிப்படுத்தி யுள்ளன.

"பூனைக்குட்டி பூனைக்குட்டி எங்கெங்கு
போனாய்
பொன்னான லண்டன் மாநகரம்
போனேன்"

என்பது புலம்பெயர் கலாசாரத் தாக்கத்தினையே குறிப்பிடுகின்றது.

கடந்த 60 வருட முயற்சியின் பயனாக சிறுவர் இலக்கியத்துறையில் எங்கு வந்திருக்கின்றோம் என்பதனை நாம் உணர வேண்டும். சிறுவர் கவிதைகள் ஆரம்ப காலம் தொடக்கம் பெரும்பாலும் உதிரிப் பாடல்களாகவே வெளிவந்தன. அவை பத்திரிகைகளிலும் சஞ்சிகை களிலும் ஆங்காங்கே காணப்படுகின்றன. சோமசுந்தரப்புலவர், பண்டிதர் நல்ல தம்பி, வேந்தனார் ஆதியவர்களுடைய கவிதைகள் நூல் வடிவம் பெற்றன வாயினும் அத் தொகுப்புக்கள் சிறுவர்க் கேயுரிய தனித்துவம் உடையனவாக அமையவில்லை.

இப்பொழுது சிறுவர் கவிதைத் தொகுப்பு முறை சீரடைந்து வருகின்றது. அறுபதுகளிலிருந்து சிறுவர் கவிதைகள் உரியமுறையில் தொகுக்கப் பெறுவ தைக் காண்கின்றோம். கவிஞர் பா. சத்திய சீலன், கவிஞர் அம்பிகைபாகன் முதலிய சிலர் இந்த மாற்றத்தின் முன்னோடிகள் ஆவர். கதைகளுடன் கவிதைகளையும் இணைத்து அண்மைக் காலத்தில் சிறுவர் இலக்கியம் எழுதப்படுகின்றது. இது வரவேற்கத்தக்க ஒரு புதிய உத்தி.

உரைநடை நூல்களே சிறுவர் களுக்கு மிகவும் பொருத்தமானவை, பயன்மிக்கவை. நாங்கள் ஔவையாரது ஆத்திசூடிப் பாரம்பரியத்தில் வந்தவர் கள். அதனாற்போலும் சிறுவர் இலக்கியம் என்றால் கவிதை தான் என்ற ஒரு சிந்தனையில் சிக்கியிருக்கின்றோம். சிறுவர்களுக்கு எத்தனை துறைகளில் எத்தனை நூல்கள் பிறநாடுகளில் வெளிவந்து கொண்டிருக்கின்றன. அப்படி யான இலக்கியம் படைக்க வேண்டு மாயின் நமது படைப்பாளிகள் உரை நடைக்குத் தாவுதல் வேண்டும்.

கடந்த மூன்று தசாப்தங்களாக சிறுவர்களுக்கு உரிய உரைநடை நூல் களின் வருகை படிப்படியாக அதிகரித் திருக்கின்றது. சபா ஜெயராசாவின் பாலர் கதைகள் செ. யோகநாதனது தங்கத் தாமரை, சுந்தரியும் தேவதைகளும், சுதாராஜின் காட்டில் வாழ்ந்த கரடி நாட்டுக்குள் வந்த கதை முதலிய நூல் கள் சிறிய கதைகள் என்னும் வகையில் குறிப்பிடத்தக்கவை.

நெடுங்கதைகள் என வெளி வந்தனவற்றில் அநு. வை. நாகராஜனது காட்டில் ஒரு வாரம், ச. அருளானந்தம் எழுதிய காட்டில் கலவரம் பயப்பட லாகாது பாப்பா என்பன பாராட்டுக்குரிய புதிய வரவுகள்.

சிறுவர்கள் ஆர்வத்துடன் படிப்பது சித்திரக்கதை. அது நமது புலத்தில் வளரவில்லை. கடந்த காலத்தில் இங்கு சித்திரக்கதைச் சஞ்சிகைகள் இரண்டு தோன்றின. ஆயினும் அவை முளையிலேயே கருகிவிட்டன. சித்திரக்கதை நூல்கள் மாத்திரமல்ல, ஈழத்துக்கெனச் சிறுவர் சஞ்சிகையும் இல்லை.

குழந்தைகள் தனித்தும், சுதந்திரமாகவும், நம்பிக்கையுடனும், உறுதியுடனும் சரியான தீர்மானத்தை எடுக்கக் கூடிய வகையில் இலக்கியங்கள் அவர்களை இட்டுச் செல்ல வேண்டும். மனித நேயம், மனிதப்பண்பு கூடுதலாக இடம் பெறக்கூடிய வகையில் இலக்கியங்கள் உருவாக்கப்படல் வேண்டும்.

குழந்தைகளின் இயல்புக்கேற்ற அழகியல் சுவைமிக்க இனிமையும் கவர்ச்சியும்மிக்க பண்பை வளர்க்கும் நிகழ்ச்சிகள் தொலைக்காட்சி மூலம் காண்பிப்பதுடன் அவர்களையும் அதில் பங்கேற்கச் செய்து தரம்மிக்க சிறுவர் இலக்கியத்திற்கு உயிரூட்ட முடியும்.

சிறுவர் உலகமே தனித்துவமானது. அங்கே ஏழை, பணக்காரன், சாதி வர்க்க இன, மொழி வேறுபாடுகள் இல்லை. அவர்களைப் பொறுத்தளவில் அவர்கள் யாவருமே சிறுவர் வர்க்கந் தான். அத்தனை தூய்மையான களங்கமற்ற உள்ளங்களைப் பக்குவப்படுத்தி நல்ல பாதைக்கு இட்டுச்சென்று நாளைய உலகை சிருஷ்டிக்கும் சிற்பிகளாக்க வேண்டும். அதற்கு நாம் செய்ய வேண்டியது தரம்மிக்க சிறுவர் இலக்கியத்துக்கு உயிரூட்டவேண்டும் என்பதாகும்.

**திருமதி ம. மகேசன்**
(ஆசிரியை)

**உசாத்துணை நூல்கள்:-**

ஞானம் – 3-–வது ஆண்டு மலர் – 34 – 35 பக்கம்

மல்லிகை – 40 – வது ஆண்டு மலர் – 40 – 41 பக்கம்

தமிழில் சிறுவர் இலக்கியம் – ஆண்டு மலர் 98 – 109ம் பக்கம்

## நிறுத்தற் குறிகள்

| | |
|---|---|
| முற்றுப்புள்ளி (முடிப்பிசைக் குறி) | ( . ) |
| வினாக்குறி (வினாவிசைக்குறி/கேள்விக்குறி) | ( ? ) |
| வியப்புக்குறி (மெய்ப்பாட்டுக்குறி) | ( ! ) |
| கால் புள்ளி (உறுப்பிசைக்குறி) | ( , ) |
| அரைப் புள்ளி (தொடரிசைக்குறி) | ( ; ) |
| முக்காற் புள்ளி (விளக்கிசைக்குறி) | ( : ) |
| சிறு கோடு (விட்டிசைக்குறி) | ( - ) |
| தனிநிலைத் தொடர்க்குறி | ( – ) |
| அடைப்புக்குறி | ( ) |
| மேற்கோட்குறி | ( " " ) |

**திருமதி அ. கருணாகரன்**
முகாமைத்துவ உதவியாளர்

# விவசாய இரசாயனங்களும் அவற்றின் தாக்கங்களும்

இருபதாம் நூற்றாண்டின் நடுப் பகுதியிலேற்பட்ட பசுமைப் புரட்சியைத் தொடர்ந்து விவசாய இரசாயனங்களின் பயன்பாடு உலகளாவிய ரீதியில் பிரபல்யம் பெறத் தொடங்கியது. எமது நாட்டிலும் அறுபது எழுபதுகளில் ஏற்பட்ட பசுமைப் புரட்சியானது விவசாய இரசாயனப் பாவனைக்கு அபரிமித ஊக்கத்தை அளித்தது என்பது இன்று எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றாகக் காணப்படுகிறது.

விவசாயன இரசாயனங்களைப் பின்வருவனவாக வகைப்படுத்தலாம்
இரசாயன வளமாக்கிகள்
களை நாசினிகள்
பீடை நாசினிகள்
நோய் நாசினிகள்
என வகைப்படுத்தலாம்.

விவசாய இரசாயனங்களால் ஏற்படும் பாதிப்புக்களை நோக்கும்போது,
நிலம்
நீர்
வளி
உயிரிகளும் உயிரினச்சூழலும்

விவசாய இரசாயன வளமாக்கிப் பாவனை காரணமாக ஏற்படக் கூடிய நிலைமைகளை நோக்குவோமாக.

நைதரசனைக் கொண்ட இரசாயன வளமாக்கிகளை அதிகளவில் பிரயோகிக்கும்போதும், பொருத்தமற்ற நேரங்களில் பிரயோகிக்கும்போதும் நிலம், நீர் மாசடைகின்ற நிலையே காணப்படுகிறது.

உ-ம்: அதிகளவான இவ்வளமாக்கியை பிரயோகிக்கும்போது இவ் வளமாக்கியானது நீருடன் கரைந்து பயிரால் உள்ளெடுக்கப்பட்டது தவிர மிகுதி நிலநீருடன் சேர்வதால் நிலநீரில் நைத்திரேற்றின் அளவு அதிகரித்து நன்னீர் மாசடைகிறது. இந்நிலை யாழ்குடாநாட்டில் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிகள் மூலம் தெளிவாகியுள்ளது.

யாழ் குடாநாடு சுண்ணாம்புப் பாறையிலிருந்து உருவாகிய மண்ணாகும். இப் பிரதேசத்திற்கு அமோனியம் சல்பேற்றை இடும்போது மண்ணிலுள்ள சுண்ணாம்புடன் அமோனியம் சல்பேற்றிலுள்ள அமோனியா தாக்கமுற்று வாயுவாக வெளியேற சல்பேற்றுகள் மண்ணில் தேங்கி மண்ணில் ஏற்படும் இரசாயனத் தாக்கங்களால் மண்ணைச் சவர், உவர், நிலைமைகளுக்கு இட்டுச் செல்கிறது. மேலும் தொடர்ச்சியாக அமோனியம் சல்பேற்றைப் பிரயோகிக்கும்போது அமோனியா பயிரினால் உள்ளெடுக்கப்பட்ட சல்பேற்றுக்கள் தொடர்ந்து மண்ணில் தங்கி சல்பூரிக் கமிலமாக மாறித் தரை அமிலமாக மாறக் காரணமாகின்றது. ஈரவலயப் பிரதேசங்களில் சேதனப்பொருள்கள் குறைபிரிகை நிலையிலேயே காணப்படும். அப் பிரதேசங்களுக்கு அமோனியம் சல்பேற்று பிரயோகிக்கும்போது மேலும் அமிலத் தன்மை அடையக் காரணமாகின்றது.

இரசாயன வளமாக்கிப் பிரயோகத்தினால் விவசாயியின் தோழன் என வர்ணிக்கப்படுகின்ற மண் புழு மண்ணிலிருந்து அழிந்து வருகின்றமையைக் காணக் கூடியதாக உள்ளது.

மேலே குறிப்பிடப்பட்ட மூன்று வகை இரசாயன நாசினிகளும் ஏற்படுத்து கின்ற தாக்கத்தைப் பற்றி நோக்கு வோமாக.

நாசினிகள் பிரயோகிக்கும்போது அவை நிலத்தில் சேர்வதால் நிலம் நச்சுத்தன்மை அடைகின்றது. இதனால் தரைவாழ் அங்கிகள் அழிகின்றன. மேலும் அங்கிகள் அழிவதால் சேதனப் பொருள்கள் உக்கலடையும் தன்மை பாதிக்கப்படுகிறது.
உ-ம்:- நிலத்தில் பிரயோகிக்கும் பியூறடன் போன்றவை நீண்ட நாட்களுக்குத் தரையில் தேங்கி நச்சுத் தன்மை அடையச் செய்கின்றது. இதனால் இந்நிலத்திலுள்ள அங்கிகளும் நடமாடும் உயிரினங்களும் பாதிக்கப்படுகின்றன.

நாசினிகள் நிலநீருடன் சேருவதனால் நிலநீர் நஞ்சாகின்றது. இதனால் நீரை உட்கொள்ளும் அங்கிகளும் பாதிப்படைகின்றன. மேலும் இந்நஞ்சுகள் நீர் நிலைகளில் குளம், ஆறுகளை அடைவதனால் நீர்வாழ் உயிரினங்களான மீன், ஆமை, மற்றும் பாசிகள், அங்கிகளும் அழிகின்றன.

மேலும் நாசினிகளைப் பிரயோகிக்கும்போது அவை வளியுடன் சேருவதனால் வளி நஞ்சாகின்றது. நஞ்சூட்டப்பட்ட வளியைச் சுவாசிக்கும் அங்கிகள் யாவும் சுவாசப்பைப் புற்றுநோய்களுக்கு உள்ளாகக்கூடிய சாத்தியங்கள் அதிகமாகக் காணப்படுகின்றன.

நாசினிகள் பிரயோகிக்கும் போது இறக்கின்ற பீடைகளை உணவாக்கிக் கொள்ளும் இரை கௌவிகளான மைனா, கொக்கு, செண்பகம், புலுணி போன்றவை அழிக்கப்படுகின்றன. இதனால் சூழல் சமநிலை குழப்பப்படுகின்றது. இந்நிலை எதிர்காலத்தில் குறிப்பிட்ட உயிரினங்களே இல்லாது ஒழிக்கப்பட வாய்ப்பாக உள்ளது.

இந்நிலை தொடரும்போது குறித்த பீடைகளை அழிக்கப் பயன்படும் நாசினிகளின் பழக்கப்பட்ட நிலை ஏற்படும்போது குறித்த பீடைகளைக் கட்டுப்படுத்த முடியாத நிலை ஏற்படுகிறது.

பீடை நாசினிக் கொள்கலன்களைக் குப்பி விளக்காகப் பயன்படுத்துவதால் நாளாந்தம் குப்பி விளக்குப் புகையுடன் நஞ்சைச் சுவாசிக்க வேண்டிய நிலை இருப்பதனை எவரும் உணர்வதில்லை.

நாசினிகளின் நஞ்சுத் தன்மையானது தாவரங்களால் மாத்திரமே பிரித்து ஒழிக்கப்படக்கூடியவை. அதற்கான கால எல்லை கொள்கலன்களில் குறிப்பிடப்பட்டிருப்பினும் எவரும் அதில் அக்கறை செலுத்தாது விளைபொருள்களை அறுவடை செய்வதால் விளைபொருளில் உள்ள நஞ்சு அதை உட்கொள்பவர்களின் உடலில் சிறிது சிறிதாகச் சேர்ந்து கொழுப்புப் படிவுகளுடன் சேர்வதால் புற்றுநோய் ஏற்பட வாய்ப்பாகின்றது. மேலும், நீலக் குழந்தைகள் பிறக்கவும் காரணமாகின்றது.

மேற்குறிப்பிட்டவை விவசாய இரசாயனங்களால் ஏற்படக்கூடிய விளைவுகளில் சிலவாகும். எனவே விவசாய இரசாயனங்களற்ற சுத்தமான உணவைப் பெற்றுக்கொள்ள நாம் அனைவரும் சமூகப் பொறுப்புணர்ந்து செயற்படத் திடசங்கற்பம் பூணுவோமாக.

**திரு. சி. தர்மராசா**
(ஆசிரியர்)

# வடநாட்டுப் பக்தி நெறி

கி. பி. 4-ம் நூற்றாண்டளவில் வட இந்தியாவில் பெரும்பகுதியில் ஏற்பட்ட இஸ்லாமியரின் ஆதிக்கத்தினால் அங்கு நிலவிய இந்து கலாசாரம் பெரும் பாதிப்புக்குள்ளாகியது. ஒரு கடவுட் கொள்கை, சடங்குகளைப் புறக்கணித் தல், உருவ வழிபாட்டை நிராகரித்தல் ஆகிய இஸ்லாமியக் கொள்கைகள் இந்து சமயத்தினர் தமது அடிப்படைக் கொள்கையிலிருந்தும் மாறுபட்ட சமயக் கோட்பாட்டை வலிந்து பின்பற்ற வேண்டிய கட்டாயத்தை ஏற்படுத்தியது.

இச்சூழ்நிலையால் அகச் சமயங் களாகிய சைவம், வைணவம் போன்றன கீழ்நிலை அடைந்த வேளையில் தம் சமயத்தைக் குறிப்பாக வைணவத்தைக் காப்பாற்ற வேண்டும் என்ற நோக்கில் இராமானந்தர், கபீர் தாசர், ஸ்ரீசைதன்யர், இராமதாசர், மீராபாய், துளசிதாசர், நாமதேவர், குருநானக் போன்ற பக்தி நெறியாளர் தோன்றி பக்தி இயக்கத்தின் மூலம் வைணவத்தை வளர்ப்பதில் பெரும்பங்காற்றியுள்ளனர். இவர்களால் உருவாக்கப்பட்ட பக்தி இயக்கமானது தமக்குள்ளே சில பொது அம்சங்களை அடிப்படையாகக் கொண்டு பக்தியை வளர்த்தெடுத்தது.

1) அன்பும் அருளும் நிறைந்த முதல்வ னான இறைவன் மீது நம்பிக்கை ஏற்படுத்தல்.
2) பிரமம் ஒன்றெனவும் அதுவே முழுமையானதெனவும் கொள்ளல்.
3) பக்தி மூலம் முத்தி அடையலாம் என்பதில் நம்பிக்கை ஏற்படுத்தல்.
4) சாதி வேற்றுமைகளைக் களைவதன் மூலம் ஒற்றுமையை ஏற்படுத்தி பக்தியை வளர்க்கலாம் என்பதில் நம்பிக்கை.
5) குரு சேவையை மதித்தல்.
6) குரு தேவருக்கு தனிமரியாதை, என்றும் பணிவு காட்டல்.
7) புறக்கிரியைகளான விக்கிரக வழி பாடு, தீர்த்த யாத்திரை, யாகம் செய்தல் என்பவற்றைவிட பக்தியே முதன்மையானது எனல்.
8) அகவணக்கத்திற்கு அதிக முக்கியத் துவம் காட்டல்.
9) திருநாமம் சொல்லி ஏத்தும் முறைமை.
10) பக்திப்பாடல்களை சுதேச மொழி களில் எழுதுதல்.

ஆகிய பொது அம்சங்களின் அடிப்படையில் தொடங்கப்பட்ட பக்தி நெறியில் சில கருத்துக்களிலாவது ஒற்றுமைப்பட்டுத் தமக்கு இயைந்தபடி எது சரியானதாகத் தென்படுகின்றதோ அவ்வழியில் நின்று பக்தியை வளர்த் தெடுத்தனர்.

வட இந்தியப் பக்தி நெறியின் முதல்வராகக் கருதப்படும் இராமானந்தர் இராமனின் மேல் அதீத பக்தியுடையவர். அலகபாத் மன்னனின் வரியிறைக் காப்பாளனாக இருந்து அதன் மூலம் பெற்ற பணத்தைக் கொண்டு இராமனுக் குக் கோயில் அமைத்து வழிபட்டதனால் சிறையுண்டு, இராமரின் அருளினாலே விடுதலை அடைந்தவர். தென்னாட்டுக்கு சென்று இராமானுஜரிடம் அருள்பெற்றுப் தென்னாட்டுப் பக்தி நெறியை வட நாட்டுக்குக் கொண்டு வந்து சேர்த்த பெருமை இவரையே சாரும். இறைவன் ஒருவனே எனவும் அவனே முழுமை யானவன் எனவும் கூறி அவன் மேல் பக்தி வைப்பதன் மூலம் முத்தி அடைய லாம் எனக் கூறியுள்ளார். அத்துடன் சாதி, மத, பேதங்களைக் களைந்து இஸ்லாமி

யரையும் தம்மோடு சேர்த்து வடநாட்டுப் பக்தியை வளர்ப்பதில் முன்னின்றவர். சக்கிலியரையும் தமது சீடராக ஏற்றமையில் இருந்து இதனை அறியலாம்.

இவர் வழியில் நின்று பக்தி நெறியை வளர்த்தவர்களுள் கபீர்தாஸரும் குறிப்பிடக் கூடியவர். நூர் அலி என்பவரால் வளர்க்கப்பட்ட இவரின் பக்தி இயக்கத்தின் ஒட்டுமொத்தமான முக்கியத்துவம் சமூக சீர்த்திருத்த நோக்கிலான எழுச்சி எனலாம். இவர் புறக் கிரியைகளுக்கு முக்கியத்துவம் கொடாமல் பிரமத்தை அகத்தால் வழிபடலே மேலானது எனக்கூறி வைணவ பக்தியை வளர்த்ததோடு குருவினுடைய சகல சேவைகளையும் செய்வதன் மூலம் முத்தி பெறலாம் என்றார்.

இறைநாமம் மகிமையினால் பாவங்கள் நீக்கும் என்று கூறியதோடு இந்துக்கள் கடைப்பிடித்த சாதிப் பிரிவுகளை இவர் கண்டித்து "ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்பதில் நம்பிக்கை கொண்டிருந்தார். கபீர்தாஸரை தனது பக்தித் திறத்தின் ஊடாக சற்குருவின்றிப் பிரமத்தை அறியமுடியாது. குருவே முக்கரணங்களாலும் செபித்தல் வேண்டும். உண்மை அன்பில்லாது மோட்சம் கிடையாது. எவரையும் குறைவாக மதிப்பிடலாகாது போன்ற உபதேசங்களை வலியுறுத்தியுள்ளார். எல்லாச் சாதியினரையும் ஒரு சபையில் உண்ணும்படி செய்தார்.

விஸ்வ கம்பா என்ற இளமைப் பெயரைக் கொண்டவர் சைதன்யர். தாம் அகத்திலே கண்ட பிரமத்தை, சைதன்யத் தன்மையை உலக மக்கள் அறியும்படி செய்ததனால் சைதன்ய மகா பிரபு என்ற பட்டப் பெயரைப் பெற்றுக் கொண்டவர். விக்கிரக வழிபாட்டை ஆதரித்ததன் மூலமாக வைணவ பக்திநெறி மேலோங்குவதற்கு வழிசெய்தவர். இஸ்லாமியரையும் கருணையோடு ஏற்று வைணவர்களாக மாற்றியதோடு வங்காளம், ஒரிஸா உத்தரப் பிரதேசம் ஆகிய இடங்களுக்கு யாத்திரை செய்து தீவிரப் பிரசாரம் செய்ததன் மூலம் பல்லாயிரக்கணக்கானோரை நல்வழிப்படுத்தினார்.

பார்ப்பனருக்கும் தோட்டிக்கும் வேறுபாடு இல்லையெனவும் இருவருள்ளும் தெய்வம் உறைகின்றது எனவும் நம்பிய இவர் ஒவ்வொரு மனிதனிடமும் மறைந்து கிடக்கின்ற தெய்வீகச் சுடரை வெளிப்படுத்த சிறந்த வழி தெய்வ நாமங்களை வாயால் கூறுவதும் தெய்வ மதம் பற்றி சிந்தித்தலும் என்றார். குருவிடம் மதிப்பும் மரியாதையையும் பணிவும் காட்டுபவர். வேதங்கள் பாகவதம் புராணங்களைப் போற்றி ஓதுதல், அறநெறிகளைக் கடைப்பிடித்தல், அறப் பண்புகளை வளர்த்தல், எவ்வுயிருக்கும் இரங்குதல், பணிவுடைமை, உள்ளத் தூய்மை, உலக ஆசையிலிருந்து விடுபடல், அமைதி, சத்தியநெறி ஆகிய தன்மைகளினால் மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம், இறைவனின் இன்னருள் பெறலாம் எனவும் போதித்தார். விஷ்ணுவின் நாமத்தை உச்சரிக்கும் நாம கீர்த்தனை முறையை வங்காளத்தில் ஆரம்பித்தார். ஹரி கீர்த்தனை செய்வதற்குத் தன்னைப் புல்லினும் கீழாக நினைத்து மரத்திலும் மேலான பொறுமையைக் கடைப்பிடிப்பதன் மூலமே செய்யலாம் எனக்கூறி ஆழ்ந்த பக்தியை வளம் படுத்தியுள்ளார்.

அரச குலத்திலே பிறந்து யோக ராஜனின் மனையாள் ஆகி மணமாக முன்னரே விஷ்ணு மீது அதீத பக்தியுடையவராகி அரசகோலத்தைத் துறந்து

மதுர பாவத்தின் ஊடாக பக்தியை வளர்த்தவர் மீராபாய். இவர் பக்தியை ஏற்படுத்துவதற்காக சிரவணம், மனனம், ஆத்ம நிவேதனம், அர்ச்சனை, வந்தனம், தாசியம், கீர்த்தனை, ஸக்கியம், பாத சேவனம் என்னும் ஒன்பது வகையான செய்முறைகளின் மூலம் வைணவர்களை பக்திநெறிக்கு இட்டுச் சென்ற பெருமைக் குரியவர் ஆவார்.

இராமனின் மேல் கொண்ட பக்தியில் இராமாயணத்தைக் ஹிந்தி மொழியில் பாடிப் பெருமைக்குரியவர் துளசிதாஸர். அத்துடன் இராம சாலக் கிய பார்வதி மங்களம், ஜானகி மங்களம் போன்ற நூல்களையும் எழுதியுள்ளார். விஸ்ணுவின் மீது புகழ்பாடுதல், புகழ் கேட்டல், அடிமையாகுதல், தொண்டு செய்தல், நாமம் உச்சரித்தல் போன்ற வற்றைக் கடைப்பிடிப்பதன் மூலம் பக்தியை ஏற்படுத்தியவர்.

12 ஆண்டு காலம் இரகு நந்த னைக் குறித்து தியானம் செய்து அவர் இராமபிரான் வடிவில் காட்சி கொடுத்து தீட்சை பெற்று இராமபிரான் பக்தரானவர். இராமதாஸர் நல்லொழுக்கம் சிட்டா சாரம், மதக்கல்வி, தர்ம சிந்தனை, சகிப் பாற்றல், இறை விசுவாசம், நாளாந்தக் கடமை என்பவற்றை வற்புறுத்தியதன் மூலம் பக்தி நெறியை வளர்த்தெடுத்த தோடு "ஸ்ரீராம் ஜெயராம் ஜய ஜெய ராம்" என்னும் மந்திரத்தை உச்சரிப்ப தன் மூலமும் பக்தியை ஏற்படுத்திய பெருமைக்கு உரியவர்.

பகவானின் நாமத்தைப் பாடியும் புகழ்ந்தும் உலகறியச் செய்தமையால் நாமதேவர் என்ற பெயரைப் பெற்ற நாமதேவர் பக்திப் பாடல்கள் மூலம் பக்தி மார்க்கத்தினை பாரத நாடெங்கும் பரப்பியவர்.

லாகூரில் பிறந்து இந்து முஸ்லிம் வேற்றுமையைக் களைய முனைந்தவ ரான குருநானக் எல்லோரும் சமம் என்று போற்றும் சமரசவாதியாகவும் சமயப் பொறையுடையவராகவும் விளங்கியவர். இவரது கருத்துக்களின் அடிப்படையி லேயே சீக்கிய மதம் உருக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு இஸ்லாமியரின் ஆதிக் கத்தால் வீழ்ச்சியடைந்த வைணவ சம யத்தை அக்காலத்தில் தோற்றம் பெற்ற பக்தி நெறியாளர்கள் பொது நோக்கத் திலான அடிப்படையாகக் கொண்டு பக்தி இயக்கத்தின் மூலம் உருக்கொடுத்து பாதுகாத்ததனால் வடநாட்டில் வைணவம் தனது நிலையில் எழுச்சியுற்றதெனில் மிகையாகாது.

**திருமதி சா. பரமலிங்கம்**
(ஆசிரியை)

❄ *துஷ்டன் எங்குசென்றாலும் துஷ்டத்தனம் விடப்போவதில்லை.*

❄ *சமய வாழ்வு உலக வாழ்வு என்பன கல்வியின் மூலமே பூரணமடைகின்றன.*

❄ *மலர்கள் நன் மணத்தைப் பரப்புதல் போல மனிதர்களும் நல்ல குணங்களைப் பரப்பவேண்டும்.*

❄ *உன் பகைவனுக்குத் தெரியாத எதையும் நண்பனிடம் கூறிவிடாதே.*

# வித்தியாலய முதல்வர்கள்

யா/மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயமாக இன்று பல்வேறு சாதனைகளை நிலைநாட்டிக் கொண்டிருக்கும் பாடசாலை; ஆரம்ப காலந்தொட்டுப் புகழ் பூத்த அதிபர்களால் நிர்வகிக்கப்பட்டு வந்தது. யா/மீசாலை வீரசிங்கம் சைவ வித்தியாசாலையாக இருந்த இப் பாடசாலை 1968-ம் ஆண்டு மகா வித்தியாலயமாக உயர்ந்து இன்று மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயமாக இயங்கிக் கொண்டிருக்கின்றது. இப் பாடசாலை ஆரம்பித்த காலந்தொடக்கம் ஒன்பது அதிபர்களைக் கண்டுள்ளது.

திரு. மு. சின்னத்தம்பி
- 1926 - 1964

திரு. மு. பதஞ்சலி
- 1965 - 1968

திரு. செ. சிவலிங்கம்
- 1968 - 1975

திரு. த. காசிநாதன்
- 1976 - 1978

திரு. அ. நாகராசா
- 1978 - 1981

திருமதி பு. கணேசலிங்கம்
- 03.03.1981 - 19.11.1982

திரு. தா. இராமலிங்கம்
- 20.11.1982 - 14.08.1993

திரு. அ. பொ. செல்லையா
- 15.08.1993 - 18.01.1997

திரு. கு. சிவானந்தம்
- 20.02.1997 - இன்றுவரை

**திரு. மு. சின்னத்தம்பி - 1926 - 1964**

திரு. மு. சின்னத்தம்பி அவர்கள் பாடசாலை ஆரம்பித்த காலம் தொடங்கி 40 வருடம் அதிபராகக் கடமையாற்றிய பெருமை இவரைச் சாரும். இப் பிரதேசத்தைச் சேர்ந்த இவர் மிகச் சிறந்த ஒரு நிர்வாகியாக விளங்கியவர். இவர் காலத்தில் படித்தவர்கள் தாய் தந்தையராகி இவர்களுடைய பிள்ளைகள் படித்தபோது உங்கள் பெற்றோர்கள் இங்கு படித்தவர்கள் என்றும் அவர்களின் பெயரைக் கூறும் ஆற்றல் மிக்கவர். மிகவும் கண்டிப்பானவர். அதே நேரம் கருணை உள்ளம் கொண்டவர். மாணவர்கள் குழப்படி செய்யும்போது மிகவும் கடுமையான தண்டனை வழங்குவார். அவர்கள் வேதனையால் அழும்போது ஆறுதல் கூறி அரவணைப்பார். ஆசிரியரோடு அன்பாகப் பழகி அவர்கள் திறம்படக் கடமையாற்ற உதவுவார். இவர் காலத்திலேயே வேம்படி விநாயகர் ஆலயம் உருவாக்கப்பட்டு இன்றும் அருள் பாலித்துக் கொண்டிருக்கின்றது. இவர் காலத்தில் சகல துறைகளிலும் சிறப்புற்று விளங்கிய பாடசாலை இன்று மேன் மேலும் வளர்ச்சியுறுவதற்கு இவரே காரணமாக விளங்கியவர்.

**திரு. மு. பதஞ்சலி 1965 - 1968**

இவர் திரு. மு. சின்னத்தம்பி அவர்கள் இளைப்பாறியதும் அதிபராகப் பொறுப்பேற்றார். ஆசிரியர்களுடனும் மாணவர்களுடனும் அன்பாகப் பழகுவார். வகுப்பில் ஆசிரியர் இல்லாத நேரங்களில் ஆரம்ப பிரிவு மாணவர்கள் தேடிச்சென்று அழைத்துவந்து அவரோடு சேர்ந்து பாட்டுக்கள் பாடி ஆடுவார்கள். மிகவும் ரசனையாகவும், நகைச்சுவையாகவும் பாடியும், கதை கூறியும் மாணவர்களை மகிழ்விக்கும் ஆற்றலுடையவர். மாணவர்கள் இவரில் என்றும் பிரியமாக இருப்பர். இவர் காலத்திலேயே இப்பாடசாலை மகா வித்தியாலயமாக உயர்வு பெற்றது.

**திரு. செ. சிவலிங்கம் 1968 - 1975**

இவர் காலமே வீரசிங்கம் மகா வித்தியாலயத்தின் பொற்காலம் என்று கூறினால் அது மிகையாகாது. இவர் இப் பாடசாலையில் கடமையைப் பொறுப் பேற்றதுடன் பாடசாலை மேன் மேலும் பல வளர்ச்சிகளைக் கண்டது. கட்டிடங் கள் பல தோன்றின. க.பொ.த. உயர்தர வகுப்பு ஆரம்பிக்கப்பட்டு அந்த வருடமே பல்கலைக் கழகத்திற்கு மாணவர் செல்லும் வாய்ப்புக் கிடைத்தது. அதில் ஒருவரே இன்று அதிபராகக் கடமை யாற்றும் திரு. கு. சிவானந்தம் ஆவார். எங்கெங்கு எப் பாடத்திற்கு சிறந்த ஆசிரியர்கள் இருக்கின்றார்களோ அவர் களை கொண்டுவந்து சேர்ப்பதில் கை தேர்ந்தவர் திருவாளர் செ. சிவலிங்கம் அவர்கள், மாணவர்கள் தவறு விடும் போது கண்டிக்கும் ஆற்றலும், அதே நேரம் அடுத்த நிமிடம் அதை மறந்து அரவணைக்கும் ஆற்றலும் உள்ளவர். இவர் காலத்தில் இப் பாடசாலை பல் துறைகளிலும் வளர்ச்சி பெற்று யாழ் மாவட்டத்தில் ஒரு முன்னணிப் பாட சாலையாக விளங்கியது. இப் பாட சாலையின் பொன்விழாவைக் கொண்டா டும் பெருமையும் இவருடைய சேவைக் காலத்திலேயே நடந்தேறியது குறிப்பிடக் கூடியது. இவ்வாறு இப் பாடசாலை வளர்ச்சிக்கு அரும்பணியாற்றிய பெரியார் பண்டிதர் செ. சிவலிங்கம் இப் பாட சாலையிலேயே ஓய்வுபெற்றார்.

**திரு. த. காசிநாதன் 1976 - 1978**

பண்டிதர் செ. சிவலிங்கம் அதிப ராக இருந்த காலத்தில் திரு. த. காசி நாதன் உப அதிபராகக் கடமையாற் றினார். இவர் அனைவருடனும் அன்பாகப் பழகும் சுபாவம் கொண்டவர். அதிபர் திரு. செ. சிவலிங்கம் பதவியிலிருந்து ஓய்வுபெற அப் பொறுப்பை ஏற்று செவ்வனே நடத்தி வந்தார். இவர் தமது பதவிக் காலத்தில் நற்பணிகள் பல ஆற்றியுள்ளார்.

**திரு. அ. நாகராசா 1978 - 1981**

திரு. த. காசிநாதன் அவர்கள் மாற்றலாகி வேறு பாடசாலைக்குச் செல்ல திரு. அ. நாகராசா இப் பாடசா லையின் அதிபர் பொறுப்பை ஏற்றுத் திறம்பட நடத்தி வந்தார். இவர் இங்கு பதவியிலிருக்கும் போது வட்டாரக் கல்வி யதிகாரியாக உயர்வு கிடைத்து மாற்ற லாகிச் சென்றார்.

**திருமதி பு. கணேசலிங்கம்**
**03.03.1981 - 19.11.1982**

அறிவும் ஆற்றலும் மிக்க ஒரு சிறந்த ஆசிரியராகக் கடமையாற்றிய திருமதி பு. கணேசலிங்கம் அவர்கள் திரு. அ. நாகராசா அவர்கள் பதவி உயர்வு பெற்றுச் சென்றதும் இப் பாடசாலையின் அதிபர் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். M.A. பட்டதாரியான இவர் கல்வி நிர்வாக சேவையில் சித்தி பெற்று பதவி உயர்வு பெற்றுச் சென்றார். இவர் சாவகச்சேரி கோட்டக் கல்விப் பணியாளராகக் கடமை யாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

**திரு. தா. இராமலிங்கம்**
**20.11.1982 - 14.08.1993**

நீண்டகாலம் இப் பாடசாலையின் ஆசிரியராக இருந்து அரும்பணியாற் றியவர் திரு. தா. இராமலிங்கம். கடமையில் கண்ணும் கருத்துமாகச் செயற்படும் ஒருவராக இவர் விளங்கி னார். பல பாடங்களைக் கற்பிக்கும் ஆற்றலுடையவர். திருமதி பு. கணேச லிங்கம் பதவி உயர்வுபெற்றுச் செல்ல இவர் அதிபர் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். இவர் சுமார் 10 வருடங்கள் பாடசாலையை நிர்வகித்து பல துறை

களிலும் உயர்வு பெறச் செய்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

**திரு. அ. பொ. செல்லையா**
**15.08.1993 - 18.01.1997**

பல்துறை ஆற்றல்மிக்க ஓர் அதிபராக திரு. அ. பொ. செல்லையா திரு. தா. இராமலிங்கம் அவர்களுக்குப் பின் அதிபராகப் பொறுப்பேற்று இப் பாடசாலையின் வளர்ச்சிக்குப் பெரிதும் உதவினார். இளமைத் துடிப்போடு தன் இறுதிக் காலம் வரை கடமையாற்றி யவர். பலரிடம் பண உதவி பெற்றுப் பல மாணவர்களுக்கு புலமைப் பரிசில் களை வழங்கியவர்.

**திரு. கு. சிவானந்தம் 20.02.1997**

இவர் இப்பாடசாலையின் மாண வராவார். ஆரம்பக்கல்வி தொடக்கம் க.பொ.த. உயர்தரம் வரை கல்விகற்று முதன் முதலாக பல்கலைக் கழகம் சென்ற பெருமை இவரையே சாரும்.. ஆரம்பக் கல்வி கற்கும்போது புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்று தொடர்ந்து இடைநிலைக் கல்வியை கற்று க.பொ.த. சாதாரண தரப் பரீட் சையில் சித்திபெற்று க.பொ.த. உயர்தர வகுப்பு முதன்முதலாக ஆரம்பிக்கப்பட்ட போது அவ் வகுப்பில் உயர்கல்வியைத் தொடர்ந்து முதற் தேர்விலேயே சித்தி பெற்று கண்டி பேராதனைப் பல்கலைக் கழகப் பட்டதாரியானார். பல்கலைக் கழகம் செல்வதற்கு முன்னரே இவர் இலங்கை எழுதுவினைஞர் சேவைக்குத் தெரிவு செய்யப்பட்டார். அப் பதவி யிலிருந்து கொண்டே பீ.ஏ. பட்டதாரி யானார். கல்வித் திணைக்களத்தில் எழுதுவினைஞராகக் கடமையாற்றிக் கொண்டிருக்கும்போதே ஆசிரியர் சேவை யில் இணைந்து பளை மத்திய கல்லூரி யில் ஆசிரியராகக் கடமையாற்றினார். அப்போதே அதிபர் சேவைப் பரீட்சையில் சித்திபெற்று அப் பாடசாலையின் உப அதிபராகக் கடமையாற்றி பின்னர் தென்மராட்சிப் பிரதேசத்திற்கு மாற்றலாகி இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தி யாலய அதிபராகக் கடமையாற்றி திரு. அ. பொ. செல்லையா அவர்கள் இளைப் பாறிச் செல்ல இப் பாடசாலையின் அதிபர் பொறுப்பை ஏற்று இன்று இப் பாடசாலையைத் திறம்பட நிர்வகித்து வருகின்றார். இவர் இளமைத்துடிப்பும் சிறந்த நற்குணமும், அனைவருடன் அன்பாகப் பழகும் ஆற்றலும் உடையவர். இவரின் அரும் பணியால் இன்று இப் பாடசாலை நவோதயாப் பாடசாலையாக அரசால் தெரிவு செய்யப்பட்டுள்ளது. இவரின் அரும்பணியால் இப் பாடசாலை பல்துறைகளிலும் சிறந்து விளங்குவ தோடு உயர்வுபெற்று வளர்ச்சியடைந்து வருகின்றது. இவர் காலத்திலேயே இப் பாடசாலையின் 80 ஆண்டு பூர்த்தி விழாவையும் காணுகின்றது.

யா/வீரசிங்கம் மகா வித்தியா லயம் இன்னும் பல்துறைகளிலும் உயர்வு பெறுவதற்கு வழி வகுத்தவர் கள் மேற்கூறிய முதல்வர்களே ஆவர்.

**திரு. த. கணபதிப்பிள்ளை**

* *பணத்தை நீக்கிவிட்டு மனிதனைப் பார்த்தால் அழுக்கை நீக்கிவிட்ட ஆடையைப் பார்ப்பது போல இருக்கும்.*
* *அறிவுள்ளவன் தேர்ந்தெடுப்பது அடக்கமாகும்.*

# ஆசான் — சிறுகதை

அந்தப் பிரதேசத்தின் பிரதான பாடசாலை அது. மகா வித்தியாலயம் ஊரின் மத்தியில் தோட்டங்களும் வயல்களும் சூழ்ந்திருக்க நடுநாயகமாகத் திகழ்ந்து கொண்டிருக்கிறது.

அதன் ஆசிரிய விடுதியில் ஓர் அறையில் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தார் குருசாமி மாஸ்டர். கடந்த காலத்து நிகழ்வுகளின் எண்ண அலைகள் வந்து மனதை அலைத்ததால் இரவு முழுவதும் அவரது தூக்கம் கலைந்திருந்தது.

தனது முப்பது வருடகால ஆசிரிய சேவையில் பதினைந்து வருடங்களை அந்தப் பாடசாலையிலேயே கழித்தவர் அவர். ஆசிரியத் தொழிலிலிருந்து ஓய்வுபெற்ற அவருக்கு அப்பாடசாலையில் பிரியாவிடை நாள்.

மிக அண்மையில் ஓங்கி ஒலித்த யானையின் பிளிறல் அவரது ஆழ்ந்த தூக்கத்தைக் கலைத்தது.

ஆட்காட்டிக் குருவி ஒன்று அவலமாய்க் குரல் எழுப்பியவாறு ஆகாயத்தில் வட்டமிட்டுக் கொண்டிருந்தது.

தூக்கம் கலைந்துவிட்ட கவலையுடன் மல்லாந்து படுத்திருந்தார் அவர். ஒருபுறம் வயோதிபத்தை அண்மித்து விட்டதால் மனநெருடல் மறுபுறம் கடந்த காலத்தின் நினைவுச் சுழிப்புக்கள்.

ஆசிரியத் தொழிலில் அவர் ஆழ்ந்த ஈடுபாட்டுடன் பணியாற்றிப் பெற்றுக் கொண்ட பயன்மிகு நாட்கள் அவரது மனதிலே படமாக விரிந்தன.

அவரது உலக வாழ்வின் பதினைந்து வருடங்களைத் தன்னுள் அடக்கிக் கொண்டது அந்தப் பாடசாலை. அந்தப் பாடசாலையின் வளவினுள் அவரது காலடிச்சுவடுகள் படாத இடமே இல்லை என்று கூறக்கூடிய அளவுக்கு அவரது செயற்பாடுகள் அமைந்திருந்தன. அவரது ஆளுமையின் கூறுகள் பாடசாலையின் ஒவ்வொரு கூறுகளிலும் சுவறியிருந்தன.

“அருமையான மனிதர், இவரை எப்படியாவது இந்தப் பள்ளிக் கூடத்துக்கு அதிபராக ஆக்கிவிட வேணும்” அப்பிரதேசத்து மக்கள் ‘தலையால் நடந்து’ பார்த்தார்கள். ஆனால் அவர் மனம் அதற்கு ஒப்பவில்லை.

“அதிபராய் இருந்துதான் பள்ளிக் கூடத்தை வளர்க்கலாம் என்றில்லை. எந்த அதிபர் இந்தப் பாடசாலைக்கு வந்தாலும் அவருக்கு நான் வலது கரமாக இருந்து செயற்படுவன்” என்று தன்னை நாடி வந்தவர்களுக்கு ஆறுதல் கூறி அனுப்பி விடுவது அவரது வழக்கம்.

‘வாத்தியார்’ என்ற பெயரில் குருசாமி மாஸ்டர் அந்த ஊர் மக்கள் மனதில் நிறைந்திருந்தார். வாத்தியார் என்ற பெயரை எங்கு கேட்டாலும் அவர்களது கண்களில் அவரது உருவம் நிற்கும்.

ஐந்தடி நான்கு அங்குலம் வரையிலான உயரம், உயரத்திற்கேற்ற உடல் வாகு, எதையும் ஆழமாகக் கூர்ந்து நோக்கி ஆராய்ந்து அறியும் தீட்சண்யம் மிக்க பார்வை, அன்பையும் கனிவையும் பிரதிபலிக்கும் முகபாவம்

என்பன அவரது உருவத்தைப் படிமமாகக் காட்டும் அம்சங்கள்.

"என்னுடைய ஆசிரிய ஆளுமை அதிபர் எண்ட பதவிக்குள்ள முடங்கிப் போவதை நான் விரும்பேல்ல" என்று அவர் அடிக்கடி கூறிக்கொள்வார்.

அன்றைய பொழுது ஒரு சனிக் கிழமையாக மலர்ந்தது. அப்பாடசாலை யின் தற்போதைய அதிபர் நாகேஸ்வர னின் அன்புக் கட்டளையை ஏற்று குரு சாமி மாஸ்டர் முதல் நாள் மாலையே அப்பாடசாலையின் ஆசிரியர் விடுதியில் வந்து தங்கிக் கொண்டார்.

பாடசாலையின் பிரதான மண்ட பம் சிறப்பாக அலங்கரிக்கப்பட்டிருந்தது.

ஓலைக் கொட்டில்களையும் கரடு முரடான சீமெந்துத் தளத்தையும் கொண்ட வகுப்பறைகளைக் கொண்டிருந் தாலும் பாடசாலையின் பௌதிகச் சூழல் கவினுற அமைந்திருந்தது. பாடசாலை வளாகமெங்கும் பயன்தரு மரங்களும் பூச்செடிகளுமாகப் பசுமை பரந்திருந்தது.

மாணவர்களும் ஆசிரியர்களும் அதிபரும் மேற்கொண்ட முயற்சிகளைத் தனது தோற்றத்தால் பறைசாற்றிக் கொண்டிருந்தது பாடசாலை.

ஆசிரியர் விடுதியின் வாயிலில் நின்று கொண்டிருந்தார் குருசாமி மாஸ்டர்.

பாடசாலையின் பிரதான மண்ட பத்தை நோக்கி மாணவர்கள் அணி அணியாக நகர்ந்து கொண்டிருந்தார்கள். ஆசிரியர்கள் சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருந்தனர். அதிபர் பணிப்புரை களை விடுத்துக் கொண்டிருந்தார்.

"வணக்கம் வாத்தியார்" என்ற குரல் கேட்டுத் திடுக்கிட்டார் குருசாமி மாஸ்டர். செல்லத்துரை அவரைக் கடந்து சென்று கொண்டிருந்தார். அவரது சைக்கிளின் பின் கரியரில் நீரிறைக்கும் இயந்திரம், தோளிலே சுருட்டிக் கட்டிய அல்க்கத்தீன் பைப்.

பனி படர்ந்த அந்தக் காலைப் பொழுதில் கிராமத்தில் அழகு ஜொலித் தது. பரந்து கிடந்த வாழைத் தோட்டங் களும் மிளகாய்த் தோட்டங்களும் அன்று அவருக்குப் புதுமையாய் விளங்கின. நாளும் பொழுதும் பழகி அனுபவித்த காட்சிகள் அவை. இன்று அவருக்கு அவை அந்நியப்பட்டு நின்றன.

தனது சொந்தப் பிரதேசமான யாழ்ப்பாணத்தையும், தனது பதினைந்து வருட வாழ்க்கையை ஆக்கிரமித்துக் கொண்ட அந்தப் பிரதேசத்தையும் அவர் மனம் ஒப்பிட்டுப் பார்த்தது.

கடந்த காலங்களில் நிகழ்ந்த யுத்தங்களாற் சின்னாபின்னப்படாமல் அப் பிரதேசம் இருப்பதையிட்டு அவர் மனம் ஆறுதல் கொண்டிருந்தது. ஆயினும் அந்நிய இராணுவம் அப் பிரதேசத்தினுள் நுழைந்த காலத்தில் அங்கு நிகழ்ந்த நிகழ்வுகள் அவர் மனதில் தோன்றி மறைந்தன.

அக்கிராமத்தை அடிக்கடி சுற்றி வளைத்து மக்களை ஆடு மாடுகள் போல் சாய்த்துக் கொண்டு சென்று அடையாள அணிவகுப்பு நடத்தியது, அப்பாவி மனிதர்கள் சிலரை ஆலயத் தின் மதில் அருகில் நிறுத்திச் சுட்டுக் கொன்றது என்பன அவரது மனதில் எண்ண அலைகளாக விரிந்து மறைந்தன.

சிந்தனையில் ஆழ்ந்தபடி நின்றிருந்த அவர் "வணக்கம் சேர்" என்ற குரல் கேட்டுத் திரும்பினார். அருகில் பாலகுமாரன் நின்று கொண்டிருந்தான்.

அப்பாடசாலையில் க. பொ. த. உயர்தர வகுப்புக்கள் தொடங்கப்பட்ட போது அவரிடம் தமிழ் பயின்ற எட்டு மாணவர்களில் ஒருவன் அவன். அன்று அவரிடம் தமிழ் பயின்ற அனைவருமே இன்று ஆசிரியராகப் பணி புரிகின்றார்கள். சிலர் பட்டதாரி ஆசிரியர்கள், சிலர் பயிற்றப்பட்ட ஆசிரியர்கள்.

அவர்களுக்குக் கல்வி பயிற்றிய அந்த நாள்களை அவர் மனம் மீட்டுப் பார்த்தது.

ஒரு நல்லாசிரியரின் வகுப்பறைக் கற்பித்தலினூடே மாணவர்களுக்கு உலகத்தையே காட்சிப்படுத்த வேண்டும். வாழ்வின் நெழிவு சுழிவுகள், மனித விழுமியங்கள், நாட்டுப் பற்று, தாய் மொழி மீதான அபிமானம், ஆளுமை விருத்திக் கூறுகள் போன்ற அனைத்து அம்சங்கள் தொடர்பாகவும் தனது மாணவர்களிடம் பாதிப்பை ஏற்படுத்தும் ஆசிரியனே நல்லாசிரியனாக விளங்க முடியும். என்னும் கொள்கையை உடைய அவர் மாணவர்களது மனதில் நீங்கா இடத்தையும் பெற்றிருந்தார்.

"எப்பிடிச் சுகம் பாலகுமார்" என்று அன்பு ததும்ப வினவினார் ஆசிரியர். சுகமாக இருக்கிறோம் என்று பன்மையில் பதிலளித்தான் பாலகுமார்.
"உங்கடை பிரிவுதான் எங்களை வாட்டுது" என்று கண் கலங்கினான்.
"அப்பிடிச் சொல்லக் கூடாது தம்பி. உங்கடை நெஞ்சுக்குள்ள நான் எண்டைக்கும் இருப்பன்; நீங்கள் என்ரை வாரிசுகள்" என்ற அவரின் கண்களும் பனித்தன.

பாடசாலை களை கட்டத் தொடங்கியது. பாடசாலையின் பிரதான மண்டபத்திலிருந்து ஆசிரியர் விடுதிவரை இருமருங்கும் மாணவர்கள் வரிசையாக நிறுத்தப்பட்டனர். ஒவ்வொருவரது கரங்களிலும் மலர்க் குவியல்.

வாகனம் ஒன்றில் வந்திறங்கிய தவில் நாதஸ்வரக் குழுவினர் விடுதி வாயிலை அடைந்தனர். அதிபரும் ஆசிரியர்களும் வந்து கூடினர்.

மாலை மரியாதை, மேள தாளங்களுடன் ஆசிரியர் குருசாமி விழா மண்டபத்திற்கு அழைத்து வரப்பட்டார்.

இந்தப் பிரதேசத்தில் இதுகால வரை நடைபெறாத ஒரு நிகழ்வு இது என்று எண்ணிக் கொண்டார் அவர்.

மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றார், நலன்விரும்பிகள் என மண்டபம் நிறைந்திருந்தது. பாடசாலையின் ஒழுக்கக் கட்டமைப்பு விழா மண்டபத்தில் பிரதிபலித்தது. மாணவர்கள் அனைவரும் கட்டளைகள் இல்லாமலேயே அமைதி பேணினர்.

அதிபர் தனது தலைமையுரையைத் தொடர்ந்தார். குருசாமி மாஸ்டர் அப் பாடசாலைக்கு ஆற்றிய அரும்பணிகளை அட்டவணைப்படுத்திப் பாராட்டிப் பேசினார். மாஸ்டரின் கற்பித்தல் வல்லமை, அனைவரிடமும் அன்பு காட்டும் பாங்கு, பிறர் மனம் நோகும்படி நடவாமை, அனைவருக்குமான முன் மாதிரியான நடத்தைகள், நேரந் தவறாமை தன்னுடன் பழகுகின்ற

ஒவ்வொருவரையும் வாழ்வின் உயர்வான நிலைக்கு உந்தித் தள்ளுகின்ற வழிகாட்டல் ஆலோசனைகள் ................." என அப்பட்டியல் நீண்டு சென்றது.

ஆசிரியர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள், மாணவர்கள் அனைவரது உரைகளிலும் பாராட்டுக்களும் வாழ்த்துக்களும் குவிந்தன.

கண்களை மூடி அமைதியாகத் தியான நிலையில் இருந்து செவி மடுத்துக் கொண்டிருந்தார் குருசாமி மாஸ்டர்.

பாராட்டுக்களுக்கும் வாழ்த்துக்களுக்கும் பதிலுரை கூறவேண்டிய நேரம் வந்தது. மெல்ல எழுந்தார் அவர்.

அவரது சிந்தனையில் பலவித உணர்வலைகள் நர்த்தனமிட்டன. புகழுரைகளால் ஏற்பட்ட ஆத்ம திருப்தி ஒரு புறம், அந்தப் பாடசாலையையும் தன்னுடன் பணிபுரிந்த ஆசிரியர்களையும் தன்னிடம் பயின்ற மாணவர்களையும் விட்டு பிரியப் போகிறோமே என்ற ஏக்கம் மறுபுறமுமாக மனது தடுமாறியது.

அவர் உரையாற்றத் தொடங்கியதும் மாணவர்கள் பலர் வந்து மாலை சூட்டிப் பாதங்களைத் தொட்டு ஆசீர்வாதம் பெற்று சென்றனர்.

அவரது கண்களில் ஆனந்தக் கண்ணீர் அவரால் அதிகம் பேச முடியவில்லை. "நீங்கள் இங்கே எனக்குச் சூட்டிய மாலைகளும் புகமுரைகளும் என் மனதை நிறைக்கின்றன."

"நான் என் கடமையைத்தான் செய்தேன்" ஓர் ஆசிரியனுக்குரியதான கடமைகளை முழுமையாக நிறைவேற்றுவதற்கு நான் முயற்சி செய்தேன். எனது சொந்தப் பிள்ளைகளின் வாழ்க்கை முன்னேற்றத்திலும் கல்வி முன்னேற்றத்திலும் எவ்வளவு அக்கறை கொண்டிருந்தேனோ அந்த அளவுக்கு என்னிடம் படித்த பிள்ளைகளின் முன்னேற்றத்திலும் கரிசனையுடன் பணிபுரிய வேண்டும் என்பதில் நான் மிகவும் உறுதியாக இருந்தேன்.

நீங்கள் எல்லோரும் கூறியது போல இந்த ஆசிரியத் தொழிலில் நான் ஆற்றியிருக்கக் கூடிய சேவைகளுக்கெல்லாம் அடிப்படை என்றும் என் மனதிலே கனன்று கொண்டிருந்த அறிவைத்தேடும் அவாவேயாகும். இடைவிடாத தேடல் முயற்சியும் தேடிப்பெற்றுக்கொள்வதைப் பிரயோகிப்பதில் உள்ள ஆர்வமுமே ஓர் ஆசிரியனை உயர்ந்தவனாக்கும்"

"உங்கள் புகமுரைகள் யாவும் இங்கே கூடியிருக்கின்ற மாணவச் செல்வங்களுக்கான முன்மாதிரிகள்" என்று நன்றி கலந்த தனது உரையை முடித்துக் கொண்டார்.

நெஞ்சின் ஆழத்தை நெருடிய பிரிவின் துயரத்தை மறைத்துக் கொண்டு அனைவரிடமும் விடைபெற்றார் குருசாமி மாஸ்டர்.

**திரு. கந்தையா முருகதாசன்**
ஆசிரியர்-
யா/கைதடி முத்துக்குமாரசாமி மகா
வித்தியாலயம்

# ஓசோன் படை அருகிச் செல்லல்

ஓசோன்படை என்பது புவி மேற்பரப்பைப் பாதுகாக்கும் ஒரு வாயுப் படையாகும். இது புவி மேற்பரப்பிலிருந்து 15 - 50 km உயரத்தில் காணப்படுகின்றது. இவ்வோசோன் படையானது ஞாயிற்றுக் கதிர்வீச்சின் அதிகப்படியான தாக்கத்திலிருந்து புவியைப் பாதுகாப்பதுடன் உயிரினங்களுக்குத் தீங்கு விளைவிக்கும் புற ஊதாக் கதிர்களைத் தடுத்து வானவெளிக்குத் திருப்பி அனுப்புகிறது. வளிமண்டல ஓசோனின் பெரும்பாகம் இப் பகுதியிலேயே உள்ளடங்கியுள்ளது. ஓசோன் படை அருகிச் செல்லல் என்பது வளி மண்டல மாசாக்கிகளினால் இவ்வோசோன் படை பாதிப்புக்கு உட்பட்டு இரசாயன மாற்றங்கள் காரணமாகப் பிற வடிவங்களுக்கு உட்படுதல் அல்லது செயல் இழத்தல் எனலாம். குளோரின், பிறவுன்ஸின், குளோரோபுளோரோ காபன் என்பனவாக மாற்றமடைகின்றன. மெதேன், பிறவுன், நைட், காபன் டெட்ரா குளோரைட் மீதைல் குளோரோபோம் என்பனவும் ஓசோன் படை அருகுதலுக்குக் காரணங்களாகின்றன. மனிதனால் வெளியிடப்பட்ட பலவகைப்பட்ட வாயுக்கள் மற்றும் மாசாக்கிகளால் முனைவுப் பகுதிக்கு அண்மையில் பாரிய ஓசோன் துவாரம் ஏற்பட்டுள்ளமை இனங் காணப்பட்டுள்ளது.

1985-ல் NIMBUS - 7 என்னும் அமெரிக்க வானிலைச் செய்மதி தென் முனைவுக்கு மேல் ஓசோன் படையில் துவாரம் ஏற்பட்டதை அவதானித்தது. இதன் பாதிப்பு நியூசிலாந்து றியோடி ஜெனிரோ போன்ற நகரங்களிலும் அவதானிக்கப்பட்டது.

ஓசோன் படலத்தைப் பாதிக்கும் முக்கிய இரசாயனப் பொருள் C.F.C. ஆகும். C.F.C. குளிர்சாதனப் பெட்டிகளிலிருந்தும் குளிர் அறைகளிலிருந்தும், பிளாஸ்ரிக் நுரை தயாரித்துப் பயன்படுத்துவதிலுமிருந்தும் ஸ்பிறேயர்களைப் பயன்படுத்துவதன் மூலமும் கொம்பியூட்டர் ஸேக்கிட்களைச் சுத்தம் செய்யப் பயன்படுத்துவதன் மூலமும் தீயணைக்கும் திரவமாகப் பயன்படுத்துவதிலிருந்தும் வளியில் கலக்கின்றது.

**ஓசோன் படைத் துவாரத்தினால் ஏற்படும் விளைவுகள்:-**

1) சருமப்புற்று நோய் ஏற்படல். ஞாயிற்றின் புறஊதாக் கதிர்கள் புவி மேற்பரப்பை வந்தடைவதால் சருமப்புற்று நோய் ஏற்பட ஏதுவாகஅமைகிறது. வெண்படல நோய் அல்லது கண் குருடாவதும் புறஊதாக் கதிர்வீசலின் உள்வருகையால் ஏற்படுவதாகும்.
2) புவியில் வாழும் சகல உயிரினங்களினதும் வளர்ச்சி குன்றுதல்.
3) சில பயிர்களின் உற்பத்தி பாதிப்படைகின்றது. தாவரங்கள் கருகி நோய் எதிர்ப்புச் சக்தியை இழக்கின்றன.
4) ஓசோன்படை அருகுவதனால் மறைமுகமாகப் புவியை வெப்பமடையச் செய்கின்றது. ஓசோன் படை ஞாயிற்றின் புறஊதாக் கதிர்களை உறிஞ்சல் செய்கின்றது. எனவே ஓசோன் படை அருகுவதனால் புறஊதாக் கதிர் வீசல் நேரடியாக வளிமண்டலத்தையும் புவியையும் வந்தடைகின்றது.
5) சூழலின் சமநிலை குழம்புகின்றது.
6) மழைவீழ்ச்சி குறைவடைகின்றது.
7) நீர்நிலைகள் வற்றுகின்றன.
8) முனைவுப்பனி உருகி நீர்மட்டம் உயர்ந்து சிறிய தீவுகள் நீரில் அமிழ்கின்றது.
9) பிளாஸ்ரிக் பொருட்களையும்

நிறத்தீந்தைகளையும் வெளிறச் செய்கின்றது.

**ஓசோன்படை அருகிச் செல்வதை மட்டுப்படுத்துவதற்காக மேற்கொள்ளப் படும் வழிமுறைகள்:-**

1) CFC யின் பயன்பாட்டைக் குறைத்தல். CFC யை வெளியிடும் பாவனைப் பொருட்கள் நுகர்வதை நாம் நிறுத்துதல் வேண்டும். குறிப்பாக துர்நாற் றஸ்பிறே, சேவிஸ்போம், மொவ்த்ஸ்பிரே, ஏயர் பிரசர், ஸ்பிறே பெயின்ற், பூச்சி கொல்லி ஸ்பிறே போன்றவற்றைப் பயன் படுத்துவதைத் தடை செய்தல் வேண்டும்.

2) 1977-ல் வாசிங்டனில் 32 நாடுகள் பங்கு கொண்ட மகாநாட்டில் இதனைக் கட்டுப்படுத்துவதற்கான எதிர்காலத் திட்டங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. இதன் செயற்பாடுகளாகப் பின்வரும் அம்சங்கள் அமையப் பெறுகின்றன.

i) ஓசோன்படையில் ஆய்வுகளை மேற்கொள்ளல்.

ii) ஓசோனின் குறையும் விகிதத் தினை அறிந்து கொள்ளல்

iii) மனித ஆரோக்கியத்தை எவ் விதம் பாதிக்கின்றது என இனங் காணல்.

iv) சூழற்றொகுதியையும் கால நிலையையும் எவ்விதம் பாதிக் கின்றன என இனங்காணல்.

v) ஓசோன்படை பற்றி அவதானிப்ப தற்கான இணைப்புக்குழுவினை நிறுவுதல்.

vi) ஹீலோ காபன் உற்பத்திகளைக் கட்டுப்படுத்தல். இதன்படி உலகின் பல நாடுகள் CFC உற்பத்தியையும் பாவனையை யும் தடைசெய்துள்ளன.

3) U.N.E.P யின் சூழல் திட்டங் களின்கீழ் 1985 மார்ச்சில் வியன்னாவில் ஓசோன்படைச் சிதைவு பற்றி ஆராய்வதற்காக ஓர் ஒன்று கூடல் ஏற்படுத்தப் பட்டது.

4) 1987 செப்டம்பரில் மொன்றியல் உடன்படிக்கை உருவாகியது. இதன்படி 2100 ஆம் ஆண்டள வில் தற்போதுள்ள குளோரின் மட்டத்தை 1985-ல் இருந்த குளோரின் மட்டத்தில் வளி மண்டலத்தில் தொடர்ந்து பேணல். அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கு உதவியாக அபிவிருத்தியடைந்த நாடுகள் தொழில்நுட்பப் பரிவர்த்தனையை மேற்கொள்ளல் போன்ற கொள் கைகள் முன்வைக்கப்பட்டன.

5) 1989 ஆகஸ்ட்டில் ஐரோப்பிய பொருளாதாரக் கூட்டு நாடுகளு டன் 44 நாடுகள் இணைந்து ஹெல்சிங்கியில் ஓசோன் பாது காப்புப் பற்றி ஒரு கலந்துரையா டலை நிகழ்த்தினர். இதன்படி CFC உற்பத்தியை முதலில் தடை செய்த நாடாகச் சுவீடன் அமைகிறது.

6) 1990-ல் 70 நாடுகள் லண்டனில் கூடி ஓசோனைப் பாதுகாக்கும் தொழில் நுட்பப் பரிவர்த்தனை, CFC உற்பத்தியைத் தடை செய் தல் ஆகியன பற்றிய கலந்துரை யாடலை நிகழ்த்தின.

ஓசோன்படை அருகிச் செல்லல் பற்றிய பிரச்சினை உலகம் முழுவதற் கும் பொதுவானது. இதனைத் தீர்த்து வைக்க எடுக்கப்படும் முயற்சிகளில் அனைத்து நாடுகளினதும் பங்களிப்பு இன்றியமையாததாகும். ஒவ்வொரு வருட மும் செப்டம்பர் 16-ம் திகதி ஓசோன் பாதுகாப்புத் தினமாகக் கொண்டாடப் பட்டு வருகின்றது.

**திருமதி ரோ. பரம்சோதி**
(ஆசிரியை)

# மகாவலி அபிவிருத்திச் செயற்றிட்டம்

மகாவலி அபிவிருத்தித் திட்டம் இலங்கையில் நிர்மாணிக்கப்பட்ட பாரிய பௌதீக, மானிட வள அபிவிருத்தித் திட்டமாகும். மத்திய மலைநாட்டிலிருந்து ஊற்றெடுக்கின்ற நதிகளுள் 331 கிலோ மீற்றர் நீளமான மகாவலி கங்கையும் ஒன்றாகும்.

இந்த நதித் தொகுதியானது 10448 சதுர மீற்றரைக் கொண்டுள்ளதுடன் எமது நாட்டின் மிகப் பெரிய நதியாகும். மகாவலி அபிவிருத்தித் திட்டத்தில் பொல்கொல்ல, போவத் தன்னைத் திட்டம் 1970-ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு 1976-ம் ஆண்டு நிர்மாண வேலைகள் பூர்த்தியாக்கப்பட்டன.

தற்போதைய மகாவலித் திட்டம் மகாவலி, மாதுறு ஓயா, மல்வத்து ஓயா ஆகிய நீரேந்து பிரதேசங்களை அடிப் படையாகக் கொண்டுள்ளது.

இந்த மகாவலி வடிநிலங்கள் விவசாய நடவடிக்கைகளுக்காகப் பயன் படுத்தப்பட்டதற்கு வரலாற்று மற்றும் தொல்பொருளியல் சான்றுகள் காரணி யாக அமைகின்றன.

இந்த மகாவலி அபிவிருத்தித் திட்டத்திற்குட்பட்ட செயற்திட்டங்களுள் தேர்ந்தெடுக்கப்பட்ட செயற்திட்டங்கள் சிலவற்றை ஒரேயடியாக ஆரம்பித்து ஆறு ஆண்டுகள் கொண்ட குறுகிய காலத் திற்குள் பூர்த்தியாக்க 1977-ம் ஆண்டில் அரசு தீர்மானித்தது.

அபிவிருத்தித் திட்டங்களாக,

| நீர்த்தேக்கம் | ஆரம்பித்த வருடம் |
|---|---|
| போவத்தென்ன | 1970 |
| பொல்கொல்ல | 1970 |
| மாதுறுஓயா | 1978 |
| உல்ஹிட்டிய | 1979 |
| கொத்மலை | 1979 |
| விக்டோரியா | 1980 |
| ரன்தெனிகல | 1982 |
| ரந்தம்பை | 1987 |

இந்த திட்டங்களுக்கு உதவி வழங்கும் நாடுகளாகப் பின்வரும் நாடுகள் உள்ளன.

கொத்மலை - சுவீடன்
விக்டோரியா - ஐக்கிய இராச்சியம்
மாதுறு ஓயா - கனடா
ரன்தெனிகல, ரண்டம்பே - ஜேர்மனி

இந்த நாடுகளின் உதவிகளுடன் மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் நடவடிக்கைகளாக,

- ❖ குடியேற்றவாசிகளது சமூக, கலாசார சுற்றாடலை நிலை நாட்டுதல்.
- ❖ விவசாய உற்பத்தியை விரிவாக வர்த்தகமயமாக்கலும், பல்வகை மைப்படுத்தலுக்கும் உட்படுத்துதல்.
- ❖ மகாவலிப் பொருளாதார நடவ டிக்கையை உயர்த்துவதற்காகத் தனியார் துறையினரைக் கூடுத லாக பங்குபற்றுதலைப் பெற் றுக் கொள்ளல்.
- ❖ அபிவிருத்தி நடவடிக்கைகளில் குடியேற்றவாசிகளுக்கும் மற்றும் தேசிய பொருளாதாரத்திற்கும் கூடுதலான பலன்களைப் பெற் றுக்கொள்ளல்.
- ❖ முகாமைத்துவ நடவடிக்கை களில் குடியேற்றவாசிகளின் பங்குபற்றுதலை அதிகரிக்கச் செய்தல்.
- ❖ உயிரியல், பௌதீக, சுற்றாடல் பாதுகாப்பை ஏற்படுத்துதல்.
- ❖ முகாமைத்துவத்தில் வினைத் திறனை முன்னேற்றமடையச் செய்தல்.
- ❖ மாதிரி அபிவிருத்திச் செயற்றிட் டத்தைச் செயற்படுத்துவதன் மூலம் மகாவலியிலிருந்து புதிய

புதியபிரதேச அபிவிருத்தியையும் எண்ணக் கருவையும் உலர் வலயத்தில் தோற்றுவித்தல்.

மகாவலி அபிவிருத்தித்திட்டத்தில் முதலாவது நடவடிக்கையாக மகாவலி குடியேற்ற நடவடிக்கையை 1976 இல் மேற்கொண்டது. இந்தக் குடும்பங்களுக்கு 1.2 ஹெக்டெயரையும், 2 ஹெக்டெயர் வீட்டுத்தோட்ட நிலத்தையும் உள்ளடக்கியதாகக் காணப்பட்டது. இந்தக் காணிகள் நீர்ப்பாசன வசதி கொண்டனவாகக் காணப்பட்டன.

***மகாவலி வலயங்களும் அபிவிருத்திப் பிரதேசங்களும்.***

| வலயம் | அபிவிருத்திப் பிரதேசங்கள் |
|---|---|
| A | திருகோணமலை மாவட்டமும் தாழ் கழிமுகப் பிரதேசங்களும். |
| B | பொலநறுவை, மட்டக்களப்பு மாவட்டங்களும் மாதுறு ஓயா பள்ளத்தாக்கும். |
| C | பதுளை, அம்பாறை மாவட்டமும் பொட்டளவள நீர்த்தேக்கப் பிரதேசமும் |
| D 1 | மின்னேரியா, கவுடுல்ல, கிரிந்தலை மற்றும் பராக்கிரம சமுத்திர பிரதேசங்களும் திருகோணமலை மாவட்டத்தின் கந்தளாய், கந்தளாய்ப் பள்ளத்தாக்கு மற்றும் வெண்டராசன் குளம். |
| D2 | கவுடுல்ல, கிரிந்தலை, மின்னேரியா மற்றும் பராக்கிரம சமுத்திரத்தின் நீரேந்து பிரதேசங்களும். |
| E | ஹீரங்கங்கை மற்றும் ஹசலக ஓயா பிரதேசங்கள் (மினிப்பே இடதுகரை) |
| F | வஸ்கமுவ பிரதேசம். (இந்தப் பிரதேசம் வஸ்கமுவா சரணாலயமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது) |
| G | எலகரா, மின்னேரியா, யோதவை பிரதேசங்கள். |
| H | கலாஓயா பள்ளத்தாக்கு |
| I | மல்வத்து ஓயா வடிநிலம். |
| I/H | மல்வத்து ஓயா பள்ளத்தாக்கின் மேற்பகுதியும் நர்ச்சாதுவ உட்பட அநுராதபுர நகர குடித் தொகுதியும் அடங்கிய பிரதேசம். |
| J | வவுனிக்குளப்பிரதேசங்கள். (பறங்கியாறு, பாலியாறு பிரதேசங்கள்) |
| K | கனகராயன் பிரதேசம். |
| L | மணலாறு, மாஓயா, பதவியா, வெலிஓயா பிரதேசங்கள் |
| M | யான் ஓயாப் பிரதேசங்கள். |
| M/H | யான் ஓயாவின் மேற் பிரதேசமும் ஹீருளுவீவா நீர்த்தேக்கப் பிரதேசங்கள். |

தற்பொழுது இலங்கை மகாவலி அதிகார சபையானது நீர்த்தேக்கங்கள், அணைக்கட்டுக்கள், மகாவலித் திட்டத்தின் கீழான நீர்ப்பாசன வசதிகள் என்பவற்றை முகாமைசெய்து வருகின்றது.

### மகாவலி செயற்றிட்டம்
### மகாவலி நீர்த்தேக்க செயற்றிட்டங்களது முக்கிய பண்புகள்

| நீர்த்தேக்கம் | ஆரம்பித்த வருடம் | அணையின் உயரம் மீற்றர் | அணையின் அகலம் மீற்றர் | நீர் கொள்ளவு மில். கியூபிக் | நிறுவப்பட்ட கொள்ளளவு மெகாவற் | சராசரி வலு ஆண்டுகள் | நிர்மாணச் செலவு ரூ. மில் | நிர்மாணச் செலவு ஐ. அ. டொ. மில். |
|---|---|---|---|---|---|---|---|---|
| போவத்தென்ன | 1970 | 29.8 | 226 | 52 | 40 | 83 | 550 | 101 |
| பொல்கொல | 1970 | 14 | 144 | 4.1 | .. | .. | | |
| மாதுறுஓயா | 1978 | 41 | 1,090 | 597 | .. | .. | 2,660 | 170 |
| உல்ஹிட்டிய | 1979 | 25 | 4,000 | 268 | .. | .. | வி.கி | வி.கி. |
| கொத்மலை | 1979 | 87 | 600 | 172 | 201 | 396 | 9,470 | 608 |
| விக்டோறியா | 1980 | 122 | 520 | 721 | 210 | 605 | 9,800 | 593 |
| ரன்தெனிகல | 1982 | 94 | 485 | 861 | 126 | 366 | 5,800 | 279 |
| ரன்தம்பை | 1987 | 41.5 | 420 | 22 | 50 | 103 | 3,200 | 109 |
| மொத்தம் | | | | | 627 | 1,553 | 31,480 | 1,860 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி விரைவுபடுத்தப்பட்ட மகாவலி நிகழ்ச்சித் திட்டமும் அதன் தாக்கமும் (1988) முனைவர் எச். என். எஸ். கருணாதிலக.

இலங்கை மகாவலி அதிகார சபை மகாவலி வலயத்தில் செய்யப் படும் அபிவிருத்திக்கு மேலதிகமாக அபிவிருத்தி நடவடிக்கையை மேலும் முன்னேற்றுவதற்காக வெளிநாட்டு முதலீட்டாளர்களின் பங்களிப்பைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்துள்ளது. அதன் மூலம் மகாவலி வலயத்திற்குள் நவீன தொழில்நுட்பத்தை அறிமுகம் செய்தல், வர்த்தகச் சந்தை முன்னேற்றுதலுடன் தொழில் வாய்ப்பும் தோன்றும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மகாவலி அபிவிருத்தித் திட்டம் பலவகையான செயற்றிட்டங்களை அறிமுகம் செய்துள்ளது.

1) வர்த்தக ரீதியான சோளச் செய்கை
2) நடுத்தர விவசாய முதலீட்டுச் செயற்றிட்டம்
3) இன்போமெடிக்ஸ் எக்ரோடெக் பண்ணை
4) பூங்கா பயிர் ஆராய்ச்சித் திட்டம்
5) பயிர்களை பல்வகைப்படுத்தும் திட்டம்

மகாவலியின் சிறு செயற்றிட்டமாகப் பின்வருவன முக்கியம் பெறுகின்றது.

1) சிறு நீர் மின்வலு செயற்றிட்டம்
2) நன்னீர் மீன் அபிவிருத்திச் செயற்றிட்டம்
3) பிரம்புப் பொருள் உற்பத்திச் செயற்றிட்டம்
4) மரமுந்திரிகை அபிவிருத்தி வேலைத் திட்டம்

உத்தேச சிறு செயற்றிட்டமாக,

1) நெல் ஆலை அபிவிருத்திச் செயற்றிட்டம்
2) கிராமிய மின் செயற்றிட்டம்
3) குடியேற்றவாசிகளுக்கான வீடு அபிவிருத்தி
4) தொல்பொருள் பழமைப் பெறுமதி வாய்ந்த இடங்களை அபிவிருத்தி செய்தலும் பாதுகாத்தலும்.
5) மன்னம்பிட்டி நகர அபிவிருத்தி
6) வாரச் சந்தை அல்லது ஞாயிறு சந்தை

வர்த்தக ரீதியான சோளப் பயிர்ச் செய்கையில் எக்ரோட் ட்றேடிங் தனியார் கம்பனி மகாவலி வலயத்தில் பாரிய அளவில் சோள உற்பத்தி வேலைத் திட்டமொன்றை ஆரம்பித்துள்ளது. அதாவது 1000 ஏக்கரில் இப்பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்படுகின்றது.

பயிர்களைப் பல்வகைப்படுத்தும் நடவடிக்கையில் மரமுந்திரிகை, சின்ன வெங்காயம், மரக்கறி வகைகள் பயிரிடப் படுகின்றன.

மரமுந்திரிகைச் செயற்றிட்டம் (வலயத்தில் 2006 ஹெக்டெயர் நிலப் பரப்பில் செய்கை பண்ணப்படுகின்றது.)

நெல் ஆலை அபிவிருத்தித் திட்டம் A, B, C வலயங்களில் நிறுவப் பட்டுள்ளது. இவற்றினை விட இவ் வலயங்களில் கிராமிய மின் செயற்றிட்டங்களும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

இவற்றினை விட B, C வலயங்களில் விதை நெல் உற்பத்தி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேலே கூறப்பட்ட செயற்றிட்டங்களை விடத் தனியார் முதலீட்டை ஊக்குவிப்பதற்குப் பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

1) மகாவலி இயற்கை வனப்புச் சுற்றுலாக் கம்பனி. இது மகாவலி வலயத்தை அடிப்படையாகக் கொண்ட சுற்றாடலைப் பேணும் வகையிலான சுற்றுலா நடவடிக்கையை மேற்கொள்ளும் நோக்குடன் இது மேற்கொள்ளப்பட்டுள்ளது.
2) பால் உற்பத்தியை அதிகரிக்க பின்வரும் நடவடிக்கை மேற்கொள்

ளப்பட்டு வருகின்றது. கிராந்துருகோட்டே, நிராவிய, கிருந்திஓயா, துங்கம, முதுவெல்ல, தம்மின்ன, சித்தபுர, கலங்குட்டிய, மஹரகம போன்ற விவசாய பண்ணைகளில் பாலைச் சேகரித்தல், யோக்கட், ஐஸ்கிரீம், சுவையூட்டிய பால், தயிர், மோர் என்பவற்றை இந்த பண்ணைகளில் உற்பத்தி செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகின்றன.

3) இயற்கை வள முகாமை சேவை. இதன் மூலம் குறுகிய காலத்தில் இலங்கையின் எந்தவொரு பிரதேசத்தின் தேசப்படத்தையும் வரையும் திறன். இச்சேவை மூலம் எல்லாப் பாடசாலைப் பிள்ளைகளுக்கும் வழங்கப்படுகின்றது.

4) தனியார் மகாவலி பூங்கா 1999-ல் நிறுவப்பட்டது. இதன் நோக்கம் மகாவலி வலயத்தில் ஒரு வர்த்தக உற்பத்தியாக கன்று, நாற்று மேடை அமைப்பதாகும்.

அதாவது தெகிஅத்த அண்டிய, மெதகம, பக்கமூண கிராந்துரு, கோட்டே ஆகிய இடங்களில் இந்த மேடைகள் அமைக்கப்பட்டுள்ளன.

தற்பொழுது இலங்கை மகாவலி அதிகார சபையானது நீர்த்தேக்கங்கள், அணைக்கட்டுக்கள், மகாவலித் திட்டத்தின் கீழான நீர்ப்பாசன வசதிகள் என்பவற்றை முகாமை செய்துவருகின்றது. இலங்கை மின்சார சபை மின் நிலையங்களை இயக்கி வருகின்றது.

இலங்கை மகாவலி அபிவிருத்தி சபை எவ்வகையான வருமானத்தையும் ஈட்டாத காரணத்தால் அதன் தொழிற்பாடு மற்றும் பராமரிப்புச் செலவினங்களுக்கு மத்திய அரசாங்கத்தால் ஒதுக்கப்படும் நிதிகளிலேயே முழுமையாகத் தங்கியிருக்கிறது.

இன்று மகாவலி அபிவிருத்தி சபை அது சேமிக்கும் நீரை மின்னுற்பத்திக்காக இலங்கை மின்சார சபைக்கும் பயிர்ச்செய்கை மற்றும் பிற செயற்பாடுகளுக்காக வேளாண்மையாளர்க்கும் கட்டணமின்றி வழங்கி வருகின்றது.

மகாவலி அபிவிருத்தி சபைக்கு ஆண்டொன்றுக்கு ரூபா 300 மில்லியன் செலவாகின்றது.

2004 இல் மேம்பட்ட நீர் மூலத்தினைப் பெறுகின்ற குடியிருப்பாளர்களின் விகிதாசாரம் 71% ஆக காணப்பட்டது. இதில் 28% மட்டுமே குழாய் மூலமான நீரைப்பெற்று வருகின்றார்.

நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை 2010-ம் ஆண்டளவில் அபிவிருத்தி இலக்கினை அடைவதற்கு நீர் வழங்கல் துறைக்கு ரூபா 85 மில்லியன் முதலீடு தேவைப்படுமென மதிப்பிடப்படுகின்றது. ஆனால் இந்த நோக்கத்திற்காக ஆண்டு தோறும் ஒதுக்கப்படும் தொகை ஏறத்தாழ 7 பில்லியன் ரூபா மட்டுமே.

நீர்கொழும்பின் பெரும்பகுதி, களுத்துறையிலிருந்து காலி வரையிலான பகுதிகள் தனியார் துறையினர்கள் பங்கேற்பிற்காக அடையாளம் காணப்பட்டுள்ளன. இவற்றினை விட நாளொன்றுக்கு 40 மில்லியன் கலன் நீரைச் சுத்திகரிக்கும் பொறியினை களனி ஆற்றின் வலது கரையில் அமைப்பது தொடர்பான வடிவமைப்பு, நிர்மாணம் மற்றும் தொழிற்படுத்தல் என்பவற்றுக்கான முன்மொழிவுகளைச் சமர்ப்பிக்குமாறு தனியார்துறை கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது.

தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகால் அமைப்புச் சபை சில பிரதேசங்களின் நிர்மாணிப்பு வாசிப்பு மற்றும் உடன் பட்டியல் தயாரிப்பு போன்ற பணிகளை மேற்கொண்டுள்ளது.

2004-ம் ஆண்டு காலப்பகுதியில் நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை உள்ளூர், வெளிநாட்டு நிதியினைப் பயன்படுத்திப் பல நீர்ச் செயற்றிட்டங் களை நடைமுறைப்படுத்துகின்றது. 2004 இல் நீர் வழங்கல் திட்டங்களின் ரூபா 12,747 மில்லியனை முதலீடு செய்தது.

2004-ம் ஆண்டு நீர்ப்பாசனத் திணைக்களம், அம்பாந்தோட்டை புத் தாக்கச் செயற்றிட்டம், வெலிஓயா நீர்ப் பாசன செயற்றிட்டம் போன்ற இரு முக்கிய செயற்றிட்டங்களாகும்.

ரந்தெனிகல அணை வெடித்த தினால் 20 கிராமங்கள் நீரில் அடித்துச் செல்லப்பட்டன. இதில் 30,000 வீடுகள் அழிந்தன. இவற்றைவிட 2004.12.26-ம் திகதி ஏற்பட்ட சுனாமி அனர்த்தத் தினாலும் பல கிராமங்கள் அழிந்தன.

இவ்வாறு இலங்கையில் மகாவலி அபிவிருத்தித் திட்டமானது வெற்றி யடைவதற்கு உலக நாடுகளின் ஒத் துழைப்பும் தனியார், அரசதுறையின் விடாமுயற்சியும் காரணமாக அமைந்தது. இதனால் பொருளாதாரம் வளர்ச்சி யடைந்தது. அந்தப் பிரதேசங்கள் ஒரு பசுமையான பிரதேசமாக வளர்ச்சி அடைந்தது.

**திருமதி கு. சிவானந்தம்**
(ஆசிரியை)

# Children – The innocent victims

Children are the greatest assets of a nation because they are the leaders and nation builders of tomorrow.Wars are currently being fought all over the world.Wherever wars are being fought, It's the children that suffer most.Children are left orphans due to their parents being killed in wars, they become refugee. Parents have the difficult task of protecting the children from becoming victims of the war and guiding and preparing them for their future.

Poverty is one of the most serious reasons for social problem though many of them are affected by a combination of factors.Parents in most of the families do not worry much about their education and the children do not go to school. The children in some of these families are compelled to do odd jobs for their living and these children find begging or stealing the easiest way of making money. Sexual abuse is another social menace which threatens the life of many male and female children.

Children need to be protected from this abuse and maltreatment met out to them by adults. Now, the world is slowly coming to recognize the convention on the Rights of Child, and children are receiving top attention as never before.

*T. Thaventhiran,*
(Teacher of English)

# ஜப்பானிய முகாமைத்துவம்

இன்றைய உலகில் பிரபல்யம் பெற்றுவரும் ஒரு முகாமைத்துவமே இதுவாகும். மேலைத்தேய நாடுகளான இங்கிலாந்து, அமெரிக்கா ஆகிய நாடுகளில் பின்பற்றப்படும் முகாமைத் துவக் கோட்பாடுகளைவிட ஜப்பானிய முகாமைத்துவம் பல விசேட பண்பு களைக் கொண்டதாக அமைந்துள்ளது. இன்று முன்னணிக் கைத்தொழில் நாடு களில் ஒன்றாக ஜப்பான் காணப்படு கின்றது. ஜப்பானிய நிறுவனங்களின் சிறந்த செயற்பாட்டிற்குக் காரணம் சிறந்த முகாமைத்துவமேயாகும். இதன் காரணமாகவே அமெரிக்கச் சட்டம் ஜப்பானிய முகாமைத்துவத்தில் சில கோட்பாடுகளைக் கடைப்பிடிக்கத் தயா ராக உள்ளது. பெரும்பாலும் பின்வரும் 7 சிறப்பியல்புகளும் ஜப்பானிய முகா மைத்துவத்தின் உடமையாகக் காணப்படும்.

1. கூட்டுத் தீர்மானம் எடுத்தல்

இது நிறுவனமொன்றிற்கான தீர்மானத்தைப் பலரது கருத்துக்கள் பெறப்பட்டுப் பொருத்தமான கருத்து ஒன்று தெரிவு செய்யப்படுவதைக் குறிக்கும். இதன்படி நிறுவனங்களில் இடைத்தரமட்ட முகாமையாளர்கள் தீர் மானங்களை உருவாக்கி மேல்மட்டத் தவருக்கு அனுப்பி வைக்கும் கடமை யைக் கொண்டிருப்பர். இம்முறை கால தாமதம் ஆனாலும் பலரது கருத்துக் களுக்கு மதிப்பளித்து தவறுகள் இன்றித் தீர்மானம் எடுக்க முடியும்.

2. ஊழியர் நலனில் அக்கறை காட்டுதல்

ஊழியர் நலனில் முகாமை அக் கறை காட்ட வேண்டும் என்ற கோட் பாட்டை இது குறிப்பதாகும். ஊழியர் களின் தனிப்பட்ட பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதனூடாக அவர்களின் முழு ஒத்துழைப்பையும் பெறமுடியும் என்பது இக்கோட்பாடாகும்.

3. தரச் சுற்றுக்கள்

இது உற்பத்திப் பொருளின் தரத்தைத் தொடர்ச்சியாக உயர்த்து வதற்கெனக் கையாளப்படும் நடவ டிக்கை ஆகும். இதன்படி நிறுவனத்தின் ஊழியர்கள் நாளாந்தம் வேலை நேரத் தின் பின்னர் சந்தித்துத் தரத்தை உயர்த் துவதற்கு ஆலோசனைகளை வழங்குவர்.

4. பதவியுயர்வு

ஊழியர்களுக்குப் பதவியுயர்வு திறமையை மட்டும் கருத்தில் கொள் ளாது விசுவாசத்தின் அடிப்படையில் வழங்கப்பட வேண்டும் எனவும் கூறப்பட் டுள்ளது. இதன்படி விசுவாசம் கொண்ட ஊழியர் நிறுவனத்தில் பதவியுயர்வு பெறுவதுடன் அவரிடம் அர்ப்பணிப்பு மனப்பான்மையும் காணப்படும் எனக் கூறப்படுகின்றது.

5. செலவு குறைப்புத் தந்திரோபாயம்

இதனை Just in time தந்திரோ பாயம் எனக் கூறுவர். அதாவது முடிவுப் பொருளுக்கான கட்டளை பெறப்பட்ட பின்பு அது உற்பத்தி செய்து வழங்கப் படும். அதேபோல் எப்பொழுது மூலப் பொருள் தேவையோ அப்பொழுது மூலப்பொருள் கிடைக்க வகை செய்யப் படும். இதனால் களஞ்சியத்தில் பொருட் கள் சேமிப்பது மூலதன முடக்கம் என் பன தவிர்க்கப்படும்.

6. கூட்டுப் பொறுப்பு

அதாவது ஒரு கருமத்தை நிறை வேற்றுவது சம்பந்தமாகப் பலர் பொறுப்பை நிறைவேற்ற வேண்டும்

என்பதாகும். இதனால் ஒவ்வொருவரும் அக்கறையுடன் கருமத்தை நிறைவேற்று வார்கள் எனக் கொள்ளப்படுகின்றது.

7. ஆயுட்கால வேலைவாய்ப்பு

அதாவது ஒருவருக்கு இறக்கும் வரை வேலை வழங்க வேண்டும் என்பது இக்கோட்பாடாகும். அதனால் இளைப் பாறும் வயதெல்லையை ஜப்பானிய முகாமை வரையறுத்துக் கொள்ள வில்லை. ஜப்பானிய நிறுவனங்கள் எவரையும் இளைப்பாறும்படி கட்டாயப் படுத்துவதில்லை.

மேற்கூறிய சிறந்த முகாமைத்துவ அம்சங்கள் ஜப்பானிய முகாமைத் துவத்தில் காணப்படுவதனால் அவை அந் நிறுவனங்களின் வெற்றிக்குக் கார ணமாக அமைகின்றன. எனினும் ஜப்பா னியப் பொருளாதாரத்தில் அண்மைக் காலத்தில் ஏற்பட்ட பாதகமான காரணி கள் ஜப்பானிய முகாமைத்துவத்திலும் சில மாற்றங்களை அறிமுகப்படுத்த வேண்டிய தேவையினை ஏற்படுத்தி யுள்ளது. 2010-ம் ஆண்டளவில் ஜப்பா னிய முகாமைத்துவமானது பொருத்த மற்றதாக அமைந்துவிடும் எனச் சில முகாமைத்துவ ஆய்வாளர்கள் எதிர்வு கூறுகின்றனர். எனினும் பொருளாதார வளர்ச்சியில் முன்னணியில் நிற்கும் ஜப்பானின் முகாமைத்துவக் கோட்பாடு கள் முற்றாக நிராகரிக்கப்படும் நிலை தோன்றமாட்டாது என்றே கூறலாம்.

**திருமதி வா. தவராஜா**
(ஆசிரியை)

**உசாத்துணை நூல்கள்:**

1. முகாமைத்துவம் - க. தேவராஜா
2. முகாமைத்துவத்திற்கு ஓர் அறிமுகம் - ந. தேவராஜன் ஜெயராமன்

## தமிழறிவு

1. தமிழ் எந்த மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தது?
2. முதன் முதல் விருத்தப்பாவால் ஆன காப்பியம் எது?
3. தொல்காப்பியத்தில் உள்ள அதிகாரங்கள் எவை?
4. யாப்பிலக்கண நூல்கள் எவை?
5. ஐந்திலக்கணம் என்னும் அமைப்பில் வெளிவந்த முதல் நூல் எது?
6. குட்டித் தொல்காப்பியம் என்று போற்றப்படும் நூல் எது?
7. தற்கால அகராதிகளுக்கு முன்னோடியாய் அமைந்த நூல் எது?
8. கடையெழு வள்ளல் யாவர்?
9. சைவத் திருமுறைகளுள் இடம்பெற்றுள்ள சங்க இலக்கியம் எது?
10. அதிகமான மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ள தமிழ் இலக்கியம் எது?
11. அதிகளவில் மொழிபெயர்க்கப்பட்டுள்ள பக்தி இலக்கியம் எது?
12. ஆதிசங்கரரால் "திராவிட சிசு" என்று போற்றப்பட்டவர் யார்?
13. தமிழ் வியாசர் என்று போற்றப்படுபவர் யார்?
14. எட்டெழுத்து மந்திரம் எது?
15. கம்பர் இயற்றிய நூல்கள் யாவை?

*(விடை 13-ம் பக்கம்)*

**திருமதி தி. இராஜசிங்கம்**
(ஆசிரியை)

# ஆகமம்

சைவ சமயம் அநாதியானது, சிவசம்பந்தமுடையது, ஆழமும் அகலமும் நுட்பமும் உடையது. இச் சமயத்திற்குரிய முதனூல்களாக விளங்குவன வேதம், ஆகமம் ஆகிய இரண்டுமாம். ஆன்மாக்கள் தம்மை வழிபட்டு உயர்ந்து கடைந்தேறும் பொருட்டு இறைவனால் அருளிச் செய்யப்பட்ட முதல் நூல்களாக இவை சைவர்களாற் போற்றப்படுகின்றன.

வேதமும் ஆகமமும் மெய்யானவை அவை இறைவன் நூல்களாகும். வேதம் பொது நூலாகவும், ஆகமம் சிறப்பு நூலாகவும் விளங்குவன. இருவேறு முடிவைக் கூறினாலும் நுணுகிப் பார்த்தால் பெரியோர்கள் இவை இரண்டுக்குமிடையே வேறுபாடு காண மாட்டார்கள்.

"வேத சிவாகமங்களுக்குப் பேதம்
காண்கின்றிலம்,
வேதமும் சிவாகமமும் ஒன்றே"
என்பர் அறிஞர்.

திருமூலரும்
"ஆகுமனாதி கலையாகம வேதம்"
எனக் கூறியுள்ளமை
இங்கு மனங் கொள்ளத்தக்கதே

வேதங்களைப் போலவே ஆகமங்களும் நெடுங்காலமாகக் குரு சிஷ்ய மரபிற் பேணப்பட்டு வந்தமையால் 'சுருதி' என்ற பெயரைப் பெறுகின்றன. வேதங்களில் மறை பொருளாகக் கூறப்பட்ட பஞ்சாட்சரம் போன்ற விடயங்கள் ஆகமங்களில் விரிவு பெறுவதால் இவற்றுக்குச் "சிரௌதம்" எனப்பெயர் பெற்றது. வேதங்களில் சொல்லப்படாத ஆலய அமைப்பு, பிரதிஷ்டை, உற்சவம் முதலியவற்றை ஆகமங்கள் தாமாகவே விரித்துக் கூறுவதால் அவற்றிற்குச் "சுவதந்திரம்" என்ற பெயரும் உண்டாயிற்று. இங்கு குறிப்பிட்ட சுவதந்திரத்திற்கு அடிப்படையாக அமைவது திருவுருவ வழிபாடாகும். எனவே ஆகமம் கூறும் சமயத்தின் முக்கிய அம்சம் திருவுருவ வழிபாடு ஆகும்.

ஆகமம் என்ற சொல்லுக்குப் பொதுவான விளக்கங்களும் சிறப்பான விளக்கங்களும் கூறப்படுகின்றன. ஆகமம் உணர்த்தும் பல்வேறு வகை தோற்றம், வருகை, ஈட்டம், பொருட்பேறு, சாஸ்திரம், சாஸ்திர ஞானம், ஆப்தவாக்கியம், சாஷிப்பத்திரம் என்பன குறிப்பிடத்தக்கன. ஆகமம் என்ற சொல் சுட்டும் சிறப்புப் பெயரை நோக்குகின்ற போது "தொன்று தொட்டு வரும் அறிவு" என்ற பொருளை விளக்கி அறிதற்குக் கருவியாகிய சமய நூல்களைக் குறிக்கும். ஆ, க, ம என்ற மூன்று எழுத்துக்களாலாகி அ - பாசம், க - பசு, ம - பதி எனவும் பொருள் கொள்ளப்பட்டு சைவ சித்தாந்தம் குறிப்பிடும் பதி, பசு, பாச இலக்கணங்களை விளக்கும் நூல் என விரிகிறது. இதற்குப் பிறிதொரு விளக்கமும் கூறப்படுகின்றது. "அ" என்பது சிவஞானம், "க" மோட்ச சாதனம், "ம" மலநாசம் எனவும் பொருள் கொள்வதுண்டு. எனவே ஆன்மாக்களுக்கு மலத்தை நாசம் பண்ணி சிவஞானத்தை உதிப்பித்து மோட்சத்தைக் கொடுக்கும் என்ற விளக்கம் அளிக்கப்படுகின்றது. அந்தவகையில் சைவசித்தாந்த விளக்கமாக ஆகமம் கருதப்படுகின்றது.

ஆகம காலத்தை வரையறுக்க முயன்ற அறிஞர்களுள் விண்டர்நிட்ஸ் ஸ்கோமெரஸ், ஃபார்குவர் போன்றோர் முக்கியமானவர்கள் ஸ்கோகுமரஸ் கி.பி. முதலாம், இரண்டாம் நூற்றாண்டுகளில் திருமூலரும் ஏனைய தமிழ்ப் புலவர்களும் ஆகமங்களைப் பெருமளவில் பயன் படுத்தி இருப்பரெனக் கொண்டு ஆகமங் கள் கி.மு. காலங்களில் நிலவியிருக்க லாம் என்பர். திருமூலர், மணிவாசகர் ஆகியோரது காலத்தை கி.பி. 8-ம், 9-ம் நூற்றாண்டுகளாகக் கொள்ளும் ஃபார்குவர் கி.பி. 7-ம், 8-ம் நூற்றாண்டை ஆகமத்தின் பின் எல்லையாகக் கொள்வர். இவ்விருவரது கருத்துக் களிலும் ஃபார்குவாரது கருத்தையே விண்டர் நிட்ஸ் ஏற்கிறார். மணிவாசகர் திருமூலர் ஆகியோரது கால நிர்ணயத் தில் நிலவும் கருத்து வேறுபாடுகளுக்கு மத்தியில் இவ்விருவரது காலமும் ஆகம கால நிர்ணயத்தால் நிலவும் கருத்து வேறுபாடுகளுக்கு மத்தியில் இவ்விரு வரது காலமும் ஆகம கால நிர்ணயத் திற்கு ஒரு மைல்கல்லாக அமைவதை நாம் மறுப்பதற்கில்லை என்பர் பேராசிரி யர் ப. கோபால கிருஷ்ணஐயர். கர்மர் கார் என்ற அறிஞர் ஆகமங்களின் காலம் பற்றிக் கூறுமிடத்து சுவேதாஸ்வதர உபநிடதமும் கீதையும் எழுதப்பட்ட ஓரிரு நூற்றாண்டுகளை அடுத்து ஆகமங்கள் இலக்கிய வடிவம் பெற்றிருக்கலாம் என்பர். மகாபாரதத்தில் ஆகமங்கள் பற்றிய குறிப்புக்களை எடுத்துக்காட்டி அதனைச் சான்றாக வைத்து மகாபாரத முடிவில் அதாவது கி.மு. 2-ம் நூற்றாண்டில் மகாபாரதம் நூல் வடிவம் பெற்ற காலத்தில் ஆகமங் கள் எழுத்து வடிவம் பெற்றிருக்கலாம் என்பர்.

இந்து சமயப் பிரிவுகளான சைவம், வைஷ்ணவம், சாக்தம், கௌமாரம் என்பவற்றிற்குத் தனித்தனி ஆகமங்கள் குறிப்பிடப்படுகின்றன. சைவத்திற்கு சிவாகமங்கள் 28-ம் வைஷ்ணவத்திற்கு, வைகாசனம், பாஞ்சராத்திரம் ஆகிய 108-ம் சாக்த சமயத்திற்கு தந்திரங்கள் 77-ம் ஆகமங்களாகும். கௌமார நெறியின ருக்கு குமாரதந்திரம் என்னும் ஆகமமும் கூறப்படுகின்றன.

## சிவாகமங்கள்

சிவாகமம் சிவபிரானால் அருளப் பட்டதென்பர். "சிவபெருமானது ஐந்து திருமுகங்களில் இருந்து வந்தது. மலைமகளுக்குச் செவிப் புலனாயது அது வாசு தேவனுக்கும் கருத்தாவது ஆதலின் அது ஆகமம் என அழைக்கப் படுகின்றது என்பர்.

சிவாகமங்கள் இருபத்தெட்டு (28) ஆகும். இதனைத் திருமூலர்

"அஞ்சனமேனி அரிவையோர் பாகத்தன்
அஞ்சொடு இருபத்துமூன்று ஆகமம்"

எனக் கூறியுள்ளார்.

இவ் இருபத்தெட்டு ஆகமங் களும் இன்று கிடைக்கவில்லை. ஒரு சிலவே கிடைத்துள்ளன. அவற்றுள்ளும் காரணமும், காமிகமும் மிக முக்கிய மானவை. இவை கிரியைகளைப் பற்றிக் கூறுவனவாம். சிவாகமங்கள் 28-ம் பின்வருமாறு:

| | |
|---|---|
| 1) காமிகம் | 2) யோகஜம் |
| 3) சிந்தியம் | 4) காரணம் |
| 5) அஜிதம் | 6) தீப்தம் |
| 7) சூக்குமம் | 8) சகசிரம் |
| 9) அம்சுமான் | 10) சுப்பிரபேதம் |

11) விஜயம் 12) நிச்சுவாசம்
13) சுவாயம்புவம் 14) ஆக்நேயம்
15) வீரம் 16) இரௌரவம்
17) மகுடம் 18) விமலம்
19) சந்திரஞானம் 20) முகவிம்பம்
21) புரோற்கதம் 22) இலளிதம்
23) சித்தம் 24) சந்தானம்
25) சர்வோத்தம் 26) கிரணம்
27) பாரமேஸ்வரம் 28) வாதுளம்

இவ்வாகமங்களுள் முதற்பத்தும் சிவபேதம் எனவும், ஏனைய பதினெட்டும் உருத்திர பேதம் எனப்படும். இவ்வாறு மூல ஆகமங்களைக் கேட்டவர்கள் பிரணவர் முதல் அறுபத்தாறு பேர் என்பர். இதனைத் திருமூலர்

"அஞ்சலி கூப்பியறுபத் தறுவரும்
அஞ்சா முகத்தில் அரும்பொருள்
கேட்டதே"

எனக் கூறுவதனால் அறிய முடிகின்றது.

இவ்வாகமங்களுக்குரிய முறையான உபதேசக் கிரமம் கூறப்படுகின்றது.

சத்தியோஜாதம் - கௌசிக முனிவர்
காமிகம்
யோகஜம்
சிந்தியம்
காரணம்
அஜிதம்

வாமதேவம் - காசிபர்
தீப்தம்
சூக்குமம்
சகசிரம்
அம்சுமான்
சுப்பிரபேதம்

அகோரம் - பரத்துவாஜர்
விஜயம்
நிச்சுவாசம்
சுவாயம்புவம்
ஆக்நேயம்
வீரம்

தற்புருஷம் - கௌதமர்
இரௌரவம்
மகுடம்
விமலம்
சந்திரஞானம்
முகவிம்பம்

ஈசானம் - அகத்தியர்
புரோத்கதம்
இலளிதம்
சித்தம்
சந்தானம்
சர்வோக்தம்
பாரமேஸ்வரம்
கிரணம்
வாதுளம்

ஆகமங்களின் உபதேசக் கிரமத்தின்படி ஒவ்வொரு தலைமுறையாக வழங்கப்பட்டு வருகின்றன. அந்த வகையில்

சதாசிவமூர்த்தி → அனந்த தேவர் → ஸ்ரீகண்டருத்திரர் → திருநந்தி தேவர் → சனற்குமார முனிவர் மானுடர் → மானுடர்

என்ற வகையில் குருபரம்பரையாக உபதேசிக்கப்பட்டு வந்ததாகக் கூறப்படுகின்றது.

சிவாகமங்கள் இருபத்தெட்டில் சூக்குமம், சுப்பிரபேதம், ஆக்னேயம் (அநலம்) தவிர்ந்த ஏனையவற்றுக்கு உபபேதங்களாக பல ஆகமங்கள் உள்ளன. இவற்றை உபாகமங்கள்

என்பர். உபாகமங்கள் இருநூற்றேழு (207) எனக் குறிப்பிடப்படுகின்றது.

இதனை

"இருபதும் மெட்டும் மூலம் உபபேதம்
இருநூறு மேழும் என வெண்"

என்பர் மறைஞான சம்பந்தர். உபாகமங்களுள் சிவதருமோத்திரம், குமாரதந்திரம், மிருகேந்திரம் என்பவை பிரசித்தி பெற்றவை.

ஆகமங்கள் விரித்துக் கூறும் விதிகள் அனைத்தையும் பிரமாணமாகக் கொண்டு கிரியைகள் செய்யும் முறையினை ஒழுங்குபடுத்தி முறையாகக் கூறும் வழிநூல்கள் பல தோன்றித் தனி நூல்களாக விளங்குகின்றன. இவை பத்ததிகள் எனப் பெயர்பெறுகின்றன. இவை சிவாச்சாரியார்களால் வகுக்கப் பட்டு வகுத்தவர்களின் பெயரினைத் தாங்கி தனிநூல்களாக விளங்குகின்றன. "பத்ததி" என்றால் "மார்க்கம்" என்று பொருள். பதினெண் பத்ததித் தலைவர்கள் சைவத் தலைவர்களாக விளங்கி பதினெண் நூல்களை உருவாக்கினார். இவை சோமசம்பு, பத்ததி, அகோர சிவாச்சாரியார் பத்ததி என்பவை பிரசித்த மானவை. அகோர சிவாசாரியார் பத்ததி கூறியவாறே இந்தியா, இலங்கை போன்ற நாடுகளில் சிவன், பிள்ளையார், முருகன் ஆலயங்களில் பூசை, திருவிழா முதலியன நடைபெறுகின்றன.

## சிவாகமங்கள் கூறும் இந்துப் பண்பாடு

சிவாகமங்கள் கூறும் இந்துப் பண்பாட்டு அம்சங்களை இருபிரிவுகளாகப் பிரித்து நோக்கலாம்.

1) கிரியை சார்ந்தவை
2) தத்துவம் சார்ந்தவை

கிரியை சார்ந்த அம்சங்களில் முதன்மையாதாகக் குறிப்பிடப்படுவது ஆலயங்கள் தொடர்பானவையாகும். ஆலய சேவைக்கு ஆதாரமான நூல்கள் சிவாகமங்களாகும். ஆலய சேவை பற்றிக் கூறும் கிரியா பாதம் கர்ஷணம், பிரதிஷ்டை, உற்சவம், பிராயச்சித்தம் என்ற நான்கு பிரிவுகளில் விளக்குகின்றது. எனவே ஆலய நிர்மாணம், மண்டபங்கள், பிரகாரங்கள், அமைப்பு, மூர்த்திகளின் பிரதிஷ்டை, நித்திய நைமித்தியக் கிரியைகள், மகோற்சவ விதிகள், பிராயச்சித்த வகைகள் என்பவை ஆகமங்களில் விரித்துரைக்கப் படுகின்றன.

கர்ஷணம் என்பது ஆலயம் அமைய வேண்டிய களத்தை உழுது சமப்படுத்தி அளந்து சதுரமாக்கி பிரதிஷ்டை செய்வதற்குப் பக்குவப் படுத்தலைக் குறிக்கும். காமிகாகமத்தில் எழுபத்தோராவது பிரகாரலக்ஷண விதிப் படலத்தில் ஆலயம் அமையக்கூடிய இடம், பரிவார ஆலயங்கள், பரிவார தேவதைகள், ஆலயத்தின் ஸ்தூல லிங்கமாகிய கோபுரத்தின் உத்தம உயரங்கள் துவார அகலங்கள் கோபுர நிலையங்களின் அகலங்கள் என்பன கூறப்பட்டுள்ளன.

பிரதிஷ்டை என்பது நன்றாக நிறுவுதல் என்று பொருள் 'பிர' என்னும் பகுதி 'சிறப்பாக' என்றும் நன்கு புலனாகும்படி என்றும் பொருள்படும். 'திஷ்ட' என்னும் பகுதிக்கு நிற்றல் என்ற பொருளும் உண்டு. எனவே பிரதிஷ்டை ஏனைய இடங்களில் புலனாவதைக் காட்டிலும் சிறப்பாக நிலை, நிற்றல், என்றும் ஏனைய இடங்களில் நிற்பதைக் காட்டிலும் நன்கு புலனாகும்படி நிற்றல் என்றும் பொருள்படுகின்றது என

பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ணஐயர் குறிப்பிடுவர். இதனை ஏற்படுத்தும் கிரியையே ஆகமங்கள் கூறும் பிரதிஷ்டை ஆகும். தெய்வத்தை முறைப்படி அமைத்து கும்பாபிஷேகம் முதலிய கிரியைகளைப் புரிவது இதனால் சுட்டப்படுகிறது. பிரதிஷ்டை மிக விரிந்த பகுதியாகும்.

இதில் ஒரு பகுதி ஆலய நிர்மாணம் தொடர்பானது. அடுத்த பகுதி விக்கிரக அமைப்பியல் தொடர்பானது. மூன்றாவது பகுதி விக்கிரகப் பிரதிஷ்டை தொடர்பானது. இவை பற்றி ஆகமங்களில் கூறப்பட்டுள்ள பன்முகப்பட்ட விளக்கங்களே சிற்பக்கலை, விக்கிரகக் கலை முதலிய கலைத்துறை நூல்களுக்கு ஆதாரம் என்பர். பிரதிஷ்டையிலே முக்கிய நிகழ்வாகத் திகழ்வது கும்பாபிஷேகம் ஆகும். இது ஆலயத்திற்கும் திருவுருவுத்திற்கும் தெய்வீகத் தன்மை ஊட்டுவது. கும்பாபிஷேகக் கிரியை அநாவர்த்தனம், ஆவர்த்தனம், புனராவர்த்தனம், அந்தரிதம் என நான்கு வகைப்படும். ஆலயம் இல்லாத இடத்தில் ஆகம விதிகளுக்கு அமைய புதிய ஆலயம் அமைத்து அங்கு இறைவனை எழுந்தருளச் செய்தல் அநாவர்த்தனம் எனப்படும். முன்னர் அமைக்கப்பட்ட ஆலயத்தில் நித்திய, நைமித்திய கிரியைகள் நிகழ்ந்துவரும் வேளை எதிர்பாராதவாறு தீயினால் பாதிப்புறுதல், காடுபடர்தல், மண்மாரி முதலியவற்றால் தடையேற்படுமிடத்து அதை நிவர்த்தி செய்து நிகழ்த்தும் பிரதிஷ்டை ஆவர்த்தனம் எனப்படும். நித்திய நைமித்தியங்கள் நடைபெறும் ஆலயங்களில் விமானம், கோபுரம், மண்டபம், பிரகாரம், ஆலயவிக்கிரகம், பரிவாரக் கோவில்கள் ஆகியவை பழுதடைந்தால், பாஸ்தாபனம் செய்து, திருப்பணி மூலம் புனரமைத்து பிரதிஷ்டை செய்தல் புனராவர்த்தனம் எனப் பெயர்பெறும். திருடர் பிரவேசித்தல், எதிர்பாராத நிகழ்வுகள் மூலம் நித்திய பூசைகள் தடைப்படின் உடன் நிகழ்த்தப்படும் பிரதிஷ்டை அந்தரிதம் எனப் பெயர்பெறும்.

பிரதிஷ்டையை அடுத்து இடம் பெறுவது உற்சவம். இதனைத் தமிழில் திருவிழா என்பர். ஆலயங்களில் வருடம் தோறும் குறிப்பிட்ட சில தினங்களில் தொடர்ந்து நிகழ்வது திருவிழா ஆலயத்தின் பொருளாதார நிலைக்கேற்ப பத்து, பதினைந்து, இருபத்தைந்து தினங்கள் கொண்டாடப்படுகின்றன. திருவிழாக்கள் இறைவனது ஐந்தொழில் எனப்படும். படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்பவற்றைச் சுட்டுவதாக ஆகமங்கள் குறிப்பிடப்படுகின்றன. இரௌரவ ஆகமத்தின் பதினேழாம் படலம் கொடியேற்றத்தோடு தொடங்கி தீர்த்தத்தோடு முடிவடையும் பெரு விழாக்களில் நிகழ்த்தப்படும் கிரியை முறைகளைக் குறிப்பிடுகின்றது.

பிராயச்சித்தம் என்பது ஆலயங்களில் தூய்மை பேணும் முயற்சியாகக் கொள்ளப்படுகின்றது. பல்வேறு காரணங்களினால் ஆலயத் தூய்மை கெடும் சந்தர்ப்பங்களில் விஷேச அபிஷேகங்கள் மூலம் ஆலயத்தைத் தூய்மைப்படுத்தவே பிராயச்சித்தம் மேற்கொள்ளப்படுகிறது. அத்தோடு திருவிழாக்களின்போது ஏற்படும் குற்றங்கள் குறைகள் என்பவற்றை நிவிர்த்தி செய்யும் பொருட்டாகவும் பிராயச்சித்தம் மேற்கொள்ளப்படுகின்றது.

ஆலய வழிபாட்டில் இடம்பெறும் திருவுருவ அமைப்பினை ஆகமங்கள் தெளிவாகக் குறிப்பிடுகின்றன. காரணாகமம் காமிகாகமம் என்பவற்றில்

திருவுருவம் அமைக்கும் விதிகள் கூறப்படுகின்றன. திருவுருவங்களின் தீர்மானங்களைப் பற்றி உத்தரகாரணா கமம் கூறுகின்றது. காமிகாமத்தின் அறுபத்தைந்தாம் படலத்தின் பிரதிமா லட்ஷணம் என்ற பிரிவில் திருவுருவ அமைப்பு முறை விளக்கப்பட்டுள்ளது.

ஆலயங்களில் இடம்பெறும் நித்திய நைமித்திய காமிகக் கிரியைகள் ஆகமங்களில் விரிவாகக் சுட்டப்படு கின்றன. இரௌரவ ஆகமத்தின் பதினா றாம் படலம் நித்தியக் கிரியைகள் பற்றி விளக்குகின்றது. காலை, மதியம், மாலைப் பூசைகளுக்குரிய பூ, நைவேத்தி யம் பற்றியும் கூறுகின்றது. அத்திரிதேவர் கோவிலை மும்முறை சுற்றவேண்டும். எனவும் பொங்கல், தயிர், நெய் என்பவற் றால் ஆக்கப்பெற்ற அன்னலிங்கம் மேள வாத்தியங்களோடு கோவிலைச் சுற்றுதல் முதலிய அம்சங்கள் விளக்கப் பட்டுள்ளன.

ஆலயங்களில் இடம்பெறும் நைமித்தியக் கிரியைகளில் பிரதானமாக அமையும் மகோற்சவத்தைப் பற்றி இரௌரவ ஆகமம் பதினேழாம் படலத் தில் கூறப்பட்டுள்ளது. கொடியேற்றம் தொடக்கம் தீர்த்தத்தோடு முடியும் பெரு விழாக்களைக் கூறும் இப்படலம் கொடி யேற்றத்துக்கு முன்னோடியாகச் செய்யப் படும். கிரியைகளையும் குறிப்பிடு கின்றது. 18-ம் படலம் திருவிழாக்கள் தொடங்குதற்குரிய காலங்களை வரையறுத்துக் காமிகக் கிரியைகளை யும் குறிப்பிடுகின்றது. கொடி மரத் திற்குரிய மரம், கொடிச்சீலை, அதிற் கீறப்படும் ஓவியங்கள் அதனை நாட்டும் கிரியைகள் நுணுக்கமாகக் கூறப் படுகின்றன.

திருவிழாக் காலங்களில் தெய்வத் திருமேனிகள் ஊர்வலமாக எழுந்தருளல் திரிபுர சங்காரத்தைக் குறித்து சுவாமி வேட்டைக்குச் செல்லும் வேட்டைத் திருவிழா பற்றியும் கூறப் பட்டுள்ளது. எந்த ஒரு மிருகத்தையாவது கொல்லும் நோக்கத்திற்காக இத்திருவிழா செய்யப்படுவதில்லை என்பதும் தற் செயலாக மனிதனோ, மிருகமோ சுவாமி காட்டிற்கு எழுந்தருளும்போது இறந்தால் அவற்றுக்கு சாயுச்சிய முத்தி கிட்டும் என்பதே இத்திருவிழாவின் தத்துவமாக ஆகமம் குறிப்பிடுகின்றது.

இரௌரவ ஆகமத்தின் 20-ம் படலத்தில் குடமுழுக்குப் பற்றிய தகவல்கள் கூறப்படுகின்றன. வட்டத்துள் வட்டமாகவோ, சதுரத்துள் சதுரமாகவோ குறைந்தது 9 - 1008 வரையுள்ள நிறை குடங்களை வைத்தல் ஆகியவை விளக்கப்படுகின்றன. இரௌரவ ஆக மத்தின் இறுதிப் படலத்தின் கிருத்திகைத் தீபம் என்ற விழாவில் கிரியை முறைகள் பற்றி விளக்கப்படுகின்றது.

விபூதி, உருத்திராட்ஷம், பஞ்சாட்சரம் முதலிய சிவசின்னங்கள் பற்றிய தகவல்கள் ஆகமங்களில் விரிவாக விளக்கப்படுகின்றன. இரௌரவ ஆகமத்தில் எட்டாம் படலத்தில் விபூதி ஸ்நானம் கூறப்படுகின்றது. விபூதியை மந்திரத்தோடு உடம்பிலணிதல் கூறப் பட்டுள்ளது. மகுடாகமத்திலே விபூதி தரிப்பதனால் ஏற்படும் பயனும் விபூதி தரிக்கும் முறைகளான உத்தூளனம், திரிபுண்டரம் என்பனவும் விளக்கப் படுகின்றன. சுப்பிரபேதாகமம் சர்வஞ் ஞானோத்தராகமம், காரணாகமம், தீப் தாகமம் முதலிய ஆகமங்களிலும் விபூதிப் பிரகரணம் விளக்கப்பட்டுள்ளது.

வாதுள ஆகமத்தில் உருத்திராட்ஷ பேதங்களும் தேவைகளும் குணங்களும் உருத்திராட்ஷம் அணிவதால் ஏற்படும் பலன்களும் கூறப்பட்டுள்ளது. உருத்திராட்ஷம் முப்பத்தெட்டுப் பேதமுடையது சிவனது (உருத்திரன்) சூரியரூபமாகிய வலக்கண் பொழிந்த நீரிலே கபில நிறமுடைய 12 உருத்திராட்ச மரமும் சந்திரரூபமாகிய இடக்கண் பொழிந்த நீரிலே வெண்நிறமுடைய 16 உருத்திராட்சமும் உதித்தன. அக்கினி ரூபமான நெற்றிக் கண் பொழிந்த நீரிலே கருநிறமுடைய 10 உருத்திராட்ஷமரமும் உதித்தன. உருத்திராட்ஷத்தை அணிபவன் பிறவாப் பயனை அடைவான் எனக்கூறப்படுகிறது.

இரௌரவ ஆகமத்தின் மூன்றாம் படலம் பஞ்சாட்சரமந்திர ஜெபமுறையை சொல்கிறது. நான்காம் படலம் ஐந்து எழுத்து ஓதலுக்கு வேண்டிய கருவிகளாக தருப்பையும் உருத்திராக்கமும் திருநீறும் கூறப்படுகிறது. இதனை காலை, மாலைச் சந்திகளில் செபம் செய்வது நன்று.

சிவாகமங்களில் கூறப்பட்ட பதி, பசு, பாச இலக்கணங்கள், சைவ சித்தாந்தத்தின் நான்கு பாதங்களாகிய சரியா பாதம், கிரியாபாதம், யோகா பாதம், ஞானாபாதம் ஆகியவற்றையே தெளிவாகக் காட்டுகிறன. இதனை காரணம், காமிகம், வாதுளம், பௌஷ்கரம், சுப்பிர பேதம் முதலிய ஆகமங்களிலிருந்து நன்கறிய முடிகின்றது. இதனால் சிவாகமம் சித்தாந்த சாஸ்திரம் எனவும் அழைக்கப்படும்.

சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகியவற்றை நாற்பாதங்களில் விளக்குகின்றது. சரியாபாதம் சமய ஆசாரங்களையும், பூசைக்குரிய உபகரணங்களையும் கூறும். கிரியாபாதம் வர்ணாச்சிரம தர்மங்களையும் தீட்சை வகைகளையும் நித்திய, நைமித்திய காமிக பூசைகளையும் திருவிழாக்களையும் விளக்குகின்றது. யோகபாதம் பிராணாயாமம் முதலியவற்றின் இலக்கணங்களையும் ஆன்மசுத்தி அந்தர்யாகம் முதலியவைகளையும் போதிக்கின்றது. ஞானபாதம் பதி, பசு, பாசம் என்றும் முப்பொருள் இலக்கணங்களை உபதேசித்து அருள்வழிப்படுத்துகின்றன.

இவற்றுள் வரும் விடயங்களை ஆலய நிர்மாணம், மண்டபங்கள், பிரகாரங்களின் அமைப்பு, விக்கிரக அமைப்பு, பிரதிஷ்டை, நித்திய நைமித்திய க் கிரியைகள், மகோற்சவ விதிகள் செய்யப்பட வேண்டிய பிராயச்சித்த வகைகள் என்பனவும் விபூதி, உருத்திராட்ஷம், பஞ்சாட்சரம், குரு, லிங்க, சங்கம வழிபாட்டு முறைகளையும் அறுபத்து நான்கு கலைகளுக்குரிய இலக்கணங்கள் சைவ சித்தாந்த தத்துவ அடிப்படை போன்ற இன்னோரன்ன பண்பாட்டம்சங்களை விளக்குவனவாக அமைகின்றன.

## சாக்த ஆகமங்கள்
### (தந்திரங்கள்)

சக்தியை முழுமுதற் கடவுளாகக் கொண்டு வழிபடப்படுவது சாக்தம் எனப்படும். சக்தி வழிபாடு மிகவும் பழங்காலம் முதல் வழிபடப்பட்டு வருகின்றது. சக்தியின் வழிபாட்டு மரபுகளை எடுத்து விளக்கும் ஆகமங்கள் சாக்த ஆகமங்கள் எனப்படுகின்றன. சாக்த ஆகமங்கள் எழுபத்தேழு (77) எனப்படுகின்றது.

சாக்த ஆகமங்களும் சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய நான்கு பிரிவுகளை உடையன. இவை வாமை எனப்படும் சக்தி வழிபாட்டைக் கூறுவ தனால் "வாமாச்சாரம் என அழைக்கப் படுகின்றது. சாக்த ஆகமங்கள் யந்திர பூசை, ஜெபம், ஓமம், தர்ப்பணம் என்பவற்றையும் குறிப்பிடுகின்றன. பொதுவாக இறைவன் தேவிக்கு உபதேசித்ததை 'ஆகமம்' எனவும், தேவி இறைவனுக்கு உபதேசித்தவை "நிகமம்' எனவும் கூறப்படுகின்றது.

எழுபத்தேழு சாக்த ஆகமங் களுள் ஐந்து சுபாகமங்கள் எனப்படும். அவை வசிட்ட, சனக, சுக, சனாதன, சனற்குமார என்பனவாகும். இவை ஞானத்திற்கும் வீடுபேற்றிற்கும் உரிய வழிகளைக் கூறுகின்றன. இவற்றை வலது கை மார்க்கமெனவும் சமயாசாரம் எனவும் குறிப்பிடுவர். அறுபத்து நான்கு ஆகமங்கள் கௌள ஆகமங்கள் எனப் படும். இவை மந்திர வித்தைகளையும் இடக்கரான வழிபாடுகளையும் கூறு கின்றன. இவற்றை இடது கை மார்க்கமெனவும் குறிப்பிடுவர். கௌள ஆகமங்களுள் உருத்திராயமளம், தந்திர ராஜம், பிரபஞ்சசாரம், வாமகேசுரம், தந்திராலோகம், ஸ்ரீவித்தியார்ணவம், ஞானார்ணவம், திரிபுரரகசியம், மகா நிர்வாணம், யோகினி ஹிருதயம், குல சூடாமணி, ஸ்ரீநேத்திரம், சாரதா திலகம், சதுமசதி, காமகலாவிலாசம் என்பன மிகவும் சிறப்பானவையாகக் கூறப்படு கின்றன. எட்டு ஆகமங்கள் மிசிராக மங்கள் எனப்படுகின்றன. இவை மிசிராகம மார்க்கம், கலப்பு மார்க்கம் எனப்படு கின்றன. மிசிராகமங்களாக சந்திரகலை, சோதிஸ்வதி, புவனேஸ்வரி, துர்வாச மாதா, பரகஸ்பதியா என்பன குறிப்பிடப் படுகின்றன. பாஸ்கராச்சாரியார் தமது லலித விஷ்வதார பாடியம் என்ற நூலில் மிசிர ஆகமங்களில் இருந்து ஒன்பது சூத்திரங்களை எடுத்துக் கூறியுள்ளார். சக்தி சிவத்தோடு சேராவிடில் சிவத்தால் ஒரு தொழிலும் புரிய முடியாது என்பது இம்மதத்தினரின் கொள்கையாகும்.

தத்தாத்திரேயர் என்ற பெரியார், ஸ்ரீவித்யா எல்லா வகை வழிபாடுகளிலும் கூட்டாக இருப்பதைக் கண்டார். எனவே இதனை அடிப்படையாகக் கொண்டு சக்தியின் பல திறங்களையும் எடுத்துப் போற்றி வழிபடும் வகையிலே 18000 சுலோகங்கள் அமையச் சங்கிதை ஒன்றை ஆக்கினார். அவரிடமிருந்து பரசுராமர் தாம் கற்றவற்றை வைத்து அந்தச் சங்கிதை யைச் சுருக்கி 6000 சுலோகங்கள் ஆக்கினார். தென்னிந்தியாவிலுள்ள சாக்தர்கள் இவற்றையே விதியாகக் கொண்டு சக்தி வழிபாட்டினை நடத்தி வருகின்றனர்.

## வைணவாகமங்கள்

வைணவர்கள் விஷ்ணுவை முழு முதலாகக் கொண்டு வழிபடும் சமயத் தவர் விஷ்ணுவை கோவில்களிலும், வீடு களிலும் எழுந்தருளச்செய்து வழிபடும் வழக்கத்தினையுடையோராவர். இவ்வாறு எழுந்தருளியிருக்கும் விக்கிரகம், அதற்கு நிகழ்த்தும் ஆராதனைகள் கோவில் களிலும், இல்லங்களிலும் விக்கிரகங் களை அமைத்தற்கான விதிகள், அவ்வாறு அமைப்பனவற்றை வழிபடும் முறைகள், வழிபடுவோரில் காணப்பட வேண்டிய தகுதிகள், பக்தியோடு வழிபடு வோர் அடையும் பயன்கள் பற்றியும் விரிவாகக் கூறும் நூல்களே வைணவ ஆகமங்களாகும். இவை பாஞ்சராத்திரங்க ளென்றும், பாகவத சாத்திரங்கள் என்றும் அழைக்கப்படும்.

பாகவதர்கள், சாத்வர்கள், ஏகாந்திகர்கள் என்று பலவாறு கூறப்பெறும் ஒரு நெறியசித்தத்துடன் பகவானிடம் பக்தி செய்யும் அடியார்களைப் பாத்மதந்திரமானது பஞ்சராத்திரிகள் என்று அழைக்கிறது. பாஞ்சராத்திர வணக்க முறை ஏகயானம் அதாவது ஒரேவழி எனப்படும். இது பாகவதர்கள் ஒரே கடவுள் வாதிகள் என்பதைக் குறிக்கும். ஐசுவரியம், வீரியம், புகழ், திரு, ஞானம், வைராக்கியம் என்ற ஆறு கல்யாண குணங்களுக்கும் "பகம்" என்று பெயர். அவைகளை உடையவர் பகவான். ஆதலால் பகவானை வழிபடும் விஞ்ஞானம் பாகவத சாஸ்திரம் என்னும் பெயர் பெறுவதாயிற்று. பகவானை வழிபடும் சமயம் பாகவத தர்மம் எனப்படும்.

பாஞ்சராத்திரம், சைவஆகமங்கள் போன்றே பகவனால் அருளப்பெற்றது எனக் கொள்வது வைணவமரபாகும். பகவான் சடகோபர் (நம்மாழ்வார்), சனகர், சாண்டிலியர், சுக்கிரீவர், அநுமார், விபீடணர் ஆகியோருக்கு பாஞ்சராத்திரத்தை உபதேசிக்க அவர்கள் உலகினர்க்கு அதனை உபதேசித்தனர் என்று கொள்ளப்படுகின்றது.

பாஞ்சராத்திரம் என்பதன் பொருள் பலவாகும்

1) ஐந்து வகை ஞானங்கள் - (நாரதபாஞ்சராத்திரம்)
2) சாங்கியம், யோகம், பௌத்தம், ஆருகதம், ஜைனம் என்ற ஐந்து சாத்திரங்களும் முன்னிருளாகத் தோன்றுவதால் பாஞ்சராத்திரம் என்ற பெயர் வந்தது. (பாத்மதந்திரம்)
3) அவித்தையை ஒழிப்பதனால் பாஞ்சராத்திரம் ஆயிற்று (பிரமசங்கிதை)
4) திருமாலடியார்களின் ஐந்துவித கர்மங்களையும் குறிப்பதாற் பாஞ்சராத்திரமாயிற்று என்பர் சிலர்.
5) பகவானாகிய நாராயணன் தன் அடியார்களுக்குத் தன்னை ஐந்து உருவங்களில் வெளிப்படுத்துகின்றான். அவையாவன

அ) பரம்
- பரம் பொருளாம் நிலை

ஆ) வியூகம்
- பாற்கடலிற் பள்ளிகொண்டு படைத்தல், காத்தல், அழித்தல் சம்சார பந்த நீக்கம் புரிதல் ஆகிய நான்கு தொழில்களையும் நிகழ்த்துதல்.

இ) விபவம்
- அவதாரத் திருமேனிகள் எடுத்தல்

ஈ) அந்தர்யாமி
- சீவராசிகள் யாவினுள்ளும் தோன்றாத் துணையாய் நின்றருளல்

உ) அர்ச்சம்
- ஆலயங்களிலும் இல்லங்களிலும் விக்கிரக வடிவில் எழுந்தருளி அருள்பாலித்தல்.

இந்த ஐவகைத் திருவுருவங்களில் பகவான் தன்னை வெளிப்படுத்துவதை விபரிப்பதால் பாஞ்சராத்திரம் எனப்படுகின்றது.

இவ்வாறு பகவானின் இயல்புகளையும், அவன் சூக்கும வடிவிலிருந்து தூலமாய்த் தோற்றி அருள்பாலிக்கும் முன்னைய நால்வகை நிலைகளிலும் மேலாக அடியாருக்காய் விக்கிரகங்களில் நின்று அருள்பாலிப்பதே அவர்களால் எய்தக் கூடிய பெரும்பேறாகும். அதனைப் பாஞ்சராத்திரம் விரிவாக விளக்குவதோடு, அடியார்களின் ஐவகைக் கடன்களையும் அறிவுறுத்துகின்றது.

1) விஷ்ணுவின் சின்னங்களாகிய சங்கு சக்கரங்களைத் தோள்களில் முத்திரித்துக் கொள்ளல். இது தாபம் எனப்படும்.
2) நெற்றியிலும் நெஞ்சிலும் திருமண்ணும் ஸ்ரீசூர்ணமும் கொண்டு நாமம் இடல். இது புண்டரம் எனப் பெயர்பெறும்.
3) கடவுளின் அடியான் என்பதைக் காட்டும் பொருட்டுக் கடவுளுடைய திருநாமம் ஒன்றுடன் தாசன் என்னும் மொழியைச் சேர்த்துப் புதிய பெயர் தரித்தல். இது நாமம் எனப்படும்.
4) தீட்சை பெறுகையில் ஆசாரியர், தன் செவியில் ஓதும் மந்திரத்தைத் தவறாது ஓதல்.
5) இந்த நான்கு புறக்கடன்களின் பலனாக ஈசுவரனிடம் இடைவிடாமல் ஐக்கியப்பட்டு நிற்கும் யோகநிலை.

இவற்றோடு நாள்தோறும் மாலடியார் நிகழ்த்த வேண்டிய ஐந்து கடன்களும் பாஞ்சராத்திர ஆகமத்திற் குறிக்கப்பட்டுள்ளன. அவையாவன:

1) அபிகமனம்
- நாள்தோறும் நீராடிப் பிரார்த்தனை புரிதல்
2) உபாதானம்
- பகவானுக்குப் பணிபுரிதற்கு வேண்டி, உடலைக் காத்தற்கான அளவு, உணவோ, பொருளோ ஈட்டல், பிறர் பொருளை நாடாத அபரிக்கிரகமும் இதனுள் அடங்கும்.
3) இஜ்யம்
- வீட்டில் பிரதிஷ்டா செய்துள்ள விஷ்ணு விக்கிரகத்திற்குப் பாஞ்சராத்திர விதிப்படி நடத்தும் பூசை
4) சுவாத்யாயம்
- வைணவ சாத்திரங்களைச் சிரத்தையுடன் கற்றல், ஆராய்தல்.
5) யோகம்
- எந்நேரமும் இறைவனைத் தியானித்தல்.

பாஞ்சராத்திரத்தோடு வைகாசன ஆகமத்தின் வழிபாட்டு முறையும் நிலவுகின்றது. வைகாசன முறை கோவில் வழிபாட்டை மிக விரிவான வகையில் வகுத்துள்ளது. அதனால் அதனைத் தந்திரம் அல்லது பிரயோகம் என்றும் கூறுவர். இந்த முறைப்படி வழிபாடு செய்ய எல்லா வைணவருக்கும் உரிமை கிடையாது. எல்லோரும் வீட்டிலும் கோவிலிலும் பாஞ்சராத்திர முறைப்படி வழிபாடு செய்யவே உரிமையுடையவர்கள். வைகாசன முறையை அனுட்டிக்க உரிமையுடையவர்கள் அதற்கென்று மிக்க தகுதிபெற்ற வைகாசன அர்ச்சகர் அல்லது வைகாசன விப்பிரர் மட்டுமேயாவர்.

முறையான தீட்சையும் பயிற்சியும் பெற்ற வைகாசனர் தனிச் சாதியாராகவே தம்மைக் கணித்துப் பாஞ்சராத்திரத்திலிருந்து வேறுபட்டோராய் விளங்குகின்றனர். வைணவ கோவில்களின் சில பாஞ்சராத்திர முறை யிலும் சில வைகாசன முறையிலும் பூசை மகோற்சவ வழிபாடுகளை நடத்தி வருகின்றன.

## பத்ததிகள்

பத்ததி என்பது மார்க்கம், அத்துவா, நெறி, வழி எனப்பொருள்படும். ஆகமங்களில் நான்கு பாதங்களான

சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நாற்பாதங்களில் விரித்துக் கூறும் கிரியை மரபுகளில் சிறப்பாக கிரியா பாதத்தினைத் தொகுத்துச் சுருக்கமாக விளக்கி வழங்குவனவே பத்ததிகளாகும். அதாவது கோவில் சம்பந்தமான, வீடு சம்பந்தமான கிரியை களைப் பத்ததிகள் பரந்து விரித்திருப் பினும் அவை பதினெட்டு என்பதால் பதினென் பத்ததிகள் என்பதே மரபாகும்.

மரபுசார்ந்த பதினெண் பத்ததி கள் உக்கிரஜோதி, சத்தியோஜோதி, இராம கண்டர், வித்யாகண்டர், நாராயண கண்டர், பூபதிகண்டர், ஸ்ரீகண்டர், நீலகண்டர், சோமசம்பு, பிரமர், ஞான சம்பு, ஈசானர், இருதயர், வைராக்கியர், திரிலோசனர், வருணர், ஈஸ்வரர், அகாரர் எனப் பதினெண் சிவாச்சாரியார்களால் எழுதப்பட்டன என்பர்.

பத்ததிகள் சிவாகமங்களில் கூறப்படும் தீட்சை, மந்திரம், தந்திரம், மாந்திரீகம், பூஜைகள், கர்ஷணம், பிரதிஷ்டை, உற்சவம், பிராயச்சித்த மெனப் பல்வேறு இடங்களில் கூறப் பட்டுள்ளுவற்றையும் நான்கு வர்ணத் தாருக்குமுரிய பூர்வ, அபரக் கிரியை களையும் தன்னகத்தே கொண்டனவாக விளங்குகின்றன. அகோர சிவாசாரியார் பத்ததியே வர்ணங்களுக்கு ஏற்றவாறு கிரியை முறைகளைத் தகுதியின் அடிப்படையில் சிறப்பாகக் கூறுகின்றன.

## ஆகமச் சிறப்புக்கள் சில........

✻ ஆகமம் சரியாபாதம், கிரியாபாதம், யோகபாதம், ஞானாபாதம் என நான்கு பிரிவுகளைக் கொண்டது.

**சரியாபாதம்**

- சமயாசாரங்கள் பற்றிக் கூறும்.

**கிரியாபாதம்**

- தீட்சைகள், உற்சவங்கள், நித்திய பூசை, நைமித்திய பூசை, காமிய பூசை, ஜபம், ஓமம் என்பவற்றுடன் பிரமச்சரியம், இல்லறம், வானப் பிரஸ்தம், சந்தியாசம் என்பனவற்றையும் கூறும்.

**யோகபாதம்**

- பிராணாயாமம், ஆன்மசுத்தி என்பவற்றையும்

**ஞானாபாதம்**

- பதி, பசு, பாசம் ஆகிய முப்பொருள் பற்றிக்கூறும்.

✻ ஆகமத்தின் சார்பு நூல்களாவன,

தத்துவப் பிரகாசிகை
தத்துவ சங்கிரகம்
தத்துவதிரய நிர்ணயம்
போக காரிகை
மோட்சகாரிகை
நாத காரிகை
பரமோட்ச நிராசகாரிகை
இரத்தினத் திரயம்
சித்தாந்த நூல்கள்

✻ இரெளரவவாகமத்தின் எழுபத்து மூன்றாம் படலமாகிய பாவவிமோசனப் படலத்தின் 12-ம் அத்தியாயத்தை அடிப்படையாகக் கொண்டதே சிவஞான போதம்.

❋ வைணவ ஆகமங்கள் சங்கிதைகள் எனப்படும். இவை பாஞ்சராத்திரம், வைகாசனம் என்பன.

பாஞ்சராத்திரம் மிகத் தொன்மை யானது. நாராயணனால் நாரத முனி வருக்கு ஐந்து இரவுகள் உபதேசிக்கப் பட்டது. இதில் 108 சங்கிதைகள் உள்ளன. அவற்றுள்,

அஹிர்பத்திய சங்கிதை
ஈஸ்வர சங்கிதை
பௌஷ்கர சங்கிதை
பரம சங்கிதை
பிருகதி பிரம சங்கிதை

என்பன மிகச் சிறப்பானவை.

❋ பாஞ்சராத்திரத்திற்குப் பின் தோன்றியது வைகாசனம். இது விகா சனன் என்ற முனிவனுக்கு நாராயண னால் உபதேசிக்கப்பட்டது.

❋ சக்தி ஆகமங்கள் சாக்த தந்திரங்கள் எனப்படும். இவை அறுபத்து நான்கு ஆகும். அவற்றுள் மகா நிர்வாண தந்திரமே மிகச் சிறந்தது. சாக்த ஆகமங்களுள் சில,

ருத்திரயாமளம்
பிரபஞ்சசாரம்
ஞானார்ணவம்
திரிபுரரகசியம்
தந்திராசம்
யோகினிகிருதயம்
சாரதா திலகம்
குலசூடாமணி
தந்திரலோகம்
ஸ்ரீவித்தியார்ணவம்

**திரு. க. க. ஈஸ்வரன்**
(ஆசிரியர்)

## உசாத்துணை நூல்கள்:



1. இந்துப்பண்பாட்டு மரபுகள்
 - கலாநிதி ப. கோபாலகிருஷ்ண ஐயர்
2. இந்தியச் சிந்தனை மரபு
 - கலாநிதி ந. சுப்பிரமணியஐயர்
3. இந்து சமய தத்துவம்
 - ரி.எம்.பி. மகாதேவன்
4. சைவத் திருக்கோவிற் கிரியை நெறி
 - பேராசிரியர் கா. கைலாசநாதக் குருக்கள்
5. இந்து நாகரிகம் - பாகம் 3


கலாநிதி க. சொக்கலிங்கம்
(சொக்கன்)

## குணங்கள் மூன்று

*மனிதனின் குணங்கள் மூன்று. அவை இராஜதம், தாமதம், ஸத்துவம் ஆகியவை ஆகும். டம்பம், கோபம், வீண் பெருமை, ஆடம்பரம் இவையெல்லாம் இராஜத குணம். சோம்பேறித்தனம், பிறரிடம் தேவையில்லாமல் அடிக்கடி கோபித்தல் முதலியன தாமஸ குணம். அன்பு, அடக்கம், சாந்தம், பொறுமை இவை ஸத்துவ குணம்.*

அமுத விழா சிறப்புற வாழ்த்துகிறோம்...





# JEGA ELECTRICALS

# ஜெகா எலக்ரிக்கல்ஸ்





மின்சார இணைப்புப் பொருட்கள்,
நீர் இறைக்கும் இயந்திரங்கள்,
P.V.C. பைப் வகைகள்,
மின்சார அன்பளிப்புப் பொருட்கள்,
வீடுகளுக்கான மின்சார விளக்குகள்,
மின்விசிறிகள் மற்றும்



அனைத்து வகையான
மின்சாரதனங்களையும்
ஒரே கூரையின் கீழ் பெற்றிட
நாட வேண்டிய ஒரே ஸ்தாபனம்

இல. 11, தனங்கிளப்பு வீதி,
சாவகச்சேரி.

No. 11, Thanankilappu Road,
*Chavakachcheri.*

077 3039444

இணைப்புப் பெற்ற ஆசிரிய ஆளணியினர்



ஒழுக்காற்றுக் குழு



ஆங்கிலமொழி அபிவிருத்திப் பிரிவு



## அப்பாவி ஆட்டுக்குட்டி

ஆட்டுக்குட்டிக்கு காவலாக ஒரு நாயை அந்த எஜமான் நியமித்திருந்தார். ஓநாய் போன்ற கெட்ட மிருகங்கள் அணுகாவண்ணம் நாய் காவல் காத்தது. ஓநாய் ஒன்று எப்படியாவது ஆட்டுக் குட்டியைக் கவரத் திட்டம் போட்டது. நாய்க்குத் தெரியாமல் ஆட்டுக்குட்டியை நெருங்கி "நான் ஒரு பெரிய நந்தவனத் திலிருந்து வருகிறேன்; என்னுடன் நீ வந்தால் நிறைய விளையாடலாம்; உண்ணலாம்." என்று ஆசை வார்த்தைகள் கூறியது. ஓநாயின் பேச்சைக் கேட்டு ஆட்டுக்குட்டி நாய்க்குத் தெரியாமல் ஓநாயின் பின்னால் சென்றது. ஓநாய் ஆட்டுக்குட்டியை தூக்கிக் கொண்டு ஓடியது.

**செல்வன் உ. பவிதன்**
தரம் - 1A

## எண்கள்

- ஒன்று:- யாருக்கும் தலை ஒன்று
- இரண்டு:- முகத்தில் கண்கள் இரண்டு
- மூன்று:- முக்காலிக்கு கால்கள் மூன்று
- நான்கு:- நாற்காலிக்கு கால்கள் நான்கு
- ஐந்து:- ஒரு கையில் விரல்கள் ஐந்து
- ஆறு:- ஈயின் கால்கள் ஆறு
- ஏழு:- வாரத்தில் நாட்கள் ஏழு
- எட்டு:- சிலந்திக்கு கால்கள் எட்டு
- ஒன்பது:- தானிய வகை ஒன்பது
- பத்து:- இரு கைவிரல்கள் பத்து

**செல்வன் க. கார்த்தியன்**
தரம் 1A

## கல்வி

*சீர் சிறக்க ஊர் சிறக்க*
*உழைக்கும் உள்ளங்களெல்லாம்*
*வாழ்வளித்து வளம் பெறவே*
*கல்வியினைக் கற்றார்கள்.*

*ஏர்பிடித்து வாழ்வளிக்கும்*
*ஏற்றமிகு மாந்தர்க்கும்*
*பாரினிலே புதுமைகளை*
*பக்குவமாய் பதியவைக்க*
*கல்வியிலே கருத்தானார்கள்.*

*எதிர் கால இலட்சியத்தை*
*இலத்திரனியலில் கை பதித்து*
*எதிர் நீச்சல் போட்டிடவும்*
*இடர்கள் இன்றிக்காத்திடவும்*
*கலைக் கோயில் தெய்வமெனக்*
*கல்வியினைக் கண்டார்கள்.*

*அறிவாளர் தோன்றிடவும்*
*அறிஞர்கள் வளர்ந்திடவும்*
*பொறியியலில் வல்லுனர்கள்*
*புகழ் பூத்துக் குலுங்கிடவும்*
*புதுமைகளைப் படைத்திடவும்*
*கல்விதான் என்றார்கள்.*

*வானத்தை அளந்திடவும்*
*வாதத்தைத் தொடுப்பதற்கும்*
*வரலாற்றை வளர்த்திடவும்*
*வளமான கல்வி வேண்டும்.*

**செல்வி செ. விசாலி**
தரம் - 2A

## மூன்று மீன்கள்

புல்லுமலைக் கிராமத்தில் ஒரு குளம் இருந்தது. அந்தக் குளத்தில் நிறைய மீன்கள் இருந்தன. அவற்றுள் மூன்று மீன்கள் இணைபிரியாத நண்பர்களாக வாழ்ந்து வந்தன. ஆனால் மூன்று மீன்களும் மூன்று குணங்களைக் கொண்டவை.

ஒரு மீன் எப்போதும் முன் எச்சரிக்கையாக நடந்து கொள்ளும். இன்னொரு மீன் சமயோசித புத்தியுடன் நடந்து கொள்ளும். மற்றைய மீன் மந்த புத்தி கொண்டது.

ஒரு நாள் மீனவன் ஒருவன் மீன்பிடிக்கும் முயற்சியில் இறங்கினான். மீனவனைக் கண்ட முன் எச்சரிக்கை மீன் ஆபத்து! உடனே நாம் அருகில் உள்ள ஓடை வழியாக வேறு குளத்திற்கு செல்வோம் என்று கூறியது. ஆனால் மற்ற மீன்கள் வேறு இடம் செல்ல மறுத்துவிட்டன. இனிமேல் இங்கு இருந்தால் ஆபத்து என முன் எச்சரிக்கை மீன் கருதியது. சிறிய நீரோடை வழியாக பக்கத்துக் குளத்திற்கு தப்பிச் சென்றது.

அந்த நேரத்தில் மீனவனது கைவலைக்குள் இரண்டு மீன்களும் சிக்கிக் கொண்டன. சமயோசித புத்தியுள்ள மீன் தனது முழு வலிமைகளையும் பயன்படுத்தி தப்பிக் கொண்டது. மற்றையது அந்த வலைக்குள் சிக்கிக் கொண்டது.

**முன் எச்சரிக்கையும் சமயோசித புத்தியும் வாழ்க்கைக்கு அவசியமாகும்.**

**செல்வி சி. பாஜனா**
தரம் 2B

## ஏமாந்த பூனை

ஒரு வீட்டில் பூனை ஒன்று இருந்தது. ஒரு நாள் அந்தப் பூனை ஓர் எலியைப் பிடித்தது. உடனே அந்த எலியைக் கடித்துத் தின்ன விரும்பியது.

எலி தன் சாதுரியத்தால் அதனை உணர்ந்து கொண்டது. உடனே எலி “மாமா! மாமா! பல்லைத் துலக்கிவிட்டு என்னைச் சாப்பிடுங்கள்; நல்ல ருசியாக இருப்பேன்” என்று கூறியது.

பூனையும் அதனை ஏற்றுக் கொண்டது. “நீ இவ் இடத்திலேயே இரு; நான் குளியலறைக்குப் போய் பல் துலக்கி வருகின்றேன்” என்று சொன்னது.

“சரி சீக்கிரமாய் வந்து என்னை சாப்பிடுங்கள்” என்று எலி கூறியது. புத்தியற்ற பூனையும் குளிக்கும் அறைக்குள் நுழைந்தது. உடனே எலி தப்பினேன் பிழைத்தேன் என்று துள்ளிக் குதித்து ஓடி மறைந்தது. பூனையோ ஏமாந்து போனது.

**செல்வன் க. கார்த்தியன்**
தரம் 1A

*“போரின் போது*
*உறுதியுடன் இருங்கள்*
*தோல்வியின் போது*
*எதிர்ப்புணர்ச்சியுடன் இருங்கள்*
*வெற்றியின் போது*
*வெகுள் தன்மையோடு இருங்கள்*
*அமைதியின் போது*
*நல்லெண்ணத்துடன் இருங்கள்”*

# இனிய தெய்வம் அம்மா

அம்மா எந்தன் தெய்வம்
ஆமாம் உண்மையதுவே
என்னைப் பெற்ற அம்மா
இனிய தெய்வம் ஆவாள்.

புழுதி போக்கி என்னைப்
புதிய நீரில் ஆட்டி
அழுதிடாமல் முத்தம்
அணைத்தே அன்பாய்த் தருவாள்.

பொன்னைப் பூட்டிப் பார்ப்பாள்
பொட்டும் வைத்துப் பார்ப்பாள்
என்னைக் கண்ணைப் போல
என்றும் அம்மா காப்பாள்.

பிள்ளை பிள்ளை என்று
பெருமையாகச் சொல்வாள்
கிள்ளி என்னைச் செல்லம்
கேட்க ஆசைப்படுவாள்.

அம்மா எந்தன் தெய்வம்
அவளே எனக்கு உலகம்
அம்மா இன்றி வாழ்வில்
ஆவதொன்று என்ன.

எம்மால் ஆகும் செயலை
என்றும் இனிமையாக்கி
அம்மா புகழை நாளும்
ஆக்கிக் காப்போம் வாழ்வில்.

**செல்வி சி. யகானா**
தரம் -2A

# பிந்தாமல் வாருங்கள்

தாமரைப் பூக்குளத்திலே
தவளை கத்துது இரவிலே
மாமி வீட்டுச் சுவரிலே
பல்லி சொல்லுது பகலிலே

சோற்றுப் பானை அடுப்பிலே
கொத கொதக்குது நெருப்பிலே
காற்றடிக்குது வெளியிலே
கறியைப் போடுங்கோ இலையிலே

பசி இருக்குது வயிற்றிலே
பார்வை சொல்லுது - கெதியிலே
பிசைந்து தின்னலாம் பிள்ளைகளே!
பிந்தாமல் முன்னே வாருங்களே!

**செல்வி நா. தேனுஜா**
தரம் 2A

# உயிரெழுத்து உண்மைகள்

அன்பு தெய்வம் அறிந்திடு
ஆசைகள் குறைத்து வாழ்ந்திடு
இனிய வார்த்தைகள் பேசிடு
ஈகை எண்ணம் பேணிடு
உயிரெனக் கல்வி கற்றிடு
ஊருக்கு நன்மை செய்திடு
எறும்பு போல் என்றும் உழைத்திடு
ஏற்றம் வாழ்வில் பெற்றிடு
ஐந்தில் நன்றாய் வளைந்திடு
ஒற்றுமை மேலென சேர்ந்திடு
ஓடும் காலம் பொன்னென மதித்திடு
ஔவை மொழிந்தவை நினைத்திடு.

**செல்வி தி. ஹம்சவாஹினி**
தரம் 10B

## எனது பாடசாலை

எனது பாடசாலையின் பெயர் யா/மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம். மீசாலைக் கிராமத்தில் அமைந்துள்ளது. எனது பாடசாலையை ஸ்தாபித்தவர் திரு. வே. வீரசிங்கம் அவர்கள்.. எமது பாடசாலை 1926-ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. எமது பாடசாலை முன்பு இருந்ததைவிட இப்பொழுது உயர் நிலைக்கு வந்து விட்டது. இதற்கு அதிபர் ஆசிரியர்கள் மாணவர்களின் விடாமுயற்சியே காரணமாக அமைகின்றது.

எமது பாடசாலையின் அதிபர் திரு. கு. சிவானந்தம் அவர்கள். தற்பொழுது அறுபது ஆசிரியர்கள் கல்வி கற்பிக்கின்றார்கள். ஆயிரத்து எண்பது மாணவர்கள் கல்வி கற்கின்றார்கள். தற்பொழுது எமது பாடசாலை நவோதயாப் பாடசாலையாகவும் ஆங்கில பாடத்துக்குரிய வெளிச்சவீட்டுப் பாடசாலையாகவும் தெரிவு செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு தெரிவு செய்யப்பட்டதற்கு முக்கிய காரணமாக கல்வி, கல்விசாரா அபிவிருத்தியில் துரித நடைபோடுவதாகும்.

எமது பாடசாலையில் எல்லா வசதிகளும் காணப்படுகின்றன. அதாவது கணனி அறை, ஒடியோ வீடியோ அறை, ஆய்வுகூட அறை, நூலக சேவை போன்றன காணப்படுகின்றன. எமது பாடசாலையில் முக்கிய நிகழ்வுகளாக பரிசளிப்பு விழா, விளையாட்டுப் போட்டி, ஆசிரியர் தினவிழா போன்றன நடைபெறுகின்றன. எமது பாடசாலை தற்பொழுது தனது எண்பது வயதை நிறைவு செய்யவுள்ளது. தற்பொழுது உள்ளது போல் இனிவரும் காலங்களிலும் வளர்ச்சியடைய எல்லோரினதும் விடா முயற்சியும் நம்பிக்கையும் இருத்தல் வேண்டும்.

**செல்வி சி. பாஷஜா**
தரம் 2B

## மழை நாள்

அன்று காலை தொடக்கம் வானம் மப்பும் மந்தாரமுமாகவே காட்சி தந்தது. சூரியனின் ஒளிமுகமும் வெளிப்படவில்லை. மாரிகாலத்தில் இது வழக்கந்தான். எனவே இன்று மழை பெய்யும் என்ற அளவில் முடிவு செய்து கொண்டு நாமிருந்தோம். ஆனால் அன்று பெய்த மழையின் பயங்கரத்தை இன்று நினைத்தாலும் நெஞ்சம் நடுங்குகின்றது.

இடி முழக்கம் காதுகளை செவிடுபடுத்தியது. மின்னல் கண்களைப் பறிப்பது போலப் பளிச்சிட்டது. இருந்தாற்போல் மழை 'சோ'' எனப் பொழியத் தொடங்கியது. வானத்திற்கும் பூமிக்குமிடையே வெள்ளிக் கம்பிகள் நிறுத்தி விட்டதுபோலப் பல மணித்தியாலங்கள் தொடர்ச்சியாக பெருமழை கொட்டியது. மழையின் பயங்கர நடனத்திற்கு இடி முழக்கம் மத்தளம் வாசித்தது. மின்னல் ஒளிவீச்சை வழங்கியது.

பகல் நண்பகலாகி, நண்பகல் மாலையாகி, மாலை இரவாகியும் மழை விட்ட பாடில்லை. வானத்திரையைக் கிழித்துக் கொண்டு வானகங்கை பூமியை முற்றாக அழிக்கத்தான் முற்பட்டு விட்டாளோ? உண்மையிலே என் சிறிய வாழ்நாளில் இத்தகைய பயங்கரச் சோனாமாரியைக் கண்டதில்லை. நான் மட்டுமா? என் பெற்றோரும் மற்றோரும் இதைத்தான் சொன்னார்கள்.

**செல்வி த. கவிநயா**
தரம் 2A

## தாயே தெய்வம்

முந்நூறு நாட்கள்
கருவோடு எனைச்சுமந்து
உன் மடியினில்
கனம் என்றும் பாராமல்
பசியோடு நீ இருந்து
என்னைப்பெற்றெடுக்க நீ
கல்லறையின் வாசலுக்கே
சென்று திரும்பினாய்.

உன் இரத்தத்தைப் பாலாக்கி
அதை நீ எனக்கு ஊட்டி
தாலாட்டிச் சீராட்டி
கண்ணை இமை காப்பதுபோல்
என்னைத் தினம் காத்தாய் தாயே
உன் பாசம் எனும் ஆழ்கடலில்
அன்பு எனும் முத்தெடுக்கவைத்தாய்
எனக்குத் துன்பம் எனும் போது
மனத்திற்கு ஆறுதல் தந்தாய்
என்கண்களில் கண்ணீர்
வந்தால் துடித்திடுமே உன் மனது
தெய்வத்திற்கு நிகர்நீயே
என்தாயே!

**செல்வி இ. யவிஷா**
தரம் - 7B

## முத்திறன்கள்

நாளைய உலகின் சிறுவர் நாம்
நல்ல நல்ல பிள்ளைகளாய்
வாழவேண்டும் வளஞ்சேர்ப்போம்
வையம் புகழ வாழ்ந்திடுவோம்.

கல்வி கற்ற பெரியோரைக்
காலம் எல்லாம் மதித்திடுவோம்
மெல்லப்பணிவோம் அவர் நாடி
மேலும் அறிவைக்கூட்டிடுவோம்.

கல்வி செல்வம் வீரமெனக்
காணும் திறன்கள் மூன்றுமே
வேண்டும் வேண்டும் வேண்டுமே
தூண்டும் சக்தி துணை பெறுவோம்.

விஞ்ஞானத்தின் ஆய்வு
மேலும் கூடக்கூட
அஞ்ஞானங்கள் அகன்று
அகிலம் வாழும் நன்கு.

சிவனும் கூடச் சக்தி
இன்றி இயங்காதென்பர்
எவரும் மறுப்பார் இல்லை
இதனால் சக்தி சக்தியே.

**செல்வன் சி. வித்தகன்**
தரம் 7C

## பெரு"மை"க்குத் தேவையானவை

- உயிர் போக நேர்ந்தாலும் நீ பேச வேண்டியது உண்மை
- மற்றவருடன் பேசும்போது உன்னில் கலந்திருக்க வேண்டியது இனிமை
- வெற்றி பெற என்றும் நீ ஒழுக வேண்டியது ஒற்றுமை
- கனவிலும் நனவிலும் நீ செய்ய வேண்டியது நன்மை
- இறுதி மூச்சு வரை நீ மீறாதே உன் கடமை
- வெற்றிக்கும் உயர்ச்சிக்கும் உன்னில் வேண்டும் என்றும் வல்லமை
- உன்னையே நீ சிந்தித்தறிய நீ அடிக்கடி தேட வேண்டும் தனிமை
- காலமெல்லாம் சிறப்புடன் வாழ நீ அணிய வேண்டியது பொறுமை

இவ்வாறு நீ ஒழுகிவிட்டால் நாளை நீ பெறுவது பெருமை.

**செல்வி வீ. நிரோஜா**
தரம் 10B

# கண்கண்ட தெய்வம் எங்கள் ஆசிரியர்கள்

"உழவன் உலகத்தின் உயிர் நாடி"; "உழவன் நாட்டின் முதுகெலும்பு" என்ற பழமொழிகள் உழவனை உயர்த்துவது போன்று "ஆசிரியர்கள் கண்கண்ட தெய்வங்கள், மாதா, பிதா, குரு தெய்வம்'' என்னும் முதுமொழிகள் ஆசிரியரின் உயர்வை எடுத்து இயம்புகின்றன. மேலும் "குரு நிந்தை செய்யாதே"; "குரு நிந்தை செய்பவன் குலத்துடன் அழிவான்" என்ற வாக்கியங்களும் குருவின் மதிப்பை மெருகூட்டி மேலும் உயர்த்துகின்றன.

ஆசிரியர் என்பவர் ஒவ்வொருவருக்கும் மனதிலுள்ள அறியாமையாகிய இருளைப் போக்கி, அறிவாகிய ஒளியைத் தருபவர். அந்த வகையில் ஆசிரியர்கள் தெய்வங்களாக மதிக்கப்படுகின்றனர். ஆ+சீரியர் ஆ என்றால் குற்றம், சீரியர் என்றால் போக்குபவர். ஆசிரியர் என்றால் குற்றத்தைப் போக்குபவர் எனப் பொருள்படும். இறைவனையும், எல்லாத் தெய்வங்களையும் நாளாந்தம் கண்ணால் பார்க்க முடியாது. ஆனால் ஆசிரியத் தெய்வங்களை ஒவ்வொருவரும் கண்ணால் பார்க்கமுடியும். இதனால் தான் "ஆசிரியர்கள் எமது கண்கண்ட தெய்வங்கள்'' எனப் போற்றப்படுகின்றனர்.

பழைய காலத்தில் இந்து சமயப் பாரம்பரியத்தில் மிகச் சிறப்பான இடம் குருவிற்கு வழங்கப்பட்டு வந்துள்ளது. குருவிடம் கல்வி கற்ற மாணவர்கள் மட்டுமன்றி சமுதாயத்திலுள்ள அனைத்துப் பிரிவினருமே குருவிற்குத் தனியிடம் கொடுத்து வந்துள்ளனர். பழைய காலத்திலிருந்த குரு - சிஷ்யர் என்ற நிலைமாறி இன்று ஆசிரியர் - மாணவர் என்ற வகையில் உறவு இருந்து வருகின்றது. குருவும், ஆசிரியரும் அறிவைப் புகட்டும் ஒரே செயற்பாட்டையே நிறைவேற்றுபவர்கள் ஆவர்.

"எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான்" "குருவின்றி வித்தை இல்லை" என்ற முதுமொழிகள் எல்லாம் எமக்குக் குருவின் மகிமையை தெளிவுறுத்துகின்றன. குரு அறிவு புகட்டுதல் மட்டுமன்றி, தனது வாழ்க்கை முறையால் தனது முன்மாதிரியினால், தனது எடுத்துக் காட்டுகளிலும் தனது மாணவர்கள் தன்னைப் பின்பற்றி செயற்படுமாறு நடந்து கொண்டனர். அதே போன்று தான் நல்லாசிரியர்கள் கல்வி புகட்டுவதுடன் குருவினுடைய நல்ல பண்புகளைக் கொண்டிருக்க வேண்டும் என இன்றும் சமுதாயம் எதிர்பார்க்கின்றது. அப்பணியை ஆசிரியர் குலம் நிறைவேற்றுகின்றது. குருவில் இருந்து ஆசிரியர் வேறுபட்டாலும், குருவின் பணி, நடத்தை இயல்புகளையே ஆசிரியர்கள் கொண்டிருக்கின்றனர். நல்லொழுக்கத்தினைக் கற்றுக் கொடுப்பவர்களாக ஆசிரியர்கள் விளங்குகின்றனர்.

பெற்றார் பிள்ளைகளைப் பேணுதல் போன்று இறைவன் அடியார்கள் மீது அன்பு காட்டுவது போன்று ஆசிரியரும் பெற்றாரைப் பிரிந்து பிள்ளை பள்ளி வரும்போது, பிள்ளைகள் மீது அன்பு காட்டி, அரவணைத்து அறிவூட்டி, பண்புடன் மாணவர்களை ஒழுக்கசீலர்களாக்கி கற்ற ஓர் சமுதாயத்தைப் படைக்கின்றனர். எனவே ஆசிரியர்கள் கல்வி அறிவைப் புகட்டுவது மட்டுமன்றி சமுதாயம் விரும்பும் நல்ல பண்புகள்

விழுமியங்கள் ஆகிய ஒழுக்கம், பெரியோரை மதித்தல், நல்ல பழக்க வழக்கம், தேசப்பற்று என்பவற்றையும் மாணவர்களிடையே புகட்ட வேண்டும். உலகத்தை இறைவன் படைப்பதுபோல் சிறந்த கற்ற அறிவுடைய கல்விச் சமுதாயம் ஒன்றை உருவாக்கும் பொறுப்பு ஆசிரியர்களுக்கே உரியது. இன்றைய மாணவர்களே நாளைய மன்னர்கள், நாட்டை வழி நடத்துபவர்கள். இதனால் மாணவர் சமுதாயம் ஊடாக நல்ல, சிறந்த, உயர்வான, கற்ற சமுதாயத்தைப் படைப்பவர்கள் ஆசிரியர்கள். இவ்வாறு சமுதாயப் படைப்புத் தொழிலைச் செய்வதாலும் ஆசிரியர்கள் இறைவன் ஆவார்கள்.

ஏனைய தெய்வங்களைக் கண்ணால் நேரடியாகப் பார்க்க முடியாது. தெய்வங்களாக மதிக்கப்படும் ஆசிரியர்களை நாம் கண்கண்ட தெய்வம் எனக் கூறுவதில் மகிழ்வடைகின்றோம். ஆசிரியத் தொழில் புனிதமானது. இதனால் புனிதச் செயலை செய்வதாலும் கண்கண்ட தெய்வம் ஆகின்றனர்.

இதனால் தான் மாணவ சமுதாயம் மட்டுமல்ல, இன, மத, மொழி வேறுபாடின்றி எல்லாச் சமூகமும் எமது நாட்டில் மட்டுமன்றி சர்வதேச ரீதியில் கூட இப் புனிதத் தொழிலைப் பாராட்டி அவர்களைப் போற்றி இறைவனுக்குத் திருஉலா எடுப்பது போன்று வருடத்தில் ஒக்டோபர் 6-ம் திகதியை உலக ஆசிரியர் தினமாகக் கொண்டாடுகின்றது.

ஆசிரியர்கள் தாமும் கற்றுக் கொண்டே தொடர்ந்தும் கற்பிப்பவர்கள். புதிய விடயங்கள், புதிய அறிவு, அனுபவங்கள் யாவற்றையும் எமக்கு வேண்டிய போதும், ஒழுக்கசீலர்களாக்குவதற்கும் கற்றுக் கொடுப்பவர்கள். ஆசிரியர்கள் நல்ல சமுதாயத்தைப் படைப்பதில் இறைவனாக, அன்பு காட்டுவதில் அன்னையாக, நீதி வழங்குவதில் நீதிபதியாக மேலும், நண்பனாக, வழிகாட்டியாக, ஆலோசகர், மதி உரைஞராக செயற்படுபவர்கள். ஒருவன் வாழ்க்கையில் முன்னேறும்போது தனது ஆசிரியர் வழியைப் பின்பற்றுதல், அவர்களை நினைவு கூரல், அதனால் அகமகிழ்தல் என்பன காணப்படுகிறது. ஒருவனின் வாழ்க்கை நல்ல வழியில் அமைய வேண்டுமானால் அவனுக்கு நல்லாசிரியர் ஒருவன் கிடைக்க வேண்டும்.

இவை எல்லாவற்றையும் தொகுக்கும்போது கல்வி என்பது சுடர் விட்டு இவ்வுலகில் பிரகாசிப்பதற்குத் தம்மை அர்ப்பணித்துச் செயற்படும் நல்லாசிரியருக்கு அவர்கள் பாதம் பணிய, சேவையைப் போற்ற ஆசிரியர் விழா எடுப்பதில் எவ்வித மாசுமில்லை. எம்மையெல்லாம் அறிவு புகட்டி நல்வழிப்படுத்தும் ஆசிரியர்கள் எமக்குக் "கண்கண்ட தெய்வங்கள்" என்று கூறுவதும் எமக்கு மேலான திருப்தியைத் தருகின்றது.

"வாழ்க ஆசிரியர் குலம்"
"வளர்க ஆசிரியர் பணி"

**செல்வி சி. லக்சியா**
தரம் 7B

## எங்கள் அதிபர்

கடமை கண்ணியம் கட்டுப்பாட்டுடன்
உடைமைச் சொத்தாம் பள்ளியினை
காலை தொட்டு மாலை வரை
துள்ளி வலம் வந்திடுவார்
எங்கள் அதிபர்.

கையில் உள்ள பிரம்பாலே
காளையரை அடக்கிடுவார்
கன்னியரைப் பணியச் செய்வார்
ஆசிரியர் குழாமுடன்
அன்புடனே நடந்திடுவார்
எங்கள் அதிபர்.

காலை வேளையிலே
சாலையெல்லாம் சனநெருக்கடியில்
இருக்கையில் விரைந்திடுவார்
பள்ளிக்கு
எங்கள் அதிபர்.

சிந்துகின்ற புன்சிரிப்பால்
சிந்து நடைதான் பயின்று
பள்ளியை வலம்வருவார்

ஆற்றல் உள்ள மாணவரை
ஆக்கிநிற்கும் கல்லூரியை
அரவணைத்துக் காப்பவர்
எங்கள் அதிபர்.

மேடையிலே ஏறிநின்றால்
தமிழ்வாடை வீசுமன்றோ!
சுதந்திரத் தமிழது சுந்தரச்செல்வனாம்
சிவானந்தருக்கு வலம் வந்து
வளைந்து கொடுக்குமன்றோ!

கங்கையைச்சூடிய கண்ணியவான்
அண்டத்தை ஆளுகின்ற — அந்த
ஆண்டவனின் நாமங் கொண்ட
சிவானந்தராம் எங்கள் அதிபர்
பலதும் பெற்றுப்
பல்லாண்டு காலம்
வீரசிங்கக் கல்லூரியில்
சரித்திரம் பலபடைத்து
சரித்திர நாயகனாய்
என்றும் வாழ்ந்திடுவார்.

**செல்வி J. கோபிகா**
தரம் - 8A

## இலங்கையின் கல்வி தொடர்பானவை

- இலங்கைப் பல்கலைக்கழகம் ஆரம்பம் - 1942 (கொழும்பு)
- இலவசக்கல்வி ஆரம்பம் - 1945
  - (இதனை அறிமுகப்படுத்தியவர்- C.W.W. கன்னங்கரா)
- பாடசாலை தேசியமயமாக்கப்பட்டமை - 1960
- இலவசப் பாடநூல் விநியோகம் - 1980
- தேசிய கல்வி நிறுவகம் ஆரம்பிக்கப்பட்டது - 1985
- தேசிய கல்வி ஆணைக்குழு அமைக்கப்பட்டது - 1990
- கட்டாயக் கல்விக்கான வயதெல்லை - 5 - 14 வயது
- பாடசாலைகளின் எண்ணிக்கை - 10,780 (1994-ல்)

**செல்வன் த. பிரதீபன்**
தரம் - 10C

# இலக்கியம் வாழ்க்கையை நெறிப்படுத்துகின்றது

இலக்கியம் காலத்தின் கண்ணாடி ஆகும். அந்தக் காலத்திலே இடம்பெறுகின்ற அரசியல் பொருளாதார சமய கலாசார அம்சங்களை அப்படியே படம் பிடித்துக் காட்டுவதாக அக் காலத்தில் எழுந்த இலக்கியங்கள் கூறுகின்றன. அதாவது கண்ணாடி எமது முகத்தை எவ்வாறு பிரதிபலித்து காட்டுகின்றதோ அதேபோன்றே ஆகும். தமிழ் இலக்கியம் மிகவும் தொன்மை யானது. இலக்கியங்கள் தோன்றிய பின்பே அவற்றுக்கு இலக்கணம் வகுத் தனர் என்பது ஆன்றோர் வாக்கு. சங்க இலக்கியங்களே தமிழ் மரபில் தொன் மையானவை. அவை பதினெண் மேற்கணக்கு நூல்களாகவும், எட்டுத் தொகை, பத்துப்பாட்டு நூல்களாகவும் உள்ளன. இவற்றின் பின்பு காலங் காலமாக பல இலக்கியங்கள் தோன்றிக் கொண்டேயிருக்கின்றன. அவை சமயச் சார்பு உள்ளனவாகவும், அற்றனவாகவும் குறிப்பிடலாம். ஆனால் இருவகை இலக் கியங்களும் வாழ்க்கைக்கு வேண்டிய நல் இலக்கியங்களாகத் திகழ்கின்றன.

திருக்குறள் வாழ்க்கைநெறியைக் காட்டுகின்ற மிகச்சிறந்த நூலாகும். அதுமட்டுமன்றித் திருமுறைகள் மற்றும் ஒளவையார் போன்ற பெரியோர்களின் பாடல்கள் இதேபோன்று சிறுகதைகள், நாவல்கள், குழந்தை இலக்கியங்கள் மற்றும் மகாபாரதம், இராமாயணம், புராணங்கள், தர்மசாஸ்திரங்கள் போன்ற இலக்கியங்கள் எல்லாம் வாழ்க்கைக்கு நல்வழி காட்டுபவையாக உள்ளன.

அநேகமான இலக்கியங்கள் ஒழுக்கத்தை வழங்குகின்றன. ஒழுக்கமே மேலான அறம் எனக் கூறுகின்றன. உயிரை விட மேலாக அதனை மதித்து வாழவேண்டும் என்று கூறப்பட்டுள்ளன. அவ்வாறாக இருந்தால் நல்வாழ்க்கை கிடைக்கும் என்பதை இலக்கியங்கள் காட்டுகின்றன. வள்ளுவப் பெருந்தகை "ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்" என்று கூறியிருக்கின்றார். இவ்வாறு அநேகமான இலக்கியங்கள் ஒழுக்கத்தை வலியுறுத்தி உள்ளன.

பொய் கூறாது உண்மை பேசி வாழ்வது நல்வாழ்க்கைக்கு உரிய நெறி யென்பதை இலக்கியங்கள் வலியுறுத்து கின்றன. அரிச்சந்திர புராணம் சத்தியத் தையும் அகிம்சையையும் வலியுறுத்தி யுள்ளது. உண்மை வாழ்க்கைக்கு உயர் வைத்தரும் என்கின்றது. உண்மை அழியாது என்பதைக் காட்டுகின்றது. இதைப் பின்பற்றி காந்தி மகான் உயர் வடைந்தது குறிப்பிடத்தக்கது.

அநேகமான இலக்கியங்களில் தர்மம் வலியுறுத்தப்படுகின்றது. தர்ம நெறியில் வாழ்பவர்களின் வாழ்க்கையில் சூது வந்தாலும் தர்மம் என்றைக்கோ வெற்றிபெறும் என்பது மகாபாரதத்திலே கிருஷ்ணரால் கூறப்பட்டுள்ளது. ஒளவை யார் "அறம் செய விரும்பு" என வலியுறுத்துகின்றார். பஞ்ச பாண்டவர்கள் தர்ம நெறியில் வாழ்ந்து உயர்வடைந் தனர். கர்ணன் கொடையால் புகழ் பெற்றான். அதர்ம வழியிலே வாழ்ந்த கௌரவர்கள் அழிந்தார்கள். தர்மத்தைக் காப்பதற்காகவே பாரத யுத்தம் நடை பெற்றது. திருவள்ளுவர் "அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை அஃதும் பிறன் பழிப்பதில்லாதாயின் நன்று" என்று கூறியுள்ளார். எனவே பிறர் பழித்துக்

கொள்ளாத வகையிலே அற நெறிகளில் இருந்து வழுவாது வாழ்க்கையைக் கடைப்பிடித்து ஒழுக வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. மேலும் திருக்குறள் "மனத்துக்கண் மாசிலனாதல் அனைத் தறன் ஆகுல நீரபிற " என்று கூறுகின்றது. அநேகமாக எல்லா இலக்கியங்களும் இதை உணர்த்துகின்றன. அது பிரச்சினை இல்லாத பண்பட்ட வாழ்க் கைக்கு உதவுவதாக அமையும்.

இராமாயணம் சகோதர பாசம், ஏகபத்தினிவிரதம், பெரியோரை மதித்தல், குருவை வணங்கல், கற்புநெறி போன்ற பலவேறு விடயங்களை எடுத்துக் கூறு கின்றது. சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற நூல்களிலும் கற்புநெறி காட்டப்பட்டுள்ளது. இவைகள் எல்லாம் இலக்கியங்கள் கூறுகின்ற வாழ்க்கை நெறி என்றே கூறலாம். அத்துடன் எவ் வகையான சூதுவாதுகளுக்கும் நாம் ஆட் படக்கூடாது என்பதையும் இலக்கியங்கள் காட்டுகின்றன. மேலும் மன அடக்கம், பொறுமை, கருணை, தயை, அன்பு, பக்தி போன்றவற்றை எல்லாம் அந்த இலக் கியங்கள் காட்டத்தவறவில்லை. சமய இலக்கியங்கள் அனேகமானவை இறை பக்தி, இறை நம்பிக்கை, வைராக்கியம், அடியார் பக்தி, அன்பு வழிபாட்டு நடை முறைகள், ஆசாரங்கள், நியமங்கள் போன்றவற்றை எடுத்துக்கூறி வாழ்க்கை யை வழிப்படுத்துகின்றது. குறிப்பாகப் பாவ புண்ணியங்களைப் பற்றி எடுத்துக் கூறி வாழ்க்கையை மேம்படுத்த உதவு கின்றது.

குறிப்பாக இலக்கியங்கள் உயர்ந்த அறிவைப்பெற வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றது. "கற்க கசடறக் கற்றவை கற்ற பின் நிற்க அதற்குத்தக" என்பதை வலியுறுத்து கின்றார். எனவே கல்வி அறிவுதான் மனிதனை நன்றாகச் சிந்திக்கவைத்து வாழ்க்கையை நெறிப்படுத்தவல்லது என்பது புலப்படுத்தப்படுகின்றது. பகவத் கீதை கூட ஞானம் எனும் தீயால் அஞ்ஞா னத்தை எரித்து சாம்பலாக்க வேண்டும் என்று கூறுகின்றது. மேலும் கீதையானது "கடமையைச் செய் பலனை எதிர் பாராதே" என்று கூறுகின்றது. இப்படிக் கூறி வாழ்க்கையை நெறிப்படுத்த உதவுகின்றது. இதனைப் பெரும்பாலான இலக்கியங்கள் சுட்டிக்காட்டுகின்றன. மேலும் களவெடுக்காதே, புறம்கூறாதே, பிறர் மனை விரும்பாதே, மது அருந் தாதே போன்ற பஞ்சமா பாதகங்களை நீக்கவேண்டும் எனக்கூறப்படுகின்றது என்பதை இலக்கியங்கள் வலியுறுத்து கின்றன.

அவ்வகையிலே தொகுத்துப் பார்க்கும்போது இலக்கியங்கள் எதைச் செய்ய வேண்டும் எதைச் செய்யக் கூடாது என்பதை தெளிவாகப் புலப் படுத்துவனவாக உள்ளன. பரஸ்பர புரிந்துணர்வுடன் வாழ்க்கை சிறப்படைய வேண்டும் என்பதற்காக அத்தனை விடயங்களையும் கூறுகின்றன.
"எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினும் அப்பொருள் மெய் பொருள் காண்பதறிவு" என்று கூறுவதற்கேற்ப இலக்கியங்கள் கூறுவனவற்றை நன்கு அறிந்து தேவை அற்றவற்றை நீக்கிவிட்டு தேவையான வற்றைப் பின்பற்றி வாழ்க்கையைச் செம்மைப்படுத்திக் கொள்ளவேண்டும். சமய இலக்கியங்களில் அநேகமானவை வாழ்க்கையை நெறிப்படுத்துவனவாக உள்ளன என்பது உண்மையாகும்.

**செல்வி சி. பவித்திரா**
தரம் 9C

# இது எப்படி இருக்கு?

ஓர் ஊரில் அன்பழகன் என்ற ஆசிரியர் வாழ்ந்து வந்தார். அவர் மிகவும் கெட்டிக்காரர். மாணவர்களுக்குப் பாடம் சொல்லிக் கொடுப்பதில் வல்லவர். ஆனால் கொஞ்சம் சோம்பேறி. சாப்பிட்டால் களைப்பு வரும். உண்ட களைப்புத் தொண்டனுக்கும் உண்டு என்பர். ஆசிரியர் என்ன விதி விலக்கா? பகல் சாப்பிட்டதும் வகுப்பில் அப்படியே கதிரையில் அமர்ந்து கொஞ்சம் தூங்குவார். மாணவர்கள் அவரைத் தொந்தரவு செய்ய மாட்டார்கள்.

வழக்கம்போல ஒரு நாள் பகல் முதலாம் பாட வேளை, வரலாற்றுப் பாடம் வழக்கம்போல பகல் சாப்பிட்டவுடனே ஆசிரியர் அன்பழகன் கொஞ்சம் கண்ணயர்ந்து தூங்கிவிட்டார். மாணவர் கையில் புத்தகத்துடனும் ஆசிரியரது தூக்கம் கலைந்து விடக்கூடாது என்ற நல்ல எண்ணத்துடனும் அமைதியாக இருந்தார்கள்.

அன்று எதிர்பாராதவிதத்தில் திடீரென்று கல்வி அதிகாரி இந்தப் பாடசாலைக்கு வந்துவிட்டார். முதலில் அன்பழகன் கற்பிக்கும் வகுப்பறைக்குள் நுழைந்துவிட்டார். மாணவர்கள் அனைவரும் எழுந்து வணக்கம் சேர் என்று கோரஸாக சத்தம் போட்டதில் ஆசிரியர் திடுக்கிட்டுத் தூக்கம் கலைந்து எழுந்தார். ஒரு நிமிடத்தில் விபரீதத்தைப் புரிந்து கொண்ட ஆசிரியர் மாணவர்களை நோக்கி மாணவர்களே! புத்த பெருமான் இப்படித்தான் காட்டில் போதி மரத்தின் கீழ் அமர்ந்து கண்களை மூடி தியானம் செய்தார் என்று சொல்லி புத்த பெருமானின் பாடத்தை மிகவும் அழகாக நடத்த ஆரம்பித்தார்.

ஆசிரியரின் சமாளிப்புத் திறனைக் கண்ட மாணவர்கள் தமக்கு வந்த சிரிப்பை அடக்கிக் கொண்டு பாடத்தைக் கவனித்தனர். இதனைக் கண்ட கல்வியதிகாரி பாடசாலையில் வைக்கப் பட்டிருக்கும் விசிட்டேஸ் நோட்டுப் புத்தகத்தில் ஆசிரியர் அன்பழகன் வரலாற்றுப் பாடத்தை மிகவும் தத்ரூபமாக மாணவர்களுக்குப் புரியும்படியாக நடித்துக் காட்டியது அற்புதமாக இருந்தது என்று பாராட்டி எழுதி வைத்துவிட்டுச் சென்றார். இது எப்படி இருக்கு?

**செல்வி உ. சானினி**
தரம் 9C

## இலங்கையில் பெரியவை

- பூந்தோட்டம் - பேராதனை
- குளம் - சேனநாயக்க சமுத்திரம்
- தீவு - தலைமன்னார்
- இயற்கை வனம் - சிங்கராஜ வனம்

## இலங்கையில் உயரமானவை

- மலை - பீதுறுதாலகால மலை உயரம் - 2524km
- குன்று - கொக்காகல
- நீர்வீழ்ச்சி - பம்பரகந்த

# சுவாமி விபுலானந்தர்

முத்தமிழ் வித்தகர் எனப் போற்றப் படுகின்றார் சுவாமி விபுலானந்தர். மட்டக் களப்பிலே காரைதீவு என்னும் ஊரில் 1892-ம் ஆண்டு பிறந்தார். இவரது தந்தை பெயர் சாமித்தம்பி; தாயார் பெயர் கண்ணம்மை. சுவாமி விபுலானந்தர்க்கு பெற்றோர் இட்டபெயர் மயில்வாகனன் ஆகும்.

மயில்வாகனாருக்கு கல்வியில் மிகுந்த ஆர்வம் இருந்தது. அவரது பத்தாவது வயதிலே அவரது கணித ஆற்றலைக் கண்டு அவரது ஆசிரியர்கள் வியப்படைந்தனர். தமிழ், ஆங்கிலம், வடமொழி ஆகிய மொழிகளை அவர் கசடறக் கற்றார். கொழும்பில் ஆங்கில ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் சேர்ந்து தம் இருபதாவது வயதினிலே பயிற்றப் பட்ட ஆசிரியரானார். இத் தகைமையில் இவர் மட்டக்களப்புக்குச் சென்று அங்கு இரண்டு ஆண்டுகள் வரை ஆசிரியராகப் பணியாற்றினார். அதே காலத்தில் மதுரை தமிழ்ச் சங்க பண்டிதர் பரீட்சையில் சித்தியடைந்தார். அவர் தம் இருபதாவது வயதினிலே யாழ்ப்பாணம் சென்று புனித பத்திரிசியார் கல்லூரியில் ஆங்கில ஆசிரியரானார். அங்கு கற்பிக்கும் காலத்தில் லண்டன் பல்கலைக்கழக விஞ்ஞானப்பட்டதாரிப் பரீட்சையில் சித்தி பெற்றார். பின்னர் மானிப்பாய் இந்துக் கல்லூரியில் அதிபர் பதவி அவருக்கு கிடைத்தது. மட்டக்களப்பு சிவானந்த வித்தியாலயத்தை நிறுவியவர் சுவாமி விபுலானந்தர் அவர்களே. அங்கும் அதிபராக இருந்தார். இன்று அக்கல்லூரி இலங்கையில் சிறந்த கல்லூரிகளில் ஒன்றாக விளங்குவது என்றால் சுவாமி கள் இட்ட அடித்தளமே ஆகும். அவர் மட்டக்களப்பு புனித மைக்கேல் கல்லூரி, மானிப்பாய் இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம் சம்பத்திரிசியார் கல்லூரி ஆகியவற்றில் இவர் ஆசிரியராகவும், திருகோணமலை இந்துக் கல்லூரியின் அதிபராகவும் கடமையாற்றினார். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலும் இலங்கை பல்கலைக்கழகத்திலும் முதல் தமிழ் பேராசிரியராகக் கடமையாற்றினார். இவரே உலகின் முதல் தமிழ்ப்பேராசிரி யராவார். விபுலானந்தர் தமிழ் மொழி மீது அளவிடாத பற்று வைத்திருந்தார்.

அடிகளாரின் தமிழ்த்தொண்டு பரந்தது. அவரது ஆக்கங்களுள் யாழ் நூல் என்னும் இசைத்தமிழ் ஆராய்ச்சி நூலும் மதங்க சூளாமணி என்னும் நாடகத்தமிழ் நூலும் குறிப்பிடத்தக்கன. சமயம், மொழி, பண்பாடு, இலக்கியம் முதலான துறைகளில் ஏராளமான கட்டுரைகளை எழுதினார். மேலும் பல சிறந்த செய்யுள் நூல்களையும், மொழி பெயர்ப்பு நூல்களையும் அவர் தமிழுக் குத் தந்துள்ளார். புதுமைக்கவிஞர் பாரதியின் கவிதைகளில் அவருக்கு மிகுந்த ஈடுபாடு இருந்தது. பாரதியை உலகுக்கு அறிமுகம் செய்து வைத்ததில் இவருக்குப் பெரும் பங்குண்டு.

1952-ம் ஆண்டளவில் இலங்கை யில் பாடசாலைகள் கல்லூரிகள், ஏழைச் சிறுவர் இல்லம், இராமகிருஸ்ண நிலை யங்கள் முதலியவற்றை நாட்டின் பல்வேறு பாகங்களில் நிறுவினார். இச் செயற்பாட்டினால் இவரை மக்கள் விபுலானந்த அடிகள் என்றழைத்தனர். சுவாமி விபுலானந்தர் பல கட்டுரை களையும் நூல்களையும் எழுதியுள்ளார்.

இவர் எழுதிய நூல்களுள் யாழ்நூல் என்பது மிகச் சிறந்தது. இவர் தமிழுக்கும் இந்து சமயத்திற்கும் ஆற்றிய தொண்டு கள் அளப்பரியன. அவர் ஆற்றிய தொண்டுகளிற்குத் தமிழ் மக்கள் என்றென்றும் கடமைப்பட்டுள்ளனர்.

சுவாமி விபுலானந்தர் 1947-ம் ஆண்டு யூலை மாதம் 19-ம் திகதி இவ்வுலகை நீத்தார். இவருடைய சமாதி மட்டக்களப்பு சிவானந்த வித்தியா லயத்து வளவில் அமைந்துள்ளது. அங்கு நிறுவப்பட்ட விபுலானந்த இசைக் கல்லூரியும் இதன் நினைவுச் சின்ன மாகும். அவர் நாட்டு மக்களுக்குச்செய்த கல்வி, தமிழ், சமயப்பணி காரணமாக இலங்கை அரசு தேசிய வீரர்கள் வரிசை யில் ஒருவராக அவரைச் சேர்த்துள்ளது.

**செல்வி உ. சாளினி**

தரம் 9C

# விடுகதை

1. எட்டப் பார்த்தால் இரும்புக் குண்டு எடுத்துப் பார்த்தால் இனிய பழம் அது என்ன? **- பனம் பழம்**
2. ஆக்கும் கறிக்கு ஆகும் பூ அனைவரும் உணவாகக் கொள்ளும் பூ அது என்ன? **- வாழைப் பூ**
3. மடியில் எடுத்துக்கடையில் விற்பது அது என்ன? **- பசுப்பால்**
4. புல்லுமேயாத அழகுமரை நிற்குது அது என்ன? **- தாமரை**
5. மனிதன் வாயிலே வளரும் பூ அது என்ன? **- சிரிப்பு**
6. தினமும் வருவான் புதினம் தருவான் அவன் யார்? **- செய்தித்தாள்**
7. நெட்டையான காலுடனே நீளமான கழுத்துடனே சுட்டுப்பொசுக்கும் மண்ணிற்கூட சுமையைத் தூக்கிச் செல்லுமே அது என்ன? **- ஒட்டகம்**
8. பட்டுப்போன்ற உடலுடனே சிலநிறத்தில் சிறகுடனே கட்டையான குரலுடனே களித்து நடனமாடும் அது என்ன? **- மயில்**
9. பாய்வேன் குதிப்பேன் வெள்ளத்தில் கத்துவேன் நீரில் நிலத்தில் வாழ்ந்திடுவேன் நான் யார்? **- தவளை**
10. மாணவர் கையில் இருந்திடுவேன் பெரியவரும் என்னை வாங்கிடுவார் அறிவு நிறைய அளித்திடுவேன் நான் யார்? **- புத்தகம்**

**செல்வி பே. ஆரணி**

தரம் 2A

# எனது பார்வையில் இன்றைய திரைப்படங்கள்

உலகிலுள்ள எல்லா நாடுகளுமே திரைப்படத் தொழிலிலே பெருமளவு ஈடுபட்டு வருகின்றன. பொருளாதார வசதியடைந்த பெருஞ்செல்வர்கள் மட்டு மன்றி முதலீடு செய்வதற்குப் போதிய வசதி இல்லாதவர்களும் திரைப்படத் தயாரிப்பில் ஆர்வத்துடன் ஈடுபடுகின்றனர். திரைப்படத்தில் இடப்படும் முதலீட் டினைக் கொண்டு பன்மடங்கு இலாபத் தினைச் சம்பாதிக்கலாம் என்ற எண்ணமே இதற்குக்காரணம்.

மக்கள் பொழுதுபோக்கில் நாட்ட முடையவர்கள். வாழ்க்கைத்தேவை களுக்காக நாளின் பெரும்பகுதியைச் செலவிட்டுக்களைத்த நிலையில் பொழுதை இன்பமாகக்கழிக்க அவர்கள் விரும்புவது இயல்பே. இவ்விருப்பத்தினை நிறைவு செய்வதிலே திரைப்படங்கள் முதன்மையான பங்கை வகிக்கின்றன. செல்வர்களைப் போன்று ஆடம்பரச் செலவுசெய்து பொழுதைக்கழிக்க முடி யாத சாதாரண மக்களுக்கே திரைப் படத்தில் கூடிய ஆர்வம் காணப்படுகிறது. எனவே திரைப்படத் தயாரிப்பாளர்கள் சாதாரண மக்களையே பெரும்பாலும் மனதிற்கொண்டு திரைப்பட வெளியீட்டில் ஈடுபடுகின்றனர். ஏனெனில் "சிறு துளி பெரு வெள்ளம்" என்ற பழமொழிக்கு இணங்க ஏழைமக்களிடமிருந்து சிறிது சிறிதாகப் பெறப்படும் பணமூலமே அவர் களின் முதலீட்டையும் இலாபத்தையும் பெறவேண்டியுள்ளது.

சாதாரண மக்கள் என்று கருதும் பொழுது அவர்கள் யாவருமே படிப்பறி வற்றவர்கள்; கலைரசனை அற்றவர்கள்; மிகவும் தாழ்ந்த கொச்சைத்தனமான விடயங்களையே ரசிப்பவர்கள் என்ற முடிவிற்கு வருவது தவறாகும். ஆனால் பொதுவாக இந்தக்கருத்தே பெரும் பாலான படத்தயாரிப்பாளர்களிடையே காணப்படுகின்றது. பாமரரஞ்சகமான நிகழ்வுகளுக்கே முக்கியத்துவம் கொடுத்து இவர்கள் படங்களைத் தயாரித்துப் பணம் ஈட்டுவதிலேயே குறியாய் இருக்கின்றனர். இக்காரணத் தினால் பெரும்பாலான திரைப்படங்கள் தரக்குறைவானவையாக வெளியா கின்றன.

வாழ்க்கையில் நடக்கமுடியாத ஆபத்தான சம்பவக்கதைகள், எவ்வகை யிலும் பொருத்தமில்லாத பாடல்கள், பெண்களின் மறைக்கவேண்டிய உறுப் புக்களை வெளிக்காட்டி ஆடும் ஆபாச நடனங்கள், ஒருவன் பலரை அடித்து வீழ்த்தும் நம்பமுடியாத சம்பவங்கள், கற்பழிப்பு, கள்ளக்கடத்தல், முதிராத இளைஞரது பருவக்கோளாறுகள், கொள்ளை, கொலை முதலியவற்றுக்கே இத்திரைப்படங்கள் முதன்மை வழங்கு கின்றன. "வளர்ந்தவர்களுக்கு மட்டும்" என்று வரையறைப்படுத்தி வெளியாகும் படங்களே கட்டுக்கடங்காத பாலுணர்ச்சி களுக்கு அதிகம் இடம்தருவதும் வன் செயல்களுக்கு அழுத்தம் தருவதும் இளைஞர்களைப் பிழையான வழி களிலே திசைதிருப்பி விடுகின்றது. வாழ்க்கை அனுபவம்பெறாத இவர்கள் திரைப்படங்கள் சித்திரிக்கும் வாழ்க் கையை உண்மை வாழ்க்கை என்று நம்பி அந்த வாழ்க்கை முறையினையே தமக்கு இலட்சியமாக வரித்துக்கொள் கின்றனர். இவ்வாறு கொள்வதாலே பிஞ்சிலேயே வெம்பிப்பழுத்ததோர் இளம் பரம்பரைக்கு வித்திடப்பட்டுவருகிறது. இப்பரம்பரையின் எதிர்காலம் இருள்

சூழ்ந்ததாகவே விளங்கப்போகின்றது என்பதை எவரும் சிந்திப்பதில்லை.

இவ்வாறு கூறும்போது திரைப் படத்துறையில் ஈடுபடுவோர் யாவருமே பணம் ஈட்டுவது ஒன்றையே குறிக் கோளாகக் கொண்டவர் என்பது பொருளன்று. இத்துறையிலே பொறுப் புணர்ச்சியுடனும் நிதானத்துடனும் நன்னோக்கத்துடனும் திரைப்படம் தயாரிப்பவர்களும் உள்ளனர். ஆனால் இத்தகையோருடைய படங்களுக்கு மக்களின் ஆதரவு மிகக்குறைவாகவே கிடைக்கிறது என்று பேசப்படுகின்றது. ஒன்றோ இரண்டோ படங்களைக் கலை நுட்பம் அமையும்வகையிலே தயாரித்து வெளிப்படுத்தி அவற்றிற்கு இடப்பட்ட முதல்கூடக் கிடைக்காத நிலையில் “இது எமக்குச் சரிவராது” என்று முடிவு கட்டிக்கொண்டு ஜனரஞ்சகம் என்ற பெயரில் தரங்கெட்ட உணர்ச்சிகளைத் தூண்டும் படங்களைத் தயாரிக்கத் தொடங்கி இழந்த முதலை மீண்டும் பெற முயல்கின்றனர்.

இவர்களின் தீர்மானத்தை தவிர்க்க முடியாது என்று சொல்வது சரியென்று, திரைப்படங்களை பணம் திரட்டும் சாதனமாக மட்டும் கொள்ளாது கலைத்துறைக்குப் பணியாற்றி மக்களை நெறிப்படுத்துவதும் கலையை வளர்ப் பதுமே எமது குறிக்கோள் என உறுதி பூண்டு செயற்படுவது தன்னலங் கருதா நல்லதொரு இயல்பாகும். திரைப்பட இயக்குநர்கள் சிலர் தயாரிப்பாளர் களாகவும் விளங்குகின்றனர். இவ் வாறானவர்களில் ஒரு சிலராவது கலை நுட்பத்திறன் உடையவர்களாகவும் தர மான திரைப்படங்களை வெளியிட வல்லவர்களாகவும் உள்ளனர். ஆனால் இவர்கள் தங்கள் ஆத்மதிருப்திக்கென்று சில கலைப்படங்களைத் தயாரித்து அவற்றால் ஏற்படும் இழப்புக்களைச் சரி செய்ய வர்த்தகப்படங்களையும் தயாரிக் கின்றனர். ஒருகையில் மதுபானத்தை யும் மறுகையில் பசுப்பாலையும் வைத் துக்கொண்டு மாறிமாறி இரண்டையும் அருந்துபவர்கள். இவர்களாலே சமுதா யத்திற்கு எவ்விதபயனும் இல்லை.

அதிகமான திரைப் படங்களைத் தயாரிக்கும் நாடுகளில் ஒன்றாக இந்தியா காணப்படுகிறது. இந்தியாவில் வெளியாகும் பலமொழித்திரைப் படங் களில் அதிகமான தொகையை தமிழ் நாடே வழங்குகின்றது. ஆனால் இந்தியா வில் நடைபெறும் திரைப்படப்போட்டி களில் தமிழ்த்திரைப்படங்கள் முதன்மை இடம்பெறுவது என்பது இன்றுவரை இல்லை என்றே சொல்லிவிடலாம். இதற்குக்காரணம் என்ன?

முதலில் நான் சுட்டிக்காட்டிய அத்தனை குறைபாடுகளோடு மக்களை அறிவற்றவர்களாகவும் விலங்கியல்பு வாய்ந்தவர்களாகவும் கருதிப்பணப் பைகளை நிரப்பும் தொழிலாகவே திரைப்படக்கலையைத் தமிழ்நாட்டுத் தயாரிப்பாளர்களும் இயக்குநர்களும் ஆக்கிவருகின்றனர். பண்பாட்டு விழு மியங்களைப் போற்றுபவர்கள் என்றும் ஒழுக்கத்தினை உயிரினும் மேலாகப் பேணுபவர்கள் என்றும் சிறந்ததொரு மொழிக்கும் உன்னதமான கலைப்பாரம் பரியங்களுக்கும் உரிமை படைத்தவர் கள் என்றும், மறைவாகத் தமக்குள்ளே பழங்கதை பேசிக்கொண்டு திரைப் படங்கள்மூலம் கலைக்கொலையும் பண் பாட்டு விழுமியக்கொலையும் ஒழுக்கக்

கொலையும் நடத்துவதே தமிழ்த் திரைப் படத் தயாரிப்பாளரதும் இயக்குனரதும் குறிக்கோளாக இருந்துவருகின்றன.

எனவே மக்களிடம் பணம் பறிக்கும் கலையாகவே திரைப்படக் கலை பொதுவாக உலகநாடுகளிலும் சிறப்பாகத் தமிழ்மொழி வழங்கும் நிலத்திலும் நிலவிவருகின்றது என்பதே "எனது பார்வையில் திரைப்படங்கள்" என்ற இக்கட்டுரையில் நான் வலியுறுத்த முற்பட்டகருத்தாகும். இதுவே, சிந்திக்கத் தெரிந்தவர்களதும் கலையுணர்வு படைத் தவர்களதும் பார்வையாகவும் கருத்தாக வும் இருக்கின்றது என்பது எனது உறுதியான நம்பிக்கை. இந் நம்பிக் கையை உடைத்தெறிந்து எதிர் காலத் தில் மக்களை மேனிலைப்படுத்தி அவர் களின் சுவையுணர்வைச் செவ்விதாக்கும் திரைப்படங்கள் வெளியாகுமானால் அதைவிட மகிழ்ச்சிதருவது வேறில்லை.

**செல்வி வீ. நிஷாந்தினி**
தரம் 10B

---

## வீரசிங்கம் அன்னைக்கு

*வீரசிங்கம் அன்னையே*
*உன்னைத் தலை வணங்குகிறேன்*
*ஆண்டு ஒன்று தொடக்கம் பத்து வரை*
*உன் மடியில் தவழ்ந்தேன்.*

*அன்னையே உன்னைப்*
*புகழ்கிறேன் ஏனெனில்*
*எப்பொழுதுமே என்னை*
*உன் குழந்தை என மதிக்கிறாய்.*

*அன்னையே எங்கள்*
*அதிபரையும் துதிக்கிறேன்*
*ஏனெனில் அவன் உன் தலைமகன்*
*ஆசான்களையும் மதிக்கிறேன்*
*ஏனெனில் அவர்கள் உன்*
*உடன்பிறப்புக்கள்.*

*அன்னையே உன்புகழ்*
*மேலும் வளரும்! என் ஆசிகள்!*
*நீயும் நீடுழி காலம் வாழ*
*வாழ்த்துகிறேன் அன்னையே.*

**செல்வி க. ஷிபாசினி**
தரம் - 11C

## உலக நாடுகளின் பண அலகுகள்

| | |
|---|---|
| இலங்கை | - ரூபா |
| அமெரிக்கா | - டொலர் |
| ஜேர்மனி | - மார்க் |
| இங்கிலாந்து | - ஸ்ரேலிங்பவுண் |
| நைஜீரியா | - நயா |
| சவுதி அரேபியா | - றியால் |
| யப்பான் | - யென் |
| சுவிற்சலாந்து | - பிராங் |
| டென்மார்க் | - கிறவுன் |
| இந்தியா | - ரூபா |
| பிரான்ஸ் | - இரோ |
| பிரேசில் | - குருசியரோ |
| லெபனான் | - பவுண் |
| சீனா | - யுவன் |
| கனடா | - டொலர் |
| பிலிப்பைன்ஸ் | - பேசோ |
| துருக்கி | - யூரோ |

**செல்வன் த. பிரதீபன்**
தரம் 10C

# எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்

உலகில் உள்ள சகல பொருட்களையும் பார்த்து இரசிப்பதற்கு கண் சிறந்த உறுப்பாகத் தொழிற்படுகிறது. இந்தக்கண்ணுக்கு எண்ணையும் எழுத்தையும் ஒப்பிடப்படுகிறது என்றால் எண்ணினதும் எழுத்தினதும் முக்கியத்துவம் சொல்லாமலே விளங்குகின்றது. எண்ணையும் எழுத்தையும் அரிச்சுவடியில் இருந்து ஒருவருக்கு ஐயமின்றிக் கற்பித்துவிட்டால் அந்த நபர் எதிர்காலத்தில் சிறந்த நற்பிரஜையாக வாழ்வார் என்பதில் எதுவித ஐயமுமில்லை. இதனாலன்றோ இளமையில் கல்வி சிலையில் எழுத்து என்று கூறப்படுகிறது.

ஒருநபர் வைத்தியராகவோ பொறியியலாளராகவோ ஆசிரியராகவோ அல்லது எந்தத் தொழிலில் ஈடுபட்டாலும் அவருக்கு எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும். எண்ணும் எழுத்தும் தெரியாத எத்தனையோ நபர்கள் வாழ்க்கையில் சிக்குண்டு தவித்து அல்லற்படுகின்றனர். குற்றம் செய்யாது இருந்த ஒருவரைக்குற்றவாளி என கடிதத்தில் எழுதி அவர்களுக்கு அனுப்பி வைத்து அவர்கள் முன்னிலையில் இன்சொற்களைப்பேசி அக்கடிதத்தில் அந்நபருக்கு ஏதோ நன்மையளிக்கக்கூடிய ஒன்று இருப்பதாகக் கூறி ஏமாற்றிக் கையொப்பம் இடுவிக்கின்றனர். பின் நீதி மன்றத்தில் விசாரணைக்கு அழைக்கும் போது அந்த அப்பாவிநபர் அந்தச் சூழ்ச்சியை உணர்ந்து அச்சமயத்தில் எழுத்துக்களைத் தான் கற்காததால் ஏற்பட்ட தீமையை உணர்ந்து வருந்துகின்றார். அப்போது தான் அந்த நபருக்கோ அல்லது அந்த நபருக்கு உரியவருக்கோ எழுத்தின் அருமைபெருமை புரியும். அதன் பின் அந்தநபர் கல்வியைத் தொடர்கிறார். இதன் மூலம் எழுத்து எவ்வளவு கண் என்பது புரிகிறது அல்லவா?

அறத்தான் வருவது இன்பம் என்பதில் 'ற' எனும் எழுத்தைவிட்டு எழுதினால் அத்தான் வருவது இன்பம் என்று மாணவர் எழுதும்போதே ஒரு எழுத்துப்பிழை பாரியதாக்கத்தை ஏற்படுத்தி நல்லபெறுபேறு பெறத்தடையாக அமைகிறது என்றால் எழுத்தின் முக்கியத்துவத்தைக் கூறவும் வேண்டுமா?

எண்ணையும் எழுத்தையும் மேலும் சிறப்புறச்செய்யத் தொலைக்காட்சி, வானொலி, பத்திரிகை போன்றவற்றை நாளாந்தம் பயன்படுத்த வேண்டும். நாவல்கள், சிறுகதைகள் என்பவற்றை வாசிக்க வேண்டும். சம்பாசனைகள், விவாதங்கள் போன்றவற்றில் கலந்துகொள்ள வேண்டும். பல அறிவாளிகளுடன் பழகுதல் வேண்டும். அவர்களின் அடுக்குவசனங்கள் போன்றவற்றை நாம் பெற்றுக்கொள்ள வேண்டும். கவிதைகளைப்படித்தல், கேட்டல், வாசித்தல் மூலம் எண்ணையும் எழுத்தையும் சிறப்புறவைக்கலாம்.

பிஞ்சு வயதிலேயே ஐயந்திரிபறக் கற்காது கவனயீனமாக விடப்பட்டு எண்ணைப்பற்றிய சரியான விளக்கமில்லாமையால் கணித பாடத்தில் சித்தியடையாது அந்தநபர் கல்வியைப் தொடராதுவிடுகிறார். இப்படிப்பட்ட பலர் கணக்குவழக்குச் சரியாகப்பார்க்க முடி

யாமையால் செல்வத்தைப் பறிகொடுத்து மனநோயாளியாகக்கூடத்திரிகின்றனர். நெற்றி வியர்வை சிந்தி உழைத்த பணம் இவ்வாறு பறிகொடுக்கப்படுகிறது என்றால் எண் எவ்வளவு முக்கியமானது என்பது புரிகிறது.

எண்ணும் எழுத்தும் உறுப் பமைய அமைந்துவிட்டால் அவை எல்லோர் கண்களையும் கவரும். இது மட்டுமல்ல இப்படியான நபரைப் பலர் பல வேலைக்காகத் தேடிச்செல்வார்கள். இப்படிப்பட்ட நபர்கள் பல பரீட்சைகளில் சித்திபெற எண்ணும் எழுத்தும் உதவும். இவர்களுடைய திறமையால் பல கற்ப னைகள்கூட வளர்ச்சியடையும். இவர் களினால் பலநல்ல சமுதாயம் உரு வாகும். இவர்களுடைய பேச்சுவன்மை எல்லோரையும் கவரவைக்கும்.

எழுத்தறிவற்ற மாணவர்களை மனிதாபிமானத்துடன் அவர்களை எழுத் தறிவுள்ளவராக்கி அவர்களையும் மனிதர்களாக வாழவைக்கும்போது அவர்களும் எண்ணும் எழுத்தும் கண் என்பதை உணர்ந்து இவற்றை வளர்த் தெடுக்கத் துணைபுரிவர்.

"பிச்சை புகினும் கற்கை நன்றே" என்பதற்கமைய எவ்வளவு வறுமையில் வாடியபோதும் எண்ணையும் எழுத்தை யும் கண்ணெனக்கருதிக் கற்கவேண்டும்.
"எண்ணும் எழுத்தும் இருவிழிகள்;
குருவின் பார்வை அருள்மொழிகள்"

இதனாலன்றோ எழுத்தறிவித்த வன் இறைவன் என்று பகரப்படுகிறது.

**செல்வி ப. பத்மஜா**
தரம் 10B

## இலங்கையின் சில தகவல்கள்

- இலங்கை 1948-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 04-ம் திகதி பிரித்தானியாவிடம் இருந்து சுதந்திரம் பெற்றது.
- சுதந்திர இலங்கையின் முதற்பிரதமர் டீ. எஸ். சேனநாயக்கா ஆவார்.
- இலங்கைப் பாராளுமன்றத்தில் 1972-ம் ஆண்டு மே 22 இல் இலங்கை சோசலிச ஜனநாயகக் குடியரசுயாப்பு நிறைவேற்றப்பட்டது.
- மே 22-ம் திகதி தேசியவீரர்தினமாகவும் குடியரசுத்தினமாகவும் கொண்டாடப்படுகின்றது.
- முதல் நிறைவேற்று அதிகாரம்கொண்ட ஜனாதிபதி என்ற பெருமை கௌரவ J. R. ஜெயவர்த்தன அவர்களுக்கே உரியது.
- இலங்கையின் முதலாவது பெண்பிரதமராக சிறிமாவோ பண்டாரநாயக்கா 1960-ம் ஆண்டு யூலை 20-ம் திகதி பதவியேற்றார்.
- இலங்கை சர்வஜன வாக்குரிமை 1931 இல் இயற்றப்பட்ட டொனமூர் யாப்பின் மூலமாக நடைமுறைக்கு வந்தது.
- இலங்கை தேர்தல்ரீதியாக 22 மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது.
- நிர்வாகரீதியாக 8 மாகாண சபைகள் 9 மாகாணங்களாக 25 மாவட்டங் களாக பிரிக்கப்பட்டது.
- இலங்கையின் சனத்தொகை அண்ணளவாக 1 கோடி 87 இலட்சம்.
- தாவரவியல் பூங்காக்கள் உள்ள இடங்கள் பேராதனை, ஹக்கல, கனேபத்த.
- இலங்கைத்தேசியகாங்கிரஸ் 1919-ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது.
- நாட்டின் தற்போதைய பரப்பு 65618 சதுரகிலோமீற்றர்.

# நம் வாழ்வு நலம்பெற

"நல்லன செய்வோம்
தீயன விலக்குவோம்"

விலங்கொடு விலங்காய் வாழ்ந்த மனிதன் தனித்துவமாய் விளங்கச் சிந்தனையறிவும் அதனாலாய நல்லொழுக்கமுமே காரணமாயின. புதியன புகுதலும் பழையன கழிதலும்போல நல்லனவற்றை நம்மில் சேர்க்கும்போதே அல்லன நீக்குமாற்றல் வேண்டும். சொல்லிலே மட்டுமல்ல செயலிலும் இவ்வுறுதி வேண்டும். நஞ்சுவிதை விதைத்தால் பஞ்சுமரம் முளைப்பதில்லை. முளைக்கீரை போட்டால் முருங்கைக் காய் காய்ப்பதில்லை. இது இன்று நேற்றல்ல, தொன்றுதொட்டு நிற்கும் உண்மை. "வினை விதைத்தவன் வினை அறுப்பான்" என்னும் பழமொழி இதற்குச் சான்றுபகர்கின்றது. வினைகள் இரு வகைப்படும். நல்வினை, தீவினை என்பன அவை. நல்ல வினைகள் புரிவோரை நல்லோரென நாடு போற்றுகிறது. மகாகவி பாரதியார் "உள்ளத்தில் உண்மை ஒளி உண்டாயின் வாக்கினிலே ஒளி உண்டாகும்'' என்கின்றார்; உண்மைதான். நல்லசொல், நல்லசெயல், நன்னடத்தைகள் என்பன தனிமனிதனை வளம்படுத்த வல்லன.

ஈரடியால் இந்த வையத்தை அளந்த திருக்குறள் சொல்வதை நோக்குவோம்.

"தீயவை தீய பயத்தலால் தீயவை
தீயினும் அஞ்சப் படும்"

தீ என்பது தீய்த்தலால் வந்த காரணப் பெயராகும். தீயசெயல்களும் தீயைப்போலவே தீக்கும் ஆற்றலுடையன. சேர்ந்தனயாவையும் அழிக்கும் இயல்பின. எனவே அவற்றைக் கொடுந் தீக்கு ஒப்பிடுகிறது குறளோவியம். அஞ்சுதற்குரிய பொருளாகத் தீயனவற்றை எடுத்துக்காட்டுகின்றது. அறநூலின் அறிவுரையை ஏற்றுத் தாமும் தீயன விலக்குதல் நன்று. இனி நல்லார்க்கு நல்லார் தீயார்க்குத் தீயார் என்று லகரங்கள் பல ஆடும் தமிழ்ச் சொற்சிலம்பத்தைப் பாருங்கள். நல்லெண்ணம், நன்னடத்தை உடையோர் நல்லார். இத்தகைய நல்லவர்களும், நல்லவர் பலரும் இனிமையாகப் பழகுவார்கள். தீயவழக்கமுடைய தீயவர்கள் நல்லவர்களுடன் இனிமையாகப் பழக மாட்டார். நம்மிடம் நற்பண்பொளி பிரகாசிக்கும்போது தீயபண்புகளுக்கு தம்மிடம் வேலைதான் ஏது? ஆகவே அடிப்படை நற்பண்புகளை வளர்த்துத் துர்க்குணங்களைத் துரத்தி அறக் கொள்கைகள் தழைக்கச் செய்வோம்.

"உன்னைத் திருத்திக்கொள்; உலகம் தானாகவே திருந்திவிடும்'' என்பது அறிஞர் கூற்று. நாம் ஒவ்வொருவரும் ஆண்டவனுக்கு ஒப்புக்கொடுத்து வாழவேண்டும். தவறுதல் மனித இயல்பு; தவறிலிருந்து திருந்தி வாழ்வைச் செழிக்கச் செய்யவேண்டும். நல்ல பண்புகளால் நம்முள் நாம் ஏற்றும் நல்லொளி, நாளை உலகெலாம் பரவித் தம்புகழ் பரப்பும். பொன்னும் மணியும் பொலிவும் செல்வமும் பின்னும் பிறவும் மன நிம்மதியைத் தந்துவிடுவதில்லை. பெருந்தனக் காரர்பலர் கனத்த மனத்துடன் அமைதியின்றித் தவிக்கிறார்கள். தீயவழிகளில் சேர்த்த பணத்துடன் நாளும் நிம்மதியின்றி வாடுகிறார்கள். புறத்தில் பெருமையாகக் காட்சியளித்தாலும் அகத்தினால் சிறுமையுற்று அவலப்படுகிறார்கள்.

பணம் உள்ளோர் அநாதை விடுதிகளை ஆதரித்தல், அறக்கோட்டங்கள் அமைத்தல், அன்னதானங்கள் செய்தல் என்பவற்றைச்செய்து மனநிறைவுடன் வாழ்தலே நன்று.

நற்பண்புகளைப் பழகுதல் ஒப்பீட்டுரீதியில் கடினமானது. தீயவை சேரச் சிலநிமிஷங்களேபோதும். உலகில் தாவர, விலங்கு வகைகளிலும்கூட தீயன தழைப்பதையும் நல்லன பெரும் முயற்சிகளின் மூலமே தோன்றுவதையும் அவதானிக்கலாம். ஆனாலும் நற்பழக்கங்களே இம்மைக்கும் மறுமைக்கும் நன்மை பயப்பன. ஆகவே இவற்றைப் பேணி வளர்க்க வேண்டும். ஒரு சமூகம் செழிப்புற நல்லன போற்றப்பட வேண்டும். தீயன அகற்றப்பட வேண்டும். இதற்காகவே நீதி வழங்கும் நடைமுறைகளும் அதற்கான சட்ட விதிகளும் உருவாக்கப்பட்டன. ஒவ்வொருவரும் தாமாகவே உணர்ந்து நல்லன செய்யவேண்டும் என்பது இதன் அடிப்படை நோக்கமாகும்.

வாழ்வாங்கு வாழ்பவர்கள் வானுறையும் தெய்வங்களாகப் போற்றப்படுகிறார்கள். இறப்பின் பின்னும் அழியாப் புகழுடைய இவர்களின் வாழ்க்கை வரலாற்றை நாமும் பிரதியெடுத்தல் வேண்டும். சிலர் செயலற்று சோம்பித் திரிந்து, அதனால் தாழ்வுற்று பின் தீச்செயல்களைப் புரிகிறார்கள். சிறுவயது முதற்கொண்டே உற்சாகமாக இருந்து நம்வாழ்வு முன்னேற்றத்தை மேம்படுத்த வேண்டும். ஒருகுடம் பாலுக்கு ஒருதுளி விஷம் போதும் என்பார்கள். நன்மைகள் பலவற்றை தீச்செயல் ஒன்றே முற்றாக அழித்துவிடும். பாசிபட்ட வெண்துணிபோல மாசுபட்ட மனதிற்கு என்றுமே நிம்மதி இல்லை. நல்லன மட்டும் செய்தால் போதாது. அல்லன நீக்கவும் அறிந்திருக்க வேண்டும். ஆகவே நாமும் நல்லன செய்வோம். அல்லன நீக்குவோம் நல்லொளி விளங்க, பெற்றோர் புகழ் பரப்பி, மற்றோர் வாழ்த்துக்களைப் பெற்று வளம்பெற வாழ்வோம்.

**செல்வி செ. லாகினி**

தரம் - 10A

---

## நாடுகளின் பழைய புதிய பெயர்கள்

| பழைய பெயர் | புதிய பெயர் |
|---|---|
| அபிசீனியா | எதியோப்பியா |
| கம்போடியா | கம்பூச்சியா |
| சிலோன் | ஸ்ரீலங்கா |
| கொங்கோ | ஷெயா |
| டச்சுக்கிழக்கிந்தியா | இந்தோனேசியா |
| சீயம் | தாய்லாந்து |
| பாரசீகம் | ஈரான் |
| மலாயா | மலேசியா |
| பர்மா | மியன்மார் |
| தென்றொட்சியா | சிம்பாப்வே |

**செல்வன் த. பிரதீபன்**

தரம் -10C

## துணுக்குகள்

வளரும் செடி கொடிகளுடனும்
குழந்தைகளுடனும் பழகினால்
மனக்கவலை பறந்துவிடும்.

முள் எடுக்கும்போது துன்பம்
தந்தேதீரும்; அனுபவம் ஒரு பேராசான்.

சொல்லை விதையுங்கள்;
பழக்கம் உருவாகும்
பழக்கத்தை விதையுங்கள்;
குணம் உருவாகும்
குணத்தை விதையுங்கள்;
எதிர்காலம் உருவாகும்.

# ஆங்கிலக் கல்வியின் முக்கியத்துவம்

நீளமாய்ப் பரந்து நிலவும் வெளியும் நீலக்கடலும் மலையும் மஞ்சுமாய் வியாபித்திருக்கிறது அகிலம். ஆயினும் ஆற்றல்மிக்க மனிதகுலத்தினிடத்தே அது கைக்குள் அடங்கியதாய் மனிதனின் காலடியில் காத்திருக்கிறது. அவ்வாறெனின் இந்நிகழ்வு புவியியலில் விளைவிக்கப்பட்ட சடத்துவமாற்றத்தினால் நிகழ்ந்ததா?

இல்லை! அறிவியலில் ஏற்பட்ட அசுர வளர்ச்சியினால் ஏற்பட்ட விளைவு இது! கால்நொடிப்பொழுதில் கணக்கில்லாத் தூரம் கடந்து வல்லமை விளைந்த அற்புதம். நம் மூதாதையரின் பரிணாமத்தோடு நூற்றுக்கணக்கான உலகியல் மொழிகள் தோற்றம்பெற்றன. ஆயினும் அவற்றில் சில வழக்கிழந்தன. சில பேச்சு மொழியாக மட்டுமே வழங்கி வந்தன. சிலமொழிகள்மட்டும் எழுத்திலும் பேச்சிலும் இலக்கண வரையறைக் குட்பட்டு இயங்கிவருகின்றன. இவ்வாறான மொழிகளில் மணிமுடிசூடி, மனிதகுலத்தின் பொதுமொழியாக ஆங்கிலமொழி விளங்குகின்றது.

ஆங்கிலமொழியானது இன்றைய உலகில் அதிமுக்கியமான தொடர்பாடல் மொழியாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. தொடர்பாடல் என்னும் பதமானது தன்னகத்தே பாரியபொருளையும் பல்வேறு விதமான செயற்பாடுகளையும் கொண்டிருக்கின்றது. இச்செயற்பாடுகள் யாவற்றுக்கும் கைகொடுக்கின்ற மொழியாக ஆங்கிலமொழி திகழ்கிறது. பூமியானது மனிதரால் எல்லையிடப்பட்டு நாடு என அழகாக வகுக்கப்பட்டுள்ளது. நாட்டுக்கு நாடு, சிலவேளைகளில் ஒரு நாட்டின் இருவேறு பிரதேசங்களில்கூட வாழும் மக்கள் பல்வேறு இயல்புகளால் வேறுபடுத்தப்படுகின்றனர். இவ்வேறுபாட்டில் பிரதானமானது மொழியில் காணப்படும் பாகுபாடாகும். தன்னை உணரச்செய்து தானும் மற்றோரை உணர்கின்றதிறனையும் வழங்குவது மொழியேயாகும். தனிமையாக்கப்படும் தன்மையைநீக்கி வெவ்வேறு மொழியாளரை இணைக்கின்ற பாலமாய் ஆங்கிலமொழி உதவுகின்றது. இன்றையகாலகட்டத்தில் பல்வேறு காரணங்களுக்காகத் தேசங்கள் ஒன்றிலொன்று தங்கியுள்ளன. எல்லைப் படுத்தப்பட்ட வளங்களும் வெவ்வேறுபட்ட அறிவியல் ஆற்றலும் தங்கிவாழ்வதை தீர்மானிக்கின்றன. ஆதலால் தேசங்களிடையே ஏற்படும் உறவுகளை வளர்க்கின்ற உற்றதுணையாக ஆங்கிலம் விளங்குகின்றது.

ஆதி நாள்களில் நம் முன்னோர் முயன்றுபெற்ற அறிவுப்பொக்கிஷங்கள் மொழியென்னும் சிறையுள் இட்டுப் பூட்டப்பட்டிருந்தன. அந்த அறிவுச் செல்வத்தைப் பயன்படுத்தும் ஆற்றலை அம்மொழியாகிய திறப்பை உடையவர்கள் மட்டுமே பெற்றிருந்தனர். உதாரணமாக ஐரோப்பாவின் அறிவியல் மறுமலர்ச்சி ஏற்பட்ட பிரதேசங்களில் வாழ்ந்த பல்துறைசார் அறிவியல் விற்பன்னர்கள் தங்களது அரியகண்டுபிடிப்புக்களை தங்களது தாய்மொழியில் வரையறுத்ததைக் கூறலாம். இவ்விடரினை நீக்கி எல்லோரும் அறிவினைப் பெறுவதற்கு ஆங்கிலமொழி உதவியது, உதவுகின்றது, இனியும் உதவும். அறிவியலின் படைப்புகள் பெரும்பாலும் ஆங்கிலமொழிமூலமே

மக்களிடையே பரவுகின்றன. ஏனெனில் உலகின் மூலைமுடுக்கெங்கும் ஊடுருவி, வேர்பிடித்து உலாவிவருவது ஆங்கில மொழியேயாகும். எனவே சகலமட்டத் தினருக்கும் ஆற்றலை வளர்க்க, அறிவை உயர்த்த ஆங்கிலமொழி உதவுகின்றது.

ஒரு பிரிவுமில்லாப் பூமியானது பண்பாடு, பொருளாதாரம் என்பவற்றினால் மேலைத்தேயம், கீழைத்தேயம் எனப் பாகுபடுத்தப்படுகின்றது. பொய்யான யாவற்றையும் நீக்கி, மெய்யான ஒன்றைப் பற்றுதலே வாழ்வு என்கிறது கீழைத் தேயம். ஆற்றலின் ஊற்றுக்கண்ணாய் அறிவினை நம்பிவாழ்கின்றது மேலைத் தேயம். இவ்விரு துருவங்களாக வேறுபட்டு நிற்கின்ற இருபிரதேசங்களும் தங்கள் கொள்கைகளைப் பரிமாறிக்கொள்ளும் போதெல்லாம் ஆங்கிலமே அங்கு கை குலுக்கிக் கொள்கின்றது. இதற்குச் சான்றாகத் திருக்குறளும் கீதாஞ்சலியும் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்ட தைக் கூறலாம். இவ்வாறாக ஆங்கிலம் அன்பைவளர்க்கின்றது. அறிவைப் பெருக்குகின்றது. மேதைமொழியென பலராலும் போற்றப்படுகின்ற ஆங்கிலம் அளிக்கின்ற சேவைகள் மிகப்பல.

இவ்வாறு பல அருமை பெருமை களையுடைய ஆங்கில மொழியைப் பயில்வதற்கு சர்வதேசமும் விழை கின்றது. இதன்படியே எங்கள் நாடும் ஆங்கிலமொழிக்குப் பாடவிதானம் ஆக்கியுள்ளது. "ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?'' என்பது ஆன்றோர் சிந்தனை. அதனால்தான் இள வயது முதலே ஆங்கிலத்தைப் புகட்டு வதும் பெறுவதும் அனைவர்க்கும் இயன்றசெயலாகின்றது. குறித்த தேசத் துக்கு மட்டுமுரிய மொழியானது கிணற்றுநீரை ஒத்தது. அதாவது தேவையை நிறைப்பது ஆயினும் அதன் உள்ளடக்கம் குறுகியதேயாகும். ஆனால் ஆங்கிலமொழியோ பொங்கிப்பாய்கின்ற நதியொன்றின் உத்வேகத்துடன் நானி லத்தை அளந்துவருகின்றது. நன்மை பல விளைவிக்கின்றது. ஆதலால் ஆங்கிலக்கல்வியின் அளப்பரிய நன்மை யினை உணர்ந்து அதனைப் போற்றிக் கற்போமாக!

**செல்வி ந. தயாநிதி**
தரம் - 10A

## இலங்கை

- இலங்கையின் மிக நீளமான பாலம் வேலணை - புங்குடுதீவுப் பாலம். இது 3 மைல்கள் நீளமானது.
- இலங்கையின் புற்றுநோய் தடுப்புச் சங்கம் 1948-ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. தேசிய புற்று நோய் மருத்துவமனை மஹரகமவில் அமைந்துள்ளது.
- இலங்கையின் இலவசக்கல்வித்திட்டம் 1945-ம் ஆண்டு C.W.W. கன்னங்கராவினால் அறிமுகப்படுத்தப்பட்டது.
- பாடசாலையில் இலவசப் பாடநூல் வழங்கும் திட்டம் 1980-ல் நடை முறைக்கு வந்தது.
- பாடசாலை மாணவர்களுக்கு இலவச மதியஉணவுமுத்திரை வழங்கும் திட்டம் 1990-ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது.
- இலவசப் பாடசாலைச்சீருடை வழங்கும் திட்டம் 1992 இல் நடைமுறைக்கு வந்தது.

# சேமிப்பின் நன்மை

இன்றைய நவீன உலகில் நாளுக்குநாள் மனிதனின் தேவைகள் அதிகரித்துச் செல்லும்வேளையில் நாம் அனைவரும் சேமிப்புப்பற்றி சற்றேனும் சிந்தித்துப்பார்க்க வேண்டும். அந்த வகையில் சேமிப்பு என்பது மனிதனின் வருமானத்திலிருந்து செலவீனத்தை நீக்கி எஞ்சியுள்ள பகுதியாகும். ஆதலால் சேமிப்பு இன்றி மனிதனால் வளமாக வாழமுடியாது. சேமிப்பே மனிதனின் வாழ்வை வளமாக்கி முதலீட்டுக்கு வித்திடுகின்றது. இந்தச்சேமிப்பானது சிறிய அளவிலோ அல்லது பெரிய அளவிலோ அல்லது சிறியவர் பெரியவர் என்ற வயதுவேறுபாடின்றியோ மேற்கொள்ளமுடியும்.

ஒருமனிதனானவன் அதிகரித்து வரும் தேவையைப் பூர்த்திசெய்வதற்கு முதலீடானது இன்று அத்தியாவசியமான ஒன்றாக உள்ளது. மனிதனின் வாழ்வானது ஒரு நீர்க்குமிழிபோல நிலையற்றது. அந்த வாழ்வில் தேவைகளோ ஓராயிரத்தைத்தாண்டி நிற்கின்றன.

ஒருவன் சேமிப்பதை அதிகரித்து முதலீட்டைக் கைப்பற்றுவதாயின் அவன் நுகர்வுச்செலவைக் கட்டுப்படுத்தி முதலீட்டுச்செலவை அதிகரித்தல் வேண்டும். முதலீட்டு மார்க்கங்கள் ஏராளம் உள்ளன. இவற்றில் எமக்குப் பொருத்தமான ஏதாவதொன்றைத் தெரிந்தெடுத்து மேற்கொள்ளலாம்.

அடுத்து, நாம் சேமிப்புமார்க்கங்களை நோக்குவோமாயின் வங்கிகள், காப்புறுதித்திட்டங்கள், சீட்டிழுப்புக்கள், சமுர்த்திவங்கித்திட்டம் போன்றவற்றைக் கூறலாம். இந்தவகையில் இன்றைய தேவைகள் அதிகரித்த உலகிலே மனிதனின் சேமிப்பை அதிகரிக்க வங்கிகள் முண்டியடித்துக்கொண்டிருக்கின்றன. அடுக்கடுக்காகவும் அணியணியாகவும் அரசவங்கிகளும் தனியார்வங்கிகளும் அலங்கரித்து நிற்பதை நாம் கண்கூடாகக் காண்கிறோம். இதன்மூலம் மனிதனின் சேமிப்பு ஆற்றல் எவ்வளவிற்குக் களை கட்டி நிற்கிறது என்பதற்கு இங்கே இரண்டு வாதம் கிடையாது.

இங்கு தனிமனிதனின் சேமிப்பானது அவனது குடும்பசேமிப்பாக மாறுகின்றது. இதன்மூலம் அவனதுகுடும்பம் குதூகலிக்கின்றது. தன்தேவைகளை செவ்வனே நிறைவேற்றுகிறது. இந்தத் தனிமனிதச்சேமிப்பானது அந்தக்குடும்பத்துடன்மட்டும் நின்றுவிடாது தேசிய சேமிப்பிலும் பங்கெடுத்துத் தேசிய உற்பத்தியில் மாற்றத்தை ஏற்படுத்தி நாட்டை அபிவிருத்திப்பாதையில் இட்டுச் செல்கிறது எனும்போது சேமிப்பின் ஆற்றல் எவ்வளவு முக்கியத்துவமானது என்பதை தெட்டத்தெளிவாக எடுத்துக் காட்டுகிறது.

இன்றைய நவீனவிஞ்ஞான உலகில் விண்வெளிச்சுச் சுற்றுலா செல்லுமளவிற்கு மனிதன் விருத்தியடைந்துள்ளான். அப்படியிருக்க நாமும் நவீன யுகத்தை எட்டிப்பிடிக்கப் பணம் இன்றியமையாததாகிவிட்டது. ஒருநாட்டின் அபிவிருத்திக்கு மட்டுமன்றி அதன் அறிவு வளர்ச்சிக்கும் இதுமுக்கியமான ஒன்றாகும்.

சேமிப்பை நாம் சிறியஅளவிலோ பெரியஅளவிலோ மேற்கொள்ளமுடியும். சேமிப்பை மனிதன் மேற்கொள்ளும்போது

அவன்மனம் நல்லனவற்றையே சிந்திக்கும். தீயஎண்ணங்களில் சிந்திக்கவோ செயற்படவோ நேரம்கிடைக்காது. எனவே அவன் நல்லதொரு மனிதனாக உருவெடுக்கிறான்.

அடுத்து இந்தசேமிப்பானது சின்னஞ்சிறியவர்களுக்கு மேற்கொள்ளும்போது அது பெரியதொரு முதலீடாகவும் அவர்களை ஊக்குவிக்கும் ஒரு செயற்பாடாகவும் அமைகிறது. அது மட்டுமன்றி பெற்றோர்களை சிறுவயதில் இழக்க நேரிடும் பிள்ளைகளுக்கு அது பெரிய உதவுதொகையாகவும் அவர்களின் கல்வி, மேற்படிப்பு, திருமணம் போன்ற தேவைகளுக்கு அவர்களது பெற்றோர்களே நேரடியாக வந்து உதவுவதுபோன்ற பிரமையாகஇருக்கும். அத்துடன் அவர்களால் புலமைப்பரிசில் திட்டம், திருமணப்பரிசு, வெளிநாட்டுப் பயணம் போன்றவற்றையும் வென்றெடுக்க முடியும்.

எனவே ஒருமனிதனுக்கு சேமிப்பானது அவனுடன்மட்டும் நின்றுவிடாது அவன்குடும்பம், குடும்பத்தின் எதிர்காலம், பிள்ளைகளின் வளமானவாழ்வு, நாட்டின்தேசியஅபிவிருத்தி, கல்வி வளர்ச்சி போன்ற பலநன்மைகளுக்கு அத்தியாவசியமாக அமைகிறது என்பதை யாராலும் மறுக்கவோ மறைக்கவோ முடியாது என்பதை நாம் ஆணித்தரமாகக் கூறமுடியும்.

"சிறு துளி பெருவெள்ளம்
சிறு சேமிப்பு பெருமுதலீடு"

**செல்வி செ. வாணதி**
தரம் $10^B$

# துணுக்குகள்

ஐ *இயன்றது அனைத்தையும் செய்யாதே*
*இருப்பது அனைத்தையும் கொடுக்காதே*
*கேட்பது அனைத்தையும் நம்பாதே*
*அறிந்தது அனைத்தையும் கூறாதே.*

ஐ *துன்பப்படாதவன் வாழவேயில்லை*
*தோல்வியுறாதவன் முயலவேயில்லை*
*வம்பியில்லாதவன் சிரிக்கவேயில்லை*
*சந்தேகப்படாதவன் சிந்தித்ததேயில்லை.*

ஐ *உண்மையுள்ளவனுக்குக் கவலையில்லை*
*அறிவுள்ளவனுக்கு மயக்கமில்லை*
*தைரியமுள்ளவனுக்குப் பயமில்லை.*

ஐ *கௌரவமும் வைராக்கியமும் மனிதனுக்கு*
*மிகமிக அவசியமானவை - ஆனால்*
*வெறியாக, விதண்டாவாதமாக, பைத்தியக்காரத்தனமாக*
*அமைந்துவிடக்கூடாது.*

## கல்வி நம் வாழ்க்கையே

துள்ளித் திரியும் பள்ளிப் பருவத்தில்
ஞாலம் போற்றும் சீரிய கல்விதனை
கண்ணியமாய்ப் போற்றிப் பண்புடனே நடக்கும்
மாணவராம் நாம் கல்விதனை என்றும் மறவோம்
பெற்றோர் சொற்கேட்டு பணிவாய் நடந்திடுவோம்
அறிவுச் சுடரை அள்ளிச் சொரியும்
ஆசான்கள் தாள் பணிந்து அள்ளி வழங்கும் கல்விதனை
ஆசையுடன் பயின்றிடுவோம்
அனைத்து மாணவரையும் நம் சோதரராய் மதித்திடுவோம்
பாடசாலைக் கல்விதனை பணிவுடனே மதித்திடுவோம்
அதிபர் ஆணையை சிரமேற் கொண்டிடுவோம்
கல்விக் கண்ணைத் திறந்து வைத்த கல்லூரியை
காலமெலாம் நினைத்திடுவோம்
கல்லூரி வாழ்க்கை கரைந்தோடி மறைந்தாலும்
கல்லூரியில் கற்ற கல்விதனை ஒழுக்கமாய்த் தொடர்ந்திடுவோம்
கல்வியால் பெற்ற தொழிலைக் கண்ணியமாய் மதித்து
கல்வியின் பேருதவியை காலமெலாம் போற்றிடுவோம்
நாட்டுப்பற்றைக் கல்வி மூலம் மக்களிடம் விழிப்புறச் செய்து
அனைத்து மக்களையும் ஒற்றுமையாய் வாழச் செய்து
நாட்டில் கல்வி அபிவிருத்தியை நாட்டியே நின்றிடுவோம்.
என்றும் கல்வியே வாழ்க்கை என்று வாழ்ந்திடுவோம்.

**செல்வி யோ. வக்சலா**
தரம் - 10B

## அன்புள்ள ஆசான்

அன்புள்ள ஆசானிடம்
ஆசையாய் படித்திட
சுணக்கம் எதுவும் இல்லாமல்
வணக்கம் கூறி அமருவோம்.

ஆவலுடன் நாங்களும்
அக்கறையாய் படித்திட
அறிவுரைகள் பலவுடன்
தெளிவுடனே போதிப்பார்.

அன்புள்ள ஆசானின்
ஆசிகளைப் பெற்று
அனைவரையும் பேணி நாம்
அறவழியில் வாழுவோம்.

நல்ல பிரஜைபாகவே
நாங்கள் நாளை விளங்கிட
நாளும் உழைக்கும் ஆசானை
ஆண்டவன் அருளினால் போற்றிடுவோம்.

**செல்வி தி. ஹம்சவாஹினி**
தரம் - 10B

# வளமான வாழ்க்கைக்கு தொழில்நுட்பக்கல்வியின் பங்களிப்பு

"ஏட்டுச் சுரைக்காய் கறிக்குத வாது" என்பது பழமொழி. கல்வி ஏட்டின் அளவில் நின்றுவிடக்கூடாது. அது வாழ்க்கைக்குப் பயன்படும் அளவில் அமையவேண்டும் என்பது அதன்பொருள். மனிதனுக்கு அறிவைப்புகட்டுவது கல்வி. அது அனுபவத்தாலும் கிடைக்கலாம், ஆசான்மூலமும் கிடைக்கலாம். அக் கல்வியின்மூலம் அறிவைப்பெற்று தம் வாழ்வைச் சீர்படுத்திக்கொள்ள வேண்டியது மாணாக்கரது கடமை. கல்வியின்நோக்கம் வாழ்வைச்சீர்படுத்து வது மட்டுமன்று, வாழ்க்கைக்கு வழி காட்டுவதுமாகும். ஒருவன்வாழ தொழில் புரியவேண்டியது அவசியம். தொழில் புரியவேண்டுமாயின் தொழிலறிவு அவசியம். தொழிலறிவைப் புகட்டும் கல்வியே தொழில்நுட்பக்கல்வி என அழைக்கப்படுகிறது.

இன்று இலங்கையிலேயே பல வழிகளிலே தொழில்நுட்பக்கல்வி புகட்டப்படுகிறது. பாடசாலையிலே தொழில்நுட்பக்கல்வி புகட்டப்படுகிறது. கல்விப்பொதுச்சாதாரணப் பரீட்சை எடுக்கும் ஒருமாணவன் தொழில்நுட்பக் கல்வியொன்றைக் கற்கிறான். ஒன்பதாம் தரத்தில் தொழில்நுட்பப் பாடத்துக்கான பரீட்சை நடத்தப்பட்டு மாணவர் திறமை வளர்க்கப்படுகிறது. இவை, பாடசாலை மட்டத்தில் தொழில்நுட்பக்கல்வியறிவை ஊட்டும் முயற்சியாகும்.

இலங்கையில் இத்தொழில்நுட்பப் பாடத்தைக் கற்பதற்கான பல தொழில் நுட்பக்கல்லூரிகள் உள்ளன. இலங்கைத் தொழில்நுட்பக்கல்லூரி என்ற பெயரில் இவை இயங்குகின்றன. திறந்தபல்கலைக் கழகமும் வேறு சிலபல்கலைக்கழகங் களும்கூட தொழில்நுட்பக்கல்வியைப் புகட்டுகின்றன. இவைதவிர வேறுபல வெளிநாட்டுத் தொழிற்பயிற்சி நிலையங் களும் தனியார்தொழிற்பயிற்சி நிலையங் களும் உள்ளன. ஜேர்மனியத்தொழில் நுட்பக்கல்லூரி, லண்டன் தொழில்நுட்பக் கல்லூரி என்பன அவற்றுட்சில. இங்கு உயரியபதவியை அடைவதற்கான கல்வி யும் இயந்திரங்களைப் பழுதுபார்த்தல், மின்சாரவேலை போன்றபயிற்சிகள் வழங்கப்பட்டு பயிற்சிமுடிவில் அரச உத்தரவாதம்பெற்ற சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன.

தொழில்நுட்பக்கல்வியைக் கற்ற வர்களுக்கு இன்று வெளிநாடுகளிலும் நல்லமதிப்பு உண்டு. வைத்தியரைச், சட்டத்தரணியைப்போன்று அவர்களும் கணிக்கப்படுகின்றனர். உயரிய ஊதிய மும் வழங்கப்படுகிறது. அதுமட்டுமன்றிப் பல்கலைக்கழகத்தில் கல்விகற்று வெளி வரும் ஒருமாணவன் செலவழிக்கும் காலத்தைவிட தொழில்நுட்பக்கல்லூரியில் மாணவன்ஒருவன் செலவிடும்காலம் குறைவாகும். எனவே, வளமானவாழ்க் கையை அமைத்துக்கொள்ள விரும்பும் ஒருமாணவன் தொழில்நுட்பக்கல்வியைத் தெரிவுசெய்யலாம் எனத்துணிந்து கூறலாம்.

**செல்வி இ. பிரியதர்சினி**
தரம் 10B

அமுதவிழா மலர் சிறக்க வாழ்த்துகிறோம்

**POOBALASINGHAM**

**BOOK DEPOT 60**

**பூபாலசிங்கம் புத்தகசாலை**

புத்தக விற்பனையாளர்கள், ஏற்றுமதி, இறக்குமதியாளர்கள்,
நூல் வெளியீட்டாளர்கள்.

தலைமை:
இல: 340, 202 செட்டியார் தெரு,
கொழும்பு 11, இலங்கை.
தொ.பே. 2422321
தொ.நகல் 2337313
மின்னஞ்சல்: pbdho@sltnet.lk

கிளை:
இல. 309 A-2/3, காலி வீதி,
கொழும்பு 06, இலங்கை.
தொ.பே.: 4-515775


இல. 4A, ஆஸ்பத்திரி வீதி,
பஸ் நிலையம், யாழ்ப்பாணம்.

அமுதவிழா மலர் சிறக்க வாழ்த்துகிறோம்



**கஜானன் பன்முக சேவை**

தொலைத்தொடர்பு சேவை
கணணிப்பதிப்புக்கள்
போட்டோப்பிரதி
கவரிடுதல்
பாடசாலை உபகரணங்கள்
போன்ற அனைத்தையும் பெற்றுக்
கொள்ள நாடவேண்டிய ஒரேஇடம்



**Kajanan Multiservice**


ALLARAI ROAD,
MEESALAI.

அமுதவிழா மலர் சிறக்க வாழ்த்துகிறோம்

# இந்திரன் ஜுவல்லர்ஸ்



நவீன உலகின் மாற்றத்திற்கேற்ப நாமும் மாறிட ஆடவர் முதல் மகளிர் வரை விரும்பும் ஆபரணங்களை, தரமான 22 கரட் தங்க நகைகளைப் பெற்றுக்கொள்ள நீங்கள் நாட வேண்டிய இடம்



**இல. 10, நவீன சந்தை,**
**சாவகச்சேரி.**



அமுதவிழா மலர் சிறக்க
வாழ்த்துகிறோம்

# ARUN TEXTILE



நவநாகரிக பட்டுப்புடவைகளின்
சாம்ராச்சியம்

# அருண் ரெக்ஸ்ரைல்

**இல. 1. கச்சாய் வீதி,**
கொடிகாமம்.

பகுதித் தலைவர்கள்



கல்விசாரா உத்தியோகத்தர்கள்



மலர் வெளியீட்டுக்குழு



# கல்வியின் இன்றியமையாமை

"கண்ணுடையார் என்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையார் கல்லாதவர்"

எனக் கல்வி கல்லாதவரின் இழிவையும் கல்வி கற்றவரின் பெருமையையும் எடுத்துக் கூறுகின்றார் முப்பால் நூல் எழுதிய வள்ளுவர்.

"கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே"

என்கிறார் தமிழ் மூதாட்டி ஔவையார். 'கல்வி எழுமைக்கும் ஏமாப் புடைத்து' என்பதும் பெரியோர் கொள்கையாகும். நீரில் நனையாதது, நெருப்பில் வேகாதது, காற்றில் உலராதது, கள்வரால் திருடமுடியாதது கல்வி. அது எம்முடன் ஏழேழுபிறப்பிற்கும் தொடர்வதும் நாம் இறந்தபின்பும் எம்முடன் கூட வருவதுமாகும்.

"ஆடிய ஆட்டமென்ன
பாடியபாட்டுமென்ன
தேடிய செல்வமென்ன
திரண்டதோர் சுற்றமென்ன
கூடுவிட்டு ஆவிபோனால்
கூடவே வருவதென்ன"

என்றான் ஒரு கவிஞன். எம்முடன் தாய் தந்தையரோ மனைவி மக்களோ கூடவர மாட்டார்கள். இந்த வாழ்வியல் உண்மையை

"வீடுவரை உறவு
வீதி வரை மனைவி
காடுவரை பிள்ளை
கடைசி வரை யாரோ"

என ஏக்க உணர்வோடு பாடி வைத்தான் கவிஞன். ஆயினும், எம்முடன் ஏழேழுபிறப்பிற்கும் தொடர்வது கல்வி என்பதில் எவ்வித கருத்துவேறுபாடு மில்லை. கல்விமான் சென்ற இடமெல்லாம் சிறப்புப்பெறுவான். கல்வி கொடுக்கக் கொடுக்கக் குறையாதது. சிறந்த ஒரு மாணவனுக்கு கொடுக்கும்போதும் தேய்ந்துபோகாமல் வளரும். ஆனால் செல்வமோ கொடுக்கக்கொடுக்கத் தேய்ந்து போகும். பண்பாடற்ற சமுதாயத்தைப் பண்புமிக்க சமுதாயமாக மாற்றுவதும் கல்வியே. அறியாமைஎனுமிருளை அகற்றும் ஒளிவிளக்கு கல்வியே. இவ்வாறு கல்வியின் பெருமையையும் கல்விகற்றோரின் பெருமையையும் அடுக்கிக்கொண்டே போகலாம்.

"கற்க கசடறக் கற்பவை கற்ற பின்
நிற்க அதற்குத் தக"

என்ற குறளுக்கு இணங்க கற்ற தன்படி ஒழுகவேண்டும். "கற்றது கைம் மண்ணளவு கல்லாதது உலகளவு" என்றார் ஔவை. எனவே, குறுகியவாழ் நாளுக்குள் எமதுவாழ்க்கைக்கு அவசிய மானவற்றைத் தேடித்தெரிந்து தெளிவுடன் கற்கவேண்டும். ஒன்றைக்கற்று விட்டு இன்னொன்றை எமதுவாழ்வில் செயற்படுத்துவது கல்விக்கழகல்ல. கற்றல் என்பது உமது நடத்தைகளை நல்வழிப்படுத்தும் சிறந்த செயற்பாடு எனக் கற்றோர்குறிப்பிடுவர். உண்மையில் கல்வியை ஆர்வத்துடனும் வாழ்க்கையை நெறிப்படுத்தும் நோக்குடனும் கற்பவன் நிச்சயமாகத் தாழ்ந்துபோக மாட்டான். அவனுக்கு ஒளிமயமான ஓர் எதிர்காலமுண்டு. கல்லாதவரிடம் சேர்ந்துள்ள செல்வமானது கற்றறிந்த நல்லவரிடம் உள்ள வறுமையைவிட மிகத் துன்பத்தைத் தரும் என்றும், கல்லாதவர் உயர்ந்தகுடியில் பிறந்தவராக இருப்பினும் தாழ்ந்தகுடியில் பிறந்த கற்றவரைப்போன்ற பெருமையில்லாதவர் என்றும் கூறப்படுகிறது. "கல்வி எழுமைக்கும் ஏமாப்புடைத்து", "கண்ணுடையார் கற்றார்", "ஓதுவது ஒழியேல்" என்ற தொடர்கள்மூலம் கல்வியின் இன்றியமையாமையைப் புரிந்துகொள்ள முடிகிறது. எனவே, சிறந்த நூல்களைத் தேடிக்கற்று அழிவில்லாத கல்வியைப் போற்றி எமதுவாழ்வை வளம் படுத்துவோம்.

**செல்வி தி. சியாந்தினி**
தரம் - 10A

# ஆசிரியர் ஒரு விளக்கு

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்'' என்பது சான்றோர் வாக்கு. எண் என்பது கணக்கு; எழுத்து என்பது தமிழ். மனிதனுக்குக் கல்வி என்பது இன்றியமையாதவொன்று. கற்றவர்க்குச் சென்றவிடமெல்லாம்சிறப்பு. கல்வியின் முக்கியத்துவத்தைப் பல பெரியவர்கள் எடுத்துக்கூறியுள்ளனர். அவர்களுள் திருவள்ளுவர், ஔவையார், கம்பர் போன்றோரைக் குறிப்பிடலாம். "கல்வி கரையில கற்பவர் நாள் சில" எனக்கூறுவர். கல்வி அழியாதசெல்வம். அது கொடுக்கக்கொடுக்கப் பெருகிக் கொண்டேயிருக்கும். இக்கல்வியினை எமக்குப் பெற்றுத்தருபவர்கள் ஆசிரியர்கள். இவ்வாசிரியர் இல்லாவிடின் நாம் ஒரு வைத்தியனையோ, பொருளியலாளனையோ காணமுடியாது. எனவே நாம் ஆசிரியர்களின் பெருமையை எடுத்து நோக்கின்,

ஆசிரியர்கள் மாணவர்களுக்கு அறிவைப் பெற்றுத்தருபவர்கள். அவர்கள் தம்மையே அர்ப்பணித்து ஒரு வைத்தியனையும்சரி, பொருளியலாளனையும்சரி, ஒருகணக்காளனையும்சரி சிறந்த முறையில் உருவாக்கி எமது சமூகத்திற்குத்தருபவர்கள் ஆசிரியர்களே. ஒருசமூகம் நல்லசமூகமாக இருக்கிறது எனின், அங்கு கல்விகற்ற சமூகமே இருக்கிறது அல்லது இருக்கக் காரணம் ஆசிரியர்களே.

ஒருகுழந்தை தனது ஆறு வயது முதல் இருபத்தொரு வயதுவரை அதிக நேரத்தை ஆசிரியர்களுடனேயே செலவழிக்கின்றது. ஆசிரியர்கள் பிள்ளைக்குக் கல்வியினைமட்டும் போதிக்காது கல்வியுடன் ஒழுக்கம், சிந்தனை ஆற்றல், விளையாட்டுப் போன்றவற்றினையும் கற்பிக்கின்றனர். ஆசிரியர்கள் தம்மை வருத்தி மாணவர்களுக்கு கல்வியினைப் போதிக்கின்றனரெனின் மிகையாகாது.

ஓராசிரியனின் சிறந்த வழி காட்டலினால் மாணவன் நற்பிரஜையாக வளர்கிறான். பின், அவர்களும் ஆசிரியராகி ஒருநற்பிரஜையினை உருவாக்க முடியும். ஆசிரியர்கள் எமக்குத் தெய்வத்திற்குச் சமமானவர்கள். இன்றைய கால கட்டத்தில் கல்விகற்காதவரை சமூகம் ஏற்றுக்கொள்ளச் சற்றுத்தயங்குகிறது. எனவே மாணவர்கள் குருவிடம் அன்பாகவும் பொறுமையாகவும் இருத்தல் வேண்டும்.

ஆசிரியர்கள் இல்லாதுவிடின் மக்கள் நலமுடன் வாழமுடியாது. எனவே, எந்தவொரு சமூகத்திற்கும் ஆசிரியர்கள் தேவை. ஆசிரியர்கள் இல்லாதுவிடின், அச்சமூகம் விளக்கில்லாத வீடுபோலாகி விடும். எனவே, ஆசிரியர்களை ஒரு விளக்கென நாம் கூறுதல் பொருந்தும். விளக்கானது தன்னைச் சூழவுள்ள பகுதிக்கு வெளிச்சம் தருவதுபோல ஆசிரியர்களின் சேவையும் ஒளி தருகின்றது என்றுகூறின் மிகையாகாது.

**செல்வி அ. கஜேந்தினி**
தரம் - 10 A

# கல்வியின் வளர்ச்சி

"கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே"

என்பது முதுமொழியாகும். இன்றைய மக்கள் சமுதாயம் இருபத்தோராம் நூற்றாண்டில் நவீனவிஞ்ஞான யுகத்தில் காலடியெடுத்து வைக்கத் தயாராகிக்கொண்டிருக்கின்றது. ஒரு நற் சமுதாயத்தைக் கட்டியெழுப்ப அனைவருக்கும் கல்வி மிகமுக்கியமானது.

கல்வியை எல்லோரும் பெறுவதற்காக முனைகின்றார்கள் என்றால் அது தன்னகத்தே கொண்டுள்ள அழியாச் சிறப்பம்சமாகும். கடலாலும் காற்றாலும் மழையாலும் தீயாலும் மட்டுமன்றி சதியாலும் சூழ்ச்சியாலும் சண்டையாலும் அழியாதது, கல்வியெனும் நிரந்தரமான செல்வம் ஒன்றேயாகும்.

"மன்னனும் மாசறக் கற்றோனும்
சீர்தூக்கின்
மன்னனிற் கற்றோன் சிறப்புடையோன்-
மன்னர்க்குத்
தன் தேசமல்லாற் சிறப்பில்லை
கற்றோர்க்குச்
சென்ற இடமெல்லாம் சிறப்பு"

என்று மூதுரையிலே ஔவையார் கூறுகின்றார். ஒருஅரசனையும் கல்வி கற்ற ஒருவனையும் ஒப்பிட்டுப் பார்த்தால் அரசனைவிடக் கல்விகற்றவன் சிறந்தவன். காரணம், அரசனுக்குத் தனது நாட்டில் மட்டுமே மதிப்புண்டு. ஆனால், கற்றோர்க்குச் சென்றிடமெல்லாம் சிறப்புண்டு என்று மிகவும்சிறப்பாக எடுத்துக்கூறியுள்ளார். கல்விமூலம் நாம் பெற்றஅறிவு எக்காலத்திலும் எம்மை விட்டு அழியாதது. காலத்தால் அழியாத நிலையான செல்வம் கல்வியே. ஏனைய செல்வங்கள் எதையெடுத்துப்பார்த்தாலும் - பொன்னோ, பொருளோ, பண்டமோ பணமோ, முத்தோ, மணியோ எதுவுமே நிலையில்லாதது. இவை இயற்கை அழிவினாலும் சதி, சூழ்ச்சியினாலும் காலவோட்டத்தினாலும் கரைந்துவிடக் கூடியன. ஆனால், கல்வியென்னும் கருந்தனம் அழியாத பெருந்தனமாகும்.

இதுமட்டுமன்றிக் கல்வியின் இன்னோர் பெருஞ்சிறப்பு யாதெனில், சாதாரணமக்கள் சிலருக்கு இருக்கக் கூடிய அறியாமை, வெகுளித்தனம், கோபம், மூடநம்பிக்கை, அகங்காரம் இவற்றைநீக்கி உண்மையினை விளக்கி நல்லது தீயதைப் பகுத்தறிந்து சீர் தூக்கிப் பார்த்துச் செம்மையானவழி நடக்கச்செய்வதாகும். கல்வியானது ஒரு விளக்கினை ஏற்றி அதிலிருந்து ஆயிரம் விளக்குகள் ஏற்றி ஊரெங்கும் ஒளி பெறச் செய்வதுபோன்றது. கல்வி எனும் ஒளிவிளக்கும் ஒருகல்விமானின் அறிவும் போதும், ஆயிரம்மாயிரம் கல்விமான்களை உருவாக்க. இப்பயொரு சிறப்புத் தன்மையுடைய செல்வம் உண்டெனில், அது கல்விச்செல்வம் ஒன்றேதான். இக் கல்விச்செல்வம் கொடுக்கக்கொடுக்கப் பெருகிக்கொண்டுபோகுமே தவிர, குறையவோ தேய்வடையவோ மாட்டாது.

பாடசாலையில் நாம் கற்கும் கல்வியானது எமது வாழ்க்கையில் பொருளாதார அடிப்படையில் முன்னேற உதவுவது மட்டுமல்லாமல் ஒழுங்கான பாதையில் எம்மை ஒழுக்கமுடன் செயற்பட வழிநடத்துகின்றது. பாடசாலையினைவிட்டு வெளியேறிய பின்னும் சமூகத்தில் பலருடன்சேர்ந்து வாழும் பக்குவத்தைக் கொடுக்கிறது

கல்வியானது பாடசாலைக் காலத்திலேயே எம்மைப் பாதுகாப்பதற்கும் மிக உதவிபுரியும். இப்படியான கல்விச் செல்வத்தை இளமையிலே கற்க வேண்டும். "இளமையிலே கல்" என்பது பெரியோர் வாக்கு. இதற்குக் காரணம் "இளமையிற் கல்வி சிலையில் எழுத்து" என்பதேயாகும். அதாவது இளமையிற் கற்கும் கல்வியானது சிலையிலே செதுக்கியதுபோன்று அழியாத்தன்மை பொருந்தியதாகும். இவ்வாறு இளமையிற் கற்கும்போது ஐயமேதுமின்றித் தெளிவாகக் கற்கவேண்டும். இதனையே திருவள்ளுவப்பெருமான் "கற்க கசடறக் கற்பவை கற்றபின் நிற்க அதற்குத்தக" என்கிறார். இவ்வாறு ஐயமின்றித் தெளிவாகக் கற்றபின் கற்றபடி ஒழுகுதல் வேண்டும். இல்லையேல், கல்வி அர்த்தமற்றதாகிவிடும். எனவே, மாணவர்கள் அழியாத செல்வமாகிய கல்வியை நன்கு கற்றுணர்ந்து நற்பிரஜைகளாகத் திகழவேண்டும்.

**செல்வி க. கனோசா**
தரம் - $10^B$

# பொது அறிவு

1) முதன்முதலில் செயற்கைக்கோள்கள் எதனூடாக விண்வெளிக்குக் கொண்டுசெல்லப்பட்டன? **றொக்கெற்றுக்கள்**

2) உலகின் முதலாவது செயற்கைக்கோள் எப்பொழுது விண்வெளிக்கு அனுப்பப்பட்டது? அதன் பெயர் என்ன?
**1975-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 4-ந் திகதி, ஸ்புட்னிக் - 1**

3) சோவியத்ஒன்றியத்தால் விண்வெளிக்கு அனுப்பப்பட்ட நாயின்பெயர் என்ன? **லைகா**

4) உலகின் முதலாவது விண்வெளிவீரர் யார்? **யூரி ககாரின்**

5) அவர் சென்ற விண்வெளிக்கலத்தின் பெயர் என்ன? **வாஸ்டாக் - 1**

6) முதலாவது விண்வெளிவீரர் எப்பொழுது விண்வெளிக்கலத்தில் சுற்றி வந்தார்? **1961 ஏப்ரல் 12**

7) வாஸ்டாக் - 6 விண்கலத்தில் விண்வெளிக்குச்சென்ற வீராங்கனை யார்? **வலன்டீனா டெரஸ்கோவா**

8) விண்வெளியில் நடந்து சாதனைபுரிந்தவர் யார்?
**அமெரிக்கரான எட்வேட் வைற்**

9) ஸ்புட்னிக் - 1 சந்திரனின் தோற்றம் பற்றிய புதியசெய்திகளை எப்பொழுது தந்தது? **1957 இல்**

10) சந்திரனுக்கு அண்மையிற்சென்று செய்திகளைத்தந்த செயற்கைக்கோள் எது? **யுனிக் - 1**

# சமயமும் வாழ்வும்

"சமயமும் வாழ்வும் இணைந்திட்டபோதுதான் உலகம் பிரகாசிக்கின்றது" என்பது ஒருகவிஞன் கூற்று. உண்மைதான், சமயமும் வாழ்வும் இணையவேண்டும். அதாவது, தசையும் நகமுமாக இணையவேண்டும். அப்போதே வாழ்வில் ஒளியுண்டாகும். மனம் தூய்மையடையும். நம்பிக்கை உருவாகும். உண்மைகள் புரியும். அதற்காக மூட நம்பிக்கைகளினுள் மூழ்குமாறு கூறவில்லை. உண்மைகளைக்கண்டு தெளிந்து அதன்வழி நின்று ஒழுகுதலே வாழ்வு. சமயம் எனும்போது அது இறைவனை அடையும்வழி எனக்கூறுவர். உண்மையைத் துலங்கச்செய்யும் பாதைகள் இரண்டும் இணையும்போது உலகம் ஓங்கும்.

சமயம் என்ற ரீதியில் பார்க்கும் போது உலகிலே எத்தனையோ வகைச் சமயங்கள் இருக்கின்றன. அவைகளுள் பல, வேதாகமங்களைக் கொண்டவை. ஆயினும், அவை ஒன்றைத்தான் கூறுகின்றன. அதாவது அச்சமயங்கள் இறைவனை அடையும்வழிகளைக் கூறுகின்றன. அதாவது, அவற்றில் பல கிளையாறுகள் உள்ளன. அவையெல்லாம் ஓடியோடி இறுதியில் சங்கமிக்கும் இடம் கடலாகும். அதுபோன்றுதான், இந்தச் சமயங்களும் பலவுள்ளன. அவையாவும் அடையுமிடம் இறைவனின் பாதங்களே. வாழ்க்கை என்பது வாழ்வதற்கே. வாழ்க்கையைச்சிலர் சீரழிக்கின்றார்கள். அதாவது, நாங்கள் வெளிச்சத்திற்குச் செல்கிறோமென விட்டிற்பூச்சிகள் விளக்கில் கருகுவதுபோல வாழ்கின்றார்கள். இது நிதர்சனம். விட்டிலைப்போன்றவர்களுக்கு உண்மையை உணர்த்தவும் துன்பமுற்றவர்களுக்கு ஆறுதல்சொல்லவும் இன்பப் போதையில் இருப்பவர்களுக்கு போதையைத் தெளிவிக்கவும் இந்தச்சமயம் பயன்படுகின்றது.

உண்மையிலே வாழ்விற்கு உரமூட்டுவது சமயம்தான். யானைக்குத் தும்பிக்கைபோல, மனிதனுக்கு நம்பிக்கை என்று கூறுவதும் சமயம்தான். சோர்வுற்றிருப்பவன் இறைவன்ஒருவன் இருக்கின்றான் என்ற நம்பிக்கையில் வாழ்கிறான். இதனைக்கண்டுபிறர் பாவம் செய்யாது இருந்துவிடுவர். "பிறப்புண்டேல் இறப்புண்டு" என்றும் அதாவது, ஒளி உண்டெனில் இருளும் உண்டு என்றும் சமயம்கூறி நிலையாமையை அறிவுறுத்தி மக்களை நிலையான காரியம் செய்யத்தூண்டுகிறது. சமய நூல்கள் பலவாகும். வேதங்கள், ஆகமங்கள், பைபிள், திருக்குறள், நாலடியார், திருக்குர்ஆன், ஆசியஜோதி என அவற்றைச் சொல்லிக்கொண்டே போகலாம். இவை அறத்தை, தர்மத்தை, நியாயத்தை, வாழ்வை, அதற்குகந்த நல்லவற்றைக் கூறுகின்றன. இதனால் மனிதவாழ்வு வளம்பெற உதவுகிறது.

ஆகவே இந்தச்சமயம் வாழ்விற்கு முக்கியமானதென்பது முடிந்த முடிபு. இந்தச்சமயமும் வாழ்வும் பிரிக்க முடியாதவை. அதாவது, இரத்தமும் நீரும் போல, தசையும்நகமும்போல என்று கூறலாம். எது எவ்வாறிருந்தபோதிலும் மனிதன் இந்தச்சமயத்தின்மூலம் நெறிப்படுத்தப்படுகின்றான். உண்மைகளை உணர்கின்றான். நல்லசுகம் அவர்களில் குடிகொள்கிறது என்பது மறக்கமுடியாத உண்மை. ஆகவே, வாழ்விற்குச் சமயம் முக்கியம். சமயமும் வாழ்வும் இன்றியமையாதவை.

செல்வி க. ஸ்ரீபாசினி
தரம் - 10C

# தந்தை தாய் பேண்

மண்ணுலகில் நம்கண்முன் காண்கின்ற கடவுளராகத் தந்தையும் தாயும் விளங்குகின்றனர். பெற்றெடுத்த கணம்முதல் நம்மைப் பேணிக்காப்பவர்கள் நம்பெற்றோர்கள்.

தாயானவள் தன்னுதிரம் தந்து சேயை உருவாக்குகின்றாள். நோய் வந்த காலத்தில் அதற்காக நோன்பிருக்கின்றாள். வாய்க்குருசியாக அவள் வழங்கும் நல்லுணவுகள் ஆரோக்கிய வாழ்வுக்கு அடித்தளமாகின்றன. அன்போடு அவளூட்டுகின்ற உணவு உயிர் வளர்க்கின்றது. அறிவார்ந்த அவள் செயல்கள் நற்பண்புகளை வளர்க்கின்றன.

தந்தை அறிவெனும் ஒளியூட்டி வாழ்வுக்கு வழிகாட்டுகின்றார். வாழ்வாங்கு வாழும்வகை சொல்லித் தருகின்றார். அன்பும்அறமும் வாழ்வின் நெறியும் வகுத்துத்தருகின்றார். சேய் வாழத் தேவையான செல்வத்தைத் தேடித்தருகின்றார்.

இவ்வாறு கண்போல் நம்மைக் காக்கின்ற பெற்றோரின் நலம் பேணுதல் நம் கடமையாகும். நாள்தோறும் அவர் மனம் மகிழும்வண்ணம் செயல்புரிதல் வேண்டும். சிறியகடமைகளையேனும் அவர்கள் சிந்தைமகிழுமாறு செய்ய வேண்டும். காலமறிந்து கடமைபுரிந்து அவர்களின் சுமைகளைக் குறைக்க வேண்டும்.

வயது முதிர்ந்த காலத்தில் அவர்களின் தேவையறிந்து பூர்த்தி செய்யவேண்டும். செயல் ஓய்ந்து போயிருக்கும் இக்காலத்தில் அவர்கள் வெறுமையை உணராதவாறு கவனிக்க வேண்டும். அவர்கள் மனம்கவருமாறு இனிய பொழுதுபோக்குகளை ஏற்படுத்த வேண்டும். அன்புடன் உரையாடி அவர்களின் தனிமையை நீக்கவேண்டும்.

நோய் வந்தகாலத்தில் ஆறுதல் கூறவேண்டும். அன்பான பணிவிடைகள் புரிதல்வேண்டும். நோய்நீக்கும் நல் மருந்துகளை வழங்கவேண்டும். நாடோறும் அவர்களுக்குத் தேவையான சேவைகளைச் செய்யவேண்டும்.

வரலாறும் இலக்கியமும் பெற்றோரைப் பேணியநன்மக்கள் பெயுர் சொல்கின்றன. இராமாயணத்தின் "இராவணன்" எனும் முனிகுமரன் பெற்றோர் நலம் பேணிப் புகழ் பெற்றவன். இந்தியாவின் பெருமைக்குரிய மகாத்மாகாந்தியும் இதற்கு நல்லதோர் உதாரணமாகத் திகழ்கின்றார்.

பிள்ளைகளின் வாழ்வொன்றையே தம்பற்றுக்கோடாய்க்கொண்டு செயல்புரிபவர்கள் பெற்றோர். அவர்கள் வாழும்காலம் யாவும் மனம்நோகாது அவர்களைப் பேணுதலவசியம். தாம் தேய்ந்து பிள்ளைகளுக்கு நல்ல வாழ்வைக் கொடுப்பவர்களவர்கள். அவர்களின் நலம்பேணுதலே நம் வாழ்வின் தலையாயகடனாகும்.

**செல்வி T. சுகன்யா**
தரம் 10

# இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள்

பால் வண்ண மேனியில்
பட்டு வண்ணச் சட்டையிட்டு
பம்பரமாய்ச் சுழலும்
இன்றைய இளம் மொட்டுக்கள்
இவ்வுலகின் நாளைய மலர்கள்.

வசந்தங்கள் பாடும்
வண்ணப்பொழுதுகள்
உள்ளத்து உணர்வுகளை
உருக்கிவார்க்க முடியாத
ஊமைநிலை
எல்லையில்லா ஆகாயம் போல்
முடிவில்லாச் சுதந்திரம்
இவையனைத்தும் இருந்திடும்
இனிய பருவமே இளம் மொட்டுக்கள்.

உடைத்து நொருக்க முடியா
வாடி வதங்கி விடா
அஸ்தமனமாகி விடா
நிலையான நிஜ வாழ்விற்கு
இன்றைய மொட்டுக்களை
கையசைத்து வழியனுப்பி விடுங்கள்
ஏனெனில் அவர்கள்
நாளைய தலைவர்கள்.

கல்விக் கடலின்
கலங்கரை விளக்காய் இவர்கள்
நவீனத்துவத்தை நகர்த்திச் செல்லும்
நந்தவனமாய் இவர்கள்
மனித மாற்றங்களை
சீரமைக்கும் சிகரங்களாய் இவர்கள்
எத்தனை எத்தனை
பரிமாணங்களில் நாளை அவர்கள்.

பெற்றவர் தாமும், அறிவுக்கடலின்
ஆசான்கள் தாமும்
இன்றைய மொட்டுக்களை
அகம்தனில் அன்பு கொண்டு
வற்றாநீரூற்றாய் வசந்தங்கள் பாடிட
ஆலம் விழுதுகளாய் உளம் சிறகடிக்க
உருவாகிடுங்கள்.

செல்வி பா. நிலாயினி
தரம் - 10B

# சிறுவர் உரிமை

*சிந்தனை வயத்தால் சிறந்திடும் சிறுவரை*
*நிந்தனை செய்திடல் நீதியாகிடுமோ*
*எந்திர உலகை என்றோ ஆளநினைத்திடும்*
*வந்தனத்துக் குரியோரை வதைத்திடல் நன்றோ?*
*சிந்தித்திடும் மழலைகளைச் சிறைப்படுத்தல் நன்றோ?*
*கந்தையுடன் அவர்கள் கதியற்றோர் ஆதல் நன்றோ?*
*சிந்தியுங்கள் பெரியோரே சிந்தியுங்கள்*
*எந்தையரைப் போற்றும் எம் மழலைகளை வதைத்திடலாமோ?*

*நாளைய உலகைச் சமைத்திடப்போகும்*
*நற்சிற்பிகள் நம் சிறார்கள்*
*காளையராகிக் கன உடல் பேணி*
*கருணை உலகைப் படைத்திடுவர் நம் சிறார்கள்*
*வாழவழி தேடும் வண்ண மழலைகளை*
*வாழவிடல் வேண்டும் வாழவிடல் வேண்டும்*
*வானத்தைத் தொட்டுவளரும் உலகினில்*
*வாழவழி சமைத்திடல் வேண்டும்.*

*பேசும் ஒரு குழந்தையைப்*
*பேச விட வேண்டும்*
*பேசும் அவர் வார்த்தைகளில்*
*பெரும் பொருளைத் தேடவேண்டும்*
*காசு பணம் பெரிதல்லக் கண்டிடுவீர்*
*காசினியில் அவர் உயர்வு வேண்டும்*
*பேச விடுவோம் பெருந்தகை யோராக்கிடுவோம்*
*பெரியோரே பேச்சுச் சுதந்திரத்தைப் பேணிடுவீர்.*

*கருத்துச் சுதந்திரம் வேண்டும் அவர்*
*கண்டிடும் காட்சியை வியந்திட வேண்டும்*
*திருந்தும் சிந்தனையுடன் திண்ணிய இவ்வுலகில்*
*தரம் தரமாய் அவர்கள் வளரவேண்டும்*
*பொருந்தாதவை என அவர்கள் கூறிடின்*
*பொருத்த மற்றவற்றை அகற்றிட வேண்டும்*
*விரும்புவன வழங்கி விருப்புடனே இவ்வுலகில்*
*விளையாட விடவேண்டும் விளையாட விடவேண்டும்.*

கல்வி அவர் தம் வாழுரிமை
கடின உழைப்பது உரிமையல்ல
செல்வத்துள் சிறந்த செல்வம்
செம்மையாய் பேணிடும் செல்வம்
கல்வி அதைக் கற்க வழிசமைத்திடுவீர்
கடின உழைப்பதை மறுத்திடுவீர்
நல்ல பிரஜைகளை நாட்டின் சவால்களை
நாட்டமுடன் அவர் எதிர் நோக்கி
வல்லவராய் வாழ வழிசமைப்பீர்
வாழும் உலகில் வளர வழிவிடுவீர்.

பாலியலில் அவர் தம்மை பாவித்திடலாமா?
பாவம் அவர் உடல் தம்மை வருத்திடலாமா?
நீவியராய் நீண்ட இவ்வுலகில்
நிலையின்றி அலைய விட்டிடலாமா?
வாலிப முறுக்கினால் வளரும் அப்பிஞ்சுகளை
வதைத்து நாம் சிதைத்திடலாமா?
வேலினை ஒத்தவிழி கொண்ட மழலைகளின்
வேண்டுதலை நாம் மறுத்திடலாமா?

கூட்டுறவே நாட்டின் உயர்வென்று கூறிடுவீர்
கூடும் அவர் தம் சுதந்திரத்தைக்
கூண்டோடு அழித்திடலாமா?
கூறிடுவீர் பெரியோரே கூறிடுவீர்
வேண்டுவனவெல்லாம் வேண்டும்
வெள்ளை உள்ளங்களைச் சிதைத்திடலாமா?
வேண்டாம் அவர்தம் உரிமை பேணிடுவோம்
வேண்டுதல் செய்தே அவர் தம்மை உயர்த்திடுவோம்.

**செல்வி சி. அசிதா**
தரம் 10B

★ உங்களை நீங்களே மதித்துக்கொள்வது ஆணவம்.
பிறர் உங்களை மதிப்பது பெருமை.

★ அறிவுள்ளவன் நேர்மையிலிருந்து தன் தலையை
வேறுதிசையில் திருப்பவே மாட்டான்.

★ முழு மனதுடன் முயன்றால் உலகில் ஆகாதது
ஒன்றுமில்லை.

# பொது அறிவு

**சுதந்திர இலங்கையின்......**

- முதலாவது பிரதமர் - **D. S. சேனாநாயக்கா**
- முதலாவது ஜனாதிபதி — **வில்லியம் கோபல்லாவ**
- முதலாவது நிறைவேற்றதிகார ஜனாதிபதி - **J. R. ஜெயவர்த்தனா**
- முதலாவது பெண் பிரதமர் - **ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா**
- முதலாவது பெண் மாகாண முதலமைச்சரும் பெண் ஜனாதிபதியும் - **சந்திரிக்கா பண்டாரநாயக்கா குமாரதுங்க**
- தேர்தல்மூலம் தெரிவான முதல் ஜனாதிபதி - **J. R. ஜெயவர்த்தனா**
- முதலாவது சபாநாயகர் - **சேர். பிரான்ஸிஸ் மொலமுரே**
- தமிழ்மொழியில் வெளியான முதலாவது பத்திரிகை — **உதயதாரகை**
- சிங்களமொழியில் வெளியான முதலாவது பத்திரிகை — **சிங்களஹட**
- ஆங்கிலமொழியில் வெளியான முதலாவது பத்திரிகை - **த கொழும்பு ஜேணல்**
- தாள் நாணயங்கள் புழக்கத்திற்கு வந்த ஆண்டு - 1855
- ரூபா, சத குற்றி நாணயங்கள் பழக்கத்திற்கு வந்த ஆண்டு - **1872 ஜனவரி 1-ம் திகதி**
- முதலாவது தமிழ்ப்பேராசிரியர் - **சுவாமி விபுலானந்தர்**
- முதலாவது சிங்களசேவைநிலையம் ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு - **1925**
- முதல்முதல் தொலைக்காட்சிசேவை ஆரம்பிக்கப்பட்டது - 1981
- முதன்முதல் தமிழ்மொழியில் ஒலிபரப்பை வழங்கிய தனியார் வானொலி - **F. M 99**
- முதலாவது புகையிரதப்பாதை — **கொழும்பு - கண்டி**
- முதலாவது அரசியல்கட்சி - **லங்கா சமசமாசக்கட்சி**
- முதலாவது அரசி - **அனுலா**
- முதலாவது அரசவர்த்தமானி வெளியிடப்பட்ட ஆண்டு - **1876-05-28**
- முதன்முதல் தொழிற்சங்கத்தை உருவாக்கியவர் - **A. E. குணசிங்க**
- சர்வதேச தரம்வாய்ந்த மாநாட்டு மண்டபம் - **பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபம் (B.M.I.C.H.)**
- இலங்கையில் குறுகியகாலம் பிரதமராக பதவி வகித்தவர் - **W. A. தஹநாயக்கா**

**செல்வன் க. சஞ்ஜீவன்**
தரம் - 10B

# வாசிப்பை வளமாக்கி வாழ்க்கையில் பூரணத்துவம் அடைவோம்

விறுவிறுப்பாக வீறுநடை போட்டுச் செல்லும் விஞ்ஞானம் வளர்ச்சியடைந் துள்ள விந்தைமிகுந்த உலகிலே

- நாம் வாழ்வாங்கு வாழ்வதற்கு
- எதிர்காலத்தில் ஏற்படும் சவால் களை எதிர்கொள்வதற்கு
- சிறந்தவொரு சமுதாயத்தைக் கட்டியெழுப்புவதற்கு

வாசிப்பு முக்கிய இடம் வகிக்கின்றது. வாசிக்க மறுக்கின்றவன் வாழமறுக் கின்றான் எனக்கூறப்பட்டுள்ளது.

"கண்டது கற்கப் பண்டிதனாவான்' என்பதுபோல கண்ணுக்குக் கிட்டிய வற்றை எல்லாம் வாசித்து விளங்கி நல்லவை கெட்டவை என்பதை வேறு படுத்தியறிவதுடன் நல்லனவற்றை ஏற்று நடப்பதுடன் அல்லாதனவற்றை தவிர்த் துக்கொள்ளும் திறனைப்பெற்றுக் கொள்ளவேண்டும். 'வாசிப்பு மனிதனைப் பூரணமாக்கும்' என்பது பழமொழி. இப் பழமொழியில் ஆழ்ந்த எண்ணக்கருக்கள் அடங்கியுள்ளன. எவ்வளவு வாசிக்கி றோமோ அவ்வளவு அறிவினைப் பெற்றுக் கொள்ளமுடியும். அதாவது, வாசிக்கும் பொழுது வாசிப்புமட்டும் நிகழ்வதில்லை. வாசிப்பவரைப்பொறுத்து கற்றலும் கூடவேநடைபெறுகின்றது. அதாவது, கற்றலென்று கூறும்போது வாசிக்கும் விடயத்தை விளங்கும்திறனை வளர்க்க வேண்டும். அவற்றைக்கிரகித்து தேவைக் கேற்றபடி பயன்படுத்தும்ஆற்றலை அடையவேண்டும். இவையாவும் நிறை வேறும்போதுதான் மனிதன் பூரணத்துவம் அடைகின்றான்.

அண்மைக் காலங்களில் வாசிப் புப்பழக்கம் அருகிக்கொண்டு செல்வ தைக் காணக்கூடியதாகவுள்ளது. எனவே தான் இன்றைய காலகட்டத்தில் வாசிப்பு நெருக்கடி என்பது

- கல்வியியல்
- உளவியல்
- சமூகவியல்
- தொடர்பாடற்கற்கை

ஆகிய புலங்களில் ஓர் எடு பொருளாக முன்வைக்கப்பட்டது. அதாவது, வாசிப்பு ஆற்றலுடன் அறிவுக் கிரகிப்பும் உள்வாங்கலும் அடைவுகளும் மட்டுமன்றி ஒட்டுமொத்தமான ஆளுமை வளர்ச்சியும் தலைமைத்துவ வளர்ச்சி யும் தொடர்புபட்டுள்ளமையால் இவ்விட யம்பற்றிய கருத்தாடல்கள் மேலெழத் தொடங்கியுள்ளன. எனவே இவ்விடயம் தொடர்பான செயல்நிலையாய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வாசிப்பை மேம் படுத்தும் உபாயங்கள் பாடசாலை களில் கையாளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கதொன்றாகும்.

வாசிப்புத்தொடர்பான ஆய்வில் முதல்முக்கியத்துவம்பெறுவது ஒருவருக்கு உரிய அறிகைஅமைப்பு. இது எமது வயதுவேறுபாடு, இடை வினை வேறுபாடு ஆகியவற்றுக்கு ஏற்ற வாறு மாறுபடக்கூடியது. வயது, வகுப்பு வேறுபாடுகளுக்கேற்ப வாசிப்புத் தன்மை களும் வேறுபடுவதை ஆய்வுகள்மூலம் கண்டறிந்து அதற்கமைவாகப் பாட சாலையில் எமக்குப்பயிற்சியளிக்கப் படுகின்றது.

வாசிப்புமுறைகளில் மௌன வாசிப்பு, உரத்தவாசிப்பு, ஆற்றுகை வாசிப்பு, விரைந்தவாசிப்பு என்பன குறிப்பிடத்தக்கன. பாடசாலைகளில் இவ்வாசிப்புமுறைகள் சிலவற்றிற்குப் பயிற்சியளித்தபோதும் ஆற்றுகை வாசிப்பு என்பதற்கு அதாவது, விளம் பரம், நிகழ்ச்சித்தொகுப்பு போன்ற வற்றை வாசிப்பதற்குப் போதியபயிற்சி கள் அளிக்கப்படுவதில்லை. எமக்கு

வாசிப்பு மகிழ்வையும் ஈடுபாட்டையும் ஏற்படுத்துவதற்கு ஆற்றுகைவாசிப்பே சிறந்ததாகும் எனக்கண்டறியப்பட்டுள்ளது.

வாசிப்பின்போது வேறுபாடுகளை இனங்காணுவதில் பின்வருவன முக்கிய இடம்வகிக்கின்றன.

- கட்புலனால் நிலைப்படுத்தி உள்வாங்கல்
- நினைவகத்துடன் ஒப்பிடல்
- உள்ளத்தில் தீர்மானித்தல்
- துலங்குதல்

என்பனவாகும்.

ஆனால், இன்றைய நமதுகல்விச் சூழலிலே வாசிப்புத்தளம்பல் என்பது தவிர்க்கமுடியாத ஒன்றாகிவிட்டது. இதற்குக்கல்வித்திட்டத்தின் மிகையான அழுத்தமும் குறிப்பிடத்தக்க ஒருதடைக் கல்லாக அமைந்துள்ளது. அடுத்து இன்றையபரீட்சையமைப்பு முறைகளிலே வாசிப்புக்கு முக்கியத்துவம் கொடுக்கப் படவில்லை. அதுமட்டுமன்றி ஓய்வு நேரத்தைத் தொலைக்காட்சி விழுங்கி விடுதலும் குறிப்பிடத்தக்கதொன்றாகும்.

எனவேதான் வாசிப்புப்பழக் கத்தை வளர்ப்பதற்குப் பாடசாலைகளில் நூலகத்திற்கும் மேலாக பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

- வகுப்பறைகளில் வாசிப்புமூலம் நூல்களைச்சேகரித்தல்.
- வகுப்பறைகளில் வாசித்தவற்றைக் கூறுவதற்குத் தனித் தனியாக சந்தர்ப்பம்வழங்கல்.
- நடிக்கச்செய்தலும் காலைக் கூட்டத்தில் உரையாற்றுவித்தலும்.

என்பன அவையாகும். இதனால் வாசிப்புடன் கிரகித்தலும் வளர்ச்சி யடைந்துள்ளது.

அடுத்துப் பாடசாலையில் கலைத் திட்டத்துடனிணைந்து வாசிப்பிற்கு ஆதரவளிக்கும் ஓரங்கமாக நூலகங்கள் விளங்குகின்றன. பாடசாலை நூலகங்கள் இன்று மாற்றமுற்றுவருவதை நாம் அறிவோம். நூலகக்கட்டிடங்களை புதிதாகஅமைத்தல், இருக்கும் கட்டிடங்களைப்புதுப்பித்தல்மூலம் நூலகமும் 'கற்றலுக்கான வளநிலையம்' என செயற்பட்டுவருவதை நாமறிவோம். புதிய கல்விச்சீர்திருத்தத்தின்கீழ்ப் பாடசாலை நூலகவிருத்தி ஒருகூறாகச்செயற்படுத்தப் பட்டு வருகின்றது.

கிடைக்கின்ற சந்தர்ப்பத்தை நழுவவிடாமல் வாசிப்பைவளர்ப்பது எமது தேவையாகவுமுள்ளது. நாம் கௌரவத் துடன் தலைநிமிர்ந்துநடக்க வாசிப்பு உதவுகின்றது. வாசிக்காதமனிதன் துடுப்பற்றபடகுபோன்று கரையை அடையாது தத்தளிக்கும் நிலையேற்படும். கோபம், பொறாமை, கொலை, களவு போன்ற தீயகுணங்களை எம்மிடமிருந்து களைவதற்கும், அன்பு, பாசம், நட்பு, ஒற்றுமை, சமாதானம் போன்ற நல்ல குணங்களை எம்மிடையே ஏற்படுத்துவதற்கும் வாசிப்பு அவசியமாகும். வாசிப்பதன் மூலம் எமதுமூளை நிமிடத்திற்கு நிமிடம் விருத்தியடைகின்றது. எமதுபாடநெறியின் அறிவினை விருத்திசெய்துகொள்ள கட்டாயம் வாசிக்கவேண்டும்.

நாம்வாசிக்க எமது மொழியாற்றல் மிகுந்த திறனுடன் வளரும். "நல்ல நூல்களே நல்லநண்பர்கள்" என்ற கருத்தும் வாசிப்பின் முக்கியத்துவத்தை விளக்கிநிற்கின்றது. எனவே,

"கற்க கசடற கற்பவை கற்றபின்
நிற்க அதற்கு தக"

என்ற பொய்யாமொழிப்புலவரின் கூற்றுக்கிணங்க வாசிப்பை வளர்ப்பதன் மூலம் அறிவு, பண்பு, ஆற்றல் யாவற்றையும் பெற்றுப்பூரணமனிதர்களாகத் திகழ்ந்து நிறைவான ஒருசமுதாயத்தை உருவாக்குவோம் என்பதில் நிறைவடைகின்றோம்.

**செல்வன் ஜெ. மதிமுகன்**
தரம் 11A

# பெண்ணுரிமை

அடுப்படிக்குள் பெண்தன்னை
அடக்கிடுதல் நன்றோ
எடுத்திடும் நம் காரியத்தை
எளிதாய் முடித்திடவே

எடுபிடியாய் அவள் தன்னை
ஏய்த்திடுதல் நன்றோ
இடும் பணியை சிரமேற்கொள்ளும்
இத்யம் கொண்டவளை இழிதாக்கல் நன்றோ.

வீட்டுக்குள் பெண்ணைப் பூட்டுதல்
விரும்பத் தகுமோ கூறிடுவீர்
காட்டையும் கழனியாக்கும்
கண்ணிறைந்தாள் பெண்ணவள் வெறும்

கூட்டுடல் கொண்டவளல்ல
கூர்மை விழியுடையாள்
வீட்டையல்ல நாட்டையும் ஆளும்
விறல் கொண்டாள் பெண்ணவள்.

சீதனம் என்னும் சிறை தன்னுள் அகப்பட்டும்
சிற்றின்பம் காணும் சீர் கெட்டவள் அல்ல
ஆதனம் தேடி ஆகாயம் சென்று
ஆராய்வு செய்யும் அசையா மனப்பாங்குடையாள்

வேதனை தணிக்கும் மனம்படைத்தவள்
பாதீனியம் படரும் நச்சுக்களையல்ல அவள்
பாரினும் உயர வழிசமைக்கும்
பாவையள் அவள்.

பெண்ணே உன் நாவிற்கு விலங்கிடு எனப்
பேசியோர் நாவதை அடக்கிட
கண்ணன் குழல் நாதமாய்
காற்றிலே பவனி வருபவள்.

விண்ணையும் தொட்டு வியத்தகு சாதனை படைத்திடும்
பெண்ணவள் பெருமை கொண்டவள்
மண்ணையும் ஆண்டு மாட்சியுற வைக்கும்
மாசிலாத் தெய்வ மகள்.

பெண்ணுரிமை பேணிடுவோம்
பேசும் தெய்வங்கள் ஆக்கிடுவோம்
கண்ணிறைந்த இக்காசினியில்
வினையுறும் கன்னியரும் திண்மையில்

என்றென்றும் போற்றிடுவோம்
திருப்பு முனையாய் இருப்போம்
வண்ணஉலகு படைத்திடும்
வனிதையரை வடிவுறக் காப்போம்.

பெண்ணே நீ பொங்கியெழு
பேணிடில் உன் சுதந்திரத்தை
கண்ணே மணியே கண்டித்து நின்றிடு
உன்னை வளர்த்திடு உலகத்திற்கு உதவிடு

உண்மை பேசிடு உத்தமியாய் வாழ்ந்திடு
பண்ணோடு பா தந்த பாரதியின்
எண்ணக் கனவுகளை ஏந்தி நீ
பட்டங்கள் பெற்றிடு சட்டங்கள் செய்திடு
பாரினை ஆண்டிடு பயனுலகு படைத்திடு.

**செல்வி த. குலமகள்**
தரம் - 11A

★ எங்கெங்கு சென்றாலும் மாலையில் குறித்த இடத்திற்கு வந்துசேரும் மாடுபோல எத்தொழிலைச் செய்தாலும் குறிக்கோளை மறவாத மனம் வேண்டும்.

★ உள்ளம் பண்பட்டால் மட்டுமே வாழ்க்கையில் நிம்மதி அடைவது மட்டுமன்றி வாழ்க்கையில் உயரவும் வழி ஏற்படுகிறது. எனவே உள்ளத்தைச் சாந்தி, அமைதி, காதல், கருணை, நம்பிக்கை, பரிசுத்தம், சத்தியம் இவைகளைக் கொண்டு பிரகாசிக்கச் செய்யவேண்டும்.

★ படிப்பு உடம்பை மட்டுமல்ல மனதையும் மென்மையாக்குகிறது.

# இலத்திரனியல் வணிகம்

இலத்திரனியல் பாதையைப் பயன்படுத்திச்செயற்படும் வணிகம் இலத்திரனியல்வணிகம் எனப்படும். அதாவது, இன்ரநெற்மூலம் பொருட்கள் சேவைகளை வாங்கிவிற்கும் செயற்பாடாகும். இவ்வணிகமானது 1970-ன் ஆரம்பத்தில் ஆரம்பமானது. முதலில் இலத்திரனியல்முறையில் நிதி ஒப்படைப்பு (Electronic Transfer of Funds E.E.F) இலத்திரனியல் முறையில் தகவல் பரிமாற்றம் (Electronic Date Transfer) என்பன ஆரம்பிக்கப்பட்டன. 1996 இல் 518 மில்லியன் அமெரிக்கடொலர் அளவிலான வணிகக்கொடுக்கல் வாங்கல்கள் இன்ரநெற்மூலமாக நடைபெற்றன. இவ்வாறு வளர்ச்சியடைந்து வரும் இலத்திரனியல்வணிகம் 2008 இல் 750 மில்லியன் வாடிக்கையாளர்களைக் கொண்டுகாணப்படுமென எதிர்பார்க்கப் படுகிறது. அத்தோடு, சந்தையில் 50% இன்ரநெற்றுடன் தொடர்புபடும் என்று வணிகத்தகவல்கள் தெரிவிக்கின்றன. இதற்காக

- ❖ EDI - Electronic Date Interchange
- ❖ E.Mail --Electronic Mail
- ❖ Computer Bulletine Boards
- ❖ Fax
- ❖ EFT - Electronic Funds Transfer

என்பன பயன்படும்.

இலத்திரனியல்வணிகம் பிரதானமாகப் பின்வரும்பகுதிகளை உள்ளடக்கும்.

1) இலத்திரனியல் வர்த்தகப் பயன்பாடு - இன்ரநெற் தொடர்புபடும் வியாபாரக் களஞ்சியம், வியாபாரநிலையம், மொத்தமான கொள்வனவு, கட்டளை, ஏலம், ஆவணங்கள் கொடுக்கல் வாங்கல்கள் போன்றவை இலத்திரனியல் முறையில் நடைபெறுதல்.

2) இலத்திரனியல் வர்த்தகக் கட்டமைப்பு வசதிகள் - பொதுவணிகச்சேவைக்கான அடிக்கட்டமைப்பு வசதிகள் கொடுப்பனவுச்சேவை பாதுகாப்புஇலத்திரனியல்வர்த்தகம் தொடர்பாகச்செய்தி வழங்குதல், வசதிகளை வழங்குதல்

E.g: Internet, E.Mail வசதி

இலத்திரனியல்வணிகம் தொடர்பிலான துணையங்கங்கள் எனப்பின் வருவனவற்றைக்குறிப்பிடலாம்.

- ❖ கொள்வனவாளர்
- ❖ விற்பனையாளர்
- ❖ நடுவர்
- ❖ அரசகொள்கைகள்
- ❖ அமைப்புக்கொள்கைகள்
- ❖ தொழில்நுட்பக்கொள்கைகள்

**இலத்திரனியல் வணிகத்தைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்**

- ❖ வணிகமொன்றிலிருந்து வணிகத்துக்கு(Business to Business)
- ❖ வணிகமொன்றிலிருந்து வாடிக்கையாளருக்கு (Business to Customer)
- ❖ வாடிக்கையாளரிடமிருந்து வாடிக்கையாளருக்கு(Customer to Customer)

**இலத்திரனியல் வணிகத்தால் ஏற்படும் நன்மைகள்**

- ❖ கிரயம் (செலவு) குறைவடைதல்
- ❖ வணிகக்கருமங்களுக்குத் துணையாக அமைதல்
- ❖ வாடிக்கையாளருக்கான சேவை மேம்பாடடைதல்

❖ ஒப்பீட்டுச்செலவு நலன்கள் கிடைத்தல்
❖ உலகம்முழுவதும் சந்தைப் படுத்த வாய்ப்பேற்படல்

**வாடிக்கையாளருக்கு**

❖ வாரத்தில் 7 நாட்களும் ஒவ்வொருநாளும் 24 மணி நேர சேவை கிடைத்தல்
❖ தெரிவுக்குச்சந்தர்ப்பம் கிடைத்தல்
❖ குறைந்தசெலவில் பொருள் வழங்கல்
❖ மிகவிரைவாகப் பெறமுடிதல்
❖ வாடிக்கையாளருக்கான தகவல்களை மிகவிரைவாக வழங்குதல்

**சமூகநலன்**

❖ பெரும்பாலானவர்கள் வீட்டில் இருந்து தொழில்புரியச்சந்தர்ப்பம் கிடைத்தல்
❖ வாழ்க்கைத்தரம் உயர்வடைதல்
❖ கிராமியப்பிரதேச, தூரப்பிரதேசங்களுக்குப் பொருள்நுகர்வுக்கான வாய்ப்புத்தோன்றுகின்றது.

**இலத்திரனியல் வணிகத்தின் வரையறைகள் சில**

❖ பாதுகாப்புக்குறைவு
❖ இலத்திரனியல் தொடர்பாடல் வலையமைப்புப்போதுமான தல்ல
❖ இலத்திரனியல் வர்த்தக மென்பாகம் எல்லாவிடங்களுக்கும் எல்லாஉபகரணங்களுக்கும் பொதுவானவையல்ல
❖ நம்பிக்கைத்தன்மை குறைவு
❖ சட்டப்பிரச்சினை
❖ மொழிப்பிரச்சினை

**இலத்திரனியல் வணிகத்தின் செல்வாக்குகள்**

❖ நேரடிவிற்பனை அதிகமாகும்
❖ புதியவிற்பனை தோன்றும்
❖ நேர்சேமிப்பு
❖ சுழற்சிக்காலம் குறைவு
❖ வாடிக்கையாளர்சேவை அதிகமாகும்
❖ பொருள் மேம்பாட்டுப்பணிகளை இலகுவாக்குதல் போன்ற பல்வேறு சேவைகளை இலத்திரனியல் வணிகம்மூலம் பெறலாம்.

**செல்வி சி. கஸ்தூரி**
தரம் - 11B

## இலங்கை

❖ இலங்கைத்தீவில் பெரியவை ஊர்காவற்துறை, நெடுந்தீவு.
❖ இலங்கையின் திருகோணமலைத்துறைமுகம் இயற்கையானது.
❖ இலங்கையின் தேசியகீதத்தை இயற்றியவர் ஆனந்தசமரக்கோன்.
❖ இலங்கையின் தேசியமரம் நாகமரம்.
❖ இலங்கையின் தேசியவிளையாட்டு எல்லே, கரப்பந்தாட்டம்.
❖ இலங்கையின் தேசியமலர் நீலோற்பலம். (நீல அல்லி மலர்)
❖ இலங்கையின் தேசியப்பறவை காட்டுக்கோழி.
❖ இலங்கையின் தேசியப்புனிதமரம் வெள்ளரசு.
❖ இலங்கையின் புகழ்பூத்தஓவியம் சிகிரியா.
❖ நாட்டில் தற்போதைய பாடசாலைகளின் அண்ணளவான எண்ணிக்கை 10,000.

**செல்வி ப. நிரோஜினி**
தரம் - 12B

# முதியோர் சுமை என்பதை தகர்ப்போம்

"மூத்தோர் ஒருவர் இறப்பது ஒரு பெரிய நூலகம் எரிவதற்கு ஒப்பாகும்" என்பது ஓர் ஆபிரிக்கநாட்டுப் பழமொழி. உண்மைதான் மனிதகுலத்தின் மாபெரும் முன்னேற்றங்களுக்கு அடிப்படையாக ஆன்றோரின் அனுபவஅறிவே விளங்கு கிறது. கணனியுகத்தில் கால்பதித்துக் கணக்கிலாச்சாதனைகளை மனிதஇனம் சாதித்திருக்கிறது. தொகுக்கப்பட்ட முன்னோரின் அனுபவங்களால்தான் இன்றைய சுகவாழ்வை மனிதன் வகுத்துக் கொள்கின்றான்.

இன்றைய நவீனயுக வாழ்க்கை யிலே எமது நடைமுறையில் "மூத்தோரை அரவணைப்போம்" என்ற உயர்ந்த பண்பானது அருகிக்கொண்டு செல்வது கண்கூடு. அதனைவிரிவாக நாம்நோக்கு வோமானால் அவை மிகவும்கவலைக் குரிய இடங்களாகக்காணப்படுகின்றன.

"உனக்கு நன்மை உண்டாகி யிருப்பதற்காக முதிர்ந்த வயதுள்ளோர் முகத்தை நீ கனம் பண்ணுவாயாக" என்று பைபிள் போதிக்கின்றது. இப்புனித நூலின் கூற்றை நாம் மனத்திற்கொள்ள வேண்டும். மூத்தோரைமதித்தல் மதி யுடைய மனிதரின்கடமையாகும். அவ்வாறு செய்யாதவர்கள் செய்நன்றி மறந்த குற்றத்திற்காளாகின்றார்கள். மெய்கொண்டு மனிதராகப் பிறந்ததன் மகத்துவத்தையே இழந்துவிடுகின் றார்கள்.

இன்றைய யுகத்தில் வயதான வர்களைப் பேணும்மனப்பாங்கு நலிந்து வருகின்றது. இன்றையசமூகத்தில் நிலவுகின்ற வேலையில்லாத்திண்டாட்டம், குடிப்பெயர்வு, வறுமை என்பனவே அவற் றிற்கான காரணங்களாகும். பொருளாதார நெருக்கடிகள் இன்று பொதுவான பிரச் சினையாக உள்ளன. விரக்தியுற்று இருக் கும் பெரும்பாலான வாலிபச்சமூகத் தினர் தத்தம்வாழ்க்கையை ஒருவாறு ஓட்டிச்செல்கின்றனர். பெற்றோரைக் கௌரவிக்கும் பணியையே ஒதுக்கிவிடு கின்றயிவர்கள் மற்றைய முதியவர்களை எவ்வாறு மனதிற்கொள்ளமுடியும். வேறு சிலரோ நாகரிகவாழ்வின் பாதகச் சின்னங்களாக ஒதுக்கிவிடுகின்றார்கள். இதனால் அல்லலடைந்து கவலையுறும் நிலை அவர்களுக்குத்தோன்றியுள்ளது.

மேலும், அவர்களின் துன்ப நிலைகளை ஆராய்வோமானால் இன்று சிலமுதியவர்களை எடுத்துக்கொள்வோ மானால் அவர்களுக்கு எந்தவுறவுகளும் அற்றநிலையில் துயருற்றுக் கொண்டிருப் பதைக் காணமுடிகின்றது. இவர்கள் இளம்தலைமுறையால் சமூகத்திற்குச் சுமையானவர்கள் என்ற மூடக்கொள்கை யால் ஒதுக்கப்பட்டு முதியோரில்லமே தஞ்சமென்று தயங்கித்தம் அனுபவ அறிவைப் பகிரமுடியாது துடிக்கின்றனர். இன்றைய காலகட்டத்தை நோக்குவோ மானால், இன்றைய நாகரிகயுகத்திலே அகப்பட்ட இளம்தலைமுறையினர் உண்மையெது? போலியெது? என்று அறியாது திகைப்படைந்து காணப்படு கின்றனர். இதனால் முதியவர்கள் பற்றிய எந்த எண்ணமுமில்லாது திரிகின்றனர். இதனாலேயே முதியவர்கள் அவர் களுக்கு ஒரு சுமைப்பொருளாகக் காணப் படுகின்றனர்.

இவ்ஞானதீபங்களே இளைய தலைமுறையைக் கட்டியெழுப்புவதில் அரும்பாடுபட்டுழைப்பவர்கள். அவர் களாலேதான் இவ்வுலகு விடிவதற்குப் பலவழிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

அவர்கள் இல்லையாயின் "நிலா இன்றிய வானம் போல" இளம்தலைமுறையினர் வாழ்விலே இருள்சூழ்ந்துவிடும். இவற்றை எல்லாம் கருத்திற்கொண்டு இளம் சிறார்களின் சுதந்திரவாழ்விற்கும் நாட்டின் அமைதிச்சூழ்நிலைக்கும் வித்திட்டு, நீர் பாய்ச்சி விருட்சமாகச் செய்பவர்கள் முதியோர்கள் என்றால் அதுமிகை யாகாது.

"பண்புடையார் பட்டுண்டுலகம்
அதுவின்றேல்
மண்புக்கு மாய்வது மன்"

என்ற குறளின் பொருளுக்கேற்ப இவ்வுலகமானது நிலைத்துநிற்கப் பண்புடையவர்களேகாரணம். இவர்கள் இல்லையாயின், இவ்வுலகு மண்ணுக் குள் மாண்டுமூழ்கிவிடும். அத்தகைய பண்புடையவர்களாக விளங்குபவர்கள் முதியோர்கள். இன்று நம்நாட்டினை எடுத்துக்கொள்வோமானால் முதியோர் பலர் முதியோரில்லங்களிலே வாழ்வதால் முதியோர்தொகை குறைவடைவதால் இன்றைய இளையதலைமுறையினருக்கு நல்வழிகாட்ட எமதுஅனுபவத்தெய்வங் கள் இல்லாமையால் அவர்கள் தீயவழி களிலேசென்று துயரடைகின்றனர்.

"அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என்பதற்கிணங்க அவர்களைத் தெய்வங்களாக வழிபடவேண்டும். அப்போதுதான் அவர்கள்மனம் திருப்தி யடையும். "தள்ளாத வயதில் ஏன் கொள்ளாத வேலை" என அவர்களை அவமதிக்கக் கூடாது. அவர்களை நிந்திக் கக்கூடாது. இளைய தலைமுறைக்கு அவர்களிடமிருந்து அறிவும் அனுபவ மும் பரிமாற்றப்படுகின்றது. இவர்களின் ஆத்மா சாந்தியடையும்வகையில் அன்புடனுரையாடி அவர்களின் யோச னைக்குச்செவிசாய்த்து அவற்றில் நல்ல கருத்துக்களை ஏற்றுநடந்து அவர்களை மகிழ்விக்கவேண்டும்.

"காவோலை விழக் குருத் தோலை சிரிக்கும்" என்பதனை ஞாபத்தில்வைத்துக் கடமைபுரியவேண் டும். அவர்களுக்கு நன்மை பலபுரிந்து அவர்களைச் சுமையென்பதைத் தகர்க்க வேண்டும். இதனையெல்லாம் ஞாபகப் படுத்தி இலங்கையரசு ஒக்டோபர் - 01 ஐச் சர்வதேச முதியோர் தினமாகப் பிரகடனம் செய்துள்ளது.

எனவே, இளம்தலைமுறை யினராகியநாம் அறக்கோட்டங்கள் அமைத்தல், அன்னசத்திரங்களை ஆக்கு வதைக்காட்டிலும் மறலியைநோக்கி நடக்கின்றமாந்தரைப்பேணுவதில் உளத் திருப்தியடைந்து, அவர்கள் சுமை என்றுகருத்திற்கொள்ளாது முன்னைய சந்ததியின் கரங்களைப்பற்றியபடி அவர்களின் அனுபவங்களைப் பகிர்ந்த படி அச்சமின்றிநடப்போம். உச்சப் புள்ளிகள் நிச்சயமாக எங்கள் கைகளிலே.

***செல்வி சி. கஸ்தூரி***
தரம் - 11B

☆ *பல தோல்விகளைச் சமாளித்து வெற்றியடைய வேண்டுமானால் குதூகல உணர்ச்சிவேண்டும்.*

☆ *ஆசை பேராசையாகவும் அன்புவெறியாகவும் மாறும்போது அமைதி தூரஓடிவிடும்.*

# இன்றைய நூற்றாண்டில் வைத்தியத்துறையின் உன்னத சேவை

ஆதிகாலத்து மனிதர்கள் விஞ்ஞானத்துறையின் பின்தங்கிய வளர்ச்சியை எதிர்நோக்கியிருந்த காலப் பகுதியில் அவர்களுக்கேற்பட்ட நோய் களை மாற்றுவதற்காக இயற்கையிற் கிடைக்கின்ற மூலிகைகள் மற்றும் மெய்ஞ்ஞான நம்பிக்கைகளின் மூல மாகவே நோய்களைக் கூடியவரையில் குணமாக்கிவந்தனர். ஆனால், அன்றிருந்த மருத்துவத்துறை இன்று ஒருசில இடங்களில் கையாளப்பட்டுவந்தாலும் மிகமிக அதிகமான இடங்களில் தற்கால அதிநவீனமுறையில் தொழில்நுட்பத் தொழில்நுணுக்கங்களினாலேற்பட்ட விஞ்ஞானவளர்ச்சியால் புதுப்புது வகை யான சிகிச்சைமுறைகளும் இரசாயனச் செயற்கை மருந்துகளுமே அதிக பாவனையிலுள்ளன. அதாவது, மனித னுக்கான சிகிச்சைமுறைகளில் அதிகள விற் கணினிகள் பங்கேற்றுநிற்கின்றன. அத்துடன் செயற்கையான இறப்பர் மற்றும் பிளாஸ்ரிக், உலோகங்கள் என்பவற்றையும் மனிதவுடலுக்குப் பல்வேறு வடிவங்களில் அங்கங்களுக்கு ஏற்றவாறு மாற்றி வடிவமைத்து, உடலிற் பொருத்திச்செயற்படவைக்குமளவிற்கு முன்னேறியுள்ளது. அத்துடன், செயற்கை யாகவே மனிதனைப் படைக்கின்ற அறிவியலாற்றல்தளும் விஞ்ஞான மருத்துவத்துறைகளின் மூலமாக அறிமுகமாகிவிட்டன.

கருவிகளின் செயற்றிறனால் நடைபெற்றுவருகின்ற சிகிச்சைமுறைகள் சிலவற்றை நோக்குகின்றபோது, கழுத் துக்குக் கீழ்ப்புறமாக உடம்பின் உட் பகுதிகளை அவதானிப்பதற்கு வயர் போன்ற ஒருகருவியை வாயினூடாகச் செலுத்தி உடம்பின் உட்பகுதிகளை வீடியோப்படமாக்கி உடம்பினுட்பகுதி களிலிருக்கின்ற காயங்கள், அல்சர் நோய்க்கான அடையாளங்களையும் இன்னும் ஏனையகுறைபாடுகளையும் கண்டறியும் வசதியுள்ளது. அதுபோல பெருங்குடல் சிறுகுடல் போன்றவற்றில் இருக்கின்ற வெடிப்புக்கள், காயங்க ளுக்குச் சிகிச்சைசெய்வதற்காக வெட்ட வேண்டிய அவசியமே இல்லை. சிறிய ஒரு இலத்திரனியல் கருவியை நோயாளி யிடம் விழுங்கக்கொடுக்கப்படுகிறது. அந்தக்கருவிக்கான சகலசெயற்பாடு களையும் கணினிகள் வடிவமைக்க அந்தக்கருவிகள் தேவையானசிகிச் சையை மனிதஉடலுக்கு வழங்கியபின் மீள உடலிலிருந்து வெளியேறியும் சாதனைபடைக்கின்றன.

மேலும், எலும்புகளிலுள்ள முறிவுகளைக் கண்டறிவதற்காக எக்ஸ் கதிர்கள் மூலமாக அவற்றை உடம்பின் பகுதிகளினூடாகச் செலுத்துவதன்மூல மாகவும் முறிவடைந்தபகுதிகளைச் சீரானமுறையில் கண்டறிந்து சிகிச்சை செய்யவும் பெருமுதவிபுரிகிறது. இவை மருத்துவமுறையின் படிமுறை வளர்ச்சி களே. சிறுநீரகங்களில் தேங்குகின்ற சிறுநீரகக்கற்களை அகற்றுவதற்கும் சத்திரசிகிச்சைகளுக்கும் "அல்ரா" போன்றவை பெரிதும் பயன்படுத்தப் படுகின்றன. மனிதஉடலின் விற்றமின் டி தேவைகளைப் பூர்த்திசெய்வதற்கு சூரியக்கதிர்கள் பயன்படுகிறது. அத்துடன் இன்னும்பிற்பட்டகாலப்

பகுதியில் சிறுநீரகக்கற்களைக்கரைத்து அகற்றக்கூடிய வில்லைகளையும் கண்டறிந்துவிட்டனர்.

இவற்றுடன் செயற்கைப்பொருட்களை மனிதஉடலுக்குப் பயன்படுத்துவதன்மூலமாக ஏற்பட்டுவருகின்ற மருத்துவத்துறை வளர்ச்சியைப்பார்க்கின்றபோது செயற்கையாகச்செய்யப்பட்ட இருதயத்தை மனிதவுடலுக்குப் பொருத்தி வெற்றிகண்டனர். எலும்புகளிலேற்பட்ட முறிவுக்குப் பிளாஸ்ரிக் மற்றும் உலோகம் போன்றவற்றைவைத்துப் பொருத்தியும் மருத்துவத்துறை சாதனை புரிந்துவருகின்றது. மேலைநாட்டு வைத்தியர்கள் இத்துடனன்றி இருதயத்தை இன்னொருவருக்கு மாற்றுதல், விலங்குகளின் உடலுறுப்புக்களை மனிதனுக்கு மாற்றுதல், ஒருவருடைய கண்ணை இன்னொருவருக்குமாற்றுதல், அதாவது, குரங்கு, நாய் போன்றவற்றின் சிறுநீரகங்களை மனிதனுக்குமாற்றுதல் வெட்டப்பட்டகையை மீளப்பொருத்தி இயங்கவைத்தல் போன்றமுயற்சிகளில் வெற்றியும் கண்டுவருகின்றனர் மேலைநாட்டு வைத்தியர்கள். இவையும் விஞ்ஞானத்தொழில்நுட்பத்தின் காரணமாக மருத்துவத்துறை கண்டுவருகின்ற முன்னேற்றப்படிகளே.

இவை மட்டுமன்றி, மனிதனையே செயற்கையாக உருவாக்கும் முயற்சிகளிலும் வெற்றிகளைக் கண்டுவிட்டார்கள். அதாவது, மனிதவுடற்கலன்களின் உற்பத்திப் பதார்த்தங்கள் மட்டுமன்றி, அவற்றையொத்த பதார்த்தங்களைச் செயற்கையாக உற்பத்திசெய்து அவற்றின் மூலமாக, கண்ணாடிப் பெட்டிகளில் கருவை உருவாக்கி விதியை மதியால் வெற்றிகொண்டு வியக்கவைக் கும்வகையிலே அளப்பரிய புதுமைகளைக் கண்டுவருகின்றான் மனிதனென்றால் அதுமிகையாகாது. இதுமட்டுமன்றி, மேலைத்தேய கலாசாரம், பண்பாடு என்பவற்றினால் உலகத்தவர்களை மிரட்டிவரும் எச்.ஐ.வி. வைரசிற்கும் முற்றுப்புள்ளிவைக்கும் நடவடிக்கைகளில் பெரிதும் ஈடுபட்டிருக்கின்றான். அதற்கு முதற்கட்டமாக இந்தியவிஞ்ஞானியொருவர் ஆய்வை மேற்கொண்டு, எயிட்ஸ் நோயின் தோற்றுவாய், அடிப்படைக் காரணிகளைக் கண்டறிந்துள்ளார். இதனையடுத்து இந்நோயை முற்றாக அழிப்பதற்கான சிகிச்சைமுறைகள், மருந்துவகைகள் கண்டறியப்படலாமென நம்பிக்கை ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு மருந்துவத்துறையில் நமதுநாடு வளர்ச்சிகுன்றியிருப்பினும் ஏனைய மேலைத்தேயநாடுகள் மகத்தான வளர்ச்சியைக் கண்டுவருகின்றன என்பதை அறியமுடியும்.

**செல்வி க. ஜெயரஞ்சினி**
தரம் - 11B

## இலங்கையில் கூடியவை

| | | |
|---|---|---|
| கூடுதலான நிர்வாகமாவட்டங்கள் கொண்டமாகாணம் | - | வடக்கு |
| நிலப்பரப்பில் கூடியமாவட்டம் | - | அநுராதபுரம் |
| கூடிய மழைவீழ்ச்சி பெறுமிடம் | - | வட்டவளை |

# சிறுவர்களின் சிறுவர் உலகை அவர்களுக்கு வழங்குவோம்

இன்றையவுலகு விஞ்ஞான உலகு, விந்தைகள்செய்து சிந்தைகள் கவரும் விசித்திரவுலகு. இங்கே கால கதியின் வேகத்திலே பழையனகழிகின்றன. புதியனபுகுகின்றன. அதன் காரணமாக மக்களின் வாழ்க்கைத்தரம் நாளுக்குநாள் மாற்றம்பெற்றுச்செல்கிறது. அவ்வாழ்க்கைத்தர மாற்றத்தோடுசேர்ந்து நடைபயிலவேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

இன்றைய இளையசமுதாயமே நாளையவுலகத்தின் தலைவிதியை நிர்ணயிக்கப்போகும் பிரமாக்கள். நவீன விஞ்ஞானயுகத்தில் வேகமான நாகரிக மாற்றம், காலத்தின் கலாசாரப்புரட்சி என்பவை காரணமாக இன்றைய இளைய சமுதாயத்தினர் மாபெரும்சவால்களை எதிர்நோக்கியுள்ளனர்.

இவ்வாறானசவால்களிலே குறிப்பிடத்தக்கவையாகச் சிறுவர்துஷ்பிரயோகம், சிறுவர்பாலியல்வல்லுறவு, சிறுபிள்ளைகளை வேலைக்கமர்த்தல், சிறுவர்களின் விருப்புவெறுப்புக்கள் ஏற்கப்படுவதில்லை. இவையாவும் சிறுவர்களுக்கு ஓர் அணையாகவே காணப்படுகின்றன.

இவ்வாறு சிறுவர்களுக்குரிய ஏகபோக உரிமைகள் அடியோடழிக்கப்படுகின்றன. இவ்வாறில்லாது "வாழ்க்கைப் போருக்கு இசைவாக்கம் அடையக்கூடிய உயிரினங்களே தப்பிப்பிழைக்கக் கூடியன" எனும்கூற்று தத்துவத்தின் அடிப்படையில் எதிர்காலயுகத்தை எதிர்கொள்ளக்கூடியவகையில் உடல் ரீதியில் மட்டுமல்ல, உளரீதியிலும் பரிணாம வளர்ச்சியடைந்த மனிதனே உலகில் வாழ்வதற்கு அருகதையுள்ளவனாவான். ஆகவே, உலகியல்ரீதியிலும், உளவியல்ரீதியிலும் பலம் பொருந்திய சமுதாயத்தைக்கட்டியெழுப்புவது இன்றையசிறுவர்களின் கடமையாகும்.

இளையசமுதாயத்தினரிடையே உளவியல்ரீதியில் மறுமலர்ச்சிகாணக் கல்வி இன்றியமையாதது. "இளமையில் கல்வி சிலையிலெழுத்து", "ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?" என்ற வாக்குகளுக்கமைய குழந்தைக்கு ஐந்து வயதிலிருந்தே கல்வியூட்ட ஆரம்பித்தால்மட்டுமே உரியபலனைப் பெறமுடியும்.

கல்வியானது உளவியல்பாங்கு, சமூகசிந்தனை என்பவற்றுடன் இரண்டறக் கலந்தளிக்கப்படுகையிலே முழுமை பெறுகின்றது. அவ்வாறில்லாமல் வெறும் மனனஞ்செய்வதைமட்டும் அடிப்படையாகக்கொண்ட கல்வி "ஏட்டு சுரைக்காய் கறிக்கு உதவாதது" என்பதுபோல் பயனற்றதாகிவிடுகின்றது.

சிறுவர்களின் உலகுக்குப் படிக்கற்களாக இருக்கவேண்டிய சமூகம் இவ்வாறு தடைக்கற்களாக இருப்பது பற்றிநோக்கும்போது, புகைப்பிடிக்கின்ற பெரியவர்கள்சிலர் சிறுவர்களைக் கொண்டு சிகரெட், பீடி எனக்கடைகளிலே வாங்கித்தாங்கள்நுகர்கின்றனர். இவையெல்லாம் அச்சிறுவர்களிற்கு ஒருசவாலாகும். அவனும் அத்தீயபழக்கத்தில் ஈடுபடவேண்டுமென்ற விருப்பில் அதனைச் செய்யமுற்படுகின்றான். அப்பிஞ்சு மனத்தில் நஞ்சுவிருட்சம் ஒன்று வேர்விட

ஆரம்பிக்கின்றது. பிற்காலத்திலே அவனுக்கு அப்பழக்கம் வழக்கமாகவே மாறக்கூடிய நிலைமையேற்படுகின்றது. இவ்வாறு மெல்லமெல்லச் சிறுவர்கள் அழிவுப்பாதையினுள் தள்ளப்படுகின்றனர்.

சிறுவர்களின் சமுதாயத்தைப் பொறுத்தவரை ஒவ்வொருகணமும் பொன்னாகப் பேணிக்காக்கப்பட வேண்டும். இறந்தமனிதன் மீண்டும் வராததைப் போன்று இறந்தகாலமும் ஒருபோதும் மீளவரப்போவதில்லை. காலத்தைப் பயனுள்ளதாகக் கழித்தவன் தோற்றதாகச் சரித்திரமேகிடையாது. ஆகவே, கரைந்துபோகும் ஒவ்வொருநிமிடமும் ஓர் இளைஞனையோ அல்லது சிறுவனையோ பொறுத்தவரை முன்னேற்றத்திற்கிட்டுச்செல்லும் படிக்கட்டுகளாகவே அமையவேண்டும். தமக்குமுன்னே வாழ்ந்துமறைந்த பெரியோர்தம் இலட்சியங்களையும், சிந்தனைகளையும் ஒன்றிணைத்து காலத்தின் தேவைக்கேற்ப முன்னெடுத்துச்செல்லுதலே இன்றைய சிறுவர் தலைமுறையினருக்கு வேண்டப்படும் பண்பாகும்.

எனவே "பழையன கழித்தலும், புதியன புகுத்தலும் காலவழுவல" என்ற சங்கச்சான்றோர்வாக்கிற்கமைய வித்து முளைகொண்டு செடியாகி அது பருவமெய்தி, பூத்துக்காய்த்து, கனியாகி கனி மீண்டும் வித்தினைத்தந்து அதன் பரம்பரைப்பரிணாமச்சங்கிலியின் தொடர்பினைத்தந்து மறைவதுபோன்று மானிடவாழ்வும் தோன்றி, வளர்ந்து, வாழ்ந்து மறைந்துவிடும் தன்மையுடையது.

இவ் யதார்த்த உலகில் மூத்தோர் விட்டுச்சென்ற இடைவெளிகளை நிரப்பி அவர்கள்செய்தபணிகளைத் தோள்களில் தாங்கி தாம்வாழும் சமுதாயத்தையும், நாட்டினையும், ஏன்? — உலக மக்களையும் முன்னெடுத்துச்செல்லும் உத்தம தலைவர்களாக இன்றைய சிறுவர் சமுதாயம் விளங்கவேண்டும்.

"கற்க கசடறக் கற்றவை கற்றபின்
நிற்க அதற்கு தக"

என்ற வள்ளுவர் வாக்கிற்கமைய நன்கு துறைபோகக் கற்றால்மட்டும்போதாது. கற்றகல்விக்குப் பயனேற்படக்கூடிய வகையில் அதற்குத்தக ஒழுகவும் வேண்டும். கல்வியென்ற சுடர்விளக்கின் மூலம் மேலும் பலரின்வாழ்வில் அறிவு ஒளியேற்றமுடியும்.

இவ்வாறு சிறுவர்களின் உரிமைகள் மேம்படுத்தப்படவேண்டும். ஒவ்வொரு மனிதவுள்ளங்களிலும் வெவ்வேறுபட்ட எண்ணங்களும், ஆசைகளும் இருப்பது வழமை. அதேபோன்று சிறுவர்களுக்கும் அவர்களது எண்ணங்களுக்கும் மதிப்பளித்தல்வேண்டும். "இன்றைய சிறுவர்களே நாளைய தலைவர்கள்" ஆதலால் அவர்கள் சீராகநடத்தப்பட்டு அவர்களை ஊக்குவித்துவந்தால்தான் இனிவரும் சந்ததியும் நன்கு சிறப்புற்றுவாழும்.

சிறுவர்கள் கல்விபெற்றுச் சான்றோராக விளங்குவதுடன் மனிதநேயமுள்ளவர்களாக மானிடநாமத்தையும், ஒவ்வொரு தனிமனிதனது சுதந்திரத்தையும், உரிமைகளையும் மதிப்பவர்களாக விளங்கினால்மட்டுமே நாளையசமுதாயத்தில் சிறுவர் ஒப்பற்ற தலைவர்களாக விளங்கமுடியும். இவ்வாறு சிறுவர் உலகை சிறுவர்களுக்குவழங்கி அவர்களை நல்வழிப்படுத்துவோம்.

"இன்றைய சிறுவர்களே
நாளைய தலைவர்கள்"

**செல்வி த. கெங்கா**
தரம் - 11B

# சுற்றாடல் பாதுகாப்பு

மனித சமுதாயம் பெரிதும் இயற்கையிலேயே தங்கியுள்ளது. புவியின் முக்கியகூறுகளாக நிலம், நீர், ஆகாயம், காற்று, இயற்கைத்தாவரங்கள் என்பன பாதிப்படையும்போது நாம் வாழும் சூழல்மாசடைகின்றது. புவியின் மூலவளங்கள் வரையறுக்கப்பட்ட நிலையில் சனத்தொகைப்பெருக்கம் மிக வேகமாக அதிகரித்துவருவதை நாம் அவதானிக்கமுடிகின்றது. அதாவது விஞ்ஞானவளர்ச்சியின் காரணமாகச் சனத்தொகைவீதமும் அதிகமாகவுள்ளது. எனவே, அதிகரிக்கும் சனத்தொகைச்செறிவுக்கேற்ப் கைத்தொழிற்சாலைகள், பாரியஇயந்திரசாலைகள் என்பவற்றின் பெருக்கமும் அதிகரிப்பது தவிர்க்கமுடியாததொன்றாகும். சனத்தொகை அதிகரிப்புக்கேற்ப உணவுற்பத்தியின் அளவும் அதிகரிக்கவேண்டும்.

எமது சுற்றுப்புறச்சூழலானது பல வழிகளிலும் மாசுபடுவதை அவதானிக்க முடிகின்றது. விஞ்ஞானவளர்ச்சியின் காரணமாக வாகனங்களின் தொகையானது அதிகரித்துச்செல்கின்றது. இவ்வாகனங்கள் வீதியால்செல்லும்போது வெளியேறும் மிதமிஞ்சியபுகைக்கழிவுகளால் சூழல் மிகவேிதில் மாசடைந்துவிடுகின்றது. குறிப்பாக, நகரப்பகுதிகளில் இன்று சேவையிலீடுபட்டிருக்கும் பல்லாயிரக்கணக்கான வாகனங்கள் வெளியேற்றும் புகையினால் வளிமண்டலம் பாதிக்கப்படுகின்றது. அதாவது, வளிமண்டலத்தில் காபனீரொட்சைட்டின் செறிவு அதிகரிக்கின்றது.

நாட்டின் நகரப்பகுதிகளைமையமாகக்கொண்டு தொழிற்சாலைகள், முக்கியநிறுவனங்கள் இயங்குகின்றன. இதனால் கிராமப்புறங்களில் வாழும் மக்களும் நகரத்தைநோக்கிப் படையெடுக்கின்றனர். இதன்காரணமாக மேன்மேலும் அந்நகரின் சூழல்மாசடைகின்றது. இதனால், மக்களினாரோக்கியம் பாதிப்படைகின்றது. இதனைத் தடுத்துநிறுத்தும்வகையில் நாட்டின் பல பாகங்களிலும் பரவலாகத் தொழிற்சாலைகளையும் நிறுவனங்களையும் கொண்டுசெல்வதன்மூலம் மக்கள் ஓரிடத்தில் செறிவதை ஐதாக்கி சூழல் மாசடைவதைத் தடுக்கமுடியும். இவ்வகையான தொழிற்சாலைகள் வெளியேற்றும்கழிவுகள் நச்சுத்தன்மை வாய்ந்தனவாகவும், உயிரினங்களின் சூழலில் பெரும் அபாயகரமானவிளைவுகளை ஏற்படுத்துவனவாகவும் காணப்படுகின்றன. அரசு இவ்விடயத்தில் உன்னிப்பாகக் கவனம்செலுத்துவதுடன் சூழலைப் பாதிக்காதவகையில் தொழிற்சாலைகளைப்பேணிவரும் முன்னோடி நடவடிக்கைகளைப்பற்றியும் விழிப்பாக இருக்கவேண்டும். மற்றும், சரியான நடைமுறைகளைப்பேணாத தொழிற்சாலைகளை இழுத்துமூடுவதற்கு அரசுமுன்வரவேண்டும்.

இன்று பாவனைக்குதவாத பல பழைய வாகனங்கள் வீதியிலே பவனி வருகின்றன. அவ்வாகனங்கள் கக்கும் புகையின் காரணமாகச் சூழல்மாசடைகின்றது. இப்படியான பாவனைக்குதவாத வாகனங்கள் வீதியால் வருவதைத் தடுக்கவேண்டும். இயற்கைக்காடுகளை அழிப்பதன்மூலமும் சூழல்மாசடைகின்றது. அதாவது இயற்கைக்காடுகளை மனிதன் பலதேவைகளுக்காக அழிக்கிறான். சனத்தொகைப்பெருக்கம் காரணமாகக் குடியிருப்புக்கள் அமைப்பதற்கும்

தொழிற்சாலைகள் அமைப்பதற்கும் காடுகளை அழிக்கின்றான். மற்றும் போக்குவரத்துப் பாதைகளமைத்தல், பயிர்ச்செய்கைநடவடிக்கைகள், விறகுத் தேவை, (இலங்கை மக்களின் பிரதான எரிபொருளாக விறகிருப்பதனால் அதி களவான காடுகள் அழிக்கப்படுகின்றன.) இயற்கைக்காரணிகள் (வெள்ளப் பெருக்கு, நோய்) போன்ற பலகாரணங் களால் இயற்கைக்காடுகள் அழிக்கப் படுகின்றன.

இயற்கைககாடுகளை அழிப்ப தன் காரணமாக சூழற்சமநிலை பாதிப் படையும். அதாவது, வெப்பநிலை அதிக ரிக்கும். ஓசோன்படையில் துவாரம் ஏற்படுதல் காரணமாக மனிதனுக்குப்பல பிரச்சினைகள் ஏற்படுகின்றன. கால நிலைமாற்றமடையும், மழைவீழ்ச்சி குன்றும், மண்ணரிப்பேற்படும், வளி மண்டலத்தில் காபனீரொட்சைட்டின் அளவுஅதிகரிக்கும், நீரியல்வட்டம் பாதிப் படையும், காடுகள் அழிக்கப்படுகின்ற போது அங்குள்ள பறவைகள், விலங்கு கள் அழியும். இதனால், உயிரினப் பல்வகைமை பாதிக்கப்படுதல் போன்ற பிரச்சினைகள் மக்கள்மத்தியில் எழுகின்றன.

அடர்ந்த காடுகளின் நடுவே மரவரிவுசாலைகளே இயங்குகின்றன என்பது இரகசியவிடயமல்ல. இயற்கைக் காடுகளைப் பேணிப்பாதுகாப்பதற்கு மேற் கொள்ளவேண்டிய நடவடிக்கைகளாகக் காடுகள் அழிக்கப்படுவதைக் கட்டுப் படுத்தல் அதாவது, வனபரிபாலன அதிகாரிகளின் கட்டளையைமீறி மரங்களை வெட்டுவதற்குக் கடுமையான நடவடிக்கையெடுத்தல், இவற்றைக் கட்டுப்படுத்துவதன் மூலமும் மரவுற் பத்திப்பொருட்களுக்குப்பதிலாகப் பிரதி யீட்டுப் பொருட்களைப்பயன்படுத்தல் மூலமும் சுற்றாடல் பாதுகாக்கப் படுகின்றது.

அடுத்து, சூழலிலுள்ள குப்பை கூழங்களைப்புதைத்தல். அதேபோன்று, எமது உற்றதோழனான பொலித்தீன் பாவனையையும் குறைத்தல்வேண்டும். சுற்றாடலைப் பாதுகாக்கும்முகமாக ஜூன் 05-ம்திகதி சர்வதேசசுற்றுச்சூழல் தினமாகக்கொண்டாடப்படுகின்றது.

எனவே, நாட்டினபிவிருத்தியும் ஆரோக்கியமான மனிதசமுதாயத்தின் மேம்பாடும் இயற்கைவளத்துடன் பின்னிப் பிணைந்தன என்றரீதியில் சூழலையும் அதன்கூறுகளையும் பாதுகாக்கவேண்டி யது அனைவரதும் கடமையாகும். இவ்வாறு, சூழலைப்பாதுகாக்க அரசுக் குப்பக்கபலமாகச் சமூகநோக்குக் கொண்ட அரசசார்பற்ற சமூகநலன் பேணும்நிறுவனங்களும் உதவமுன்வர வேண்டும். வெள்ளம் வருமுன்னே அணைகட்டுவது முக்கிய செயலாகும். இதனை நாம் ஒவ்வொருவரும் மனதில் நிறுத்திச்செயற்படுதல் சாலச்சிறந்த தாகும்.

**செல்வி இ. விஜிதா**
தரம் - 11[B]

**இலங்கை**

❖ இலங்கைத் தொழில்நுட்பக்கல்லூரி முதன்முதலில் 1943-ம் ஆண்டு கொழும்பு மருதானையில் ஆரம்பித்துவைக்கப்பட்டது.

# கவர்ச்சியானவை ஆபத்தானவை

வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பழங்களின் பாதுகாப்பிற்காகவும் நீண்டநாட்களுக்குப் பழுதடையாதிருப்பதற்காகவும் கவர்ச்சியாகத் தோன்றுவதற்காகவும் பயன்படுத்தப்படுகின்ற விவசாயஇரசாயனங்கள் மனிதனின் ஆரோக்கியத்திற்குக் குந்தகமாக அமைந்துவிடுகின்றன.

பொதுவாக வெளிநாடுகளில் இருந்து இறக்குமதியாகின்ற பழங்கள், உருளைக்கிழங்கு என்பவை 5 தடவைகளுக்குமேல் கிருமிநாசினிகள் தெளித்துப் பராமரிக்கப்படுபவை. புற்றுநோயை ஏற்படுத்தக்கூடியவையாகும்.

பழங்களிற்குப் பாவிக்கப்படுகின்ற நிறமூட்டி இரசாயனங்களும், பங்கசு நாசினிகளும், உருளைக்கிழங்கு, வெங்காயம் போன்றவற்றின் முளைதிறனைப் பிற்போடவைப்பதற்காகப் பயன்படுகின்ற இரசாயனங்களும் சாதாரணமாகவே பயன்படுத்தப்படுகின்றன. இவையும் உடலிற்கு ஆபத்தானவையே.

நீண்டநாட்களுக்குப் பழங்கள் பழுதடையாதிருப்பதற்காகவும் இரசாயனங்கள் பயன்படுகின்றன. உதாரணம்: வாழைப்பழத்தை இவ்வாறு 3 - 4 வாரங்களுக்குப் பாதுகாக்கலாம், திராட்சைப்பழத்தை 8-16 வாரங்களுக்கும், தோடம்பழம் 4-8 வாரங்களிற்கும் பாதுகாக்கமுடியும்.

பயிர்களுக்குப் பிரயோகிக்கப்படும் நாசினிகள் பயிர்களால் பிரித்தழிக்கப்படக்கூடியவை. அத்துடன் மழையினாலும் சிறிதளவு இழக்க வைக்கப்படுகின்றன. ஆனால், விளைபொருள்களுக்குப் பயன்படுத்தப்படுபவை அவற்றிலிருந்து அகற்றப்படுவது மிகவும் அரிதானதாகும்.

எனவே நச்சுப்பதார்த்தங்கள் பிரயோகிக்கப்பட்டவற்றை உண்ணாது நாமாக உற்பத்திசெய்கின்றவற்றை உண்பதற்காக வீட்டுத்தோட்டங்களைப் பராமரித்துப் பயன்பெறுவோமாக.

## விவசாய இரசாயனங்களின் குறியீடுகள்

| வகுப்பு | | நிறப்பட்டி | |
|---|---|---|---|
| 1A | அதிமிக ஆபத்தானவை | சிவப்பு |  |
| 1B | மிகவும் ஆபத்தானது | சிவப்பு |  |
| II | நடுத்தர ஆபத்தானது | மஞ்சள் | |
| III | மிதமான ஆபத்தானது | நீலம் | எச்சரிக்கை |
| IV | உடன் தீங்கு விளைவிக்காதவை | பச்சை | ______ |

செல்வன் பொ. வருண்ராஜ்
தரம் 11ஐ

# விஞ்ஞான விந்தை

இன்றுநாம் இருபத்தோராம் நூற்றாண்டினை நெருங்கிவிட்டோம். இயந்திர யுகமும் அவசரகதியும் வாழ்வாகிப் போய்விட்டன. மண்ணின்மைந்தர் நாம் விண்வெளியில் பயணித்துத் தண்மதியில் குதித்துவிட்டோம். தொழில்நுட்பம், பொறியியல், மருத்துவம், இலக்கியம், மொழியறிவு எதிலும் வெற்றிக்கொடி காட்டியபடி பயணம்செய்கிறது. இவ் வளப்பரிய சாதனங்களின் அடித்தளமாக விளங்குவது விஞ்ஞானமே. வாகனங்களின்சில்லுகள்சுழலுகின்றன. கடிகாரங்களின்முட்கள் சுழலுகின்றன. ஏன் நாம்வாழும்பூமிகூடச் சுழலுகிறதே. இவை யாவும் வாழ்க்கைச்சக்கரம் சுழலுவதை எடுத்துக்காட்டுகின்றன. விஞ்ஞானம் இன்றி மனிதனில்லை என்னும் அளவில் விஞ்ஞானம் மனிதனுடன் பின்னிப் பிணைந்துள்ளது. இவ்விஞ்ஞானம் வாழ்வோடுகொண்ட தொடர்புகளையும் நயநட்டங்களையும் சற்றுச்சீர்தூக்கிப் பார்ப்போம்.

விஞ்ஞானவளர்ச்சி சடுதியாக வந்தது ஒருசாதனையல்ல. அன்று நம்மைச்சூழவிருப்பது என்னவென்று தெரியாதமனிதன் இன்று செவ்வாய்க் கிரகத்தில் காலடிவைத்தான் என்றால் அது விஞ்ஞானத்துறையில் ஏற்பட்ட வளர்ச்சியே. அன்றையநாட்களில் ஆதி மனிதன் விலங்கோடுவிலங்காய் பேத மற்று வாழ்ந்தான். கதிரவன் மலரமுன் மாட்டுவண்டிகளிலும் நடந்தும் பயணங்களை மேற்கொண்டு கதிரவன் மறையும் நேரத்தில் பயணங்களைமுடித்த ஆதி காலமனிதன் இன்று அசுரவேகத்துடன் ஆகாயத்தில் சிலநிமிடம் சிட்டாகப் பறந்து பயணச்சிரமமும் நேரவிரயமும் சொல்லுந்தரமன்று என்று கண்டுபிடித்த மானுடம் இறுமாப்புடன் இன்று தலை நிமிர்ந்து நிற்கின்றது. அன்றையமனிதன் பறக்கும் பறவைகளைப்பார்த்துத் தாங்களும் பறக்கவேண்டுமென்று பேராசை கொண்டான். அந்தப்பேராசையை இன்றைய விஞ்ஞானிகளான "ரைட்" சகோதரர்கள் விமானத்தைக்கண்டுபிடித்து நிறைவேற்றியுள்ளனர். இந்த உன்னதக் கண்டுபிடிப்பால் ஒருமனிதன் காலை உணவைக்கொழும்பிலும் மதிய உணவைஇங்கிலாந்திலும் வைத்துக் கொள்ளமுடிகிறது.

தோமஸ் அல்வா எடிசனே விஞ்ஞானத்திற்கு விளக்கேற்றிவைத்தார் என்றால் அதுமிகையாகாது. இன்றைய உலகில் எதையெடுத்தாலும் இயங்குகின்ற மின்சாரத்தைக் கண்டுபிடித்தவர் இவரேயாகும். இன்றைய நவீனவுலகத்திற்கு மின்சாரம் அத்தியாவசியமான ஒன்றாகும். மின்சாரம் முகிழ்த்தபின் கைத்தொழிற்றுறையில் நிகழ்ந்த மாற்றங்கள் மிகப்பெரியன. வானொலி, தொலைக்காட்சி, மின்னழுத்தி மின்னடுப்பு, குளிர்சாதனப்பெட்டி, தொலைபேசியுமாக மின்னியல் சாதனங்களின் பட்டியல் மிகவும் நீள்கிறது. மார்க்கோணி என்னும் விஞ்ஞானி உலகச்செய்திகளையும் இனியபாடல்களையும் உடனுக்குடன் கேட்டு மகிழக்கூடிய வானொலிப் பெட்டியைக் கண்டுபிடித்தார். மனிதனையே கட்டுப்படுத்துமளவுக்குக் கணினிப்பயன்பாடு மேவிநிற்கிறது. கல்வி, தொழில்நுட்பம், சுகாதாரம் போன்ற சகல துறைகளிலும் கணினிகளே ஆதிக்கம் செலுத்துகின்றன. பெற்றமகன் தந்தையை வழிப்படுத்துவதுபோல விஞ்ஞானமே இன்று மனிதனை வழிகாட்டி ஆள்கின்றது.

கிரஹம்பெலென்பவர் வீட்டில் இருந்தே உள்நாட்டுக்கோ வெளிநாட்டுக்கோ பேசுவதற்கு தொலைபேசியைக் கண்டுபிடித்தார். மனிதன் தனது வாழ்க்கையில் வளமாகவாழ வைத்திய வசதிகளை நவீனமுறையில் அமைத்துக் கொடுக்கிறது. அன்றையநாட்களில்

இயற்கையே மனிதனை ஆண்டுகொண்டு இருந்தது. மரணம் வாழ்வின்முடிவில் தான்; ஆனால், இன்றைய மருத்துவ முன்னேற்றம் சாவிற்குச் சாவுமணி அடிக் குமளவில் வளர்ந்து நிற்கிறது. தொற்று நோயால் பற்றப்பட்டபோது தெய்வசீற்றம் எனநம்பி நேர்த்திசெய்த மனிதஇனம் இன்று இதயமாற்றுச் சத்திரசிகிச்சையைக் கடந்துவிட்டது. "இயற்கையைத் தன் வசமாக்கி இறப்பே அறியாப்பூமியாக" வாழ்நிலத்தைமாற்ற மனிதன் தீவிரமாக முயற்சி செய்துகொண்டிருக்கிறான். மாடாயுழைத்து ஓடாய்ப் போனவர்களின் காலம் 19-ம் நூற்றாண்டுடன் நிறைவு பெற்றுவிட்டது. இன்று மனிதன் மாடாய் உழைக்க ஆசைப்படுகின்றான். ஆனால் அதுபலிக்கவில்லை. காரணம் மனிதன் செய்யும் வேலைகளை இயந்திரங்கள் செய்கின்றன. விஞ்ஞானத்தின் கையைப் பற்றியபடி விவசாயமும் வீறுநடைபோடு கிறது. இவ்விஞ்ஞானம் சலவைத் தொழிலாளர்களுக்கும் சமையலறைப் பெண்களுக்கும் நிம்மதியைக் கொடுத்துள்ளது. ஐரோப்பா, ஜப்பான், இங்கிலாந்து போன்ற குபேரநாடுகளில் தொழில்கள் யாவற்றையும் இயந்திரங் களே செய்கின்றன.

இத்தனை நன்மைதரும் விஞ்ஞா னம் இன்று அகிலவுலகத்திற்கும் அச்சுறுத்தலாக விளங்குகிறது. அணுக் குண்டு கணப்பொழுதில் உலகையே அழித்துவிடவல்லது. ஆயிரமாயிரமாய்ப் பாவனைக்கு வழிவகுக்கின்ற ஆயுதங் களின் அழிவுசக்தி விரைவில் பெருகி வருகிறது. மனிதன் மொழிப்பாகுபாடு, நிற வேறுபாடு, மற்றும் பிறகாரணங்களால் போர்களை வளர்க்கின்றான். அங்கவீனர் களும் அநாதைகளும் அதிகரிக்கின்றனர். கட்டிடங்கள் இடிகின்றன. கலாசாரங்கள் சிதைகின்றன. "எதற்கும் பரிகாரமுண்டு" என்ற துணிவால் தாராளமாகவே சமு தாய ஒழுக்கக்கேடுகளில் ஈடுபடுகின்றான். தனித்து ஒருமனிதன் இயந்திரஉதவி யுடன் இயங்க முடிவதால் உறவுகளைக் கூடச்சகதியில் உதறிவிடுகின்றான். எங்கும் குற்றங்கள் பெருகிவருகின்றன. கைகளாலே மீண்டும்மீண்டும் கண்களைக் குத்திக் கொள்ளும் சிறுபிள்ளையாய் மனிதகுலம் சீரழிந்து கிடக்கின்றது.

தரைப்படை, விமானப்படை, கடற்படை போன்றவற்றையும் தயாரித் துள்ளது விஞ்ஞானம். அன்று விலங்கு களையோ மனிதர்களையோ கொல் வதற்குக் கல், அம்பு என்பவற்றைப் பயன்படுத்திய மனிதன் இன்று துப்பாக்கி களையும், கண்டம்விட்டுக்கண்டம் தாவும் ஏவுகணைகளையும் குண்டுகளையும் பயன்படுத்துகின்றான். ஒவ்வொரு தொழிற் சாலைகளிலும் விஞ்ஞானம் தனது விந்தைகளைத் திறன்படக்காட்டிக் கொண்டிருக்கிறது. இவ்வாறு வியக்கத் தக்க விதத்திலுள்ள விஞ்ஞானத்தைக் கண்டுபிடித்துத் தனதுகாலடியில் பணிய வைப்பவனே மனிதனென்பதை நாம் மறந்துவிடக்கூடாது. எதிர்காலத்தில் விஞ்ஞானத்தின் தாக்கத்தினால் மனிதன் நிம்மதியாக இருக்கின்றானா? துன்பச் சக்கரத்தில் மூழ்கின்றானா? என்பதை யிட்டுச் சந்தேகங்கொள்ளவேண்டியிருக் கிறது.

விஞ்ஞானத்தின்விந்தை அழிவுக் காகவின்றி ஆக்கத்திற்காகவே பயன் படுத்துவது மிகச்சிறந்ததும் எல்லோ ராலும் ஏற்றுக்கொள்ளக்கூடியதுமாகும். "அளவோடு எரிந்தால் அதுவிளக்கு; அளவு மீறினால் அதுநெருப்பு." தீயைத் தகுந்த வழியில் பயன்படுத்திப்பயன் பெறுவதுபோல விஞ்ஞானஅறிவையும் பயன்படுத்துவோம். வளம்பல பெறுவோம்.

"வளர்க என்றும் விஞ்ஞான விந்தை"

**செல்வி பொ. ஆராதனா**
தரம் - 11C

# வணிகமும் வாழ்வும்

வணிகத்தின் வாசக பிரதிகளை பெற்றெடுத்தவர்கள்
நம் பழமை பேசும் ஆதிவாசிகள் - ஏன்
அவர்களின் பண்டமாற்றுத் தான் நம் கல்லூரி
ஆசிரியர் கண்டிப்பாகக் கற்பிக்கும் முதல் பிரதி.

மனித ஜனனத்தின்முன் வணிகஜனனம் தோன்றியது – அது
வளமற்ற மண்ணில் உரமான விதையானது
அதற்கு உரமெனும் உயிர்கொடுத்தது
நம் மாண்பான மனிதகுலமே.

காலதேவன் காலத்தை விரட்டிக் கொண்டிருந்தான்
அதற்கு வணிகமகன் அஞ்சியதில்லை
அவன் குறுங்காலத்திலேயே
நீண்ட காலப் பயனை அடைந்து விட்டான்.

மனித வாழ்க்கைப் பாதையில் மலிந்திருக்கும் முட்களை
முயற்சியெனும் முள்ளால் அகற்றக்
கற்றுக் கொடுத்தது - நம்
வணிகத்தின் வாசக அறிவுரைகளே.

இயற்கையின் வனப்பில் மயங்கிய கவிஞன் கவிபாடுவான்
வணிகமகன் வாழ்க்கையின் தேவைக்கு
அருமையை நீக்க அரும்பாடுபடுவான்
முயற்சியெனும் சிறகுகளை விரிப்பான்.

உணவுடன் உயிருடன் உறவுடன் உறவாடி
உலகத்துடன் நட்பின் நலம் பாராட்டி
வணிகம் நம் வாழ்க்கைக்கும் படியளிக்கும் - அதன்
வாழ்வு சிறப்புற வாழ்த்துவோம் எந்நாளும்.

வணிகமகன் தவழ்ந்த போது – அவனைத்
தூக்கியவர்களை விரும்பவில்லை
தானாக எழும்பி நின்று முயற்சியாளர்கள்
பலரை முன்பாக வரவழைப்பான்.

கற்றுக் கொடுப்பவர்களை அவன் விரும்பியதில்லை
கற்றுக் கொள்பவர்களையே விரும்பினான் - வெற்றிகளை
வரவேற்கிறான் தோல்விகளைக் கண்டு துவளமாட்டான்
மொத்தத்தில் அவன் வணிகத்தின் முகாமை.

வளங்களைக் கண்டு கவி பாடவில்லை – அவன்
அதற்குக் களம் அமைத்துக் கொண்டான் - தேவைகளை
முடித்துக் கொள்ள கையேந்தவில்லை முயற்சி செய்தான்
அதனால் எமக்கு நேர் உற்பத்தி பிறந்தது.

அவன் சுயநலத்தை சுவாசிக்கவில்லை
பொதுநலத்தில் புதுநலம் கண்டான்
அதன் மூலம் நேரில் உற்பத்தி - எனும்
உறவு குதித்தெழுந்தது.

வணிகமும் வாழ்க்கையுடன் பிணையாவிடின்
மனிதன் அன்று போல இலைதழையுடன் பிணைய வேண்டியதுதான்
மொத்தத்தில் இவன் சொர்க்கவாசலில் நிற்கும்
வாழ்க்கையின் வசந்தமான ஒரு ஒளிதேவதை.

**செல்வி இ. டர்சிகா**
A/L 2007C

# உலகிலேயே ......

| | |
|---|---|
| ❖ உயர்ந்த மலைச்சிகரம் | எவரெஸ்ட் 8,848m நேபாளம் தீபெத் |
| ❖ நீளமான நதி | நைல் நதி 6,679m ஆபிரிக்கா |
| ❖ உயரமான நீர்வீழ்ச்சி | ஏஞ்சல் ஃபாய்ஸ் 979m வெனிசுலா |
| ❖ மிகப் பெரியதீவு | கிறீன்லாந்து |
| ❖ மிகப் பெரியஏரி | கஸ்பியன் கடல் 4,38,695km$^2$ வடஆபிரிக்கா |
| ❖ மிகப்பெரிய பாலைவனம் | சகாரா 84,00,000km$^2$ வடஆபிரிக்கா |
| ❖ உயரமான பீடபூமி | பாமீர் பீடபூமி |
| ❖ உயரமான எரிமலை | கொடபாக்ஷி |
| ❖ மிக நீண்டசுவர் | சீனப்பெருஞ்சுவர் 3,560km |
| ❖ மிகப் பெரியநூலகம் | தேசியகியூநூலகம் |
| ❖ மிகப் பெரியஅரண்மனை | வத்திக்கான் அரண்மனை |
| ❖ மிக வெப்பமானஇடம் | அஜிஜியா |
| ❖ மிக உயர்ந்தமரம் | கல்போர்னியா காத்தாடிமரம் 1,121m |
| ❖ முதல் பெண்பிரதமர் | திருமதி பண்டாரநாயக்கா (இலங்கை) |
| ❖ முதல் செயற்கைக்கோள் | ஸ்புட்னிக் |
| ❖ அதிவேகப்பறவை | ஹம்மிங் பறவை |
| ❖ பெரிய கடற்பறவை | ஆஸ்பட்ராஸ் |
| ❖ பெரிய வைரம் | குல்லினன் - லண்டன் |
| ❖ மிகப்பெரிய காவியம் | மகாபாரதம் - இந்தியா |

# "எம் மூத்தோரைப் பேணுவோம் அவர் வழி நடப்போம்"

உலகிலுள்ள அனைத்துப் பொருட்களிற்கும் தோற்றமும், முடிவும் உண்டு. தத்தித்தள்ளாடி மழலை பொழியும் குழந்தையாகிப் புத்தகப்பை யுடன் பள்ளிசெல்லும்பாலகனாகி, வீர வாலிபனாகி, குடும்பத்தலைவனாகி வாலிபம்தொலைந்து முதுமையடைந்து குடுகுடுகிழமாகத் தள்ளாடும்நிலையடை தல் இயற்கையின் பரிமாணவளர்ச்சிப் படிகளாகும். மனிதவாழ்விலே முதிர்ச்சி வந்துவிட்டால் தனக்கொருதுணை தேவையாகின்றது. அதற்காகவே கையில் ஒருதடியை ஏந்திக்கொள்வர்.

உடல்ரீதியாகவும், உளரீதியா கவுமுள்ள செயற்பாடுகள் படிப்படி யாகக் குன்றிக்கொண்டு வருவதையே முதுமையென நாம்கருதுகின்றோம். அறுபத்தைந்து வயதிற்குமேற்பட்டோரை முதியவர் என்றழைப்பது வழக்கம். ஆயினும் இந்நிலை சகலருக்கும் பொருத் தமானதல்ல. ஏனெனில், ஐம்பது வயதில் "முதியோர்" போன்றும், எண்பது வயதில் இளமையானவர் போன்றும் தோற்ற மளிப்பவர்கள் இருக்கத்தான் செய்கிறார் கள். எனவே, வருடங்களால் வரையறுக் காமல் உடல், உளரீதியாக ஏற்படும் மாற்றங்களே முதுமையெனக்கூறுவது பொருத்தமாகும்.

முதுமையை இரண்டாவது குழந் தைப்பருவம் எனக்கூறுவார்கள். குழந் தைகளைப்போல முதியவர்கள் பிடிவாத மாக இருப்பார்கள்; முரண்டுகொள்வார் கள்; கோபிப்பார்கள். இதுதவிர்க்க முடியாததொன்றாகும். முதியோர்களின் செயல்களையும், மனநிலையையும் நன்கு புரிந்துணர்ந்து நாம் செயற்படவேண்டும். ஆகவே, குழந்தைகளைப் பராமரிப்பதில் எவ்வளவு கவனம்செலுத்துகின்றோமோ அவ்வளவுகவனம் முதியோரைப் பரா மரிப்பதிலும் செலுத்தவேண்டும். தற்காலப் புள்ளி விபரங்களின்படி நாட்டில் முதியோர்எண்ணிக்கை அதிகரித்து வரு கின்றது. ஆனால், முதியோரைப் பரா மரிப்பதில் நாம் எவ்வளவுகவனமெடுக் கின்றோமென்பது கேள்விக்குரிய விடய மாகும். தற்காலத்தில் கூட்டுக்குடும்ப வாழ்க்கை பெரும்பாலும் காணப்படுவ தில்லை. எனவே எமதுபிரதேசத்தில் அநாதைகளாக்கப்பட்டு முதியோர் இல்லங்களில் தஞ்சமடைவோர் அதிகள வாகவுள்ளனர்.

"குழந்தை எமதுசெல்வம் என்றால் - ஆரோக்கியமான முதியவர் எமதுமுதுசம்" ஆகும். அவர்களின் அறிவும், அனுபவமும், ஆத்மீகபக்கு வமும், ஆசீர்வாதமும் எமக்குத்தேவை. அத்துடன், அவர்களைப் பராமரிப்பதில் நாமும் ஒருஆத்மீகஆனந்தத்தையும், கடமையின் நிறைவையும் பெறமுடியும். குழந்தையானாலும் முதியோரானாலும் அவர்களைச் சீராகவும், திருப்தியாகவும் பராமரிப்பதற்கு அன்பும், கடமையுணர் வும்மட்டும் இருந்தாற்போதாது. அறிவும் ஆற்றலும் அர்ப்பணிப்பும் வேண்டும்.

சமூகத்திலே முதியோர் மதிக்கப் பட்டு என்றும் பேணிக்காப்பாற்றப்பட வேண்டும். ஆனால், இவர்கள் சமூகத் திற்குப் பாரமானவர்களென்று எண்ணும் பண்பற்றோருமுள்ளனர். எல்லாச் சமயங்களும், முதியவர்களைப்பேணி

நடக்கவேண்டுமென அறிவுறுத்துகின்றன. இவ்விதமாகத் திருமறைநூலாகிய விவிலியமும் பின்வருமாறு கூறுகின்றது.

"பெற்ற தந்தைக்குச் செவிகொடு
– உன்தாய்
முதுமை அடையும்போது அவரை
இழிவாக எண்ணாதே."

முதியோரைப் பேணுவதற்கு மற்றுமொரு அவசியமானகாரணம் இருக்கின்றது. அது 'நன்றியறிதல்' எனும் தலையாயபண்பு. "எப்பாவத்தைச் செய்தாலும் பிராயச்சித்தமுண்டு. ஆனால் நன்றி கொன்றவர்கள் அப்பாவத்திலிருந்து மீள்வதற்கு வழியில்லை" என்று பொதுவாக எல்லாநீதிநூல்களும் போதிக்கின்றன.

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்,
- உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு"

என்பது வள்ளுவர்வாக்கு. நாம் விளக்கங்களறியாத குழந்தைப் பருவத்திலிருந்து இன்றுவரை நமக்காதரவாயிருந்து, நம் உடல்நலம்பேணி, நமக்கு உணவூட்டி, நமக்காகத் தாம்துயரடைந்து நம்மை வளர்த்துவிட்டவர்கள், இன்று முதுமையடைந்திருக்கும் நம் பெற்றோர்கள், உற்றோர்களென்பதை மனதிற்கொள்ளவேண்டும். பின், பாடசாலைப் பருவத்திலும், அதற்குப்பின்பும் எமது கல்விக்காகவும், வளர்ச்சிக்காகவும் தம்மை ஒறுத்துக்கொண்டவர்கள் அவர்களே. இவ்வாறு நம் உயர்ச்சியில் மகிழ்ந்துவந்தவர்கள் முதுமையடைந்து, தளர்ந்துவிட்டார்கள் என்ற ஒரே காரணத்துக்காகப் பேணாமல்ஒதுக்குவது அதிபாதகமாகும். நாமனைவரும் ஒன்றைப் புரிந்துகொள்ளவேணடும். "நாம் கற்கும் ஏட்டுக்கல்வியைவிட முதியவர்கள் கொண்டிருக்கும் அனுபவக்கல்வியே மேலானதென்று எம்பெற்றோர் எவ்விதமான பிரதியுபகாரத்தையும் எதிர்பார்த்து இக்கடமைகளைச் செய்யவில்லை. எனினும், நாம் அவர்களுக்குப் பதிற்கடமை செய்யமறுத்தல்கூடாது. "அவர்கள் எமதுவாழ்க்கைக்குச் சுமையாகிவிடுவார்கள்" என்ற எண்ணக் கருவை நாம் ஒவ்வொருவரும் எமது நெஞ்சத்திலிருந்து தகர்த்தெறிய வேண்டும். முதியோரைப்பேணும் கடமையானது தெய்வவழிபாட்டிற்குச் சமமானதாகும் என்பதை உணரவேண்டும்.

முதியோரின் மனமும்உடலும் வயதாலும் நோய்ப்பிணிகளாலும் தளர்ச்சியடைந்திருக்கலாம். இந்நிலையில் மிகக்கொடுமையான ஒருநிலைமை "எம்மைப்பேண ஒருவருமில்லையே" என்ற எண்ணமும், சலிப்பும் ஏற்படுகின்ற நிலைமையாகும். இது அனைத்துநோய்களையும்விட முதியோரைப் பாதித்துவிடுவதாகும். எமக்காக உழைத்தவர்கள் இன்று மூப்படைந்து தங்கள்மீது அன்பு, இரக்கம் என்று ஏங்கிக்கொண்டிருப்பதை எம்மால் கண்ணூடாகக் காணக்கூடியதாகஇருக்கிறது. "பிள்ளைகள் அல்லது பேரர்கள் நம்மைப் பேணுகிறார்கள்" என்கின்ற மகிழ்ச்சியான எண்ணம் எல்லா மருந்துகளையும்விட நற்பயன்செய்யவல்லதாகும். இவ்வெண்ணம் முதியோரின் நிறைவான வாழ்வுக்குப் பெரிதும் துணைசெய்யும் என்பதை அனைத்து உளவியலறிஞர்களும் ஏற்றுக் கொள்கின்றனர்.

"காவோலை விழக் குருத்தோலை சிரிக்குமாம்" என்ற பழமொழிக்கிணங்க இன்றைய சமூகநிலை காணப்படு

கின்றது. பெரும்பாலானோர் முதிய வயதான தம்பெற்றோர்கள், பேரா்களைப் பராமரிப்பதைச் சுமையாகக் கருது கிறார்கள், வெட்கப்படுகிறார்கள், அது நாகரிகமன்று என்றுநினைக்கிறார்கள் போலும்; அவா்களுக்கு எங்கே தெரியப் போகின்றது அவர்களின் அறிவுப் பொக்கிஷம். சிலா் சொத்து, பொருள் பண்டங்களுக்காக முதியோரைப் பொறுப் பேற்பதும் பின், அவா்களை அநாதைகள் என முதியோரில்லங்களில்விடுவதும் சா்வசாதாரணமாகிவிட்டது.

"பெரியவரைப் பேணாதொழுகிற் -
பெரியாரராற்
பேரா இடும்பைத் தரும்"

என்ற அன்றைய தொடர்கள், இன்றைய நவநாகரிகத்தில் மூழ்கியுள்ள மனிதர்களுக்கு எங்கே தெரியப்போகின் றது. ஒவ்வொருவரும் தம்பெற்றோருக்கு நன்றியுள்ளவர்களாகவிருந்து அவர்க ளைத் தம்இருகண்கள் எனப்போற்று பவர்களாயின், ஏன் இன்று நாட்டில் புதிதுபுதிதாக முதியோரில்லங்கள் முளைக்கவேண்டும்?

முதியவர்கள் பெற்றுக்கொண்ட பிள்ளைகளாகிய நாம் என்றோ ஒரு நாள் முதுமையடையத்தான் போகின் றோம். "மாற்றமென்பது மாறாதது. அதிலும், முதுமையென்பது எமது இறுதிக்காலச்சொத்து" என்கிறார் கார்ல் மார்க்ஸ் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. முதியோரில்லங்களில் பெற்றோரைச் சேரவிடும் பிள்ளைகள் பலவிதமான குணாதிசயங்களைக் கொண்டவர்களாகத்தான் இருப்பார்கள். அன்று, பாலகனாகிப் பள்ளியில் "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என்று படித்தவர்கள் இன்று, புதுக்கவிஞர்களாகி "அன்னையும் பிதாவும் பின்னடிக்கு இடைஞ்சல்" என்று சொல்லிச் சேர்ப்பித்துவிட்டுச்செல்வார் களாம் முதியோரில்லத்தில். இறந்தபின், அவர்களின் உயிரற்ற உடலைப் பொறுப் பேற்று வீட்டில் பெருமமர்க்களமாக இறுதிக்கிரியைகளைச் செய்வார்களாம். இன்னொருசாரார் அறிந்தவர், தெரிந்தவர், அயலவர் என்றுசொல்லிவந்து பின் சென்று விடுவார்களாம். பின்னர் அரச செலவிலேதான் இந்த அப்பாவிப் பெற்றோரினுடல் தீயிலே சங்கமமாகும். இதுதான் விலங்கிலிருந்து தோன்றிய மனிதஇனமோ? மனிதனை இவ்வாறு மாற்றிவிட்டது வெளிநாட்டுமோகமும், அந்நியநாகரிகமும்.

எமக்கு உடல்தந்து, உயிர் தந்து, எம்மையுருவாக்கி, உணவு, உடை தந்த எமது கண்கண்ட தெய்வங்களின் வயோதிபகாலத்தில் அவர்களை அநாதை களாக, ஆதரவற்றவர்களாக தவிக்க விடுவது சரியா? உங்கள் பெற்றோரை உங்களால் சுத்தமாகப்பார்க்கமுடிய வில்லை. வயோதிப இல்லத்தவர் அவர்களைப் பார்க்கவேண்டும் என்று என்ன கடமை? அரசாங்கம் கொடுக்கும் சம்பளத்திற்காக எப்படிப்பார்க்கிறார் களோ? அந்தப் பாவம் உங்களை சும்மாவாவிடப்போகிறது. 'மனமது சுத்த மானால் மந்திரம் தேவையில்லை' என்ற பாமாலைதான் நினைவிற்குவருகின்றது. இன்று நீங்கள் பெற்றோராய் இருக் கிறீர்கள். உங்கள் பிள்ளைகளை அன்பு டனும், பாசத்துடனும் வளர்க்கிறீர்கள். உங்கள் மனதில் எனதுபிள்ளை என் வயதானகாலத்தில் பெரிதும் உதவும் என்ற நம்பிக்கை இருக்கிறது. ஏன்? ஒவ்வொரு பெற்றோர் மனதிலும் இருக் குமென்பது யாவருமறிந்ததே. ஆனால்,

பிள்ளை உங்கள் நம்பிக்கைக்குமாறாக நடந்தால் உங்களால் இன்றையநிலையில் தாங்கிக்கொள்ளமுடியுமா? இல்லை அப்படியென்றால், வயதான காலத்தில் உங்கள் பெற்றோரைக் கைவிடலாமா?

மனிதவாழ்வில் மூன்று பருவங்களுள்ளன. அவையாவன, குழந்தைப் பருவம், இளமைப்பருவம், வயோதிபப் பருவம். மூன்றாவது பருவம்தான் மிகவும் இயலாத, மற்றவர்களின் துணை தேவைப் படும் வயோதிபப்பருவம். ஏணியாக இருந்தவர்களை எமதுதேவைகள் முடிந்தவுடன் தள்ளிவிடுவது சரியா? ஒரு வயோதிபத்தந்தை இறந்துவிட்டார். அவரதுமகன், தந்தைபயன்படுத்திய கலசத்தை எறியமுனைகையில், இவரது மகன் தடுக்கிறான். தந்தையைநோக்கி, அதை எறியவேண்டாம், அதை நான் உங்களுக்குத்தரவேண்டுமென்கிறான். "தன்வினை தன்னைச்சுடும்" என்ற அன்றையவாக்கு வீணாகவா போகின்றது? இதிலிருந்து என்ன தெரிகின்றதென்றால், பெற்றோர்விடும்தவறைப் பிள்ளைகளும் விடுகின்றனர். ஆகவே, பெற்றோர் தம் பிள்ளைகளுக்கு முன்மாதிரியாக நடக்க வேண்டும். அவர்கள் அதிலிருந்து தவறுபவர்களாயிருந்தால் அவர்களின் வயதானகாலப்புகலிடம் முதியோரில்லம் என்பது மறைக்கமுடியாத வெளிப்படை உண்மையாகும்.

எனவே, நாமனைவரும் எமது வாழ்வியல் வெற்றிக்காகவும், முதியோரின் நிறைந்த சந்தோசவாழ்வுக்காகவும் எம்முடனேயே இருக்கச்செய்து எமது குடும்பத்தினராய், சுற்றத்தினராய் முதியோரைப் பேணுதல்வேண்டும். "அவர்கள் ஒரு தேசியசொத்தாவார்" இன்றைய இளையோர் நாளைய முதியோராவார். "எம்முத்தோரை அரவணைப்போம், அவர்கள் சுமையென்ற எண்ணக் கருவைத் தவிர்ப்போம்".

"முதியோர் எமது எதிர்காலத்தூண்கள்
- அவர்களை இகழாதே;
"எம்முள் சிலரும் முதுமையடைந்து
வருகின்றோம்"

**செல்வி தே. யருணா**
தரம் - $12^A$

## இலங்கையில் நீளமானவை

| | |
|---|---|
| ஆறு | - மகாவலிகங்கை |
| பாலம் | - வேலணை - புங்குடுதீவுப்பாலம் |
| மாகாணம் | - வடக்கு |
| பெருந்தெரு | - கொழும்பு - இரத்தினபுரி - மட்டக்களப்பு ($A_4$) |

## இலங்கையில் குறைந்தவை, சிறியவை

| | |
|---|---|
| நிலப்பரப்பில் குறைந்தமாவட்டம் | - கொழும்பு 700km$^2$ |
| குறைந்த மழைவீழ்ச்சி பெறுமிடம் | - அம்பாந்தோட்டை |

# வேத கால மக்களின் வாழ்க்கை முறை

வரலாற்றுக்கு முற்பட்டகாலமென வர்ணிக்கப்படும் சிந்துவெளிகாலத்தை முழுமையாக நாமறியமுடியாமைக்கு இலக்கியங்களின்மையே இடர்ப்பாடாக அமைய வேதகாலத்தைப் பொறுத்த வரையில் அக்காலத்தில் தோன்றிய இலக்கியங்கள் அக்கால நிகழ்வுகளை நாம் செம்மையாக அறிவதற்கு ஆதாரங் களாகின்றன. இவ்வகையில் இருக்கு, யசுர், சாமம் எனப்படும் வேத இலக்கி யங்கள் அக்காலப்பரப்பில் எழுந்தன வாகும். இவற்றைத் துணையாகக் கொண்டு அக்காலத்தைப்பற்றிய சமுதாய அம்சங்களை நோக்குவோம். வேதகாலத்தைப் பொறுத்தவரையில் அக்கால அரசியல்முறை, சாதாரண வாழ்க்கைமுறை, அவர்களால் பேணப்பட்ட சாதிப்பாகுபாடு, தொழில், பொருளாதாரம், உணவு, உடை, சமயம், கல்வி, பொழுதுபோக்கு போன்றபல அம்சங்களை எம்மால் தெளிவுபடுத்த முடிகிறது. மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு அம்சங்களையும் தொகுத்துநோக்கு வோம்.

இருக்குவேத அரசியலில் அரசனுக்கு ராஜா, விஷ்வபதி எனும் சொற்றொடர் கூறப்படுவதால் அந்த நாமங்களே அக்கால அரசர்க்கு வழங்கப் பட்டிருத்தல்வேண்டும் எனக்கொள்ள லாம். அரசியலமைப்புமுறையில் அரச ஆட்சி பரம்பரைரீதியான தெரிவேயாகும். பரம்பரைரீதியாக தெரிவுசெய்தாலும், நாடுமுழுவதும் தானாளமுடியாமையால் நாட்டைக்கூறுகளாக்கி, அக்கூறுகள் ஒவ் வொன்றுக்கும் தலைவர்களை மன்னனே நியமித்தான். இவர்களைக் கிராமணி என அழைத்தனர். மன்னன், தன்னால் தெரிவு செய்யப்பட்ட கிராமணிகளுக்குச் சில தனிப்பட்ட சலுகைகளைச்செய்திருந் தான். தனக்கெனக் கொடுக்கப்பட்ட பிர தேசத்தில் வாழும்மக்களின் குறை நிறைகளை ஆராய்ந்து நிவிர்த்தி செய்வதே அவனது கடமைப்பாடாகும். இதற்கென மன்னனால் ஒருசபை கூட்டப் பட்டது.

இச்சபை கூட்டப்படும்போது, பிரதானமாக மன்னனுக்கும் கிராமணி களுக்குமிடையில் சபையின் அங்கத்த வரில் ஒருவராக புரோகிதர் காணப் பட்டார். இவரே மன்னனுக்கு ஆலோசனை வழங்கினார். இதைவிட நாட்டுநிலையைப் பூரணமாக அறிந்துகொடுக்கும் ஒற்றர் களும், பாதுகாப்பைப் பலப்படுத்தச் சேனைத்தலைவர்களாகிய சேனாதிபதி களும் இச்சபையில் காணப்பட்டனர்.

மேற்கூறப்பட்ட இச்சபையினை "சபா", "சமிதி" என்னும் பெயர்களால் அழைத்தனர். சபையின் அங்கத்தினான மன்னன் நாட்டின் விடயங்களைக் கிராமணி மூலமும் ஒற்றர் கூறுவதையும் செவிமேற்கொண்டு அதற்கேற்ப விடயங் களை ஆராய்ந்தான். எந்தவொரு செயற் பாட்டையும் தன்னிச்சைப்படி நடத்தாது புரோகிதனை ஆலோசித்து நடத்தினான். எனவே, சபையெடுக்கும் எந்தமுடிவுக்கும் மன்னன் மறுப்புக்கொடுத்தான் என்றே கூற முடியவில்லை. எந்தவொரு விடயத் தையும் சபை ஏற்றுக்கொண்டதற்கு இணங்கவே மன்னன் ஏற்றுக்கொண்டான்.

எனவே, இக்கால அரசியல்சிறப்பம்சம் அடக்குமுறையோ, சர்வதிகாரமோ இல்லாத மன்னன் ஆட்சியாகும்.

வேதகாலத்தைப் பொறுத்த வரையில் மக்கள்மனதில் அழியா இடம்பெற்று மன்னன் காணப்பட்டான். மக்கள்தாம் ஏழ்மையில் இருந்தாலும் மன்னனைக் கௌரவிக்கும்முகமாக தமது வருமானத்தில் 1/6 பங்கை மன்ன னுக்குத் தானமாகக் கொடுத்தனர். ஆனால், மன்னன் கட்டாயப்படுத்திப் பெற்றான் என்ற நியதி காணப்படவில்லை. அதனை அரசியல் கைங்கரியங்களுக்கே மன்னன் பயன்படுத்தினான் எனக் கூறப்பட்டது.

ஆட்சியாளரின் வாழ்க்கை மாடமாளிகையிலும், பளபளப்பான ஆடைகளை அணிவதிலும், யானைமீதும் குதிரைமீதும் சவாரிசெய்வதிலும், சுக போகமாகவும் ஆடம்பரமாக வாழ்ந் திருந்தனரென அறியமுடிகின்றது.

வேதகாலத்தில் அரசியலாளர் கள் வாழ்க்கைமுறைபற்றிய சான்று களோடு, பொதுமக்கள் வாழ்வைப்பற்றிய சான்றுகள் பலவற்றைக்கொண்டு மக் களை வாழவைக்க மன்னர்கள் முயன்றதால் சமுதாயம் சீராக்கப்பட்ட நிலையிலேயே காணப்பட்டதெனலாம். முழுமையான மக்களையும் பாதுகாக்கும் பொறுப்பு மன்னனுக்கு வழங்கப்பட்ட தனாலேயே அவன் 'விஷ்வபதி' என்ற பெயரைப்பெற்றிருந்தான். 'விஷ்' என்ற சொல் மக்களைக் குறிப்பதாகும். ஆகவே, மக்களுக்குத் தலைவனா யிருந்தும் சமுதாயத்தைப் பேணியமை யால் சமுதாயம் சீரமைக்கப்பட்டிருந்தது என்பதை அறியலாம்.

இங்ஙனம் வாழ்க்கையில் குடும்பத்தின் தலைவனாக ஒருவன் நிய மிக்கப்பட்டான். இவன் 'பிரகஸ்பதி', 'தம்பதி' என்ற நாமங்களால் அழைக்கப்பட்டான். இங்கு பிரகஸ்பதி என்ற நாமம் தலைவனையும், தம்பதி என்ற நாமம் குடும்பத்தலைவனையும் குறிப்பதாக அமைகிறது. இந்த வகையில் தம்பதி ஸ்தானத்தை வகிப்பவன் சில கட்டுப்பாடுகளைக் குடும்பத்தில் வைத்திருந்தானெனவும் அவனுடைய கட்டுப்பாட்டுக்கு இசைந்து குடும்பத்தவர்கள் தொழிற்படாதவிடத்து அவர்களுக்குக் கடுமையான தண்டனை களை விதித்தான் எனவும் இலக்கியங் கள குறிப்பிடுகின்றன.

வயதிற்கு முக்கியத்துவம் கொடுத்த இச்சமுதாயத்தவர் ஆண்வழி சமுதாயத்தையே கௌரவமுடைய சமுதாயமாக ஏற்றுக்கொண்டிருந்தனர். குடும்பத்தலைமைத்துவம், அதிகாரம் ஆண்களுக்கே வழங்கப்பட்டது. இதனால் பெண்வழிசமுதாயம் மதிப்பற்ற ஒரு நிலையிலேயே வேதகாலத்தவரால் பேணப்பட்டிருந்தது. குடும்பவாழ்க்கை யின்போது பெண்பிள்ளைகளைப் பெறுவது பெரும்பாவமாகவும் ஆண் பிள்ளைகளைப் பெறும்பேற்றைப் பெரும் பாக்கியமாகவும் கருதினர்.

பெண்கள் வீட்டிற்கு வெளியே சென்றமைக்கோ, தொழில் பார்த்தமைக் கோ, சுதந்திரமாக இயங்கியமைக்கோ ஆதாரம் கூறமுடியவில்லை. தாம் விரும்பிய ஆடவரை மணம்புரிவதற்கு மட்டும் சுதந்திரம் வழங்கப்பட்டமை குறிப் பிடத்தக்கது. இருப்பினும், திருமண முறையில் மேலும் சலுகையேவழங்கப் பட்டிருந்தது. ஆண்கள் கூடுதலாகவும் பெண்கள் குறைவாகவும் காணப்பட்

டிருந்தமையால் திருமணத்தின்போது பெண்களுக்கு பொருளைக்கொடுத்தே ஆண்கள் திருமணம்செய்துகொண்டனர்.

இக்கால சமுதாயத்தால் வர்ணங் கள் வகைப்படுத்தப்பட்டிருந்தன என்ப தற்குச்சான்றுகளை நாம்காணமுடிந்தது. குறிப்பாகச் சமுதாயத்தவர் மத்தியில் நான்கு வர்ணங்கள் இருந்தமைக்கான சான்றுகளை 'புருஷசூக்தம்' என்ற படைப்பில் காணமுடிந்தது. இந்த நான்கு வர்ணங்களும் பிராமணர், சத்திரியர், வைசியர், சூத்திரர் என வழங்கப் பட்டிருந்தமைக்கும் ஆதாரம் காண முடிந்தது.

அதாவது, பிராமணன் தேவர் களிடமிருந்து நாட்டைப் பாதுகாப்பதை அடிப்படையாகக்கொண்டு வேட்டல், வேட்பித்தல், ஓதல், ஓதுவித்தல் என்கின்ற தொழிற்பாடுகளையும், சத்திரியர்கள் அந்நியரிடமிருந்தும் அதர்மத்திடமிருந்தும் நாட்டைப் பாதுகாக்கும்பொருட்டு போர் செய்தல், அதர்மத்தை அழித்தல் போன்ற தொழிற்பாட்டையும், வைசியர்கள் வறுமையிடமிருந்து நாட்டைக்காத்தற் பொருட்டு விவசாயம், வணிகம் என்பவற்றையாற்றிப் பொருளாதாரத்தைக் காத்துவைப்பவர்களாகவும், சூத்திரர்கள் ஏனையோருக்கு உதவியளித்து குறிப் பிட்ட எல்லாத்தேவைகளையும் சமுதா யத்திற்கு பூர்த்தியாக்கியவர்களாகவும் காணப்பட்டிருந்தனர்.

இங்ஙனமாக, வாழ்ந்த இம் மக்கள் பொருளாதாரத்தையீட்டும் தொழிலாக விவசாயம், வணிகம் இரண்டையுமே மேற்கொண்டனர். விவசாயத்தின்மூலம் பெறப்பட்ட பொருட்களைத் தமதுதேவைக்குப் பயன்படுத்தி மிகுதியாகவுள்ளவற்றை அந்நியநாடுகளுக்குக் கொண்டுசென்று கொடுத்து அதற்குப்பதிலாக மாற்றுப் பாவனைப்பொருட்களைப்பெற்று நிறை வடைதலே இக்காலப் பொருளாதாரப் பண்பாகும். பொருளாதாரரீதியில் சிந்து வெளியினர் போன்ற வசதிமுறை களையோ வாழ்க்கையையோ எம்மால் காணமுடியவில்லை. தாமீட்டுகின்ற பொருட்களை ஒன்றுதிரட்டிய செல்வ மாகப் பசுக்கன்றுகளைப்பேணினர். பசுக் கன்றுகளின் நிறைவு அங்கு காணப்பட்ட மையினால் அக்காலத்தில் மக்கள் வாழ்க்கையில் பொருளாதாரநிறைவே நிலவியது.

இக்கால மக்களின் வாழ்க் கையில் அவர்களால் உண்ணப்பட்ட உணவு வகைகளை நோக்குவோமாயின், விவசாயத்தின்போது பெறப்பட்டதாகக் கருதப்பட்ட நெல், சாமை, தினை, குரக்கன் போன்றவற்றை உணவாகக் கொண்டாலும், 'யவம்' என்ற ஒரு வகை நெல் அரிசிச்சோறே பிரதான உணவாக கொள்ளப்பட்டிருந்தது. பால், பாலில் இருந்துபெறப்பட்ட பொருட்கள் பழம், மாமிசம் போன்றன உணவில் சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்தன.

வேதகால மக்களின் ஆடை களைப் பொறுத்தவரையில் உடம்பை முழுமையாக மூடக்கூடியவகையில் மேலாடை, கீழாடை என்று இருவித ஆடைகள் பற்றிய குறிப்புக்களைக் காணமுடிந்தது. ஆனால், இவ்வாடைகள் நெய்யப்பட்டனவாகவில்லாது தும்பு, மிருகத்தோல்கள், பாரியமரங்களின் பட்டைகளைக்கொண்டே தயாரிக்கப் பட்டிருந்தனென அறியமுடிகிறது. ஆண், பெண் என்ற பேதமில்லாது ஒரேவிதமான ஆடைகளையே இருசாராரும் அணிந் தனரெனவும் அறியமுடிகிறது. ஆனால்,

அவை அழகுற அமைந்திருந்தனவென்று கூறமுடியவில்லை. ஆண்மக்கள் தலையில் குடுமி வைத்திருந்தனரெனவும் பெண்கள் ஜடை போட்டிருந்தனரெனவும் அறியமுடிகிறது.

மேற்கூறப்பட்ட வாழ்க்கைமுறையினரான வேதகாலத்தவர்கள் கல்விச் சிறப்புடையவராகவிருந்தனர் என்பதற்கும், இக்காலத்தில் எழுச்சிபெற்றிருந்தனர் என்பதற்கும் வேதஇலக்கியங்கள் சான்றாகும். அதாவது, இலக்கியங்களை ஆக்கக்கூடிய திறன்மிக்கவர்களாக ஆண்பால் புலவர்கள் மட்டுமின்றி பெண் புலவர்களும் இலக்கியங்களில் காட்டப்படுவதனால் கல்வித் தேர்ச்சியுடையவர்களாக இருந்தனரெனக்கொள்ள முடிந்தது.

கல்வியில் மட்டுமின்றிக் கலை என்னும் ரீதியில் இசைக்கலை மக்களால் பேணப்பட்டது என்பதற்குச்சான்று கூற முடிகின்றது. இதற்கு ஆதாரமாக இசையுடனிணைந்து பாடப்பட்ட சாம வேதமே சான்றாகும். அத்தோடு, இலக்கியங்களில் யாழ், குழல், மத்தளம், வீணை எனப்படும் இசைக்கலைக் கருவிகளின் பெயர்கள் கூறப்படுவதனால் இசைக்கலைக்கு முக்கியத்துவம் கொடுத்தனரென அறியமுடிகின்றது. இக்கால சமுதாயத்தவர்கள் தமது பொழுதைப்போக்குவதற்கு விளையாட்டுக்களில் ஈடுபட்டிருந்தனரெனவும் பாய்தல், கல்லெறிதல், கயிறிழுத்தல், கோழி கௌதாரி சண்டையிட வைத்தல் போன்ற விளையாட்டுக்களை மேற்கொண்டனரெனவும் மதுவருந்திக் களித்தனரெனவும் அறியமுடிகின்றது. சுராபானம், சோமபானம் என்ற பெயரில் இரண்டு குடிபானவகைகள் இக்காலத்தில் பயன்படுத்தப்பட்டன எனலாம். பெண்கள் சமையல் வேலைகளிலும் ஆடைகள் தயாரிப்பதிலும் பாய் பெட்டி இழைத்தலிலும் தமது பொழுதைக்கழித்துக் கொண்டனரெனவும் அறியமுடிகின்றது.

எனவே, இக்காலமக்கள் மேற்குறிப்பிட்டதற்கிணங்கத் தொழில்களின் அடிப்படையில் சாதிப் பாகுபாடு பிரிக்கப்பட்டு அவர்களின் அரசியல், பொருளாதாரம், கல்வி, உணவு, உடை, கலை, பொழுதுபோக்கு போன்றவற்றை அடிப்படையாகக்கொண்ட வாழ்க்கை முறையை வாழ்ந்தனர் என்பதை அறிய முடிகின்றது.

**செல்வி ந. நித்தியப்பிரியா**
தரம் - $12^A$

**உசாத்துணை நூல்:-**
வியத்தகுஇந்தியா

## பொது அறிவு

- வெள்ளிக்கோளில் அமிலமுகில்களிருப்பது பற்றித் தகவல்தந்த விண்கலம் எது? **பயோனியர் விண்கலம்**

- செவ்வாய் மேற்பரப்புக் குளிராகக் காணப்படுவதாகத் தகவல்தந்த விண்கலங்கள் யாவை? **வைக்கிங் - 1, வைக்கிங் - 2**

- முதலாவது விண்வெளி ஓடம் எது? **கொலம்பியா**

# செஞ்சிலுவைச் சங்கத்தின் பணிகள் -

அன்று தொட்டு இன்றுவரை நாடுகளுக்கு இடையேயும் நாடுகளுக் குள்ளேயும் பகைமை, மோதல்கள், முரண்பாடுகள் காணப்பட்டவேளையில் இவற்றைக் கட்டுப்படுத்த எந்தவொரு செயற்பாடுகளுமில்லாத நிலையில் அதனை நிவிர்த்தி செய்வதற்கென்றே இந்தச் செஞ்சிலுவைச்சங்கம் தோற்றம் பெற்றுள்ளது.

செஞ்சிலுவைச் சங்கமானது பல நூற்றாண்டுகளுக்கு முன்பே தோற்றம் பெற்றதொன்றாகும். இந்நிறுவனத்தை சுவிஸ் நாட்டைச் சேர்ந்த "ஹென்றி குனைற்" என்பவர் ஆரம்பித்துவைத்தார். 1859-ம் ஆண்டு யூன் 24-ம் திகதி வட இந்தியாவிலுள்ள 'செங்பெரினோ' என்ற இடத்தில் அவுஸ்ரேலிய இராணுவத்திற்கு எதிராக இத்தாலியப் பிரான்சியப் படைகள் கடுமையாகப்போரிட்டன. அன்றையதினமே ஹென்றிகுனைற் சுவிஸ்லாந்து பிரான்சிய சக்கரவர்த்தி 3-ம் நெப்போலியனைச் சந்திக்க எண்ணி அருகாமையிலுள்ள கொன்டிகலியோ வுக்கு வந்தார். அங்கே ஆயிரக் கணக்கான வீரர்கள் இறந்தும் காயப் பட்டும் குற்றுயிராகவும் இருக்கக் கண்டார். உடனேயே காயப்பட்டவர்களின் பரிதாபகரமான நிலையைப் பார்த்த ஹென்றிகுனைற் உள்ளூர் மக்களின் உதவியுடன் நிவாரணங்களை வழங்க ஏற்பாடு செய்தார். காயப்பட்டவர்களை நடைபாதையிலும் கோவில்களிலும் வைத்துச் சிகிச்சையளித்தார். தான் தனியாகவே ஆயிரத்துக்குமேற்பட்ட யுத்த வீரர்களைக் கவனித்தார்.

அதனைத் தொடர்ந்து ஹென்றி குனைற் 'செங்பெரினோநினைவுகள்' என்னும் நூலை எழுதினார். எல்லா நாடுகளிலும் யுத்தத்தால் காயமடைந்த வர்களுக்கான நிவாரணக்கழகங்கள் அமைக்கப்படவேண்டும், அவற்றை அரசு அங்கீகரிக்கவேண்டும் எனக் கேட்டுக் கொண்டார். ஹென்றிகுனைற்றின் இந்நூல் பொதுசன அபிப்பிராயத்தை தட்டி யெழுப்ப ஜெனீவா பிரஜைகளாகிய ஜெனரல் குபோர்கப்பியா மொனைபிக் ஆகிய டாக்டர்கள் மொய்னியா என்ற வழக்கறிஞர் போன்றோர் தமது ஆதரவை வழங்கினர். இவரது அயராதமுயற்சியின் காரணமாக 1863-ம் ஆண்டு ஒக்டோபர் 26-ம் திகதி ஜெனீவாவில் 16 நாடுகளையும் 7 தர்மஸ்தாபனங்களையும் சேர்ந்த பிரதிநிதிகள் ஒன்று கூடினார்கள். இச் சங்கத்துக்கான அடிப்படைத் திட்டங் களும் அதன் அடையாளமும் இம் மாநாட்டில் தீர்மானிக்கப்பட்டது.

சிவப்புப் பின்னணியில் வெள்ளைச் சிலுவை அடையாளத்தைக் கொண்டது. ஹென்றிகுனைற் சுவிஸ் நாட்டைச் சேர்ந்தவரென்பதால் சங்கத் தின் ஸ்தாபகரையும் சுவிஸ் நாட்டையும் கௌரவிப்பதற்காக வெள்ளைப் பின்னணி சிவப்புச் சிலுவையில் இச் சங்கத்தின் சின்னம் விஸ்தரிக்கப்பட்டது.

செஞ்சிலுவைச் சங்கத்தின் தேவைகளை அடிஅத்திவாரமாகக் கொண்டு இன்று 175 இற்கு மேற்பட்ட நாடுகள் 25 கோடி அங்கத்தவர்களைக் கொண்ட செஞ்சிலுவைச் சங்கமாக உலகமக்களுக்குச் சேவைசெய்கிறது. இதன் முக்கியபணி எங்கெல்லாம் மனித இனம் துன்பமும்துயரமும் அடைகிறதோ அங்கெல்லாம் சென்று துயர்துடைப்பதே இதன் முதற்பணியாகும்.

இன மத அரசியல் வேறுபாடுகள் அற்ற இச்சங்கம் மனிதாபிமானம், பார பட்சமின்மை, நடுநிலைமை, சுயாதீனம், தொண்டர்சேவை, ஒற்றுமை, பிரபஞ்சத் தன்மை ஆகியவற்றை அணிகலன்களா கக்கொண்டு மனிததேவைகளை உணர்ந்து தேசியஅடிப்படையில் சேவை புரிகின்றது. ஒவ்வொருவருடமும் மே மாதம் 8-ம் தேதி சர்வதேச செஞ்சிலுவை மற்றும் செம்பிறை இயக்கம் அதன் ஸ்தாபகரான ஹென்றி குனைற் என்ப வரின் பிறந்ததினத்தைக் கொண்டாடு கிறது. இவ் இயக்கம் 1854-ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது.

இச்செஞ்சிலுவைச் சங்கமானது பிரித்தானிய நாட்டின் செஞ்சிலுவைச் சங்கத்தின் மத்தியகிளையாக 1932-ம் ஆண்டு இலங்கையில் உருவாக்கப் பட்டது. 1949-ல் இலங்கைச்செஞ் சிலுவைச்சங்கம் என்றபெயர்பெற்றது. சர்வதேசரீதியில் ஏற்றுக் கொள்ளப் பட்டது 1952-ம் ஆண்டாகும். இது சங்க மகாநாட்டிலும் சேர்த்துக்கொள்ளப் பட்டது. இலங்கைச்செஞ்சிலுவைச் சங்கத்தின் தலைமையகம் கொழும்பில் அமைந்துள்ளது. இதன்கிளை 25 மாவட்டத்திலும் அமைந்துள்ளது. சங்கத் தின் அபிவிருத்திக்கிணங்க மாவட்டங் கள்தோறும் பிரிவுகள் உருவாக்கப் பட்டுள்ளன.

இலங்கையில் இச்சங்கமானது அரசினால் அனுமதி வழங்கப்பட்ட நிறுவனமாகும். ஒவ்வொரு நாட்டிலும் ஒரு தேசியச்சங்கம் என உருவாக்கப்பட்டதில் இலங்கையில் உருவாக்கப்பட்ட ஒரு சங்கமே இதுவாகும். நிவாரண நடவடிக் கைகளின்பொருட்டும் ஏனைய நடவடிக் கைகளின்பொருட்டும் தாம்பெறும் வருமானங்களின்மூலம் செலவுகளை மேற்கொள்வதுடன் பொதுமக்களிடம் இருந்தும் மற்றும் உள்நாட்டு நிறுவனங்கள், தேசியசெஞ்சிலுவை, செம்பிறைச்சங்கங்கள் என்பவற்றில் இருந்தும் பணத்தைப்பெற்றுச்செலவை மேற்கொள்கின்றது.

இச்சங்கமானது தனது அடிப் படைக் கோட்பாடுகளாகவும் தனது பணியினைச் சிறப்பாகச் செய்வதற்கும் ஏழு கொள்கைகளைக் கடைப்பிடித்து வருகின்றது.

- மனிதாபிமானம்
- பாகுபாடு காட்டாமை
- நடுநிலைமை
- சுதந்திரத்தன்மை
- தொண்டர் சேவை
- ஒற்றுமை
- உலகளாவிய தன்மை

இது போன்ற தமது சேவையைத் தொடர்ந்து செய்கின்றது.

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் தொழிற்பாடுகள் பல்வேறு விதத்தில் அமையப்பெற்றுக் காணப் படுகின்றன. இது தனதுசெயற்பாடு களைத் திறமையாகமேற்கொள்ளத் தனித்தனியானகிளைகள் அமைத்துச் செயற்படுகின்றது. இது 1932-ம் ஆண்டு இலங்கையில் ஆரம்பித்தபோதும் 1985 களுக்குப் பின்னரே வடக்கு கிழக்கில் செயற்பாடுகள் விரிவடைந்தது. இது சமூக அபிவிருத்திக்குப் பெரிதும்செய லாற்றி வருகின்றது. இச்செஞ்சிலுவைச் சங்கமானது பலநிகழ்ச்சித் திட்டங்களை அறிமுகம்செய்துள்ளது.

- சுகாதார நிகழ்ச்சித் திட்டம்
- நடமாடும் சுகாதார நிகழ்ச்சித் திட்டம்

- முதலுதவி நிகழ்ச்சித்திட்டம்
- தகவல்பரப்பும் நிகழ்ச்சித்திட்டம்
- வீடமைப்பு அல்லது புனரமைப் புத்திட்டம்
- இடம்பெயர்ந்தோருக்கான நிவாரண நிகழ்ச்சித்திட்டம்
- இளைஞர் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்
- புனர்வாழ்வு நிகழ்ச்சித்திட்டம்

போன்ற திட்டங்கள் மூலம் மக்களுக்கு செஞ்சிலுவைச்சங்கம் பல வழிகளிலும் உதவிவருகின்றது.

இச் சங்கமானது பல பிரச்சினைகளை எதிர்நோக்கவேண்டியுள்ளது.

- அரசசார்பற்ற நிறுவனங்களுடன் எல்லாநேரங்களிலும் மேற்கொள்ளும் பணிகளுக்கிடையே ஒற்றுமைபேண முடியாமல் உள்ளமை
- இச்சங்கம் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் அகதிகள் தொடர்பான பிரச்சினைகள் அதிகரித்தமை.
- தமது சேவையை மேற்கொள்ளத் தேவையான வசதிகளின்மை.
- பொது மக்களிடையே போதிய விழிப்புணர்வின்மை.

போன்றவற்றால் பல பிரச்சினைகள் எதிர்நோக்கப்படுகின்றன.

இப்பிரச்சினைகளுக்கு,

- நிர்வாகப் பரவலாக்கம்
- ஒற்றுமையை ஏற்படுத்தல்
- அகதிகளுக்குச் சுயதொழில் வாய்ப்பு வழங்கல்.
- போதிய மருத்துவ வசதி

போன்றவற்றின்மூலம் தீர்வுகாண முடியும்.

இச்சங்கமானது 1854-ம் ஆண்டு ஆரம்பமானதிலிருந்து இன்றுவரை பல பிரச்சினைகளை எதிர்நோக்கினாலும் தனது செயற்பாடுகளைத் தொடர்ந்து செய்துவருகின்றமை சிறப்பிற்குரிய தொன்றாகும்.

**செல்வி ந. சங்கீதா**
12A

## பொது அறிவு

1) நீல்ஆம்ஸ்ட்ரோங் சந்திரனுக்கு எந்த விண்கலத்தில் சென்று எப்பொழுது காலடியெடுத்து வைத்தார்?

**அப்பொலோ - 11 விண்கலத்தில், 1969 யூலை 20 இல்**

2) மிர் விண்வெளி நிலையத்தில் ஒரு வருடகாலம் தங்கியிருந்து உலக சாதனை நிகழ்த்தியவர்கள் யாவர்?

**விளாடிமிர், டிட்டோங், முசாமனரோங்**

3) வெள்ளியின் மேற்பரப்பில் தரையிறங்கி அங்கு நிலவும் அமுக்கம் பற்றிய தகவலை வெளியிட்ட விண்கலம் ஏது? எந்த ஆண்டு வெளியிட்டது?

**ரஷ்ய விண்கலம் வெண்ணிரா, 1970**

4) வெள்ளிக்கோளின் மண்டலம் அமிலத்துளிகளாலானது என்பது எப்பொழுது கண்டறியப்பட்டது?

**1972, 1973**

2005 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்றோர்



2004 க.பொ.த (சா.த) ற்கான மாவட்ட சாதனைக் கேடயம்




யா/மீசாலை வீரசிங்கம் ம.வி. பாண்ட் அணியினர்



# இருக்கு வேதத்திற் தத்துவ சிந்தனை

ஏறக்குறைய கி.மு. ஆறாம் நூற்றாண்டளவிற் தோற்றம்பெற்ற உபநிடதங்களே இந்துதத்துவத்தின் மிகப்பழைய தத்துவநூல்களாகப் போற்றப்படுகின்றன. எனினும், உபநிடதங்களுக்கு முற்பட்டவேதஇலக்கியத்திலே குறிப்பாக இருக்குவேதத்திலே இந்து தத்துவத்தின் அடிப்படைக் கருத்துக்கள் சில தோன்றுவதை நாம் கவனிக்கலாம்.

கி.மு. ஆயிரத்து அறுநூறு மட்டிலோ, அதற்கு சற்றுமுன்னதாகவோ இந்தியத்துணைக்கண்டத்துட்புகுந்து குடியேறிய ஆரியமக்கள் இயற்கைச் சக்திகளைத் தேவராகப்பாவித்து வணங்குமோர் சமயத்தைக்கொண்டவராக இருந்தனர். தமது தினசரிவாழ்க்கையிலே எந்தவோர் நிகழ்வுக்கும் அதற்குக் காரணமாகிய உந்துதலொன்று இருப்பதைக் கவனித்த அம்மக்கள் இயற்கையின் ஒவ்வொரு மாற்றங்களுக்கும் நிகழ்வுகளுக்கும் காரணமாய் அமையும் தனித்தனிச் சக்கரங்களுண்டென்ற முடிவிற்கு வந்தனர். எனவேதான், ஆரிய மக்கள் சூரியன், ஆகாயம், பூமி, விடியற்காலை, மழை, காற்று, இடி, முழக்கம், நெருப்பு போன்ற இயற்கைச்சக்திகளுக்கு சவித்திரு, இந்திரன், அக்கினி, உஷை, வருணன், பர்ஜன்ய, உருத்திரன் எனத் தனித்தனி நாமஞ்சூட்டி வணங்கலாயினர். தம்மைப்பார்க்கிலும் சக்தி வாய்ந்த, தமக்கு நன்மையும், தீமையும் விளைவிக்கவல்ல இச்சக்திகளை பாடல்களால் தோத்தரித்தும் அவற்றுக்கு அக்கினியிலே அவியுணவுகளைப் படைத்தும் வணங்கினர். இவ்வாரிய மக்கள் பாடிய தோத்திரங்களே இருக்கு வேதமென்று இன்றுபோற்றப்படும் நூலாகும். இந்துமக்களும், இந்துதத்துவமும் ஒருமனமாக அங்கீகரிக்கும் மிகப்பழைய நூல் இதுவே.

இந்த வழிபாட்டுமுறை பெருமளவிற்காணப்பட்ட இருக்குவேத காலத்தில்கூட இவ்வியற்கைத்தேவரில் நம்பிக்கையற்றோர் சமுதாயத்தில் இருந்தனரென்று இப்பாடல்களிலே காணக்கூடியதாகவுள்ளது. தேவர்களில் அதிமுக்கியமான இந்திரனைப் பற்றியே சந்தேகங்கள் எழுப்பப்பட்டன. இந்திரன் எங்கே? அவனில்லை என்றுகூறியவருமுளர் இவர்களுடைய வினாக்களுக்கு விடைகொடுக்கும் முகமாக ஒருபாடல் (இருக்கு வேதம் - II - 12) இந்திர தேவனுடைய வீரதீரச்செயல்களை நினைவூட்டி ஒவ்வொருசெய்யுளின் ஈற்றடியாக "அவன்தான் மக்களே இந்திரன்" என்ற பல்லவியை அமைக்கின்றது. யாகக்கிரியைமுறையில் நம்பிக்கையற்றோரும், புரோகிதருக்குக் கொடுக்க விருப்பமற்ற உலோபிகளும் சமுதாயத்திலே இருந்தனரென்றும் அறிகிறோம். இன்னும்சிலர் பல நாமங்களால் அழைத்து தான்வழிபடும் தேவர்கள் எல்லோரும் உண்மையிலே ஒருவர்தானோ என்று சந்தேகிக்கின்றனர்.

மித்திரன், யமன், மாதரிஸ்வன் என நாம் அழைப்பதெல்லாம் ஒருவரே. உள்ளபொருளாகிய ஒன்றை ஞானிகள் பலவாகக் கூறுகின்றனர். (இருக்கு வேதம் - I - 164 46)-ம் பாடலில் அக்கினியே நீ பிறப்பிலே வருணனாய் இருக்கிறாய், மூட்டப்பட்டதும் மித்திரன் ஆகிறாய். எல்லாத்தேவரும் உன்னிலே தங்கியிருக்கின்றனர். வழிபடுபவனுக்கு நீ இந்திரன் ஆகிறாய்.

இத்தகைய கூற்றுக்கள், இறைவன் ஒருவனே என்றகருத்து இருக்கு வேதகாலத்திலே உதயமாகிறது என்று நிருபிக்கின்றன. இன்னும் பல

நாமத்தாலும் பலவடிவங்களிலும் ஒரே தெய்வம் போற்றப்படுகின்றது. இவ் ஒருதெய்வக்கோட்பாடு இன்னொரு வகையிலும் இருக்குவேதத்தில் தோற்ற மளிப்பதை நாம் காண்கிறோம். இருக்கு வேதப்பாடற்தொகுப்பிற் காணப்படும் சில பிந்தியபாடல்கள் இயற்கையின் எந்தவொரு தனியம்சத்தோடும் தொடர்பில்லாத பொதுத்தேவர்களாகிய பிரஜாபதி, பிரஹ்மணஸ்பதி, பிருகஸ்பதி, விஸ்வகர்மன் என்போரைப் போற்றுகின்றன. இவர்களின் நாமங்களே இவர்களின் பொதுமையைப் புலப்படுத்துகின்றன. 'பிரஜாபதி' எனின் மக்களின் தலைவன் எனப்பொருள்படும். 'விஸ்வகர்மன்' எனின், எல்லாவற்றையும் படைப்பவன் என்ற அர்த்தமாம்.

இதுமட்டுமல்ல, உலகம் எப்படி தோன்றிற்று? யார் இதனைப் படைத்தார்? எதனைக்கொண்டு படைத்தார்? தச்சன் இரதத்தை அமைப்பதுபோலவே உலகமும் நிர்மாணிக்கப்பட்டிருக்க வேண்டும் என்கிறார் ஒருவர். அப்படியாயின் அதற்கு வேண்டிய மரத்தை எங்கிருந்து பெற்றார். எங்கே நின்றுகொண்டு உலகத்தை அமைத்தாரோ என்கிறாரவர்.

யாகத்தின் மகத்துவசக்தியிற் கொண்ட நம்பிக்கையினடிப்படையில் உலகசிருஷ்டியும் ஒருயாகத்தின் விளைவே எனச்சிலர் கூறினர். உலகப் படைப்பாகிய மகத்தான கருமத்திற்குத் தேவர் பிரமாண்டமான வடிவுள்ள ஒரு புருஷனை யாகத்தில் பலியாகப் படைத்தனரென்று குறிப்பிடப்படுகிறது. ஆயிரம் தலைகளும், ஆயிரம் கண்களும், ஆயிரம் கால்களுமுடைய இந்த அபூர்வ புருஷனின் ஒருகாற்பங்கே எல்லா உயிர்களாகவும் காட்சியளிக்கின்றன. அதன் முக்காற்பங்கு ஆகாயத்தில் மறைந்துள்ளது. இப்புருஷனிலிருந்தே வர்ணங்களும் மிருகங்களும், பறவைகளும், சந்திரன், சூரியன், ஆகாயம், பூமி, திசைகள் எல்லாமே அதனின்றே எழுந்தன. இந்த தத்துவத்தினை அத்துவித வேதாந்தமும், சைவசித்தாந்தமும் பரம்பொருளை இருநிலைகளிற் காண்கின்றன. குணம்குறிகளோடு இயற்கையோடு ஒன்றிய தடத்தநிலையிலும் சிந்தனைக்கப்பாற்பட்ட நிர்க்குண நிலையாக சுயருபநிலையிலும் இத்தத்துவங்கள் வருணிக்கின்றன. இக்கருத்து வளர்ச்சியின் கருவை இருக்கு வேத புருஷசூக்தத்திற் காணலாம்.

ஆதியிலே இருள் இருளால் மூடப்பட்டிருந்தது. எல்லாமே ஒரே நீர் மயமாய் இருந்தது. தோன்றியதாகிய அந்தவொன்று சூன்யத்தால் மூடப்பட்டிருந்தது. அதுதவத்தின் சக்தியால் எழுந்தது. அந்தவொன்றின் மனதிலே சிந்தனையெழுந்தது. இந்தச்சிருஷ்டி எங்ஙனம் தோன்றியதென்று யாரறிவார்? யாரதனை விளக்குவார்? தேவர்கள் கூட சிருஷ்டிக்குப் பிற்பட்டவரேயாயின் யார் சிருஷ்டியின் ஆரம்பத்தையறிவார்.

மேலான விண்ணிலே இதனைக் கண்காணிப்பவன் அறிவான். அல்லது அவனும் கூட அறியான். உலக தத்துவ இலக்கியத்தில் சிறப்பிடம்பெறுகின்ற 'நாசதீய சூக்தத்தில்' இந்துதத்துவத்தின் அடிப்படைக் கோட்பாடுகள் அரும்புவதை நாம் காணலாம். சத், அசத் என்னும் தத்துவ முக்கியத்துவம்வாய்ந்த பதங்கள் இப்பாடலில் இடம்பெறுகின்றன. இத்தகைய மூலகாரணமாகிய ஓர் உள்ள பொருளினின்றே வேற்றுமைமலிந்த நாம உருவவேறுபாடுடைய சிருஷ்டி மலர்கிறது. இப்பிந்தியநிலை இதன்

காரிய நிலையாமிப்பாடலில் இருஷி, இடைவெளி, ஆகாயம், நீர், சந்திரன், சூரியன், சாவு, சாவாமை என்றெல்லாம் வேறுபடுகின்றன. இந்தச் சிருஷ்டி பரிமாணமடைந்த காரியநிலையைக் குறிப்பது. எப்படியாயினும் சிருஷ்டிக்கு மூலகாரணமாகிய ஒருவஸ்து இருந்த தென்ற முடிவுக்கு வருகின்றார். அதனை ஆண்பாலிலோ, பெண்பாலிலோ குறிப்பிட்டு வரையறைசெய்யமுடியாது. எனவே, அதனைத் "தத் ஏகம்" (அந்த ஒன்று) எனக்குறிப்பிடுகிறார்.

மேலும், சிருஷ்டிக்கு மூலகாரணமாகிய இந்தவஸ்து சிந்திக்கும் ஆற்றல் படைத்ததாகக் கூறப்படுகிறது. அதன் சிந்தனையின் பெறுபேறாகவே உலகம் தோன்றுகின்றது. இங்கு இந்ததத்துவம், இறைவனின் மிகமுக்கிய இலட்சணங்களாக கொள்ளும் சத், சித், அதாவது, இறைவனின் உள்பொருள், அவர் சிந்தனாசக்தி படைத்தவர் என்பன குறிக்கப்படுகின்றன. இவ்விலட்சணங்கள் இருக்குவேதகாலத்திலேயே பரம்பொருளின் அடிப்படைப்பண்புகளாகக் கொள்ளப்பட்டனவென்பது தெளிவாகிறது. இந்தத் தனிவஸ்து சுவாசமில்லாமற் தன்சொந்தசக்தியிற் சுவாசித்ததென்றும் கூறப்படுகின்றது. இதுவும் ஒரு விஷேடித்த பண்பாகிறது. உலகத்திலேயுள்ள சீவராசிகள் அனைத்தும் தம்நாசியிலே இயங்கும் சுவாசத்தினால் உயிர்வாழ்வன. சுவாசமில்லையென்றால் அவை இறந்துபோம். உலக சிருஷ்டிக்குக் காரணமாகிய இந்த மூலவஸ்து ஏனைய சீவராசிகளைப் போலல்லாது சுவாசமில்லாமல் தன் சொந்த சக்தியால் இயங்கக்கூடியது. இந்துசமயம் இறைவனைப் பரிபூரணமாகவும் சுவாதீனமுடையவராகவும் காண்கின்றது.

இத்தேவர்கள் சக்திவாய்ந்தவர்களாய் இருப்பினும் பரம்பொருளென்ற நிலையில்லை. அவர்கூட சிருஷ்டிக்குட்பட்டவர்கள். உண்மையைத் துருவித் துருவி ஆராய்ந்தும் முற்றான திருப்தி காணாதவராகக் கவி பாடலைமுடிக்கிறார். மரணத்தைப்பற்றியும் அதற்கப் பாலுள்ளநிலைபற்றியும் இருக்குவேத கால மக்கள் சிந்தித்தார்களென்று நாம் பாடல்களில் காண்கின்றோம். உபநிடதங்களுக்குமுன் ஆன்மா, மோட்சக் கோட்பாடுகள் தோன்றாவிடினும் மரணத்தோடு மனிதவாழ்க்கை முடிவதில்லை. மரணத்திற்குப் பின்னுமொரு வாழ்க்கை உண்டு என்றே இக்காலமக்கள் நம்பினர். இறந்தோர் யமராச ஆளுகையிலுள்ள யமலோகத்திற்குச்சென்று அங்கே நோய் நொடியற்ற சரீரத்தோடு முதாதைகளாகிய பிதிரரோடுசேர்ந்து மதுவருந்திக் கொண்டு நீடுழி சுகமே வாழ்வரென்றே நம்பி அங்குதாம் பூவுலகத்தில் செய்த தானங்கள், யாகங்களின் பலனை அடைவர் என்றும் கருதி ஒவ்வொரு மனிதனுக்கும் அழியாத ஓரான்மா உண்டென்பதும் அவன் தான்செய்யும் நல்ல கருமங்களின் பலனை அடைவானென்ற இந்துசமயத்தின் நம்பிக்கை உபநிடதங்களிற் காணப்படுகின்றது. கரும மறுபிறவிக்கோட்பாடு இருக்குவேதத்திலில்லை. எனினும் இக் கோட்பாடுகளின் வேர்களை இருக்குவேதத்திற்காணலாம்.

மனிதன் ஏதோ ஒருவடிவில் மரணத்திற்கப்பாலும் வாழ்வானென்றும் அவன் தன் யாகங்களின், தானங்களின் பலனை அடைவானென்றும் கூறும் இருக்குவேதம் பிற்காலத்து ஆன்ம, கன்ம கோட்பாடுகளுக்கு வித்திடுகின்றது.

இந்துமக்களின் தர்மக்கோட்பாடு களுக்கு இருக்கு வேதத்தின் ரிதக்கோட்பாடு வழிவகுக்கிறது. 'ரிதம்' என்னும் சொல் இயற்கையிலும், மனிதஒழுங்கிலும் காணப்படும் ஒழுங்கைக்குறிப்பதாகும். இயற்கைச்சக்திகள் தத்தமது கால வரையறையின்படி இயங்குவதைக் கவனித்த ஆரியமக்கள் அதனை 'ரிதம்' எனவழைத்தனர். அதேவண்ணம் மனித ஒழுக்கத்திற்கும் சட்டம் அல்லது வரம்பு உண்டெனக்கருதினர். இந்த ஒழுங்கின் படியே இயற்கையின்நிகழ்வுகள் ஏற்படுகின்றன. மனிதனும் நீதி, உண்மை, நேர்மை போன்ற விழுமியங்களைத் தன் வாழ்க்கையில் அனுசரித்து அவ் ரிதத்திற்கமைய வாழவேண்டும். அதற்கு மாறாக அவன் வாழ்வானேயானால் அவனுக்குக் கெடுதலேற்படும். வருணன் போன்ற தேவருடைய தண்டனையும் கிட்டும். இநதுமக்களின் தர்மக் கோட்பாடும் இத்தகையதே. "தர்மம் வெல்லும்" என்று கூறுமிடத்து அது வாழ்க்கையின் சட்டமென்பது பெறப்படும். அதனை மீறி அதர்மவழியிற் செல்வோர் துரியோதனன், இராவணன் போன்றோர் போலக் கெட்டொழிவர். எனவே, இருக்குவேத ரிதக்கோட்பாட்டிற்கும் இந்துசமயத்தின் தர்மக்கோட்பாட்டுக்கும் தொடர்புண்டு.

இங்ஙனம், இந்துசமயத்தின் ஒரு தெய்வக்கோட்பாடு, இறைவனுடைய நிர்க்குண சகுணநிலைகள், அவரின் இன்றிமையாத இலட்சணங்களாகிய உண்மை, அறிவுடைமை என்பன இந்துசமயத்தின் கர்ம, தர்ம, ஆன்மக் கோட்பாடுகள் வேதகாலத்திலேயே அரும்புவதை இருக்குவேதத்தில் நாம் காணலாம். தத்துவவிசாரணைக்கு உந்துதலளிக்கும் சந்தேக உணர்ச்சியும் அங்கு காணப்பட்டது.

**செல்வன் சு. சுபதீஸ்**
12 A

# உலகிலேயே ......

- முதலில் உலகத்தைச் சுற்றியவர் — மகலன்
- முதலில் எவரெஸ்ட்சிகரத்தை எட்டியவர் — டென்சிங் இந்தியா
- அலுமினிய உற்பத்தியில் முதலிடம்பெறுவது — அமெரிக்கா
- கம்பள உற்பத்தி — ஈரான்
- நிலக்கரி உற்பத்தி — அமெரிக்கா
- இரும்புத்தாது உற்பத்தி — அமெரிக்கா
- தாமிர உற்பத்தி — சிலி
- தங்க உற்பத்தி — தென் அமெரிக்கா
- பெற்றோலிய உற்பத்தி — அமெரிக்கா
- வெள்ளி உற்பத்தி — மெக்சிகோ
- மாங்கனீஸ் உற்பத்தி — இந்தியா

**செல்வன் த. பிரதீபன்**
தரம் - 10C

# மொத்தத்தேசியஉற்பத்தியின் மீள் வகைப்படுத்தல்

இது காலம்வரை இலங்கையின் தேசியகணக்குகளை மதிப்பிடுவதற்கு மத்தியவங்கி "தேசியகணக்குகள் முறைமை" என்ற பிரசுரத்தில் உள்ள விதந்துரைப்புக்களைப் பின்பற்றியதுடன் தேறியகணக்குகளின் முறைமை 1968 இல் விதந்துரைக்கப்பட்ட சில திருத்தங்களுடன் 1964-ம் ஆண்டுப்பதிப்பை பயன்படுத்தி தயாரிக்கப்பட்டது.

1964 இல் விதந்துரைக்கப்பட்டவாறு தேசியகணக்குகள் முறைமையில் மொத்ததேசியஉற்பத்தி மதிப்பீடானது பதினொரு முக்கியதுறைகளின்கீழ் வகைப்படுத்தப்பட்டு மதிப்பிடப்படுகின்றது. இதனை கீழ்வருமாறு காட்டலாம்.

**விவசாயத்துறை**

1. விவசாயம், கடற்றொழில், காட்டுத் தொழில்

**கைத்தொழில் துறை**

2. சுரங்கமகழ்தலும், கல்லுடைத்தலும்
3. தயாரிப்புக்கைத்தொழில்
4. கட்டிடவாக்கம்
5. மின்சாரவாயு, நீர்வழங்கல்

**சேவைத்துறை**

6. போக்குவரத்து, களஞ்சியப் படுத்தல், தொடர்பாடல்
7. மொத்த சில்லறைவர்த்தகம்
8. வங்கித்தொழில், காப்புறுதி, உண்மைச்சொத்து
9. குடியிருப்புகளின் உடைமை
10. பொதுநிர்வாகமும், பாதுகாப்பும்
11. ஏனையவை
12. மொத்த உள்நாட்டு உற்பத்தி (1+2+3+———+11)
13. வெளிநாட்டிலிருந்து கிடைத்த தேறிய காரணிவருமானம்

மொத்ததேசியஉற்பத்தி (12+13)

தற்போது பன்னாட்டு நியம கைத் தொழில் பகுப்பாய்வின் மூன்றாம் திருத்தமானது சகல பொருளாதார நடவடிக்கைகளும் ஒன்பது முக்கியதுறைகளுள் வகைப்படுத்தப்படுகின்றது. அதன்படி மொத்ததேசியஉற்பத்தி மதிப்பீடானது பின்வரும்முறையில் அமைந்துள்ளது.

**விவசாயத்துறை**

1. விவசாயம், கடற்றொழில், காட்டுத் தொழில்

**கைத்தொழிற்றுறை**

2. சுரங்கமகழ்தலும், கல்லுடைத்தலும்
3. தயாரிப்புக்கைத்தொழில்
4. கட்டிடவாக்கம்
5. மின்சாரவாயு, நீர்வழங்கல்

**சேவைத்துறை**

6. மொத்த விற்பனையும், சில்லறை வர்த்தகமும், சுற்றுலாவிடுதிகளும் உணவகங்களும்
7. போக்குவரத்து, களஞ்சியப்படுத்தல், மற்றும் தொடர்பாடல்
8. நிதியியற்பணிகள், உண்மைச் சொத்து, மற்றும் வியாபாரப்பணிகள்
9. பொதுநிருவாகமும் ஏனைய அரச பணிகளும் பாதுகாப்பும் ஏனைய சமுதாய சமூக மற்றும் தனியாள் பணிகள்
10. மொத்தஉள்நாட்டுஉற்பத்தி
11. வெளிநாட்டில் இருந்து தேறிய காரணி வருமானம்

மொத்த தேசிய உற்பத்தி (10+11)

**செல்வி மோ. சசிதா**
தரம் 12C

# சேமிப்போம் - வெற்றி கொள்வோம்

பணத்தை நல்லமுறையில் செலவழிப்பதைச்சம்பாதிப்பது சிரமமான ஒரு செயல்அல்ல என்றார் மேல்நாட்டு அறிஞர் "ஸ்பார்சன்". பணத்தைச்சம்பாதிப்பதைவிட அதனைச் சரியானமுறையில் செலவுசெய்வதுதான் கடினம். திறமையில்லை என்றால் உழைப்பு இல்லை. உழைப்பு இல்லையென்றால் சேமிப்பில்லை. திறமையென்பது பணத்தைப் பயன்படத்தக்கவழியில் சரியாகச் செலவழித்து வாழ்க்கைநடத்துவது.

சேமிக்கவேண்டும் என்ற உணர்வு தோன்றியதுமே சிறப்பானவாழ்க்கை ஆரம்பித்துவிட்டதென்று அர்த்தம். உழைப்பால் பெறக்கூடிய செல்வத்தைச் சரியானமுறையில் செலவழித்து மீதியைச் சேமித்துவைத்துப் பாதுகாப்பதன் மூலமே வளமுடன் வாழமுடியும். நம்முடையநிலத்தில் உழைப்பு, சேமிப்பு என்பன விதைகள். இவை இரண்டும் சரியாக இருந்துவிட்டால் பணம் என்கிற அறுவடை அற்புதமாக இருக்கும். ஓர் ஏழையின் நாணயஉற்பத்திச்சாலை, சீரானவாழ்க்கை நடத்தத்தான் என்கிறார் "கதே". சேமிப்பானது ஆரம்பத்திலே சிறிதாக இருந்தாலும் படிப்படியாக நாளடைவில் பெரியதொகையாகிவிடும். தொடக்கத்திலே சிறுசிறு துளிகளாகவே இருக்கும். பின்பு அவைதான் வெள்ளமாகின்றன. இதனையே "சிறு துளி பெரு வெள்ளம்" என்கின்றனர் ஆன்றோர்.

"சேமிப்பே ஒருவனை சுதந்திர மனிதனாக்கும் என்பதை உணர்கின்றவனே வளவாழ்வு பெறுவான் என்று அறிவுறுத்துகின்றார் "பொங்டெஸ்லே". பணத்துக்கு ஒருசக்தி உண்டு. அது என்னவென்றால் அடைகாத்து முடக்கி வைத்தால் மேன்மேலும் வளருமே தவிர ஒருபோதும் குறையாது. வசதியும் வாய்ப்பும் சீரானவாழ்க்கைக்குத் துணைபுரியும். இதற்கு அடிப்படையாக இருப்பது சேமிப்பாகும். நாங்கள் சேமிக்கமுடியாது என்று ஒருபோதும் எண்ணக்கூடாது. சேமிக்க முடியுமென்று இன்றே எண்ணினால் நிச்சயமாக சேமிக்கவியலும். நாங்கள் சேமித்தால் அச்சேமிப்பு மறைமுகமாக நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும் உதவுகின்றது. இதனையே ஆங்கிலத்தில் "Savings saves a national" என்று ஓரறிஞர் குறிப்பிடுகின்றார்.

நாம் எவ்வளவு சேமிக்கின்றோம் என்பதை எண்ணாது இன்றே சேமிக்கத் தொடங்கினால் நிச்சயமாக நாம் வாழ்வில் வெற்றிகொள்ளலாம்.

**செல்வன் எம். சுயேஸ்**
தரம் 12C

## துணுக்குகள்

*ஏழ்மையில் இருக்கும்போது பொறுமையாக இருக்கவேண்டும்;*
*செழுமையாக இருக்கும்போது கவனமாக இருக்க வேண்டும்.*

*நண்பர்களுக்காகக் கொள்கைகளை விட்டுவிடவும் கூடாது;*
*விரோதிகளை வீணாகப் பழிவாங்கவும் கூடாது.*

# எனது மனதை கொள்ளை கொண்ட சிலப்பதிகாரம்

ஐம்பெரும் காப்பியங்களில் ஒன்றாகிய சிலப்பதிகாரம் இளங்கோவடிகளால் இயற்றப்பட்டது. "அரசியல் பிழைத்தோருக்கு அறம் கூற்று ஆவதும், உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏற்றலும், ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும்" என்பதும் சிலப்பதிகார வரிகள்.

சிலப்பதிகாரம் படைத்த இளங்கோவடிகள் மூன்று அம்சங்களை சிலப்பதிகாரத்தோற்றத்துக்கு அடிநாதமாக வலியுறுத்துகிறார். முதலில் வலியுறுத்தப்படுவது அரசியல் நெறியில் தவறாகச் செயற்படுவோருக்கு அறக்கடவுளே கூற்றுவனாக அமையும் என்பது. அடுத்ததாகக்கூறும் ஆணித்தரமான கருத்து புகழ்பூத்த பத்தினிப்பெண்ணை உயர்ந்தோர் போற்றுவர் என்பது. இறுதியாகவும் உறுதியாகவும் கூறப்படும் கருத்து முன் செய்த ஊழ்வினை அதனைச் செய்தவரைப் பிறப்பிறவியிலும் வந்து அதற்குரிய விளைவைக்கொடுக்கும் என்புதாகும்.

கோவலன் கொலையுண்ட செய்தியைக் கேள்வியுற்ற கண்ணகி பதைபதைத்துத் துடிதுடித்தாள். பாண்டிய மன்னன் அரண்மனைநோக்கி ஆவேசத்துடன் புறப்படுகின்றாள். அரண்மனை வாயிலில்நின்ற வாயிற்காவலரை நோக்கி "வாயிலோயே, வாயிலோயே, அறிவறை போகிய பொறியது நெஞ்சத்...... கணவனை இழந்தாள் கடையகத்தாள் என்று அறிவிப்பாயே! அறிவிப்பாயே!" என முறையீடு செய்கின்றாள். வாயிற்காவலன் உள்ளேசென்று பாண்டிய அரசனிடம் முறையிட்டான். மன்னன் கட்டளைப்படி கண்ணகி அரண்மனைக்குள் சென்றாள். காற்சிலம்பை நிலத்திலே வீசியெறிந்து தன்கணவன் கள்வனல்லன் என்பதை நிருபித்தாள். ஆராயாது கொலைசெய்த கொடுங்கோல் மன்னனே! என்கணவன் கள்வனல்லன். கள்வனல்லன். நீயே கள்வன். ஒரு பாவமுமறியாத எனதுகணவனை கொலை செய்தது நீதியோ? முறையோ? என அழுதுபுலம்பி நீதிகேட்டாள். அதுவரை செங்கோல்வழுவாது ஆட்சிசெய்த தனது ஆட்சி பிழைத்துவிட்டதே! இனிநான் உயிருடன் இருந்தென்ன? எனக்கூறிய படி நிலத்திலே மூர்ச்சித்துவிழுந்து இறந்துவிடுகின்றான் பாண்டியமன்னன். சிலப்பதிகாரத்தில்வரும் இந்நிகழ்வு நெஞ்சை உருக்குகின்றது. பாண்டிய மன்னனின் உயிரை அறதேவதையே கூற்றுவனாகவந்து எடுத்துச்செல்வதைக் காணமுடிகின்றது. "அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும்" என்ற பொன் வாக்கை இளங்கோவடிகள் மிகவும் அழகாகச் சித்திரித்துக்காட்டியுள்ளார்.

கண்ணகி தனது கணவன் தன்னைவிட்டு மாதவியை நாடியபொழுது கூட தன்கணவன்மீது சீற்றம்கொள்ளவில்லை. கணவன் இறந்தசெய்தியைக் கேட்டவுடன் ஆவேசத்துடன்சென்று அரசனிடம் நீதிகேட்டாள். மதுரை மாநகரே அழியட்டும் எனச்சாபமிட்டாள். குழந்தைகளும், முதியோரும், கற்புடை மகளிரும் தவிர அழிந்து சாம்பலாகட்டும் எனக்கூறி மதுரை மாநகரையே அழித்தாள். பாண்டிய மன்னன் செங்கோன்மை தவறிழைத்தமையை நிருபித்துக்காட்டி அவன் இறப்புக்குக் கண்ணகியே ஒருவகையில் காரணமாக அமைந்துவிளங்கித் தனதுகற்பின் மகிமையை உலகிற்கு எடுத்துக் காட்டியுள்ளாள்.

மற்றும், பாண்டிமாதேவி தனது கணவன் செங்கோன்மை தவறியமை யிட்டு வேதனைப்பட்டாள். பாண்டிய மன்னன் நிலத்திலே மூர்ச்சித்து இறந்ததைக்கண்டு புலம்பியழுகின்றாள். அத்துடன் நிற்காது, "நான் கற்புடை மகளிர் என்பது உண்மையானால் என் கணவனுடன் என்னுயிரும் பிரியவேண்டும்" எனக்கூறி கணவனுடன் சேர்ந்து தன் இன்னுயிரை நீத்துக்கொண்டமை பாண்டியஅரசியும் கற்புடைமகளிர் என்பதை இளங்கோவடிகள் அழகாக வடித்துச் சென்றுள்ளார். கண்ணகி, பாண்டிமாதேவி போன்ற பாத்திரங்கள் மூலம் "உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்துவர்" என்பதை மிகவும் துல்லியமாக இளங்கோவடிகள் சித்தரித்துக் காட்டியுள்ளார்.

கோவலன் மாதவிமீது மயக்கமுற்றுக் கண்ணகியைமறந்து அவளுடன் இணைந்திருந்தான். ஆயினும், மாதவியின் நடத்தையில் சந்தேகம்கொண்டான் கோவலன். இதற்குக்காரணம் ஊழ் வினையே என உறுதியாகச் சொல்கிறார் இளங்கோவடிகள். "யாழ்இசை மேல் வைத்த தம் ஊழ்வினை வந்து உறுத்தும் ஆதலின் உலவுற்ற தங்கள் முகத் தானைச் சவுக்கை நெகிழ்ந்ததனால்" என்பது அவரின்கூற்று. மாதவி கோவலன் பிரிவுக்கு, கோவலனின் மனத்தடு மாற்றத்தைக் காரணமாகக்கூறவில்லை. அவன் உளத்தடுமாற்றத்திற்கு ஊழ் வினையே காரணமென உறுதியாகக் கூறுகின்றார்.

அடுத்து, ஒருசம்பவம் கோவலன் திடீரென கண்ணகியை அழைத்துக் கொண்டு மதுரைநோக்கிச்செல்லத் தீர்மானிக்கின்றான். அவன் கண்ணகியை அழைத்துக்கொண்டு மதுரைக்கு செல்வது உகந்ததா என எண்ணிப்பார்க் கவில்லை. "எண்ணித்துணிக கருமம். துணிந்தபின் எண்ணுவம் என்பது இழுக்கு" என்பது வள்ளுவர் காட்டும் வாழ்க்கை நெறி. ஆராய்ந்து பார்க்காமல் மதுரைநோக்கிப் புறப்படுகின்றான். "வினை கடைகூட்ட வியம் கொண்டான் கங்குல், கனை, கடல் கால்சியி மூன்" என ஊழ்வினைப் பயனாலேயே அவன் சிந்திக்கும் ஆற்றலை இழந்து மதுரைக்கு புறப்படும் செயலைச்செய்தான் என இளங்கோவடிகள் அழகாகப் படம்பிடித்து காட்டியுள்ளார்.

"முன்செய்த தீவினை வந்து இவன் உள்ளத்தை செலுத்துமதனால்" என்பது சிலப்பதிகார ஆசிரியர்கருத்து. இதனூடாகக் கோவலன் செயல்கள் அனைத்தும் அவன் விருப்பப்படி நிகழ வில்லை. அது, அவன் ஊழ்வினைப் படியே நிகழ்ந்தன என்பதை இளங்கோ அடிகள் நாடுகாண்காதையில் மேலும் இறுக்கமாகக் கூறிச்சென்றுள்ளார்.

அடுத்து இன்னொரு நிகழ்வு பாண்டியன் நெடுஞ்செழியன் செங்கோல் வேந்தன். நெறிமுறை பிறழாமல் ஆட்சி புரிந்தவன். மறந்தும் தவறிழைக்காத காவலன். இத்தகைய மன்னன் தவறி ழைக்கின்றான். "ஊழ்வினை கடைசி உள்ளம் துரப்ப" என்கின்றார் இளங் கோவடிகள். கண்ணகியின் காற்சிலம்பு டன் பொற்கொல்லன் பாண்டிய அரசன் முன் வந்துநிற்கின்றான். அவன் பாண்டி மாதேவியின் காற்சிலம்பைக் களவாடிய கள்வனைப் பிடித்துவிட்டேன் என்றான். அவ்வேளை பாண்டிமாதேவியுடன் ஊட லிலிருந்த அரசன் சிந்தித்துப் பார்க்க வில்லை, ஆராயவில்லை. அவனை

ஊழ்வினை வந்து உறுத்தியதனால் இக் கள்வனைக்கொன்று சிலம்பைக்கொண்டு வருமாறு ஆணையிட்டான். காவலர்கள் கோவலன் தங்கியிருந்த இடத்தை அடைந்தனர். அப்போது தீவினை சூழ்ந்த நிலையில் இருந்த கோவலனை நெருங்கிய காவலர்கள் அவனை வெட்டி வீழ்த்தினர். சிலப்பதிகாரத்தின் அதி யுச்சக்கட்டம் கோவலனின் வீழ்ச்சியே என இளங்கோவடிகள் கூறுகின்றார்.

கோவலன் கொலையுண்டு வீழ்ந்துவிட்டான் என்றசெய்தியை அறிகி றாள் கண்ணகி. பதைபதைத்துத் துடி துடிக்கிறாள். அவள் அழுதுபுலம்பி ஊரைச் சுற்றிவருகிறாள். அவள் புலம் பலின்போது எழும் வார்த்தைகள்தான் என்ன? "காவலன் செங்கோல் வளைந்து வீழ்ந்ததனால், கோவலன் கண்ட ஊழ் வினை உருத்து" அவள் புலம்பலினூடாகவும் இளங்கோவடிகள் புலப்படுத்த விரும்புவதென்ன? கோவ லன் கொலைக்கும் வீழ்ச்சிக்கும் காரணம் ஊழ்வினையே என்பதை மேலும் வலியுறுத்துகின்றார்.

இக்கதையில் மதுரைப்பதித் தெய்வம் கண்ணகியிடம் ஊழ்வினை யால்தான் பாண்டியன் தவறுசெய்தான் ஊழ்வினையாலேயே கோவலன் கொலையுண்டான் எனக்கூறுகின்றது.

